

கன்னி
மாடம்

மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 1967
பதினேழாம் பதிப்பு : ஆகஸ்ட், 2001
பதினெட்டாம் பதிப்பு : ஜனவரி, 2003
பத்தொன்பதாம் பதிப்பு : ஜூன், 2004

உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : €11€00.

Printed at : Nathan & Company, Chennai - 42.

# முகவுரை

'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்' என்பது முதுமொழி. அது நீராற்றுக்குப் பொருந்தும்; வரலாற்றுக்கும் அமையும்.

வரலாறு எவ்வளவுக்கெவ்வளவு நீளமாகவும் ஆழமாகவும் வளத்துடனும் ஓடுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது பாயும் நாட்டிலே கலைவளரும், பண்பு செழிக்கும், அறிவு ஓங்கும். உறுதி.

எது சரித்திரம்?

பல்கலைக் கழகக் கோட்டையிலே, பேராசிரியர்களின் மூளைக்குள்ளே அணிவகுத்து நிற்கும் ஆயிரமாயிரம் விவரங்கள் சரித்திரமா? அல்ல. நூல் நிலையத்திலே, கனத்த அட்டைகளுக்கு நடுவே, பொடி எழுத்துக்களில் திணிக்கப்பட்டிருக்கும் தேதிகளும், பெயர்களும் போர்க் களங்களும் சரித்திரமா? அல்ல.

பின் எது சரித்திரம்? மக்கள் அறிந்ததே சரித்திரம்; அவர்கள் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து விட்ட நினைவுகளே, சரித்திரம். 'நாம் நீர்க்குமிழிகள் அல்ல. வடியாத பெருவெள்ளத்தின் துளிகள் நாம். அற்ப வாழ்வுடைய தனிமனிதர் அல்ல; அழிவற்றதோர் பரம்பரையின் உறுப்பினர் நாம். நேற்று இருந்தோம் இன்று இருக்கிறோம்: நாளைக்கும் இருப்போம்!' என்று தோள்தட்டத் தூண்டுவதே சரித்திரம்.

ஆக, பொது மக்கள் கற்ற சரித்திரம் வேறு. இரண்டுக்கும் உள்ள இடைவெளி குறுகக் குறுக, நாடு நலம் பெறும்.

இந்தக்குறுக்கும் பணியை ஏற்றுக் கொண்டிருப்பவரே சரித்திர நாவலாசிரியர். வாழ்க.

எதையும் கதை வடிவில் சொன்னால் பொதுமக்கள் விரும்பிப் படிப்பார்கள். அறிவுக் கருவூலங்களை அப்படியே வழங்கினாலோ, பெரும்பாலோருக்குக் கொட்டாவிதான் வரும்; வரலாற்றுத் துறை வல்லுநரோ 'கதை' என்ற சொல்லைக் கேட்டதும் காதைப் பொத்திக் கொண்டு விடுவர்.

சிக்கலைத் தீர்க்கிறார் சரித்திர நாவலாசிரியர். தூய விலையுயர்ந்த—ஆனால், பெரும்பாலோர்க்கு எட்டாத—பூஞ்சாற்றை உழைத்துத் திரட்டி, பொருத்தமான எண்ணெய்களைக் கலந்து அனைவரும் ரசித்து மகிழத்தக்க வாசனைப் பொருளாக அதைத் தருபவர் அவரே.

'சாண்டில்யன்' அவர்கள், சிறந்த கதாசிரியர் மட்டுமல்ல; சாமர்த்தியசாலியான கதாசிரியருங்கூட. வாசகர்களுடைய உள்ளத்தை அள்ளும் கலையில் அவர் கைதேர்ந்தவர். 'கன்னி மாடம்' தொடர்கதையாக வெளிவந்தபோது மக்களிடையே அது உண்டாக்கிய பரபரப்பே சான்று.

அவர் தமிழ்நாட்டுச் சரித்திரம் முழுவதையும் நாவல் உருவில் தருவதற்கு, 'கன்னி மாடம்' ஓர் ஆரம்பமாக அமையட்டும்.

**எஸ். ஏ. பி.**
ஆசிரியர், 'குமுதம்'

# முன்னுரை

ஈழ நாடும், சோழ நாடும் பாண்டிய நாட்டில் தலையிட்டு நின்ற காலத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது கன்னி மாடத்தின் கதை.

கி.பி. 12-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கியது பாண்டிய மன்னர்களின் தாயாதிச் சண்டை. இரண்டு தலைமுறைகளைப் பாதித்து சுமார் 30 வருட காலம் நீடித்த ஈழத்து ஆதிக்கம் சில காலம் பாண்டிய நாட்டில் ஏற்பட்டது. தமிழர்கள் பல வகைகளில் துன்புறுத்தப்பட்டார்கள். ஏராளமான தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டு ஈழத்துப் புத்த விஹாரங்களில் தொழில் புரியவும் அனுப்பப்பட்டார்கள்.

இந்த நிலையைச் சோழர் படைபலம் எப்படிச் சமாளித்துத் தமிழ்நாட்டில் அமைதியை நிலை நிறுத்தியது என்பதை எடுத்துக் காட்டவே கன்னி மாடம் எழுதப்பட்டது.

பாண்டியநாடு இரண்டாகப் பிரிந்து நின்றது. நெல்லையில் குலசேகர பாண்டியன் என்பானும் மதுரையில் பராக்கிரம பாண்டியன் என்பானும் அரசு புரிந்து வந்தனர். இந்த இரு தாயாதிகளுக்குள் மனஸ்தாபம் ஏற்படவே குலசேகர பாண்டியன் பராக்கிரம பாண்டியன்மீதுபடையெடுத்தான். பராக்கிரமபாண்டியன் ஈழத் தரசனான பராக்கிரமபாகுவின் உதவியைநாடினான்

பராக்கிரமபாகுவும் மதுரைப் பாண்டியனுக்குதவ இலங்
காபுரத் தண்டநாயகன் தலைமையில் பெரும்படையை
அனுப்பிவைத்தான். அந்தப் படை வரும் முன்பே
குலசேகர பாண்டியன் மதுரையைப் பிடித்து பராக்கிரம
பாண்டியனைக் கொலை செய்துவிட்டான். பராக்கிரம
பாண்டியன் மகன் வீரபாண்டியன் மட்டும் குலசேகரன்
கையிலிருந்து தப்பி மலைநாட்டிற்கு ஓடிவிட்டான்.
ஈழத்திலிருந்து வந்த இலங்காபுரத்துத் தண்டநாயகன்
குலசேகர பாண்டியனை வெற்றி கொண்டு மதுரையி
லிருந்து துரத்தி, பராக்கிரமபாண்டியன் மகன்வீரபாண்டி
யனைஅரியணையில்அமர்த்தினான். அத்துடன் அவன்நிற்க
வில்லை. பாண்டிய நாட்டைச் சிங்களத்தின் ஒருபகுதி
யாக்கத் திட்டம் போட்டான். தமிழர்களைத் துன்புறுத்தி
னான். பயிர் பச்சைகளை அழித்தான் சிங்களத்து நாணய
மான காசப் பணத்தையும் மதுரையில் புழங்கவைத்தான்.

இலங்காபுரனால் துரத்தப்பட்ட குலசேகர பாண்டி
யன் சோழ மன்னனான இரண்டாவது இராஜாதி
ராஜனின் உதவியை நாடினான். தமிழ்நாட்டில் பெருகி
வரும் ஈழத்தின் பலத்தை ஒடுக்கத் திட்டமிட்ட சோழ
மன்னன், தன் முதன் மந்திரியான திருச்சிற்றம்பலமுடை
யானான பல்லவராயனையும் அவன் தம்பியும் படைத்
தலைவனுமான அண்ணன் பல்லவராயனையும் ஏவினான்.
பெரிய பல்லவராயருடைய ராஜதந்திரமும், அண்ணன்
பல்லவராயனுடைய படைபலமும் இலங்காபுரனையும்
அவனுக்கு உதவி செய்ய ஈழத்திலிருந்து வந்த ஜகத்விசயத்
தண்ட நாயகனையும் முறியடித்துவிட்டன இரண்டு
தண்ட நாயகர்களுடைய தலைகளும் வெட்டப்பட்டு
மதுரைக் கோட்டைச் சுவரில் செருகப்பட்டன. இந்த
சரித்திர விவரங்கள் ஓரளவு ஈழத்தின் இராஜ பரம்பரை
நூலான மஹாவம்சத்திலும், தமிழ் நாட்டுச் சாசனங்
களிலும் காணப்படுகின்றன. திரு. நீலகண்டசாஸ்திரியார்



சோழர்களைப் பற்றிய தமது சரித்திரப் புத்தகத்தில் இந்த
விவரங்களை மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். ராஜாதி
ராஜனுடைய ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு கொண்ட
ஆரப்பாக்கத்துச் சாசன (தென்னிந்திய சாசனங்கள் 6-ம்
வால்யூம், நெ. 456) பாண்டிய நாட்டிலே ஈழப் படைகள்
புகுந்து செய்த அக்கிரமத்தை விவரிக்கின்றன. மற்ற
விவரங்கள் எட்டாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட பல்லவ
ராயன் பேட்டை சாஸனத்திலிருந்து (எபி இந்திகா 21-
வது வால்யூம் 184-193 பக்கங்கள்) தெரிய வருகின்றன.
இந்தச் சண்டை பற்றிய விவரங்களை Madras Govern-
ment Oriental Series No. C. L. VIII-ல் வெளியான
தென்னிந்திய கோயில் சாசனங்கள் பாகம் மூன்று, பகுதி
இரண்டில் சரித்திர ஆராய்ச்சியாளர் தி. நா.
சுப்பிரமணியம் அவர்களும் தந்துள்ளார்கள்.

இந்தச் சரித்திர ஆதாரங்களைக் கொண்டு கதைக்குத்
தேவையான சில பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் கதையை
உருவாக்கியிருக்கிறேன். கன்னி மாடத்தில் வரும் குலசேகர
பாண்டியன், வீரபாண்டியன், மழவராயன், பல்லவராயர்
கள், கருணாகரத் தேவன், வங்கார முத்தரையன், நிஷத
ராஜன் முதலிய பலரும் சரித்திரத்தில் ஜீவித்திருக்கும்
பாத்திரங்களே. சரித்திரத்தில் காணப்படாதவர்கள்
அபராஜிதன், கார்குழலி, சிங்களத்துப் பைங்கிளி, அடிக
ளார் முதலியோர்.

கதையின் அஸ்திவார அம்சங்களைப் பற்றிச் சொல்லி
விட்டேன். கதை எப்படி இருக்கிறது என்பதைத் தீர்மா
னிக்க வேண்டியது வாசகர்களின் பொறுப்பு. இந்தக் கதை
'குமுதம்' பத்திரிகையில் ஒன்றேமுக்கால் வருட காலம்
வெளிவந்தது. இந்தக் கதையை எழுதத் தூண்டி குமுதத்
தில் வெளியிட்டதன்றி, இப் புத்தகத்திற்கு முகவுரையும்
எழுதிக் கொடுத்த குமுதம் ஆசிரியர் திரு. எஸ். ஏ. பி.
அண்ணாமலை அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இப் புத்தகத்தில் காணப்படும் சரித்திர அடிப்படைகளுக்கான சான்றுகளை சாசனங்களிலிருந்து எடுத்தது தவிர, திரு. நீலகண்ட சாஸ்திரியாரின் 'சோழர்கள்' என்ற புத்தகத்திலிருந்தும், திரு. சதாசிவ பண்டாரத்தாரின் 'பிற்கால சோழர்களி'லிருந்தும் திரு. மா. இராஜமாணிக்கனாரின் 'சோழர் வரலாற்றி'லிருந்தும் எடுத்து உபயோகப்படுத்தியிருக்கிறேன்.

எங்களைப்போன்ற எழுத்தாளர்களுக்காக இப் புத்தகங்களை எழுதிவைத்துள்ள அப் பெரியோர்களுக்கும் 'தென்னிந்தியக் கோவில் சாசனங்'களைத் தகுந்த குறிப்புகளுடன் வெளியிட்டுள்ள திரு. இ. நா. சுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றி.

**சாண்டில்யன்**

# கன்னி மாடம்

## 1. நீலமலைக் குடிசை

இளவேனிற் காலத்தின் இரவுத் தென்றல் நீலமலைச் சரிவைத் தடவிக் கொடுத்துச் சென்றதால் லேசாக அசைந்த செடிகளின் வாச மலர்களிலிருந்து கிளம்பிய நறுமணம் நாலா பக்கத்திலும் பரவி இணையற்ற இன்பச் சூழ்நிலையைச் சுட்டிக் காட்டவோ என்னவோ காரிருள் எங்கும் கவிந்து சுற்றிலும் எழுந்து நின்ற மலையுச்சிகளைப் பெரிய பூதங்களைப் போல் காட்சியளிக்கச் செய்தது. பெரிய மனிதர்கள் இல்லாத சமயத்தில் பிரகாசிக்கும் சின்ன மனிதர்களைப் போல, சந்திரனில்லாத வான வெளியில் ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் பிரமாதமாக ஜொலித்துக் கொண்டிருந்தன. அவற்றுடன் போட்டி போடுவது போல் மலைச்சரிவின் ஒரு பாகத்திலிருந்த குடிசைவிளக்கு சுடர்விட்டுப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

குடிசைக் கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த அந்த விளக்கின் ஒளியில் உட்கார்ந்திருந்த நான்கு பேரும் சிறிதும் பேச்சு மூச்சின்றி ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் மௌனமாகவே காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே ஊற்றப்பட்டிருந்த கடலை எண்ணெ

யின் காரணமாக வெளிச்சத்தைவிடப் புகையை அதிகமாகக் கிளப்பிக் கொண்டிருந்த அந்தச் சோழர் காலவிளக்கு தனது ஐந்து புலி முகங்களாலும் கீழே உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்துப் பயங்கரமாக விழித்தது. அதன் தீ நாக்குகள் கூட உட்கார்ந்திருந்தவர்களின் மனங்களைப் போல அவ்வப்போது சலனமடைந்து, சலனமடைந்து மீண்டும் உறுதியாய் எழுந்து நின்றன.

குடிசையின் சூழ்நிலைக்கும் உட்கார்ந்திருந்த நால்வருக்கும் சிறிதும் பொருத்தமில்லை என்பதை அவர்கள் ஆடைகளே எடுத்துக் காட்டின. அவர்கள் அணிந்திருந்த பட்டு அங்கிகளில் செய்யப்பட்டிருந்த சரிகை வேலைப்பாடுகளும், அவற்றில் தைக்கப்பட்டிருந்த பாண்டி நாட்டின் விலை உயர்ந்த முத்துக்களும் அவர்கள் மாளிகையில் வாழும் மகாப் பிரபுக்களென்பதை நிரூபித்ததன்றி, அவர்கள் பக்கங்களில் கிடந்த வாட்கள் அவர்கள் போர் வீரர்கள் என்பதையும் சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாக்கின. பெரிய பிரபுக்களான அந்த நால்வரும் மலைக் குடிசையின் கரடு முரடான தரையில் சற்றுக் கஷ்டப்பட்டே உட்கார்ந்திருந்தார்கள். அந்த நால்வரும் வாயால் ஒரு வார்த்தை பேசாவிட்டாலும், அவர்கள் உள்ளங்களில் கணக்கற்ற எண்ணங்கள் எழுந்து அலை மோதுவதையும், நேரம் ஆக ஆக அவர்கள் கவலை அதிகமாவதையும அவர்கள் முகஙகள் நன்றாக எடுத்துக் காட்டின. மலையடிவாரத்துக்குச் சற்று தள்ளியிருந்த ஊரின் பெரிய கோவிலிலிருந்து கிளம்பிய ஆரம்ப ஜாமத்தின் மணியோசை மலைப்பிராந்தியத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்து குடிசையிலிருந்த நால்வரின் எண்ணங்களோடு எதிர்மோதல் செய்யவே, அவர்களில் வயோதிகனாயிருந்த கருணாகரத்தேவன் மௌன விரதத்தைக் கலைத்து இளைஞனான காரிவளவனை நோக்கி, “சேனாதிபதி இன்னும் வரவில்லையே, செய்தி போய்ச் சேர்ந்திருக்காதா?” என்று கேட்டான்.



“கண்டிப்பாய்ப் போய்ச் சேர்ந்திருக்கும். என்னுடைய சொந்த முத்திரையை வைத்துப் பூரண நம்பிக்கையுள்ள வீரனிடமே அனுப்பியிருக்கிறேன்” என்று பதில் கூறினான் காரிவளவன்.

“இடையில் தூதனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து ஓலை அரசனிடம் அகப்பட்டுக் கொண்டால்?” என்று வினவினான் பொன்னமராவதியின் தலைவனான நிஷதராசன்.

“நம் நால்வருக்கும் உடனே மோட்சம் கிடைக்கும். அரசன் நமது தலைக்கு உடலிலிருந்து விடுதலையளிக்கத் தவற மாட்டான்” என்றான் வங்கார முத்தரையன் என்ற நான்காவது வீரன்.

இவர்கள் இப்படித் தர்க்கம் செய்ததை, “சற்றுப் பொறுங்கள்” எனத் தடை செய்து எதையோ உற்றுக் கேட்டான் கருணாகரத்தேவன். தேவன் காதில் விழுந்த காலடி ஓசை மற்றவர் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். அது வரை அசைவற்று உட்கார்ந்திருந்த நால்வரும் யந்திரத்தால் இயக்கப்பட்டவர்களைப் போல் எழுந்துநின்றார்கள். கீழே கிடந்த உறையிலிருந்து வாளை மட்டும் உருவிப் பிடித்துக்கொண்டு காரிவளவன் மெள்ளச்சென்று குடிசைக் கதவைத் திறந்தான். மறுகணம் உள்ளே நுழைந்த மனிதனைக் கண்டதும் வாளைத் தாழ்த்திய காரி, “பிரபு! வரவேண்டும். தாங்கள் வரவில்லையே என்று மிகக் கவலையுடன் காத்திருந்தோம் என்றான்.”

உள்ளே நுழைந்த சேனாதிபதி அபராஜிதன் உடனே பதில் ஏதும் சொல்லவில்லை. ஈட்டிகள் போல் ஜொலித்த அவன் கூரிய விழிகள் குடிசையையும் குடிசையிலிருந்தவர்களையும் அரை விநாடியில் சுற்றி வந்து உள்ள நிலையை ஓரளவு எடைபோட்டுக் கொண்டன. தான் உள்ளே நுழைந்ததும் காரி வாளைத் தாழ்த்தியதையோ குடிசையிலிருந்த நால்வரும் தன்னை வணங்குவதற்கு மு

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதையோ அவன் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. குடிசைக்குள்ளேயிருந்தவர்கள் ஏதோ சதியிலிறங்கியிருக்கிறார்களென்பதை நொடிப் பொழுதில் புரிந்து கொண்ட அபராஜிதன், ஏதும் அறியாதவன் போல் பதிலேதும் சொல்லாமல் மெள்ள ஏதோ யோசனையுடன் நடந்து குடிசையின் நடுவுக்கு வந்தான்.

மெல்லிய சரீரத்துடனும், நீண்ட கைகளுடனும், குடிசை தலையிலிடிக்க உயரமாக நின்ற அபராஜிதனுக்கு வயது முப்பதுக்கு மேலிருக்காது. அவன் முகத்தில் சொட்டிய ராஜகளையும் பார்வையிலிருந்த கம்பீரமும், அவன் மனிதர்களை ஆளப் பிறந்தவனேயொழிய யாருக்கும் அடங்கும் சுபாவமுள்ளவனல்ல என்பதை சந்தேகமற எடுத்துக் காட்டின. கைகளின் நீளத்துடன் போட்டி போடுவதுபோல் அவன் இடையிலிருந்த நீண்ட வாள் பாதம் வரையில் பயங்கரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அத்துடன் உறையில்லாத உடைவாளொன்றும் அவன் கச்சையில் செருகப்பட்டிருந்தது. போர்க்களத்தில் ஏற்கனவே ஏற்பட்ட காயங்களின் அடையாளமாக முகத்தில் காணப்பட்ட ஓரிரு தழும்புகளும் முகத்திற்கு இயற்கையாக இருந்த அழகை அதிகப்படுத்தினவேயொழிய விகாரத்தை விளைவிக்கவில்லை. யௌவனமும், அழகும், வீரமும் இணைந்து நின்ற சேனாதிபதி அபராஜிதன் குடிசை நடுவே வந்ததும், அங்கு நிலவியிருந்த மௌனத்தைத் தானாகவே கலைத்து, "உங்களை நீண்ட நேரம் காக்க வைத்து விட்டேன். ஆனால், உங்கள் ஓலை கிடைத்தபோது தமிழ் நாட்டின் பெரும் படைத்தலைவர்களில் நால்வரை இங்கு சந்திக்கப் போகிறேன் என்பதை நான் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. காரி ஏதோ அவசரமான காரியம் என்று எழுதியிருந்தாலேயென்று வந்தேன்'' என்றான்.

அவன் குரலில் இருந்த ஒலி இரண்டுங்கெட்டானாயிருந்ததால் அவன் தங்களைப் பார்த்து நகைக்கிறானா



அல்லது உண்மையாகவே தன் காலதாமதத்துக்குச் சமாதானம் சொல்கிறானா என்பதை ஊகிக்க முடியாமல் திண்டாடிய இந்த நான்கு வீரர்களில், வயோதிகனான கருணாகரத்தேவன். கவலை நிரம்பிய குரலில் விஷயம் எத்தனை முக்கியமானது என்பதை எடுத்துச் சொன்னான் ‘பிரபு! தலை போகிற காரியம்...'' என்று ஆரம்பித்த தேவனை இடைமறித்த அபராஜிதன், ''அது தெரிகிறது. இல்லாவிட்டால் பெரிய பிரபுக்கள் குடிசையில் கூடவேண்டியது அவசியமில்லை; அதுவும் காரிருள் சூழ்ந்த இந்த இரவில்....'' என்று சொல்லிப் பேச்சைமுடிக்காமலே தான் விஷயத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டதை எடுத்துக் காட்டினான்.

''நாம் நால்வரைத் தவிர வேறு யாரும் அறியாமல் கலந்து பேசவே தங்களை இங்கு கூப்பிட்டனுப்பினோம்'' என்று பேச்சை மேலே ஓட்டினான் தேவன்.

''நம் உத்தேசப்படி உலகத்தில் விவகாரங்கள் நடப்பதில்லை தேவரே'' என்றான் அபராஜிதன் பதிலுக்கு. அவன் வார்த்தையின் உள்ளர்த்தத்தை அறிந்துகொள்ள இயலாத நான்கு படைத் தலைவர்களும் அவனை ஏறெடுத்துப் பார்த்தார்கள்.

''இங்கு ரகசியமாகச் சந்திப்பது உங்கள் உத்தேசம். ஆனால், நீங்கள் இங்கு கூடப்போவது மற்றவர்களுக்கும் தெரியும்'' என்று விளக்கினான் அபராஜிதன்.

பெரிய இடி தலையில் விழுந்தால் கூட ஏற்பட்டிருக்காத அதிர்ச்சியை அந்தப் பதிலினால் அடைந்த நால்வரும், ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

''வேறு யாருக்குத் தெரியும்?'' என்று கேட்டான் முத்தரையன்.

''இலங்காபுரனுக்கு!'' என்று இன்னொரு இடியை எடுத்து வீசினான் அபராஜிதன்.

இந்தப் பதில் அந்த நால்வரையும் அரை வினாடி திகைக்கச் செய்துவிட்டது. சற்றுநேரம் ஏதும் பேசாது நின்றுவிட்ட அந்த நால்வரில் கருணாகரத்தேவனே மீண்டும் பேசத் தொடங்கி, "சிங்களத் தண்டநாயகன் இலங்காபுரனுக்கா!" என்று வினவினான்.

"வேறு இலங்காபுரன் பாண்டி நாட்டில் ஏது? சந்தேகமிருந்தால் இதைப் பாருங்கள்" என்று இடையிலிருந்த உடைவாளை எடுத்து நீட்டினான் அபராஜிதன்.

உடைவாளைத் திருப்பிப் பார்த்த கருணாகரத்தேவன் "சிங்களத்தின் உடைவாள்" என்று முணுமுணுத்தான்.

"பிடியில் சிங்க்ள நாட்டுச் சின்னமே இருக்கிறதே" என்று கூவினான் கடந்தை வேந்தனான வங்கார முத்தரையன்.

பாண்டிய நாட்டுப் பொன்னமராவதியின் தலைவனான நிஷதராசனும், அவன்படைத் தலைவனான காரிவளவனும், ஏதும் பேசாமலே ஒருவரையொருவர் பார்த்து நயன பாஷையிலேயே விஷயத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள்.

கருணாகரத்தேவன் மேற்கொண்டு தகவலறிய விரும்பி, "இந்த உடைவாள் தங்களுக்கு எப்படிக் கிடைத்தது" என்று அபராஜிதனை வினவ்னான்.

"தேவரே! வரும் வழியில் என் குதிரைக்கு இந்த உடைவாளினால் அர்ச்சனை நடந்தது" என்றான் அபராஜிதன் இதழ்களில் புன்முறுவல் தவழ.

"என்ன! குதிரையேல் உடைவாள் வீசப்பட்டதா?" நிஷதராசன்.

"ஆம்! பக்கத்துப் புதர்களிலிருந்து" என்று பதிலிறுத்தான் அபராஜிதன்.

"எந்த இடத்தில்?"

"மலையடிவாரத்தில்."



இந்த விவரம் படைத் தலைவர் நால்வருக்கும் மிகுந்த கவலையை விளைவித்ததென்றால் அபராஜிதன் மேற் சொன்ன தகவல்கள் அந்தக் கவலையை உச்சத்துக்கே கொண்டு போயின. அவர்கள் ரகசியமெனக் கருதிய இந்தச்சந்திப்புஇலங்காபுரத் தண்டநாயகனுக்கு எத்தனை விளக்கமாகத் தெரிந்திருக்கிறது என்பதை நிரூபிக்கத் தனக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி விவரிக்கலானான் அபராஜிதன்.

"தேவரே! மஞ்சள் வெயில் இருக்கும்போதே உங்களுடன் பேசிவிட்டுத் திரும்பிவிட உத்தேசித்தேன். ஆனால் நான் மலையடிவாரத்துக்கு வரும்போதே சூரியன் மலைவாயில் விழும் சமயமாயிருந்தது. கதிரவன் கதிர்களில் ஓரிரண்டு, பக்கத்திலிருந்த புதர்களில் பாய்ந்ததால், ஏதோ பளிச்சிடுவதைக் கண்டேன். அது என்னவென்று ஆராய குதிரையைச் சற்று மெல்லச் செலுத்தினேன். புதர்களிலிருந்து பளிச்சிட்டது சிங்கள வீரனொருவனின் போர்க்கவசம் என்பதை ஊகித்ததும், குதிரையை வேகமாகத் தட்டிவிட்டேன். சிங்களனும் என் எண்ணத்தை ஊகித்துக் கொண்டிருக்க வேண்டும். அடுத்த வினாடி என் குதிரை கால் மடங்கிக் கீழே விழுந்தது. நான் பக்கவாட்டில் குதித்துக் காலைப் பரிசோதிக்கும் பாவனையில் உடைவாளை எடுத்தேன். புதர்களிலிருந்து ஓரிரு வீரர் என்மேலும் கத்திகளைக் குறிவைப்பபதைக் கடைக்கண்ணால் கவனித்தேன். சாதாரண சமயமாயிருந்தால், வாளை உருவி எதிர்த்திருப்பேன். ஆனால், உங்கள் ஓலையிலிருந்த வாசகம் மர்மமாயிருந்ததாலும், வழியில் நான் மடக்கப்பட்டதாலும், சந்தேகித்து என்னால் நீங்கள் சிக்கிவிடப் போகிறீர்களேயென்று ஓடத் தொடங்கினேன். வீரர்களும் விடாது என்னைத் துரத்தினார்கள். நேராக இந்த இடததை நோக்கி வந்தால் சநதேகம் ஏற்படுமென்ற காரணத்தால் நேர் எதிர்த்திக்கில் சிறிது நேரம் ஓடிக் காட்டுக்குள் மறைந்து கொண்டேன். வீரர்கள் என்னைக்கண்டுபிடிக்க முடியாமல் வேறு திக்கில்

போல் விடலே சுற்று வழியாக நடந்து வந்து சேர்ந்தேன். என்னை நீங்கள் அழைத்த காரணம் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல என்னால் முடியும். மன்னனுக்கு எதிராசச் சதி செய்வது உங்கள் உத்தேசமானால், அது இலங்காபுரத் தண்டநாயகனுக்குத் தெரிந்தே இருக்கிறது. ஆகையால் மன்னனுக்கும் தெரிய அதிக நேரமாகாது!'' என்றான்.

அபராஜிதனின் கதையைக் கேட்ட கருணாகரத்தேவன் வெகுநேரம் பதில் பேசாமல் நீண்ட யோசனையில் ஆழ்ந்தான். கடைசியாக அவன் தலை தூக்கி அபராஜிதனைப் பார்த்து, ''பிரபு! மன்னனுக்குத் தெரிந்தால் தானென்ன?'' என்று மெல்லக் கேட்டான்.

அபராஜிதன் விழிகள் தேவனை மட்டுமன்றி மற்றவர்களையும் ஒருமுறை வலம் வந்தன. அதுவரை சாதாரணமாயிருந்த அவன் பார்வையில் கோபம் பொங்கி வழிந்தது. ''நான் ஊகித்தது சரிதான். நீங்களனைவரும் மன்னனுக்கு துரோகம் செய்யவே கூடியிருக்கிறீர்கள்!'' என்றான் அபராஜிதன், பார்வையிலிருந்த உஷ்ணம் சொற்களில் தொனிக்க.

'சந்தேகமில்லை பிரபு! நாங்களனைவரும் பாண்டிய மன்னனின் துரோகிகள்தான். நாட்டு விசுவாசத்தால் மன்னனின் விசுவாசத்தை இழந்தோம்'' என்று கடுமையாகவே பதில் சொன்னான் நிஷதராசன்.

''நாட்டு விசுவாசம் வேறு ராஜ விசுவாசம் வேறா?'' என்று கேட்டான் அபராஜிதன் இகழ்ச்சி ததும்பும் குரலில்.

''நாட்டின் நன்மையில் மன்னன் கவனம் செலுத்தாத போது இரண்டும் வேறுபடுகிறது'' என்று விளக்கினான் இளைஞனான காரிவளவன்.

தலையசைப்பினாலேயே அதை ஆமோதித்த கருணாகரத்தேவன் அபராஜிதனைப்பார்த்து, உணர்ச்சிமிகுந்த குர



லில்கூறினான். ''பிரபு! நான் எந்தப் பரம்பரையில் உதித்தவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் சோழநாட்டு அமைச்சனான அண்ணன் பல்லவராயனுடைய சகோதரன். தமிழ் நாட்டின் சிறப்புக்காகவே என் மூதாதையர் இந்தப் பூமியில் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள் திடீரென்று தமிழ்நாட்டு மண்ணுக்கு நான் துரோகம் நினைப்பேனா? எனக்கு வயதாகி விட்டது பிரபு! இன்னும் சில வருஷங்கள் தானிருப்பேன். தமிழ்நாடு எப்படியானாலும் போகட்டுமென்று சும்மாயிருக்கலாம். ஆனால் தமிழன்னை ஊட்டிய உணவினால் உடம்பில் ஊறும் ரத்தம் நாட்டின் கேடுகெட்ட நிலையைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க விடவில்லை. நான் சோழநாட்டவன், பாண்டியநாடு எக்கேடு கெட்டால் என்னவென்று இருக்கலாம் தமிழ் மன்னர்கள் ஒருவருக்கொருவர் போரிடுவதானால் அப்படியிருக்கவும் செய்வேன். ஆனால் சிங்களவர் கால்களில் தமிழ்நாடு அகப்பட்டுத் தத்தளிப்பதைப் பார்த்துக்கொண்டு எந்த தேசபக்தன் சும்மாயிருக்க முடியும்? சிங்கள ராஜ பரம்பரைச் சரித்திரமான மஹாவம்சத்தில் 'சிங்கள மன்னன் பராக்கிரமபாகுவின் தண்டநாயகன் இலங்காபுரன் செந்தமிழ் வளர்த்த மதுரையம்பதியைச் சீரழித்தான். அதன் மன்னன் வீரபாண்டியன் அவனுக்கு அடிமையாய்க் காலங்கழித்தான்' என்று எழுதப்படுவதைச் சுதந்திர உள்ளம் படைத்த எந்தத் தமிழன் தான் அனுமதிக்க முடியும்? பிரபு! யோசித்துப் பாருங்கள்.''

இப்படிப் பேசிக்கொண்டே போன அந்த வயோதிக வீரன் கண்களில் உணர்ச்சிப் பெருக்கால் ஒரு துளி நீரும் வெளிப்பட்டதைப் பார்த்த அபராஜிதனின் இரும்பு மனமும் சற்று நெகிழ்ந்தது. அடுத்து பதில் சொன்ன அவன் குரலில் கடுமையும் குறைந்திருந்தது. ''தேவரே! உங்கள் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்பதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் யாருக்கு எதிராகச் சதிசெய்ய நினைக்கிறீர்களோ அவன் என் ஒன்றுவிட்ட மாமன் மகன்'' என்று

ஏதோ மேலே பேசப்போன அபராஜிதனை இடையே தடுத்த நிஷதராசன், ''பிரபு, நாட்டின் உறவு, மனித உறவை மீறியது. மண்ணுக்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பு உறவுமுறைக்கு அப்பாற்பட்டது. அரச வம்சத்தில் பிறந்தவர்கள் நாட்டின் நன்மை ஒன்றைத் தான் கவனிக்கவேண்டும்'' என்றான்.

''உண்மைதான் அமராவதித் தலைவரே! நாட்டின் நன்மைக்கு நான் செய்யக்கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். உங்கள் மனத்திலுள்ளதை மன்னனிடம் தெரிவிக்கிறேன்''.

''உடனே சிறைப்படுவீர்கள்'' என்றான் தேவன்.

''காரணம்?''

''இப்போது பேருக்கு வீரபாண்டியன் மன்னனே தவிர, உண்மையாக ஆள்பவன் சிங்களனான இலங்காபுரன் தான்.''

அபராஜிதன் இதற்குப் பதில் சொல்லாமல் ஏதோ சிந்திக்கத் தொடங்கினான். அவன் சிந்தனையைத் துண்டித்துக் கருணாகரத் தேவன் பேசலானான்: ''பிரபு! நாடு சிதறிவிடப் போகிறது நாலாபக்கங்களிலும் யுத்த மேகங்கள் கவிந்து நெருங்குகின்றன. பாண்டியநாடு சிங்களவர் கைகளில் சிக்கிக் கொண்டிருப்பதை விரும்பாத சோழ மன்னனான ராஜாதிராஜன் பாண்டிய நாட்டைத் தாக்கச் சித்தமாகிறான். இலங்காபுரனால் கீழைமங்கலத்தையும் மேலைமங்கலத்தையும் அடைந்த குறுநில மன்னனான மழவராயனும் இலங்காபுரனை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு, நாடு கடத்தப்பட்ட குலசேகர பாண்டியனுடன் சதி செய்து வருகிறான். இதை ஊகித்த இலங்காபுரன் இன்னும் அதிகப் படைகளையனுப்புமாறு இலங்கைக்கு ஓலை அனுப்பியிருக்கிறான். பாண்டிய நாடு யுத்தகளமாகி ரத்த வெள்ளம் ஓடப்போகிறது. எண்ணற்ற தமிழ் மக்களின் தலைகள் தரையில் உருளப் போகின்றன. எத்



தனையோ பெண்கள் விதவைகளாகப் போகின்றனர். குழந்தைகள் அனாதைகளாகப் போகின்றன. அடுத்த தலைமுறையில் இங்கு சிங்கள மன்னன் ஆட்சிதான். இந்நிலை ஏற்படுவது உங்களுக்குச் சம்மதமா?''

இதைக் கேட்ட அபராஜிதனின் முகத்திலும் தீவிரமான கவலை படர்ந்தது. ''இந்த விஷயங்களை ஏன் வீரபாண்டியனிடமே சொல்லக்கூடாது?'' என்று கேட்டான்.

''சொல்லிப் பார்த்தோம் பிரபு! மன்னன் கேட்கவில்லை. இலங்காபுரனை நாட்டைவிட்டு அனுப்பாவிட்லும் அவன் ஆதிக்கத்தை அடக்க வழி சொன்னோம். அதற்கு மன்னன் செவி சாய்க்கவில்லை'' என்று கருணாகரத்தேவன் வருத்தத்துடன் கூறினான்.

''அது என்ன வழி?''

''மழவராயன் மகளை மணந்து கொள்ளச் சொன்னோம்''.

''மன்னன் இசையவில்லையா?''

''இல்லை.''

''ஏன்? பெண் அழகில்லையா?''

''அவளைவிட அழகி தமிழ்நாட்டில் கிடையாது''.

''வேறு என்ன ஆட்சேபம்?''

''மன்னர் மனம் மண வாழ்க்கையை விரும்பவில்லை''. என்று சம்பாஷணைக்கு இடையே புகுந்தான் முத்தரையன்.

''காரணம்?''

''சிங்களத்துப் பைங்கிளியிடம் மன்னன் மயக்கமுற்றிருக்கிறான்'' என்று விளக்கினான் முத்தரையன் மிக இகழ்ச்சி ததும்பும் குரலில்.

''இலங்காபுரனின் மருமகள்'' என்று முணுமுணுத்தான் அபராஜிதன்.

''ஆம்! பிரபு! அவன் மையலில் சிக்கியிருக்கிறார் மன்னர். ஆகையால் மழவராயனோடு மணத்தொடர்பு சாத்தியமில்லை. பாண்டிய நாட்டைக் காக்க இப்பொழுது ஒரே வழி தான் இருக்கிறது'' என்றான் கருணாகரத் தேவன்.

அபராஜிதன் விழிகள் இவனை ஏறெடுத்து நோக்கிப் பார்த்தன. ''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

அபராஜிதனை அந்த நால்வரும் சூழ்ந்து நின்றார்கள். ''பாண்டிய நாட்டு மணிமகுடத்தை சேனாதிபதியவர்கள் ஏற்கவேண்டும்!'' என்றான் நிஷதராசன் மிக மெதுவாக.

திடீரென்று தன்முன்னால் பலவந்தமாகத் திணிக்கப் பட்ட அதிர்ஷ்டத்தை எண்ணியதால் மூச்சு நின்றுவிடும் போலிருந்தது அபராஜிதனுக்கு. மணிமுடி சூடுவதால் ஏற்படக்கூடிய பிரக்யாதிகள் அவன் மனதில் ஏதேதோ கனவுகளைக் கிளப்பிவிட்டன. சற்றுநேரச் சிந்தனையில் அந்தக் கனவுகளை உதறினான். ''நான் பாண்டியனல்ல. பல்லவ ரத்தம் என் உடம்பில் ஓடுகிறது...'' என்று பதில் கூறினான்.

''அதுவும் தமிழன் ரத்தம்தான்'' என்றான் காரி வளவன்.

''நான் வாள் தாங்கும் போர்வீரன். மணிமகுடம் தாங்கி அரியணையில் வீற்றிருக்கத் தகுந்தவனல்ல''

''பாண்டிய நாட்டுக்கு இப்போது வேண்டியது மஞ்சத்தில் புரளும் மன்னனல்ல பிரபு! வாள் தாங்கும் வீரன்தான் தேவை. பாண்டியநாட்டுச் சேனாதிபதியான உங்களை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். நீங்கள் தலைநகர வீதிகளில் செல்லும்போது, மக்கள் செய்யும் ஆரவாரம் உங்கள் காதுகளில் விழுந்ததில்லையா? தூரக்கிளை உறவானாலும் உங்கள் உடம்பிலும் மன்னர்குல ரத்தமே ஓடுகிறது. உங்களையே மக்கள் நம்பியிருக்கிறார்கள். நீங்கள் சாய்கிற பக்கம்தான் பாண்டியநாட்டுப் படைவீரர்கள்



சாய்வார்கள். சரி என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள் பிரபு! எங்கள் படைகளையும் உங்கள் படைகளோடு இணைக்கிறோம். இன்னும் நான்கு நாட்களில் பாண்டிய நாட்டு ராஜ்யபாரத்தை நீங்கள் வகிக்கலாம்'' என்று வற்புறுத்திச் சொன்னான் கருணாகரத்தேவன்.

எதற்கும் கலங்காத அபராஜிதன் மனம்கூட ஒரு விநாடி கலங்கியது. ஆனால் அடுத்த நிமிஷம் அந்தக் கலக்கம் பறந்தோடியது தேவனுக்கு ஏதோ பதில் சொல்லப்போன அபராஜிதன் சட்டென்று வார்த்தையை நிறுத்தி எதையோ உற்றுக் கேட்டான். அவன் காதில் விழுந்தது மற்றவர்கள் காதிலும் விழுந்திருக்க வேண்டும். கீழே கிடந்த வாள்களை வெகு துரிதமாக இடையில் கட்டிக் கொண்டார்கள். ஆரம்பத்தில் மெல்லக் கேட்ட குதிரைகளின் காலடிச சத்தம், வரவர மிகப் பலமாகக் கேட்டது. கவலை பாய்ந்த அந்த நான்கு வீரர்களின் முகத்தைப் பார்த்த அபராஜிதன் ''இப்பொழுது மகுடத்துக்குப் பதில் மரணம் நிச்சயம்'' என்றான் புன்சிரிப்புடன்.

அபராஜிதனை நோக்கிக் கண்களை உயர்த்தினான் கருணாகரத்தேவன்.

''சந்தேகமே வேண்டாம். நம்மைத் தேடி வருவது இலங்காபுரனின் வீரர்கள்தான்'' என்று விளக்கினான் பல்லவனான அபராஜிதன்.

## 2. சரிவுப் பாதையில்

அபராஜிதன் சொற்களைக் கேட்டவர்கள் பயங் கொள்ளிகளாயிருந்தால் அச்சத்தால் நிலைகுலைந்து போயிருப்பார்கள். ஆனால், மரணத்தை மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த அந்த மாவீரர் நால்வரிடத்தும் அவன் வார்த்தைகள் அச்சத்துக்குப் பதில் பெரும் கவலையை விளைவித்தன. கவலைக்கு காரணமும்

எதிர் நோக்கி வந்து கொண்டிருந்த ஆபத்தல்ல. நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே வீரனான அபாரஜிதனையும் இதே அவதியில் சிக்கவைத்து விட்டோமே என்ற நினைப்புதான். ஆகவே அவனை எப்படிக் காப்பாற்றலாம் என்பதிலேயே அவர்கள் எண்ணங்கள் ஓடத் தொடங்கின. முதன் முதலில் எதிரியின் பலாபலம் எப்படியிருக்கிறது என்பதை ஆராய்ந்த பிறகு அபராஜிதனைத் தப்புவிக்கும் மார்க்கத்தைத் தேடவேண்டும் என்று தீர்மானித்த கருணாகரத் தேவன், குதிரைகளின் காலடிச் சத்தத்தைச் சற்று நேரம் உற்றுக்கேட்டான் பிறகு சொன்னான், ''பிரபு! குதிரைகளின் காலடிச் சத்தத்திலிருந்து மதிப்புப் போட்டால் ஐம்பது வீரர்களாவது இருப்பார்கள் போல் தெரிகிறது'' என்று.

தேவனுக்கு முன்பாகவே எதிரி வீரர்கள் தொகையை நிர்ணயிப்பதில் முனைந்திருந்த அபராஜிதனும் ''ஆயாம் தேவரே! ஐம்பது வீரர்களுக்குக் குறைவில்லை. மேற்கொண்டும் பத்துப் பதினைந்துபேர் இருக்கலாம்'' என்று பதில் சொன்னான்.

''எதிரி படைபலம் அத்தனை பெரியதாயிருந்தால் போரிட்டுச் சமாளிப்பதும் சாத்தியமாகத் தோன்றவில்லையே. நாமிருப்பதோ நான்கே பேர்'' என்றான் நிஷதராசன்.

இதைக் கேட்ட அபராஜிதன் அமராவதித் தலைவனைத் திரும்பிப் பார்த்து, ''கணக்கு சரியில்லை. அமராவதித் தலைவரே! இங்கிருப்பது ஐந்துபேர்'' என்று திருத்தினான்.

''உங்களை நான் கணக்கில் சேர்க்கவில்லை'' என்றான் அமராவதித் தலைவன்.

''ஏன்?''

''நீங்கள் நாட்டுக்கு முக்கியம். உங்களை இந்தக் குடிசைக்கு வரவழைத்ததே பிசகு. வரவழைத்த பின் ஏற்பட்ட ஆபத்தில் சிக்க வைப்பது அதைவிடத் தவறு.''



அமராவதித் தலைவனின் அபிப்ராயத்தை மற்றவர்களும் ஆமோதித்தார்கள். ''உண்மைதான் பிரபு! நீங்கள் நாட்டுக்கு முக்கியம். நீங்கள் எப்படியாவது தப்பித்தான் ஆகவேண்டும்'' என்று தீர்மானமும் கண்டிப்பும் நிறைந்த குரலில் சொன்னான் கருணாகரத்தேவன்.

இதைக் கேட்ட அபராஜிதன் சிறிது இரைந்தே நகைத்து விட்டான். தலை போகும் ஆபத்து துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்தபோது அவன் சிரித்ததை, கூட இருந்தவர்களால் ரசிக்க முடியவில்லை. ஆகவே வங்கார முத்தரையன் வினவினான்: ''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று.

''நம்மில் யார் தப்பவேண்டியது, யார் தப்ப வேண்டாம் என்பதைப் பற்றி நாமே தீர்மானிக்கிறோமே என்பதை நினைத்து சிரித்தேன்!'' என்றான் அபராஜிதன்.

இதைக் கேட்டதும் இளைஞனான காரிவளவனும் பெரிதாக நகைத்தான். அசந்தர்ப்பமான நிலையில் அந்த இரண்டு வாலிபர்களும் சிரித்ததைக் கண்டு வெகுண்ட கருணாகரத்தேவன் தன் சினத்தைக் காரியின் மேல் திருப்பி மிக உஷ்ணமாக அவனைப் பார்த்தான். ''தேவரே! கோபித்துப் பயனில்லை. சேனாதிபதியவர்கள். சொல்லுவது சரிதான். யார் தப்பவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் அதோ குதிரையில் வரும் சிங்கள வீரர்கள் தான். ஆகையால் இந்தப் பயனற்ற யோசனைகளில் காலத்தைச் செலவிடாது போருக்கு ஆயத்தமாவோம்'' என்றான் காரி.

''ஆயத்தத்திற்கு அதிக அவகாசமில்லை. கிளம்ப வேண்டியதுதான்'', என்றான் நிஷதராசன்.

''உங்கள் குதிரைகள் எங்கிருக்கின்றன?'' என்று கேட்டான் அபராஜிதன்.

''குடிசைக்குப் பின்னால் கட்டியிருக்கிறோம்'' என்று பதில் சொன்னான் காரி.

''சரி, அவிழ்த்துக்கொண்டு கிளம்புங்கள்!'' என்று உத்தரவிட்டான் அபராஜிதன்.

''தாங்கள்...'' என்று நிஷதராசன் ஏதோ சொல்லப் போன சமயத்தில் அபராஜிதனுக்கு குதிரையில்லை என்ற நினைப்பு அந்த நால்வருக்கும் வரவே, சற்று நேரம் திக்பிரமை பிடித்து நின்றார்கள்.

''குதிரையில்லாததால் பாதகமில்லை. நான் நடந்து வருகிறேன். நீங்கள் முன்னால் செல்லுங்கள்'' என்று கூறினான் அபராஜிதன்.

''அது சரியல்ல பிரபு! ஐம்பது வீரர்களை ஐந்து பேர் சமாளிப்பதே கஷ்டம். அதிலொருவர் குதிரை இல்லாமல் தரையில் நின்று போரிடுவதென்றால் நடக்காத காரியம். எங்கள் குதிரைகளிலொன்றை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றான் கருணாகரத்தேவன்.

''குதிரையில்லாதவர் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று அபராஜிதன் வினவினான்.

ஒரு விநாடிதான் யோசித்தான் கருணாகரத்தேவன். ''வேறு வழியில்லை; குடிசையிலேயே தங்கிவிட வேண்டியதுதான்'' என்றான்.

''ஏன்?'' இது நிஷதராசன் கேள்வி.

''தப்ப அந்த மார்க்கந்தான் உண்டு: இங்கு சதி நடக்கும் தகவல் இலங்காபுரனுக்கு எட்டியிருந்தாலும் நான்கு பேர் கூடப்போகும் செய்திதான் கிடைத்திருக்கும். சேனாதிபதி இங்கு வரப்போவது தெரியக் காரணமில்லை. ஏனென்றால், அவருக்குக் காரியின் ஆள் மூலமாகத்தான் செய்தி போயிருக்கிறது. அவனும் தடையின்றித் திரும்பி வந்திருக்கிறான். ஆகையால் நான்கு வீரர்களைக் கண்ட பின் ஐந்தாவது பேர் இருப்பாரென்று சிங்கள வீரர்கள் நினைக்க இடமில்லை. மேலும், தங்கள் படையை ஊடுருவிச் செல்லும் நான்கு பேரைத் துரத்திப் பிடிப்பதில் எதிரிகள் முனைவார்களே தவிர, அவர்கள் கணக்கில் வராத ஒருவனைத் தேடிக்கொண்டு குடிசைக்கு வரமாட்டார்கள்'' என்று விவரித்தான் கருணாகரத்தேவன்.



''இங்கு கூடப்போவது நான்கு பேர்தான் என்று தெரிந்திருந்தால் சேனாதிபதியின் குதிரைமேல் அவர்கள் கத்திவீசக் காரணம்?'' என்று கேட்டான் நிஷதராசன்.

''கூடப்போகும் நால்வரில் அவர் ஒருவர் என்று நினைத்திருக்கவேண்டும்'' என்றான் தேவன்.

தேவனின் அபிப்பிராயம் உண்மைதான் என்பதை அபராஜிதனும் ஒப்புக்கொண்டான். ''உங்கள் கடிதத்தினால் ஏற்பட்ட சந்தேகத்தால் நான் வழக்கமாக அணியும் உடைகளைக்கூட அணியாமல் சாமான்ய உடைகளையே தரித்துவந்தேன். சாதாரண வழிப்போக்கனுக்கும் எனக்கும் வாள் ஒன்றுதான் வித்தியாசம். ஆனால் கள்வர்கள் கூடத்தான் வாள் அணிந்து கொள்கிறார்கள்'' என்றாள்.

''தங்கள் முகத்தைப் பார்த்தால் யார் என்று புரிந்து கொள்ள முடியாதா?'' என்றான் முத்தரையன்.

''முடியும். ஆனால் புதர்களில் வீரர்கள் இருந்ததைக் கண்டதும் தலையை மறுபக்கம் திருப்பி சகல விவகாரங்களையும் கடைக்கண்ணாலேயே பார்த்தேன். ஆகவே நெருங்கி அவர்கள் வந்திருந்தாலொழிய என்னை அடையாளம் கண்டுகொண்டிருக்க முடியாது. ஆனால் அவர்கள் நெருங்கு முன்புதான் நான் ஓடிவிட்டேனே!'' என்று அபராஜிதன் பதில் சென்னான்.

அவன் அத்தனை முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டது அவர்கள் யாருக்கும் வியப்பை அளிக்கவில்லை. பாண்டிய நாட்டுச் சேனாதிபதி எதையும் சந்தேகிப்பவனென்பதும், அவனை ஏமாற்ற, தந்திரத்தில் மிகுந்த இலங்காபுரனுக்கே முடியவில்லை என்பதும் பிரசித்தமாயிருந்தன. ஆகவே வீண் தர்க்கத்தில் காலத்தைச் செலவழிக்காமல் அடுத்த விஷயத்தைத் தீர்மானிப்பதில் முனைந்த தேவன். ''சேனாதிபதியவர்கள் கூறிய தகவலி

லிருந்து அவர்கள் இங்கு வந்திருக்கும் செய்தி எதிரிகளுக்குத் தெரிய நியாயமில்லையென ஊர்ஜிதமாகிறது. சதிகாரர்களில் ஒருவர் என்று நினைத்தே சிங்கள வீரர்கள் அவரைத் தாக்கியிருக்கவேண்டும் இங்கு ஐந்தாவது நபர் வரப்போகும் விஷயம் அவர்களுக்குத் தெரியாது. ஆகவே எதிரிகளைச் சமாளிக்க நான்கு பேர்தான் போக வேண்டும். உங்களில் யார் குடிசையில் தங்குவதாக உத்தேசம்?'' என்று கேட்டான்.

சிறிது நேரம் யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. கடைசியாக முத்தரையன் தேவரை நோக்கி, ''தேவரே! நீர் தங்குவதுதான் நல்லது. உமக்கோ வயதாகிவிட்டது'' என்றான். தேவனிடம் கண்களில் கோபம் பொங்கி வழிந்தது ''முத்தரையா! இதே பேச்சை வேறு சந்தர்ப்பத்தில் என்னிடம் பேசியிருந்தால் எனக்கு வயதானாலும் என் வாளுக்கு வயதாகல்லை என்பதை நிரூபித்திருப்பேன். ஆனால் அதைப்பற்றி இன்னொரு சமயம் பேசிக்கொள்வோம்'' என்று அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு, அபராஜிதனை நோக்கி, ''பிரபு நீங்கள் என் குதிரையை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். ஆனால் வழக்கம்போல் போரின் முன்னணியில் நிற்காதீர்கள். உங்கள் உயிர் மக்களுக்குத் தேவையாயிருக்கிறது. அதை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள பிரயத்தனப்படுங்கள்'' என்று சொல்லிவிட்டு பாண்டிய சேனாதிபதியின் இரு கைகளையும் பிடித்துக் கண்களில் ஒத்திக்கொண்டான் கருணாகரத் தேவன்.

அந்த மாபெரும் வீரனைத் தனிமையாகக் குடிசையில் விட்டுச்செல்ல மனம் இடங்கொடாவிட்டாலும், மற்ற வீரர்கள் துரிதப்படுத்திய காரணத்தாலும் ஆபத்து வேகமாக மலைபோல் வந்து கொண்டிருந்தபடியாலும் அபராஜிதன் வேண்டா வெறுப்பாகக் குடிசையைவிட்டு வெளியே வந்தான். அவன் வருவதற்குள் மற்ற வீரர்கள் குதிரைகளைக் குடிசை வாசலில் தயாராக வைத்திருந்தார்கள். குதிரை மேல் ஏறிக்கொண்ட அபராஜிதன் குடிசை



வாசலிலிருந்தே மலைப்பிரதேசத்தை சுற்றிலும் நோக்கினான். ஒரே மலைகளும் பள்ளத்தாக்குகளுமாகப் பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாக விளங்கிய அந்தப் பிரதேசத்தில் எங்கும் செங்குத்தான பாறைகளும் கீழே அதள பாதாளமாக விளங்கிய பள்ளங்களும் தெரிந்தனவேயொழிய, குதிரைகள் போகும் பாதை எதுவும் தெரியவில்லை. அவன் கண்களுக்குத் தெரிந்த பாதை குடிசைக்கு எதிரே கீழே சென்று கொண்டிருந்த ஒரே பாதைதான். அந்தப் பாதையும் சேர்ந்தாற்போல் நான்கு குதிரைகள் செல்ல முடியாதபடி மிக்க குறுகலாயிருந்தது. ''இந்த ஒரு பாதையைத் தவிர வேறு பாதையே கிடையாதா? குடிசையின் பின் பக்கம் செல்ல முடியுமா?'' என்று அபராஜிதன் முத்தரையனைக் கேட்டான்.

''வேறு பாதையே கிடையாது, பிரபு. யாரும் சுலபத்தில் வரக்கூடாத இடமாக இருக்கவேண்டுமென்பதற்காகவே தேவர் இந்தக் குடிசையைச் சதியாலோசனைக்குப் பொறுக்கினார்'' என்றான் முத்தரையன்.

''குடிசைக்குப் பின்புறமும் பெரிய பாதாளம். தவறி விழுந்தால் எலும்புக்கூடக் கிடைக்காது'' என்று விளக்கினான் நிஷதராசன்.

''இரண்டாம் நாள் பால் தெளிப்பதானாலும் மலை உச்சியிலிருந்தே தெளிக்க வேண்டியதுதான்'' என்று காரி தன் சாதுரியத்தைக் காட்டினான்.

''இந்த மலையுச்சிக்குப் பாலைத் தூக்கிக்கொண்டு வருவதும் கஷ்டம்'' என்றான் அமராவதித் தலைவன், ஹாஸ்யத்தில் காரிக்குத் தான் சளைத்தவனல்ல என்பதைக் காட்டுவதாக.

மரணம் நிச்சயமென்ற சமயத்திலும் வேடிக்கையாகச் சம்பாஷிக்கவல்ல இத்தகைய வீரர்களைப் பெற்றிருந்தும் பாண்டியநாடு சிங்களவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறதேயென்ற சிந்தனையில் சில விநாடிகள் ஆழ்ந்த அபராஜிதன் முடிவில் குதிரையை மெல்லச் செலுத்தலா

னான். மற்ற வீரர்களும் அவனைப் பின்பற்றிச் சென்றார்கள். வழி இருக்கும் தன்மையையும் எதிரிகள் பலத்தையும் கவனித்த பாண்டிய சேனாதிபதி, "நாம் இரண்டு இரண்டு பேர்களாகச் செல்ல வேண்டும். பாதையில் நான்கு குதிரைகள் ஏக காலத்தில் செல்லலாம். ஆகையால் எதிரிகள் நால்வராக அணிவகுத்து வரும்போது நாம் இரண்டிரண்டு பேர்களாக அணிவகுத்துப் பாய்ந்தால்தான் அம்பு போல் இடையே ஊடுருவிச் செல்ல முடியும்" என்று உத்தரவிட்டான். அவன் கட்டளைப்படியே அவனுக்குப் பக்கத்தில் காரிவளவன் குதிரையை நடத்தினான். மற்ற இருவரும் நெருங்கிப் பின்னே வந்தார்கள். மலைச்சரிவு திடுக்கென்று கீழே இறங்கும் இடத்துக்கு வந்ததும் தன் குதிரையை நிறுத்திய அபராஜிதன் போர் முறையை அவர்களுக்கு விளக்கிச் சொன்னான். "இங்கு மரங்கள் அடர்த்தியாயிருப்பதால் நம்மை மறைத்து நிற்கும். அதோ கீழே முப்பது அடிக்குப் பிறகு பாதை திரும்புவதாகத் தெரிகிறது. அங்கிருந்து நாம் சென்று திருப்பத்தில் அகப்பட்டுக் கொண்டால் எதிரிகள் தாக்குதலை நெருக்கு நேர் சமாளிக்க முடியாது. நகர்ந்தாலும் பள்ளத்தாக்கில் விழுந்து விடுவோம். எதிரிகள் அந்த மூலையைத் திரும்பி நமக்கு நேர் எதிரில் சரிவில் ஏறும்போது அவர்கள் மீது கனவேகத்துடன் குதிரைகளைச் செலுத்தி பெரிய நீர்வீழ்ச்சி அவர்கள் தலையில் விழுவதுபோல் சூறாவளி வேகத்தில் தாக்க வேண்டும். அப்படித் தாக்கும்போது நெருங்க நின்று அவர்கள் படைக்கு இடையே அம்புபோல் ஊடுருவ வேண்டும்" என்றான். அவன் கட்டளைப்படி வாட்களை உருவி எதிரிகளை எதிர் பார்த்து நின்றார்கள் அந்த வீரர்கள். அபராஜிதனும் தன் வாளை உருவி ஒரு முறை அதைத் தடவிக் கொடுத்துக் கூர் பார்த்துக் கொண்டான்.

சிங்கள வீரர்களின் குதிரைகளின் காலடிச் சத்தம் வரவரப் பலப்பட்டது. கீழே பாதை திரும்பும் வரையில் வந்த வீரர்கள் சட்டென்று நின்றார்கள். சற்று நேரம்



பயங்கரமான அமைதி நிலவியது பிறகு வந்த வீரர்களுக்குள் சம்பாஷணை வலுத்தது. சம்பாஷணைக்குப் பிறகு வீரர்கள் மலைச்சரிவில் ஏறிவரும் காலடிச்சத்தம் மட்டுமே கேட்டது. "எதிரிகள் போர் முறையை மாற்றிக் கொள்வதாகத் தெரிகிறது" என்றான் காரிவளவன்.

"ஆம்; பாதை குறுகலாயிருப்பதை அவர்களும் ஊகித்துக் கொண்டிருப்பார்கள் போல் தோன்றுகிறது. அப்படியானால் குதிரைகளைத் திருப்பத்திலேயே கட்டி விட்டு வீரர்கள் மட்டும் ஈட்டிகளுடன் அணிவகுத்து வருவார்கள். நாம் கீழே இறங்க முற்பட்டதும் குதிரை வயிற்றுக்கு ஈட்டிகள் குறிவைத்து எறியப்படும். குதிரைகள் வீழ்ந்தால் நாம மலைச்சரிவில் உருளுவோம். பிறகு நம்மை வெட்டிப் போடுவது ஒரு பிரமாத காரியமல்ல" என்று விளக்கினான் அபராஜிதன்.

"சண்டையில் வெற்றி தோல்வி சகஜந்தானே, பிரபு. ஜெயித்தால் விடுதலை, மாண்டால்..." என்று துவங்கிய நிஷதராசன் பேச்சை, "வீர சொர்க்கம்" என்று முடித்தான் முத்தரையன்.

'இருக்கிற நிலையைப் பார்த்தால் அது நிச்சயம்!" என்று அபராஜிதன் சிரித்தான்.

எதிரிகளின் ஏற்பாடு அபராஜிதன் நினைத்தபடியே நடந்தது. சிங்கள வீரர்கள் குதிரைகளை விட்டிறங்கி, தரையில் அணிவகுத்து நின்றார்கள். முதன் முதலில் வழியைச் சரியாக அறியப் பந்தங்கள் கொளுத்தப்பட்டன. பந்தங்களைத் தாங்கியவர்கள் பக்கவாட்டில் நின்று வெளிச்சம் காட்ட இடையே ஈட்டிகளைத் தாங்கியவர்கள் வரிசையாக நின்றார்கள. அவர்களுக்குப் பின்னால் வாள் தாங்கியவர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

இப்படி அணிவகுக்கப்பட்ட படை மெல்ல மெல்ல மலைச்சரிவில் ஏறி வந்தது பாதையின் நடுவுக்கு வந்ததும் மேலே குதிரைக் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நின்றிருந்த பாண்டிய சேனாதிபதி, வாளைத் தலைக்கு

வேலை ஒரு முறை சுழற்றி, ''பாண்டிய நாடு வாழி!'' என்று பயங்கரமாகக் கூவிக் கொண்டே எதிரிகளை நோக்கி மலைச்சரிவில் பாய்ந்து விட்டான். அடுத்த வினாடி எதிரி வீரர்களின் கூச்சலும் கத்தியோடு கத்தி உராயும் சத்தங்களும், மலை பள்ளத்தாக்குகளில் பயங்கரமாக எதிரொலி செய்தன.

சூறாவளி வீசுவதைப்போல் தங்களிடையே பாய்ந்தவர்கள் நான்கு பேரானாலும், அவர்களில் ஒவ்வொருவனும் பத்து வீரர்களுக்குச் சமானம் என்பதைச் சற்று நேரத்தில் சிங்கள வீரர்கள் புரிந்து கொண்டார்கள். முதலில் பாய்ந்த அபராஜிதனும், காரிவளவனும் அணிவகுப்பில் நடுப்பாகத்திலிருந்தவர்களை வெட்டிப்போட்டு இடையே புகுந்து விட்டதைக் கவனித்தார்கள்.

அபராஜிதன் வாள் மின்னல் வேகத்தில் சுழற்றப்படுவதையும் அவன் வாள் பாயுமிடங்களிலெல்லாம் யாராவது ஒருவன் மடிந்து விழுவதையும் கண்ட எதிரி வீரர்கள், அவனை எப்படியும் தப்பவிடக் கூடாது என்ற காரணத்தால் அவனை நெருங்கி மிக உக்கிரமாகப் போரிட்டார்கள். அபராஜிதன் தன் சொந்த வாளினால் மட்டுமல்ல, குதிரையினாலும் போராடினான். குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து வயிற்றில் குதிகாலால் உதைத்து, புரவியை முன்னங்கால்களைத் தூக்கி நிற்க வைத்தும், திருப்பித் திருப்பிச் சுழற்றியும், எதிரிகள் மேல் பாயும்படி செய்து பளிச்சுப் பளிச்சென்று எதிரிப் படையின் நாற்புறமும் வாயுவேகத்தில் சுற்றிச் சுற்றி எதிரிகளைத் தாக்கினான்.

அபராஜிதன் இப்படிப் போரிட்டுக் கொண்டு எதிரி அணிவகுப்பின் கோடிக்கு வந்துவிட்ட சமயத்தில் அவர்கள் படைத்தலைவன், ''அதோ போகிறான்! விடாதீர்கள்!'' என்று கூவவே மீண்டும் சில வீரர்கள் அபராஜிதனை நோக்கிப் பாய்ந்தார்கள். மறுபடியும் குதிரையை அபராஜிதன் திருப்பினான். அவன் செய்கையை உணர்ந்த



அந்தப் போர் புரவியும் கம்பீரமாகத் தன் முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு எதிரிகள் மீது பாய்ந்தது. சில வீரர்கள் பின்னடைந்தார்கள். சிலர் மிரண்டும் ஓடினார்கள். ஒருவன் மட்டும் தைரியமாகக் குதிரைக்கு அடியிலே குனிந்து அதன் வயிற்றில் வேலைப் பாய்ச்சி விட்டான்.

குதிரை வீரிட்டலறிக் கீழே விழுந்தது. தரையில் குதித்து நின்ற அபராஜிதனைப் பத்துப் பதினைந்து வீரர்கள் நெருங்கி வந்தார்கள். தனக்கு இறுதிக் காலம் வந்துவிட்டதென நினைத்து அபராஜிதனும் வாளைச் சுழற்றிக்கொண்டே நான்கைந்து வீரர்களையாவது மீனாட்சியம்மைக்குப் பலி கொடுக்காமல் சாவதில்லை என்ற உறுதியுடன் எதிரிகளைச் சமாளிக்க ஆரம்பித்தான். அவன் போராவேசம் அதிகமாக ஆக அவனைச் சிறைப் பிடிக்க முயன்ற எதிரிகளின் உறுதியும் அதிகமாகியதால் அவர்களும் சளைக்காது போரிட்டார்கள். வாள்வீரர்களை அவன் சமாளித்துக் கொண்டிருந்த சமயத்தில் தூரத்திலிருந்து ஒருவன் வீசிய ஈட்டியொன்று பாண்டிய சேனாதிபதியின் இடதுதோளில் பாய்ந்தது. அதைத் தோளிலிருந்து பிடுங்கி எறிய அபராஜிதன் தன் வாள் கரத்தை உபயோகப் படுத்திய தருணத்தில் ரகசியமாகப் பின் பக்கம் நெருங்கிய சிங்கள வீரனொருவன் அவனை வெட்டிப் போடத் தன் வாளை உயர்த்தினான்.

## 3. திரும்பியவன் யார்?

மனித வாழ்வில் மரணபயம் சதா இருந்துகொண்டே இருக்கிறது. ஆயுட்கால அளவை ஒரே சீராக வைத்துக் கொண்டு அல்லும் பகலும் ஓய்வின்றி இடைவிடாது இயங்கி வரும் இதய யந்திரம் எந்த வினாடியும் நின்று விடலாம். அப்படி அதுவாக நிற்காவிட்டாலும் அதை நிற்க வைக்கக்கூடிய வியாதிகளும் விஷப் பூச்சிகளும் நிலத்திலும் நீரிலும் காற்றிலும் ஏராளமாகச் சஞ்சரித்துக்

கொண்டிருக்கின்றன. இவை தவிர, உயிரை மாய்த்துக் கொள்ளும் வசதிகள் பலவும் ஏற்பட்டு, அந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய கோணல் புத்தியும் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது அதன் காரணமாக ஆற்றிலும், குளத்திலும், கிணற்றிலும், கேணியிலும் விழுந்து பிராணனை விடப் பிரயத்தனம் செய்யும் மேதாவிகள் உண்டு. முழம் கயிற்றை நாடும் முட்டாள்களும் உண்டு. இத்தனையும் போதாதென்றாலும் மனிதன் விரோதத்தை வளர்த்துக்கொண்டு பரஸ்பர அழிவுக்கான சாதனங்களைத் தானாகவே சிருஷ்டித்துக் கொள்கிறான். மனித சமூகம் வளர வளர இந்த அழிவுச் சாதனங்களும் வளர்ந்து வருவதால் எந்த நிமிஷத்திலும் அழிந்து போகக்கூடிய ஸ்திதியிலேயே மனிதன் இருந்து வருகிறான். 'மின்னின் நிலையில மன்னுயி ராக்கைகள்' எனச் செந்தமிழ்க் கவிவாணர் சுட்டிக் காட்டியதும் இந்தப் பெரிய உண்மையைத்தான்.

இத்தனை ஆபத்துக்கள் சூழ்ந்து கிடந்தாலும், மரண சந்தர்ப்பங்கள் மண்டிக்கிடந்தாலும், வேளை வந்தாலொழிய உயிர் உடலைவிட்டுப் பிரிவதில்லை. மனித சிந்தனைக்கும் மீறிய பெரிய மர்மத்தால் வாழ்க்கை இயக்கப்படுவதால், இஷ்டப்படி எதையும் சாதிக்க மனிதனால் முடிவதில்லை. இறப்பதும் இருப்பதும் இறைவன் திருவுளப்படியே நடந்தேறுகிறது. இதன் காரணமாகத்தான் கழுத்தில் கயிற்றைக் கட்டிக் கொண்டு தொங்கிய பிறகும் கயிறு சரியாக வேலை செய்யாமல் பலர் தப்பித் தண்டனைக்கு ஆளாகிறார்கள். கடலில் இறங்கிய பலர் அக்கம் பக்கத்திலிருப்பவர்களால் கரை சேர்க்கப்பட்டு, சாக முடியாததால் ஏற்பட்ட அவமானத்தாலும் தண்டனையாலும் தத்தளிக்கிறார்கள். விஷத்தைக் குடிப்பவர்கள் கூட விஷம் வேலை செய்யுமுன்பாகவே வைத்தியரிடம் சேர்க்கப்பட்டு, பிழைத்து, விஷம் குடித்ததற்காக விசாரிக்கப்படுகிறார்கள். வேளை வந்தாலொழிய மனிதன் தானாகவும் சாக முடிவதில்லை. பிறராலும் அவனைச்



சாகடிக்க முடிவதில்லை. இறுதிக்காலம் வராத வரையில் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் சிக்கினாலும் மனிதன் மயிரிழையில் தப்புகிறான். இயற்கையின் இந்த நியதியால் தான் அன்று அபராஜிதன் உயிர் தப்பினான்.

சிங்கள வீரனின் கத்தி அபராஜிதனுக்குப் பின்னால் ஓங்கப்பட்டதைக் கவனித்த எதிரி வீரர்கள் பாண்டிய சேனாதிபதி ஒழிந்தான் என்றே கருதினார்கள். ஆனால், கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் வேறு பல நிகழ்ச்சிகள் நடந்தேறின. அபராஜிதனை நெருங்கித் தொடர்ந்து வந்த காரிவளவன் மற்ற வீரர்களோடு போரிட்டுக் கொண்டிருந்த சமயத்திலும் ஒரு கண்ணை அபராஜிதன் மேலேயே வைத்திருந்தான். சேனாதிபதியின் குதிரை அலறிக் கீழே விழுந்த உடனேயே எதிரிகள் மீது மிக வேகமாகத் தன் வாளை வீசி உக்கிரமாகத் துரத்தினான். அபராஜிதன் தனிமையில் தரையில் நிற்பதையும் நாலைந்து வீரர்கள் அவன் மேல் பாய்ந்து விட்டதையும் பின்னால் ஒரு வீரன் ஊர்ந்து வருவதையும் கவனித்துக் கொண்டே இருந்த காரிவளவன், 'சரே' லெனத் தன் குதிரையைத் திருப்பிக்கொண்டு அபராஜிதன் இருந்த திக்கில் பாய்ந்தான். அபராஜிதனுக்குப் பின்னால் வந்தவன் வாளை ஓங்கியதையும் காரி தன் கச்சையிலிருந்த கத்தியை எடுத்து அவனை நோக்கி மின்னல் வேகத்தில் எறிந்து விட்டான். 'சரே'லென்று நேராக வந்து மார்பில் தாக்கிய உடைவாளால் தள்ளாடிய சிங்கள வீரன் 'ஹா' வென்று பயங்கரமாக அலறிக்கொண்டு அப்படியே பின்னால் சாய்ந்தான். பின் பக்கத்தில் கிடு கிடு பாதாளமாக இருட்டில் தெரிந்த பள்ளத்தாக்கில் மறுவினாடி சரேலென்று அவன் உடல் மறைந்தது. அந்த உடல் மறையுமுன்பாகவே எதிரே போரிட்டு நின்ற வீரர்களைத் துவைத்துத் தள்ளிக்கொண்டே பாய்ந்த காரியின் குதிரை அபராஜிதனுக்கு அருகில் வந்து விட்டது. ''பிரபு! சண்டையை அப்புறம் பிடுங்கலாம் என் பின்னால் ஏறிக்கொள்ளுங்கள் உம்! சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்தினான் காரி.

அதிக நேரம் சம்பாஷிக்க அவகாசமில்லை. குதிரை திடீரெனப் பாய்ந்ததால் சிதறிய வீரர்கள் மறு விநாடி சூழ்ந்து கொள்வார்கள். ஆகவே குதிரைப் பக்கவாட்டில் கால் வைத்து ஏறுவதற்காகத் தொங்கிக் கொண்டிருந்த தோளடியில் தன் இடது காலை ஊன்றித் தாவி, 'குதிரை மீது லேசாகத் தொத்திக் கொண்ட அபராஜிதன் ''குதிரையில் ஏற நேரமில்லை, தட்டிவிடு'' என்று கூறிக் கொண்டே, காரி தட்டிவிடக்கூடக் காத்திராமல் தன் வலது கரத்திலிருந்த வாளால் குதிரையின் முதுகில் ஓங்கி ஓரடியும் கொடுத்தான் அடுத்த விநாடி பயங்கரமான அந்த மலைச்சரிவில் புரவி பறந்தது. அரையும் குறையுமாகத் தொத்திக் கொண்ட அபராஜிதன் தன்னை அரை விநாடியில் சமாளித்துக் கொண்டு குதிரையின் முதுகில் காரிக்குப் பின்புறம் படுத்துக் கொண்டான்.

கருணாகரத்தேவன் சொன்னது சரியாகவே முடிந்தது. அபராஜிதனும் காரியும் தப்பியோடுவதைக் கண்ட சிங்கள வீரர்கள்; ''அதோ ஓடுகிறார்கள், விடாதீர்கள். விடாதீர்கள்!'' என்று கூவிக் கொண்டே அவ்விருவரையும் துரத்துவதில் முனைந்தார்களேயொழிய நிஷதராசனையும் முத்தரையனையுங் கூட அவ்வளவாகப் பொருட்படுத்திப் போரிடவில்லை. 'ஓடுகிறவனைத் துரத்துவது எளிது' என்ற தமிழ்ப் பழமொழி காரணமில்லாமலா ஏற்பட்டிருக்கும்? நிஷதராசனையும் முத்தரையனையும் இருபது வீரர்கள் சமாளித்து நிற்க, மற்ற எல்லா வீரர்களும் ஓடுகிறவர்களைத் துரத்தத் தொடங்கினார்கள் சிங்கள வீரர்களும் குதிரைகள் மேலிருந்தே போரிட்டிருந்தால் அபராஜிதனும் காரிவளவனும் அன்று அகப்பட்டுக் கொண்டிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை ஆனால் போர் முறையை மாற்றியதன் காரணமாக, சரிவுப் பாதையின் திருப்பத்தில் குதிரைகள் கட்டிக் கிடந்தன அவற்றைச் சாதாரணமாக அவிழ்த்துக் கொண்டு கிளம்பவே நேரமாகும். போதாக்குறைக்கு, காரிவளவன் குதிரை தடதடவென்று திருப்பத்தில்



பாய்ந்து கடந்ததாலும், பின்னால் துரத்தி வந்த சிங்களவர்களில் சிலர் வீசிய தீப்பந்தங்கள், கட்டியிருந்த குதிரைகள் மீது விழுந்ததாலும் சில குதிரைகள் மிரண்டு குதித்துத் திருப்பி நின்று பாதையை அடைத்து விட்டன. ஓரிரண்டு புரவிகள தீப்பந்தம் பட்டதால் பிடரி மயிர் பொசுங்கி பயங்கரமாகக் கனைத்தெழுந்து கடிவாளங்களை அறுத்துக்கொண்டு மலைச்சரிவில் ஓடத்தொடங்கின. இந்த இடைஞ்சல்களால் ஏற்பட்ட தாமதத்தைக் காரிவளவன் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு மலைப் பாதையில் வாயு வேகத்தில் புரவியைச் செலுத்தினான். சற்று தூரம் சென்றதும் அபராஜிதன்கூட மெள்ளச் சமாளித்துக்கொண்டு குதிரையின் முதுகில் ஏறி. காரிக்குப் பின்னால் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டான். தோளில் அதுவரை குத்திக்கிடந்த ஈட்டியையும் மெள்ளப் பிடுங்கி எறிந்தான்

காரியின்குதிரைக்கும் துரத்துபவர்களுக்கும் இடையேயிருந்த தூரம் விநாடிக்கு விநாடி அதிகப்பட்டு வந்ததால் பின்னால் எழும்பிக் கொண்டிருந்த குதிரைகளின் காலடிச் சத்தம் மெல்லமெல்ல குறைந்துகொண்டிருந்தது. பள்ளத் தாக்குகளில் பெரிதாக எதிரொலி செய்து கொண்டிருந்த எதிரி வீரர்களின் கூச்சல்கூட வரவரப் பலம் குறைந்து ஏதோ சொப்பனத்தில் கேட்கும் ஒலிபோல் மங்கிச் சப்தித்தது. இவ்விதம் சுமார் அரைக் காததூரம் சவாரி செய்த பிறகு எதிரி அபாயம் நீங்கிவிட்டதென்பதை அறிந்த காரி அமைதிக்கு அடையாளமாக நீண்டதொரு பெருமூச்சு விட்டு லகானையும் தளர்த்தி, குதிரையின் வேகத்தையும் சற்றுக் குறைத்தான். ''இனிமேல் ஆபத்தில்லை, பிரபு'' என்றும் கூறினான்.

இருவரும் வந்து கொண்டிருந்த சமவெளிப் பிரதேசத்தைச்சுற்றும்முற்றும் நோக்கினான் அபராஜிதன். பின்னால் வெகு தூரத்திலிருந்தாலும் தன் பயங்கரத்தைச் சிறிதும் குறைத்துக் கொள்ளாத நீலமலை, தப்பியோடும் அந்த இருவரையும் காரிருளில் கடுமையாகவே பார்த்துக்

கொண்டிருந்தது. அவர்களை நோக்கித் திடீரென கொள்ளிவாய்ப் பிசாசைப்போல் வாயைத் திறந்து அக்கினி ஜ்வாலையையும் கக்கத் தொடங்கியது. அபராஜிதனோடு திரும்பி நோக்கிய காரி, தீ ஜ்வாலையைக் கண்டு ஏதும் புரியாதவனாய், ''அதென்ன பிரபு?'' என்று வினவினான்.

''எதிரிகள் எறிந்த தீப்பந்தங்களில் சில பாதைத் திருப்பத்திலிருந்த மூங்கிற் புதர்களில் விழுந்திருக்கும். புதர் பற்றி எரிந்து காட்டுத் தீ பரவியிருக்கும்!'' என்றான் அபராஜிதன்.

''பாதை குறுகலாயிற்றே! மூங்கிற் புதர் தீப்பிடித்தால் வெடிக்குமே. அக்கம் பக்கத்தில் ஓடவும் இடமிருக்காதே'' என்று காரிவளவன் கேட்டான்.

''மூங்கிற் புதரும் பாதையை ஒட்டித்தான் வளர்ந்திருக்கிறது. வெடித்தால் ஜ்வாலையுடன் மூங்கில்கள் பாதையில்தான் விழும். சாதாரணமாகவே காட்டுத் தீ வேகமாகப் பரவும். அதுவும் தென்றடிலக்கும்போது கேட்க வேண்டியதேயில்லை. எதிரிகள் தப்புவது குதிரைக் கொம்பு தான்....'' என்று சொல்லிக் கொண்டுபோன அபராஜிதன் சட்டென்று பேச்சை நிறுத்தி, ''காரி....'' என்றான்

''என்ன பிரபு?''

''நமது நண்பர்களும் எதிரிகளுடன் சிக்கிக் கொண்டிருப்பார்களே!'' தீயைத் தாண்டி வரமுடியாது. எதிரி வீரர்களோ ஏராளமாயிருக்கிறார்கள். நம்மைத்துரத்தமுடியாததால் திரும்பி அவர்களை வளைத்துக் கொண்டால்?''

காரி உடனே பதில் சொல்லவில்லை. கொஞ்ச நேரங் கழித்துப் பதில் சொன்னபோது அவன் குரலில் வருத்தமும் கலந்திருந்தது. ''ஆமாம் பிரபு! அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?...'' என்றான்.

''திரும்பிப் போய்ப் பார்த்தால் என்ன?''



''பார்த்துப் பிரயோசனம்? காட்டுத் தீயைத் தாண்டி நாம் உட் செல்ல முடியுமா? அப்படியே சென்றாலும் பாக்கியிருக்கும் வீரர்களைச் சமாளித்து நண்பர்களைக் காப்பாற்ற முடியுமா?''

''தீயைத் தாண்டிச் செல்ல வேண்டாம். பக்கத்துச் சரிவுகளில் தொத்தி, சுற்றுவட்டமாகச் செல்ல வழியிருக்கிறதா என்று பார்க்கலாமே. வீரர்கள் அதிகமிருந்தால்தானென்ன? மடிவதானால் நாம் எல்லோரும் ஒன்றாக மடியலாமல்லவா?''

''முடியாது பிரபு! உங்களை மீண்டும் ஆபத்தில் சிக்க வைத்தால் நான் நாட்டுக்குத் துரோகம் செய்தவனாவேன் என் நண்பர்கள் என்னை மன்னிக்க மாட்டார்கள். பாண்டி நாட்டின் விதியை நிர்ணயிக்க வேண்டிய உங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்பது தேவரின் விருப்பம். அதை நான் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீற முடியாது!'' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான் காரிவளவன்.

மேலே ஏதும் பேச வழியில்லாமல் அபராஜிதன் ஆகாயத்தைநோக்கிக் கண்களை உயர்த்தினான். 'இப்பேர்பட்ட பக்தர்களிருக்கும்போது எதற்கு மீண்டும் மரணத்தை நாடுகிறாய்? தப்பிவிடு' என்று பரிகசிப்பது போல் விண்ணின் தாரகைகள் கண்ணடித்தன. அவற்றைப் பார்க்கக்கூட வெட்கமாயிருந்தது அபராஜிதனுக்கு. பெரியவீரர்களான மூன்று பேரை எதிரிகளிடம் சிக்கவிட்டு ஓடுவது வீரனான அவனுக்குப் பெரும் வெறுப்பாயிருந்தது. நிவர்த்திக்க முடியாத அந்தக் கஷ்டத்தைப் புரிந்து கொண்ட காரி, ''கவலைப்படாதீர்கள், பிரபு! தேவரைக் குடிசையில் யாரும் தேடமாட்டார்கள். மற்ற இருவரும் போர்த் தந்திரத்தை நன்றாக அறிந்தவர்கள். அவர்களைக் கொல்வதும் அவ்வளவு எளிதல்ல'' என்று ஆசுவாசப்படுத்தினான். தன் உள்ளத்திற்கு ஆறுதலளிப்பதற்காகச் சொல்லப்பட்ட அந்த உபசார வார்த்தைகள்

அபராஜிதனுக்கு எல்வித மனச் சாந்தியையும் அளிக்கா
விட்டாலும் காரியின் பிடிவாதத்தாலும் வேறு எதையும்
அச்சமயம் செய்ய முடியாதென்ற நிர்க்கதியான நிலைமை
யாலும் எதிர்ப்பக்கமிருந்த சமவெளியை நோக்கிக் கண்
களைத் திருப்பி வெறித்துப் பார்த்துக்கொண்டே பயணம்
செய்தான். இப்படிச சற்றுதாரம் சென்றதும் சிறு வாய்க்
கால் ஒன்று குறுக்கிட்டது. வாய்க்காலைக் கண்டதும்
குதூகலத்துடன் காரி கூச்சலிட்டு, ''பிரபு! வாய்க்கால்
வந்து விட்டது'' என்றான்.

''எந்த வாய்க்கால்?''!

''பாண்டிய நாட்டிலிருந்து மழவராயன் பிராந்தியத்
தைப் பிரிக்கும் காட்டு வாய்க்கால். இதைத் தாண்டி
விட்டால் அபாயமில்லை.''

இப்படிச் சொல்லிவிட்டுக் காரி புரவியைத் தாண்டி
விடவே துரிதமான தூரப் பிரயாணத்தால் அலுத்திருந்த
அந்தக் குதிரையும் வாய்க்காலில் சரேலென இறங்கித்
தண்ணீரை வாரியடித்துக் கொண்டு எதிர்க்கரை ஏறியது.
கரையில் குதிரையை நிறுத்தி இருவரும் கீழே இறங்கிய
தும், ஈட்டி பிடுங்கப்பட்டிருந்த இடத்திலிருந்து ரத்தப்
பெருகிக் கொண்டிருப்பதைக் கண்ட காரி, அபராஜிதனை
நோக்கி, ''பிரபு! மேலங்கியைச் சற்றுக் கழற்றுங்கள்.
காயத்தை அலம்பி ரத்தத்தை நிறுத்தத் துணி வைத்துக்
கட்டுகிறேன்'' என்றான்.

'முதலில் குதிரையைக் கவனி' என்றான் அபராஜிதன்.
அவர்கள் கவனிக்கும்வரை குதிரை காத்துக்கொண்டிருக்க
வில்லை. இருவரும் இறங்கியதும் துறைக்குச் சென்று
அதுவே தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அதைப்
பார்த்த காரி வெகு நேரத்திற்குப் பிறகு அப்பொழுதுதான்
சிரித்தான். ''பிரபு! குதிரை நமது கட்டளைக்குக் காத்துக்
கொண்டிருக்கவில்லை. நீங்கள் வாருங்கள். சற்றுச்
சட்டையைக்கழற்றுங்கள்'' என்றான்.சேனாதிபதி சட்டை
யைக் கழற்றியதும் தன் அங்கியிலேயே ஒரு பாகத்



கத்தியால் கிழித்த காரிவளவன் துணியைத் தண்ணீ
ரில் நனைத்துக் கொண்டுவந்து காயத்தைக் கழுவிப்
பரிசோதித்தான் ஈட்டி ஆழமாகப் பாய்ந்திருந்தது.''பிரபு!
ஈட்டி முக்கியமான ரத்தக்குழாயில் எதிலோ பாய்ந்திருக்
கிறது! ரத்தம் நிற்கமாட்டேனென்கிறதே!'' என்றான்.

''பாதகமில்லை. துணியை வைத்துத் தற்காலிகமாகக்
கட்டிவை. பக்கத்தில் காட்டு வாசிகள் குடிசைகள்
இருக்கும், அங்கே போய் யாராவது மருத்துவர் இருந்
தால் பச்சிலை வைத்துக் கட்டச் சொல்லுவோம்.''

அபராஜிதன் சொன்ன படியே தோள் காயத்தில்
துணியை அடைத்துத் தற்காலிகமாக ஒரு கட்டைப்
போட்டான் காரி. இருவரும் அங்கிருந்து நடைப்பிரயாண
மாகவே சிறிது தூரம் வந்ததும் தெற்குப் பக்கத்தில் சிறிது
தூரத்தில் வெளிச்சம் ஜாஜ்வல்லியமாகத் தெரிந்தது.
அதைச் சுட்டிக்காட்டிய அபராஜிதன். ''காரி'' பார்த்
தாயா பெரிய வெளிச்சம்?'' என்றான்.

''ஆமாம், வெளிச்சம் பிரமாதமாக இருக்கிறதே!
நூறு பந்தங்களாவது எரிந்தால்தான் அவ்வளவு வெளிச்
சம் இருக்கும்'' என்றான் காரி.

''நூறுபந்தங்கள் எரியவேண்டுமானால் இந்தப்பக்கம்
ஏதாவது ஒரு சிறு படை வந்திருக்க வேண்டும் அல்லது
வேட்டைக்காக யாராவது வந்து கூடாரமடித்து தங்கி
யிருக்க வேண்டும்.''

''ஆமாம், பிரபு! படையாயிருந்தால் மழவராயன்
படையாயிருக்கவேண்டும். இது மழவநாட்டு எல்லை
யாயிற்றே!''

காரிவளவனின் இந்த ஊகம் மிகத் தவறு என்பதை
அவ்விருவரும் கூடாரங்களின் அருகே வந்ததும் புரிந்து
கொண்டார்கள். கூடாரமொன்றின் தலையில் பறந்து
கொண்டிருந்த கொடியைப் பார்த்த காரி, ''பிரபு! நல்ல
வேளை! இங்கிருப்பது நமது படைகள் தான். அதோ

பார்த்தீர்களா, பாண்டியநாட்டு மீன்கொடி'' என்று சுட்டிக் காட்டினான்.

அபராஜிதன் முகத்தில் சந்தோஷத்திற்குப் பதிலாக சந்தேகச் சாயை படர்ந்தது. ''நமது படைகள் எதற்காகப் பிறர் எல்லையில் தங்கவேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே நடந்தான். இருவரும் கூடாரங்களை அணுகியதும் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த பாண்டிய நாட்டு வீரன் ஒருவன் ''அபராஜித மகாப்பிரபு!'' என்று கூவினான். சற்று நேரத்தில் சேனாதிபதியின் வருகையைக் குறிக்கும் தாரை முழங்கப்பட்டது. கூடாரங்களுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த படைவீரர்கள் எழுந்து நின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களால் காரி மிஞ்சிய மகிழ்ச்சியடைந்ததோடு நில்லாமல், ''பிரபு! உங்களை ஜாக்கிரதையாக உங்கள் வீரர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டேன்!'' என்றான். அபராஜிதன் பதிலேதும் பேசவில்லை குதிரைலகானைப் பிடித்து காரி பின்தொடர முகத்தில் சந்தேகச் சாயை படர மௌனமாக முன்னால் சென்றான். பின்பு சட்டென்று ஓரிடத்தில் நின்று, ''உங்கள் தலைவன் எங்கே?'' என்று அங்கிருந்த வீரனை வினவினான்

''அதோ அந்தக் கூடாரத்திலிருக்கிறார், பிரபு! என்று ஒரு வீரன் ஒரு கூடாரததைச் சுட்டிக் காட்டியதும் அபராஜிதன் காரியை நோககி, ''காரி! நான் அழைக்கு முன்பு நீ கூடாரத்திற்குள் வரவேண்டாம். அதோ, அந்த மரங்களுக்குப் பின்னால் குதிரையுடன் நில்'' என்று கூடாரங்களுக்குப் பின்னாலிருந்த ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி விட்டுத் தான் மட்டும கூடாரத்தை நோககிச் சென்றான்.

உள்ளே நுழைந்த அபராஜிதன் ஒரு கணம் நின்றான். உள்ளே மஞ்சத்தல் உடகார்ந்து முதுகை வாயிற் பக்கம் காட்டி எதிரேயருந்த விளக்கு வெளிச்சத்தில் எதையோ எழுதிக்கொண்டிருந்த மனிதன் பின்னால் காலடிச் சத்தம் கேட்டதும் தலை நிமிர்ந்து திரும்பி அபராஜிதனை நோக்கினான்.



நோக்கினான். திரும்பியவன் முகத்தைக் கண்ட அபராஜிதன் சொல்ல வொண்ணாப் பிரமையால் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். திரும்பியவன் இலங்காபுரத் தண்டநாயகன்.

## 4. ஒதுங்கிய திரையும் ஓவியப் பாவையும்

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட அந்தச் சந்திப்பினால் அபராஜிதனுக்கு எந்தவிதமான திகைப்போ திண்டாட் டமோ ஏற்படும் என்று சிங்களத்துத் தண்ட நாயகன் எதிர்பார்த்திருந்ததால் அவன் ஏமாந்தே போனான். அபராஜிதனுடைய கண்கள் சற்றும் சலனமின்றித் தன்னைக் கூர்ந்து நோக்குவதையும், தான் திருப்பிப் பார்த்தபோது அவன் முகத்தில் தாண்டவமாடிக் கொண் டிருந்த சந்தேகச் சாயைகூட நொடிப்பொழுதில் விலகி விட்டதையும், அவன் இதழ்களில் லேசான புன்முறுவ லொன்றும் படரத் தொடங்கியதையும் கண்ட இலங்கா புரன், தன்னுடைய ஜன்ம விரோதியான அந்த வீரனின் தைரியத்தை அந்தச் சமயத்தில் பெரிதும் வியந்தான் உள்ளத்தே அந்த வியப்பு ஒரு புறம் ஓட, இவன் எங்கி ருந்து வருகிறான்' என்ற கேள்வி சிந்தனையில் மற்றொரு புறம் எழவே, சிங்களத்துத் தண்டநாயகனின் கண்கள் அபராஜிதனை ஒருமுறை ஏற இறங்கப்பார்த்தன. ஆசனத் திலிருந்து எழுந்திருக்காமலே இலங்காபுரன் தன்மீது பார்வையைச் செலுத்தியதையும், அவனுடைய கண்கள் அரை நொடியில் தன் உடலைத் துழாவியதையும இடது தோளில் ஈட்டி பாய்ந்ததால் சட்டை கிழிந்தும் சற்று ரத்தக்கறை பட்டும் இருந்த இடத்துக்கு வந்ததும் அவன் கண் சற்று நிலைத்ததையும் அபராஜிதன் கவனித்தாலும், கவனிக்காதது போலவே நின்று கொண்டு, தன் எதிரியின் எண்ணங்கள் எந்த மார்க்கத்தில் ஓடுகின்றன என்பதை ஊகிப்பதில் முனைந்தான்.

பரஸ்பர எண்ணங்களை அறிய எண்ணிய அந்தப் பரம வைரிகள் இருவரும் சிந்தனையின் ஓட்டத்தின் காரணமாகப் பல நிமிடங்கள் பேசாமலே இருந்தனர். இறுதியில் இலங்காபுரனே அசைந்து கொடுத்து மஞ்சத்திலிருந்து எழுந்து அபராஜிதனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தவன், ஏதோ கேட்க வாயெடுத்துத் திருப்பவும் பேசாமல் கூடாரத்துக்குள்ளேயே அங்குமிங்கும் உலாவ ஆரம்பித்தான். ஆறடி உயரத்துடன் ஆஜானுபாகுவாகவும், திடகாத்திரத்துடனுமிருந்த இலங்காபுரன் ஆழ்ந்த யோசனையுடன் வேட்டைக்கு முன்பாக நிதான நடைபோடும் சிங்கத்தைப்போல மெதுவாக அங்குமிங்கும் நடப்பதையும், அவன் அகன்ற முகத்திலிருந்த அடர்த்தியான பெரிய புருவங்கள் சிந்தனையில் ஏற்படாத முடிவின் காரணமாக அவ்வப்பொழுது சுழித்து நெருங்கி அகலுவதையும், உதடுகள் அவ்வப்பொழுது மடிக்கப்படுவதால் பயங்கரமான அவன் பெரிய மீசை லேசாக அசைவதையும் கவனித்த அபராஜிதன் தன்னைப் பற்றிய திட்டமான தகவலேதும் கிடைக்காததாலேயே தண்டநாயகனுக்குப் பெரும் குழப்ப மேற்பட்டிருக்கிறதென்பதை ஊகித்துக் கொண்டான். இருந்தபோதிலும் கேள்வி எதிரியிடமிருந்தே வரட்டுமென்று பேசாமலே இருந்தான். ஆனால் கேள்வி வரவில்லை. கேள்விக்குச் சமமான வார்த்தை மாத்திரமே வெளிப்பட்டது.

உலவிக் கொண்டிருந்த இலங்காபுரன் சட்டென்று நின்று, ''பாண்டிய நாட்டுச் சேனாதிபதியை இங்கு நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான். 'எங்கிருந்து வருகிறாய்' என்ற கேள்வி அந்த வார்த்தைகளில் தொக்கி நின்றதைக் கவனித்த அபராஜிதனும் நேர்முகமாகப் பதில் சொல்லாமல், ''எதிர்பாராத சந்திப்பில்தான் இன்பமிருக்கிறது. அதுவும் நம்மைப்போன்ற நண்பர்கள் சந்திக்கும்போது அந்த இன்பம் பன்மடங்காகிறது!'' என்று கூறினான்.

அபராஜிதன் பதிலிலிருந்த ஏளனத்தை ரசித்த இலங்காபுரனும், ''அப்பொழுது இன்பம் என்னைப்



போலவே தங்களுக்கும் அதிகமாக இருக்கவேண்டும்'' என்று சொல்லிவிட்டு அபராஜிதனை நோக்கினான்.

''இல்லை, அத்தனை இன்பம் எனக்கு இல்லை.''

''இல்லையா!'' இலங்காபுரனின் முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது.

''இல்லை. எதிர்பாராத சந்திப்பில்தானே இன்பம் இருக்கும்?''

''அப்படியானால் நான் இங்கிருப்பது உங்களுக்கு முன்னமே தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படித் தெரியும்? யார் சொன்னது?''

''யாரும் சொல்லவில்லை. சொல்லத் தேவையுமில்லை.''

இலங்காபுரனின் புருவங்கள் கேள்வி கேட்கும் பாவனையில் சற்றே உயர்ந்தன. கேள்வி கிளம்புமுன்பாக அபராஜிதனே பதில் சொன்னான். ''இதில் பிரமாத மர்மம் ஏதுமில்லை. என்னைக் கண்டவுடனேயே வீரர்கள் நான் வந்துவிட்டதைப் பெரிதாகக் கூவி அறிவித்தார்கள். சேனாதிபதி வரவைக் குறிக்கும் தாரையும் பலமாக முழங்கப்பட்டது. பாண்டிய நாட்டின் சாதாரண உபசேனாதிபதி யாராவது இங்கு கூடாரமடித்துத் தங்கியிருந்தால், உடனே வந்து என்னை எதிர்கொண்டிருப்பான். தாரை ஊதப்பட்ட பின்பும் அத்தகைய சுறுசுறுப்பைக் காட்டாமல் கூடாரத்துக்குள்ளேயே தங்கியிருக்கக்கூடியவர்கள் பாண்டி நாட்டில் மூவர்தான்....''

''யார் அந்த மூவர்?'' இடையே வெட்டி எழுந்தது இலங்காபுரனின் கேள்வி.

''எனக்கு மேற்பட்ட மன்னர், முதலமைச்சர்....'' என்று இழுத்தான் அபராஜிதன்.

மூன்றாவது பேர்வழி யாரென்பதை இலங்காபுரன் அறிந்து கொண்டாலும் அபராஜிதன் வாயாலேயே அதுவும் வரட்டுமென்று கேட்டான்: ''மூன்றாவது...?''

"எனக்குச் சமமான அந்தஸ்துடைய தாங்கள்" என்று பதில் சொன்னான் அபராஜிதன்.

இலங்காபுரன் மேலும் சம்பாஷணையைத் தொடர்ந்தான் "மூவரில் நான்தான் வந்திருக்கிறேனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

பாண்டிய நாட்டு முதலமைச்சருக்குச் சைனியத்திடம் அதிக வேலை கிடையாது. வேட்டைக்குப் போகும் பழக்கமும் அவருக்குக் கிடையாது. ஆகையால் இரவில் இன்னொருவர் எல்லையில் நூறுவீரர்களுடன் கூடாரமடித்துத் தங்கமாட்டார். மன்னரும் வந்திருக்க முடியாது."

"மன்னருக்கு என்ன தடை?"

"தடை ஏதுமில்லை. ஆனால் மன்னர் வந்திருந்தால் தனியாக வரமாட்டார், இத்தனை அமைதியையும் இங்கு காண முடியாது."

"மன்னர் வந்தால் அவருக்குப் பிரியமான பெண்கள் கூட்டமும் வந்திருக்கும். மதுவுக்கும் குறைவிருக்காது. இந்த இடம் பெண்களின் சிரிப்பினாலும் மதுவின் சேஷ்டையினாலும் அல்லோலகல்லோலப்பட்டு எவ்வளவு களைகட்டியிருக்கும்! என்று சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தான், அபராஜிதன்.

அந்தச் சிரிப்பு இலங்காபுரனை ஓர் உலுக்கு உலுக்கவே, அதுவரை நிதானமாகி இருந்த அவன் கண்களிலும் சிறிது சினம் எழுந்தது. "மன்னரைப் பற்றிச் சேனாதிபதியவர்களுக்கு மிக உயர்ந்த அபிப்பிராயம் போலிருக்கிறதே?" என்று அவன் சொன்னபோது அவன் குரலில் சற்றுக் கடுப்பும் இருந்தது.

"மன்னரிடமென்ன, தங்களிடமும் உயர்ந்த அபிப்பிராயந்தான்! மன்னர் இந்த உயர்ந்த நிலையிலிருப்பதற்குத் தாங்கள் தானே காரணம்? அப்படியிருக்கும்போது தங்களைப் பற்றி மட்டும் தாழ்வான அபிப்பிராயம் கொள்ள முடியுமா?" என்றான் அபராஜிதன்.

எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்து கொள்ளக்கூடிய முறையில் பாண்டிய சேனாதிபதியின் பேச்சு



அமைந்திருந்ததை அறிந்துகொள்ள, சூட்சும புத்தியுள்ள சிங்களத்துத் தண்டநாயகனுக்கு அரை வினாடிகூட ஆகவில்லை. மன்னன் உயர்ந்த நிலையில் இருப்பதற்குத் தான் காரணம் என்று அபராஜிதன் சொல்லியதைஇரண்டு விதமாக அர்த்தம் செய்யலாமென்பதை இலங்காபுரன் புரிந்து கொண்டான் மன்னனை அரியாசனத்தில் உட்கார வைத்ததை மட்டுமன்றி, மன்னன் தன் கைப்பொம்மையாயிருப்பதையும் மதுவுக்கும் மாதருக்கும் அடிமையாயிருப்பதையும் அது குறிக்கும் என்பதைச் சந்தேகமற அறிந்த இலங்காபுரன் மேற்கொண்டு மர்மமாகப் பேசுவதால் பயனில்லை என்பதை உணர்ந்து நேரடியாகக் கேள்வியை வீசினான். "இப்பொழுது எங்கிருந்து வருகிறீர்கள்?"

பதில் இலங்காபுரனுக்குப் பேரதிர்ச்சியை விளைவித்தது. "நீலமலைக்கு அருகிலிருந்து" என்றான் அபராஜிதன்.

அபராஜிதனுடைய கிழிந்த ஆடையிலிருந்தும் தோளிலிருந்த ரத்தக் கறையிலிருந்தும் விஷயத்தை ஏற்கனவே இலங்காபுரன் ஊகித்திருந்தாலும் அபராஜிதன் இப்படி பட்டவர்த்தனமாக அதை ஒப்புக்கொள்ளுவானென்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆகவே பாண்டிய சேனாதிபதி எத்தனை தூரம் உண்மையை ஒப்புக்கொள்வான் பார்ப்போம் என்ற யோசனையில் மீண்டும் கேட்டான், "நீலமலைக்கு எதற்காகச் சென்றீர்கள்?" என்று.

முதல் கேள்விக்கு அபராஜிதன் அளித்த பதில் இலங்காபுரனுக்கு அதிர்ச்சி விளைவித்ததென்றால் இரண்டாவது கேள்விக்கு அளித்த பதில் அவனை அடியோடு அயரவைத்து விட்டது. "மன்னனுக்கு எதிராக அங்கு ஒரு சதி நடப்பதாகத் தகவல் கிடைத்தது" என்று அபராஜிதன் பதில் சொன்னான்.

"சதியா!" என்று சட்டென்று நின்ற இலங்காபுரன், அபராஜிதனைக் கூர்ந்து நோக்கினான்.

"மன்னனைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கச் சதி நடப்பதாகக் கேள்விப்பட்டேன். சதிகாரர்கள் யார் என்பதை கண்டுபிடிக்கச் சென்றேன்."

'கண்டுபிடித்தீர்களா?''

''இல்லை.''

''ஏன்?''

''வழியில் சதிகாரர்களின் ஆட்கள் ஒளிந்திருந்து என் குதிரைமீது உடைவாளை வீசிக் கொன்றுவிட்டார்கள். தவிர அவர்கள் எறிந்த ஈட்டியொன்று என் இடது தோளில் பாய்ந்து விட்டது''.

இந்தக் கோட்டைப் புளுகைக் கேட்ட இலங்காபுர னுக்குப் பதில் என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காக, ''அவ்வளவு அபாய மான இடத்துக்குச் சேனாதிபதி தனியாகச் செல்லலாமா?'' என்று கேட்டான்.

''தனியாகச் செல்வதுதான் உசிதம். கூட்டமாக வீரர்களை அழைத்துப் போனால் சதிகாரர்கள் எச்சரிக்கையடைந்து ஓடிப்போய்விடுவார்கள். தங்களை வேவு பார்க்க வருபவன் சேனாதிபதி என்று அறிந்தாலும் ஒளிந்துவிடுவார்கள். ஆகையால்தான் நான் இந்தச் சாதாரண உடைகள் அணிந்து சென்றேன். அப்படியும் சதிகாரர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டார் கள்'' என்று சொல்லிச் சற்று பேச்சை நிறுத்திய அபராஜிதன், ''இத்தனைக்கும் நான் அடியோடு தனியாகச் செல்லவில்லை''' என்றான்.

''யாரைத் துணைக்கு அழைத்துச் சென்றீர்கள்?''

''என் படைத் தலைவர்களில் ஒருவனை அழைத்துச் சென்றேன். இதோ கூப்பிடுகிறேன்'' என்று சொல்லி அவன் திரும்ப யத்தனித்த சமயத்தில் காரி உள்ளே தலையை நீட்டி ''அத்தனை சிரமம் வேண்டாம். இதோ நானே வந்து விட்டேன்'' என்றான்.

அபராஜிதனைக் கவனித்துக் கொண்டிருந்த இலங்கா புரன் கண்கள் காரியின் மேல் திரும்பின. அவன் இதழ் களில் குரூரமான புன்முறுவலும் படர்ந்தது. ''காரி யவன்'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.



அந்தமுணுமுணுப்பு அபராஜிதன் பாம்புச் செவிகளில் விழவே, ''ஆம்; காரிவளவன்தான்!'' என்றான்.

''இவர் நிஷதராசன் படைத் தலைவரல்லவா?''

''முன்பு இருந்தார்.''

''எப்பொழுது தங்கள் படையில் சேர்ந்தார்?''

''கொஞ்ச நாட்களுக்கு முன் ''

அடுத்த வினாடி அந்தக் கூடாரம் அதிரும்படியாக இரைந்தான் இலங்காபுரன். அவன் அமைதியெல்லாம் காற்றில் பறந்தது. முகத்தில் கோபம் பயங்கரமாகப் பொங்கி எழுந்தது. மிதமிஞ்சிய கோபத்தால் மீசை துடித்தது. ''கொஞ்ச நாட்களுக்கு முன்ா கொஞ்சம் நாழிகைக்கு முன்பா?'' என்று கோடைகாலத்து இடியைப் போல் வார்த்தைகளை உதிர்த்தான். கோடை இடியைத் தொடர்ந்து வீசும் குளிர்ந்த சாரலைப்போலஇலங்காபுரன் சொற்களில் குறுக்கிட்டன, ''யாரிடம் அப்படிக் கோபிக்கிறீர்கள்?'' என்ற கிள்ளையின் சப்தத்தையும் பழிக்கும் கொஞ்சலான சொற்கள்.

அந்தக் கேள்வி வந்த திக்கை நோக்கித் திரும்பிய அப ராஜிதனும் காரியும் மித மிஞ்சிய ஆச்சரியத்தால் வாயைப் பிளந்துகொண்டு அப்படியே சிலையென ஸ்தம்பித்து விட் டார்கள். கூடாரத்தின் பக்கத்துத் திரையை ஒதுக்கிக் கொண்டு அபாரமான எழிலுடன்இதழில் புன்னகைதவழ ஓவியப் பாவையென நின்றாள், சிங்களத்துப் பைங்கிளி யெனப் பிரசித்தமான இலங்காபுரனின் மருமகள்.

## 5. சிங்களத்துப் பைங்கிளி

கண்டவர் உள்ளத்தைக் கணப்பொழுதில் கொள்ளை கொள்ளும் பேரெழில் வாய்ந்த அந்தக் காரிகையின் அங்க லாவண்யங்களைத் திரும்பத் திரும்ப நோக்கிய அபராஜிதன் 'மன்னன் இவளிடம் மையல் கொண்டதில் மர்மம் ஏதுமில்லை' என்ற தீர்மானத்துக்கு வந்தான். திரைக்கருகே திடீரென்று தோன்றிய அவள் மோகன உருவத்தைக் கண்ட காரி சிந்தனை செய்யக்கூடச்

சக்தியற்றவனாய் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

ஒரு கை சற்றே திரையைத் தள்ளிப்பிடிக்க மற்றொரு கையை இடையில் கொடுத்துக்கொண்டு மிக ஒய்யாரமாக நின்ற சிங்களத்துப் பைங்கிளிக்கு வயது இருபத்திரண்டுக்கு மேலாகியிருந்தாலும், உடல் கட்டு இருந்த வாகின் காரணமாக அவள் அப்பொழுது பருவமடைந்த பதினாறு வயதுப் பெண்ணைப் போலவே காணப்பட்டாள். அதிக உயரமில்லாததால் அவள் சரீரம் சிறிது பருமனாகத் தெரிந்தாலும், இயற்கையின் கைகள் அவள் உடலை வளைக்கவேண்டிய இடத்தில் அதிகமாக வளைத்துக் கொடுத்தும், எடுப்பாக இருக்க வேண்டிய இடங்களை அதிக எடுப்பாக அமைத்துக் கொடுத்தும், இருந்தபடியால் அவள் வசீகர அம்சங்கள் எப்பொழுதும், திருஷ்டிக்குப் புலப்படும்படியான நிலையில் அமைந்திருந்தன. சிவந்த அவள் விசாலமான நெற்றியில் அடர்ந்து வளர்ந்து வளைந்து நின்ற புருவங்களுக்கு அடியில் இருந்த கண்கள் சற்று மங்கினாற்போல காணப்பட்டாலும், அந்த மங்கலில் ஒரு மயக்கம் கலந்து நின்றது. கொவ்வைக்கனி நிறத்தைப் பெற்ற அவள் உதடுகள் சற்றுப் பெரிதாக இருந்தாலும், அவற்றில் சதா தவழ்ந்து நின்ற புன்னகையின் காரணமாகவும் காம இச்சையைக் கொட்டிக் கொண்டிருந்தன. கழுத்தில் அணிந்திருந்த முத்துச் சரங்கள் அவள் மார்பகத்தில் தவழ்ந்து பாறைகளில் சரிந்தோடும் மலையருவிகளைப்போல் வளைந்து கிடந்தன. இடையில் ஒருகையைக் கொடுத்துச் சாய்ந்து நின்றதால் ஒரு பக்கத்தின் வளைவு மிகப் பெரிதாகவும் மற்றப் பக்கம் மிகச் சிறியதாகவும் தெரிந்ததன் காரணமாக, ஏதோ நடன பாவத்தில் நிற்கும் சித்திரத்தைப் போல் அந்தச் சிங்களத்துச் சிங்காரி தோற்றமளித்தாளே யொழிய, உயிருள்ள ஒரு பெண் நிற்பதான பாவமே புலப்படவில்லை. நன்றாகச் சீவப்பட்டிருந்தாலும், கட்டு அவள் அடர்த்தியான கேசத்திலிருந்து



மீறி விடுபட்டு முகத்தில் தவழ்ந்த இரண்டொரு சுருட்டை இழைகள் காற்றில் மெல்ல அசைந்ததாலும் மூச்சு விடுவதால் மார்பகம் எழுந்து எழுந்து தவழ்ந்ததாலும் மட்டுமே அவள் உயிருள்ள அந்த மாநிலத்து மங்கையாகத் திகழ்ந்தாள். தலையில் சூடியிருந்த புஷ்பச் சரமொன்று பாதி அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்ததாலும், ஆடை சீராக உடலில் படாமல் சற்றுக் கலைந்திருந்ததாலும் அவள் படுக்கையிலிருந்து அப்பொழுதுதான் எழுந்து வருகிறாளென்பதை ஊகித்த அபராஜிதன் அந்தக் கலைந்த ஆடை அவள் அழகை மேம்படுத்துவதைக் கவனித்தான். காரி அடியோடு சுரணையை இழந்து நின்றதால் எதையும் யோசனை செய்யச் சக்தியற்றவனானான்.

கூடாரத்தின் உள்ளே நின்ற அந்த நால்வரில் நிதானத்தோடு இருந்தவள் இலங்காபுரனின் மருமகள் ஒருத்திதான். அபராஜிதனும் காரியும் அவள் பேரெழிலைக் கண்டு பிரமை பிடித்திருந்தனர். இலங்காபுரனோ கோபத்திற்கு மதியைப் பறிகொடுத்திருந்தான். தன்னைக்கண்டு வாயைப் பிளந்து நின்ற புருஷ சிங்கங்களைச் சுய நிலைக்குக் கொண்டு வரவும், மாமன் கோபத்துக்குக் காரணத்தை அறியவும் மீண்டும் தன் கேள்வியைக் கேட்டாள் இலங்காபுரனின் மருமகள். "மாமா! ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்? யார் மேல் இத்தனை கோபம்?"

இடியென சப்தித்த இலங்காபுரன் கூட அவளைக் கண்டதும் தன்னை ஓரளவு நிதானப்படுத்திக் கொண்டான். இருந்தாலும் முழுக் கோபம் மறையாத குரலில், "மாதவி! இது பெண்கள் சப்பந்தப்பட வேண்டிய விஷயமல்ல, ராஜ காரியம், நீ உள்ளே போ" என்றான்.

அவன் உத்தரவை நிறைவேற்றச் சிறிதும் முயலாமல், நின்ற இடத்திலேயே நின்ற மாதவியின் முகத்திலிருந்த புன்னகை அதிகமாக விகசித்துக் 'களுக்' என்று சிரிப்பாகவும் உதிர்ந்தது. "என்ன சிரிக்கிறாய்?" என்று இலங்காபுரன் தன் மருமகளைப் பார்த்துக் கடுமையாகவே கேட்டான். "ராஜ காரியத்தில் பெண்களுக்குச் சப்பந்த

பிள்ளை என்று சொல்கிறீர்களே, அதற்காகத்தான் சிரித்தேன்'' என்றாள் மாதவி.

''அதில் சிரிப்பென்ன இருக்கிறது?''

''பாண்டிய நாட்டு ராஜவிவகாரங்களில் நான் சம்பந்தப்பட்டிருக்கும் அளவுக்கு யார் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள்?''

அந்தப் பதிலிலிருந்த உண்மையை மூன்று ஆண் பிள்ளைகளும் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். அது வரையில் கோடையிடிபோல் சப்தித்த இலங்காபுரன் கூட என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் வாயடைத்து நின்றான். மன்னனுக்கும் மாதவிக்கும் உள்ள உறவு உலக மறிந்தது தான். ஆனால், அதை அவள் பகிரங்கமாக எடுத்துச் சொல்வாள் என்று அபராஜிதனோ, காரிவெள்ளனோ எதிர்பார்க்கவில்லை. அவள் துணிச்சலைக்கண்டு எத்தனைக் கெத்தனை இலங்காபுரன் உள்ளூறக் குமுறிக் கொண்டிருந்தானோ, அத்தனைக்கத்தனை அபராஜிதன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். மாமன் உள்ளக் குமுறலையோ, மற்றவர் ஆச்சரியத்தையோ சிறிதும் லட்சியம் செய்யாத மாதவி அபராஜிதனை நோக்கி நேராகவே கேட்டாள். ''பாண்டிய சேனாதிபதியைப் பற்றி அடிக்கடி கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் நேரில் பார்த்ததில்லை. இந்த ராத்திரியில் இங்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று.

''அம்மணி! நீல மலையில் மன்னனுக்கு எதிராகச் சதி நடக்கிறதென்று கேள்விப்பட்டு அதைப் பற்றித் தகவலறியச் சென்றேன். வழியில்...'' என்று மேலே ஏதோ பேசப் போன அபராஜிதனின் சொற்களை ''சிங்கள வீரர்களால் தாக்கப்பட்டாய்'' என்று மிகக் கடுமையாக இடையில் புகுந்து வெட்டினான் இலங்காபுரன்.

''தங்கள் மாமன் விஷயம் புரியாமல் பேசுகிறார்...'' என்று இழுத்தான் அபராஜிதன்.

''நன்றாகப் புரிந்தே பேசுகிறேன்!'' என்று சீறினான் இலங்காபுரன்.



''அப்படித் தாங்கள் புரிந்து பேசுவதானால், நீங்கள் சொல்வது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் ராஜீய இடைஞ்சல்கள் பல ஏற்படக்கூடும்'' என்று பதில் சொன்னான் அபராஜிதன்.

''என்ன இடைஞ்சல்கள்?''

''என்னைச் சிங்கள வீரர்கள்தான் தாக்கியிருப்பதாகத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். இதைப் பாண்டிய வீரர்கள் அறிந்தால் அடுத்த விநாடி மதுரையின் தெருக்களில் ரத்தக் களரி ஏற்படும். தங்கள் சேனாதிபதி சிங்களவர்களால் தாக்கப்படுவதை பாண்டிய நாட்டு வீரர்கள் சகிக்கமாட்டார்கள். மதுரையின் மாவீரர்களைப் பற்றித் தாங்கள் இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால் சிங்கள வீரர்களின் குற்றத்தைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள மாட்டீர்கள்.''

இந்தப் பதில் சற்று இலங்காபுரனையும் யோசனையில் ஆழ்த்தியது. ''மன்னனுக்கு எதிராகப் பாண்டிய சேனாதிபதி சதி செய்தால் அதையும் பாண்டிய வீரர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்களா?'' என்று கேட்டான் இலங்காபுரன்.

''சேனாதிபதி மீது சதிக்குற்றம் ருசுப்படுத்தப் படவில்லை. சதியைக் கண்டுபிடிக்க வந்திருப்பதாக நான் சொல்லுகிறேன். நானே சதி செய்ய வந்திருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். பாண்டிய சேனாதிபதி மீது இதைவிடப் பெரிய குற்றத்தைச் சாட்ட முடியாது. குற்றம் சாற்றிய பின் ருசு அளிக்கப்பட வேண்டும். இல்லையேல் மதுரையில் கலவரத்தைத் தங்களால் மட்டுமல்ல; மன்னரால் கூடத் தவிர்க்க முடியாது. நினைவிருக்கட்டும்'' என்று கோபத்துடனேயே பதில் சொன்னான் அபராஜிதன்.

''அவர் சொல்வதில் நியாயமிருக்கிறதே!'' என்று இடையே பேசினாள் மாதவி.

''என்ன நியாயத்தை நீ கண்டுவிட்டாய்?'' என்று கேட்டான் இலங்காபுரன்.

"எந்தக் குற்றத்திற்கும் ருசு வேண்டும் என்பது நியாயந்தானே" என்று மாதவி அழுத்தியே சொன்னாள்.

"இந்த இருவரும் வந்திருப்பதே சரியான ருசு."

"இங்கு வந்திருப்பது எப்படி ருசுவாகும்? எனக்குப் புரியவில்லையே!"

"பெண்ணான உனக்குப் புரியாது."

"ஆண்பிள்ளையான நீங்கள் தான் விளக்கிச் சொல்லுங்களேன்."

இலங்காபுரன் இதழ்கள் லேசாகத் துடித்தன. கோபத்துடன் கேட்டான் அவளை, "நான் இந்த இடத்தில் எதற்காகக் கூடாரம் அடித்துத் தங்கியிருக்கிறேன் தெரியுமா? என்னுடன் சிங்கள வீரர்களுக்குப்பதில் பாண்டிய வீரர்களை எதற்காக அழைத்து வந்திருக்கிறேன் தெரியுமா?" என்று.

"இதைக் குழந்தைகூடப் புரிந்து கொள்ள முடியும். நீலமலையில் சதி செய்பவர்கள் தப்பினால் அவர்கள் நேராக வரக்கூடிய இடம் இதுதான். நீலமலைக்கு அருகில் பாண்டிய நாட்டு எல்லையைத் தாண்ட வேண்டுமானால் மழவராயன் எல்லைக்குள் தான் புக வேண்டும். அதுதான் வெகு அருகில் இருக்கிறது. அதற்காகத்தான் இங்கு கூடாரமடித்துத் தங்கியிருக்கிறீர்கள். சதிகாரர்கள் பாண்டிய வீரர்களாதலால் சிங்கள ராணுவ வீரர்கள் இருப்பதைக் கண்டால் அருகில் வரமாட்டார்கள். பாண்டிய வீரர்கள் காவல் புரிந்தால் தங்களைச் சேர்ந்தவர்களென்று நினைத்து வந்து சிக்கிக் கொள்வார்கள். அதற்காகத்தான் மன்னனிடம் அனுமதி பெற்று நூறு பாண்டிய வீரர்களை அழைத்து வந்திருக்கிறீர்கள்" என்று விளக்கினாள் மாதவி.

அந்தப் பெண்ணின் கூரிய அறிவை மட்டுமின்றிச் சிங்களத்துத் தண்டநாயகனின் தந்திரத்தையும் நன்றாகத் தெரிந்து கொண்ட அபராஜிதன் அவர்கள் சம்பாஷணையில் குறுக்கிட்டு, "தங்கள் மாமனின் தந்திரம் மெச்சத்



தக்கது தான். ஆனால் தந்திரம் வேறு, ருசு வேறு அல்லவா?" என்று வினவினான்.

"சந்தேகமென்ன? இரண்டும் வெவ்வேறுதான்" என்று மாதவி ஒப்புக் கொண்டாள்.

"என்ன சொல்கிறாய் மாதவி?" என்றான் இலங்காபுரன்.

"அவர் சொல்வது சரிதானே? சதிகாரர்கள் இங்கு வந்து அகப்பட்டுக் கொள்ளக்கூடிய நிலைமையை நீங்கள் ஏற்படுத்தியிருப்பது வாஸ்தவம் ஆனால் இங்கு வருகிறவர்களையெல்லாம் சதிகாரர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டாள் மாதவி.

தன் கட்சியை எதற்காக எடுத்து மாதவி பேசுகிறாள் என்பதை அறியாத அபராஜிதன் மலைத்து அவளை நோக்கினான். எதிரிக்குப் பரிந்து பேசும் தன் மருமகளைச் சுடச்சுடப் பார்த்தான் இலங்காபுரன். சிங்களத்துப் பைங்கிளி மேலே நடக்க வேண்டியதைப் பற்றியும்தானே உத்தரவிட்டாள். "சேனாதிபதியும் அவருடைய நண்பரும் அடுத்து இருக்கும் என் கூடாரத்துக்குப் போயிருக்கட்டும். முதலில் அவர் காயத்தைக் கவனித்து மருந்து வைத்துக் கட்டுகிறேன். எப்படியும் சதிகாரர்களைப் பிடிக்கப்போன நமது வீரர்கள் வந்து விடுவார்கள். அவர்கள் வந்ததும் உண்மை விளங்கிவிடும் அதுவரை பொறுப்போமே!" என்று மாமனிடம் சொல்லிவிட்டு "நீங்களிருவரும் பக்கத்துக் கூடாரத்தில் இருங்கள். இதோ வந்துவிட்டேன்" என்று அபராஜிதனைப் பார்த்துக் கூறினாள்.

அவர்கள் தலைமறைந்ததும் இலங்காபுரன் மருமகளைப் பார்த்து, "உனக்கு புத்தி இருக்கிறதா? என் வலையில் அகப்பட்ட இருவரையும் வெளியே அனுப்பிவிட்டாயே!" என்று சீறி விழுந்தான்.

"மாமா! நல்ல வேளையாக நான் குறுக்கே வந்தேன். இல்லாவிட்டால் காரியத்தை நீங்கள் அடியோடு கெடுத்திருப்பீர்கள். அபராஜிதன் குற்றத்தை என்ன சாமர்த்திய

மாகத் திருப்பி விட்டான் பார்த்தீர்களா? தவிர, அபராஜிதனை அவன் வீரர்கள் தெய்வம் போல் நினைக்கிறார்கள். மன்னரைத் தவிர வேறு யார் அவன் மேல் குற்றம் சாட்டினாலும் நம்பமாட்டார்கள். இந்த மாதிரி அபாயமான எதிரியைப் பிடிக்கும்போது கோபம் பயன்படாது. நிதானம் வேண்டும்'' என்றாள் மாதவி.

இலங்காபுரன் ஏதும் புரியாமல் அவளைப் பார்த்தான். ''அவன் குற்றத்தை அவனே நிரூபிக்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்!'' என்றாள் மாதவி. ''நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை'' என்றான் இலங்காபுரன்.

''இதோ புரியும், பாருங்கள்!'' என்று சொல்லிய மாதவி மஞ்சத்தில் கிடந்த உடைவாளை எடுத்துக் கூடாரத்தின் பின் பக்கத்துத் திரையைச் சரேலெனக் கிழித்தாள். கிழிந்த துணியைப் பிரித்துப் பிடித்து, ''அதோ பார்த்தீர்களா?'' என்று கூடாரத்தின் பின்புறமாகச் சுட்டிக் காட்டினாள். பின்புறம் அடர்த்தியாக இருந்த மரங்களை நோக்கி அபராஜிதனும் காரிவளவனும் ஓடிக்கொண்டிருந்தார்கள். இலங்காபுரன் பிரமித்துத் தன் மருமகளை நோக்கினான். சிங்களத்துப் பைங்கிளி விஷமமாகச் சிரித்தாள். ''அபராஜிதன் குற்றமற்றவனானால் என் சொற்படி கூடாரத்துக்குப் போயிருக்க வேண்டும். சதிகாரனானால் தப்பியோடப் பார்ப்பார்கள். இதுதான் அவனுக்கு நான் அளித்த சந்தர்ப்பம். அவ்விருவரையும் கைது செய்ய இப்பொழுதுபாண்டிய வீரர்களை ஏவுங்கள். சூது பூர்த்தியாகி விடும்'' என்றாள். ஒரே பாய்ச்சலில் கூடாரத்தின் வாயிலுக்கு வந்த இலங்காபுரன்'', ''யாரங்கே?'' என்று வீரர்களைக் கூவியழைத்து ''அதோ அந்தத் தோப்புக்குள் ஓடுபவர்களைப் பிடித்துவாருங்கள்'' என்று ஆக்ஞாபித்தான். அடுத்த நிமிஷம் வீரர்கள் தடதடவென்று வாளும் கையுமாகத் தோப்பை நோக்கி விரைந்தார்கள். கூடாரத்துக்குள்ளிருந்த சிங்களத்துப் பைங்கிளி ''புத்திசாலியான நீ கூட நான் விரித்த வலையில் சிக்கிக்



கொண்டாயே அபராஜிதா?'' என்று தனக்குள்ளேயே எண்ணியதல்லாமல், தாமரைத்தடாகத்தில் கல் விழுந்தது போல் 'களுக்' கென்று ஒரு சிரிப்பையும் உதிர்த்தாள்.

## 6. நிலவில் வந்த தேவதை

இரவு மூன்றாம் ஜாமத்தைக் கடந்து இறுதி ஜாமத்தை எட்டிக் கொண்டிருந்தது. அதுவரை கருமை தட்டிககிடந்த பிரபஞ்சத்தின் மீது கிருஷ்ணபட்சத்து உதயகாலச் சந்திரன் வெளேரென்ற தன் கதிர்களை வீசத் தொடங்கினான். தோப்பின் மரக்கூடுகளில் உறங்கிக் கிடந்த பட்சி ஜாலங்கள் கூடச் சந்திரோதயத்தைக் கண்டு சப்திக்கத் தொடங்கின. தோப்பு அடர்த்தியாயிருந்ததால் மரக்கிளைகள் அசைந்து ஒன்றோடு ஒன்று உராயும் ஓசையும் கேட்டது. அந்த ஓசையுடன் வீரர்கள் நடமாட்டத்தால் கீழே உதிர்ந்து கிடந்த இலைச் சருகுகளின் சலசலப்பும் சேர்ந்து தோப்பைப் பயங்கரமாக அடித்துக் கொண்டிருந்தன. அந்த சலசலப்பின் காரணமாக வீரர்கள் தேடிவரும் திக்கை ஊகித்துக் கொண்ட அபராஜிதனும் காரிவளவனும் வீரர்களின் பார்வைக்கு அகப்படாமல் வேறுபக்கமாகத் தோப்பில் திரும்பித் திரும்பிச் சென்றார்கள். தோப்பின் ஒரு பகுதியில் கட்டிக் கிடந்த குதிரையை அவிழ்க்க முனைந்த காரியைத் தடுத்த அபராஜிதன், குதிரையை அவிழ்க்க வேண்டாம். குதிரையின் காலடிச்சத்தத்திலிருந்து வீரர்கள் நாமிருக்கும் திசையை ஊகிக்கலாம்'' என்று கூறினான்.

''ஊகித்தாலென்ன? வருகிறவர்கள் பாண்டியவீரர்கள் தானே? அவர்கள் தங்களைக் கைது செய்வார்களென்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

''கைது செய்ய மாட்டார்கள். வேண்டுமானால் இங்குள்ள பாண்டிய வீரர்களை இலங்காபுரனுக்கு எதிராகத் திருப்பி அவனையே நாம் கைது செய்யவும் முடியும். ஆனால் வீரர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் அவனுக்கு

எதிராகவோ நமக்கு அனுகூலமாகவோ திருப்புவது அவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும்'' என்றான் அபராஜிதன்.

''எப்படி?''

''மன்னர் உத்தரவுப்படி வீரர்கள் இலங்காபுரனுடன் வந்திருக்கிறார்கள். அவன் இடும் கட்டளைக்கு இவர்கள் கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் இவர்களைச் சிரச்சேதம் செய்யும்படி மன்னர் உத்தரவிடலாம். அப்போது சேனாதிபதியான என்னால்கூட அவர்களைக் காப்பாற்ற முடியாது. தவிர இலங்காபுரன் இந்த நூறு பாண்டிய வீரர்களை மட்டும் நம்பி வந்திருப்பானென்று எனக்குத் தோன்றவில்லை. இவர்கள் ஏதாவது எதிர்ப்பைக் காட்டும் பட்சத்தில் இவர்களைத் தீர்த்துக்கட்டத் தன் படையின் ஒரு பகுதியையும் எங்காவது சற்றுத்தூரத்தில் தங்கவைத்திருப்பான் ஆகவே வீரர்களுக்கு அபாயத்தைத் தரக்கூடிய எந்த நிலைமையையும் நாம் சிருஷ்டிக்கக் கூடாது. எதிரி வீரர்கள் துரத்தும் போது நாம் எப்படி நடந்து கொள்வோமோ அப்படித்தான் இப்பொழுதும் நடந்து கொள்ள வேண்டும். சத்தம் போடாமல் மெல்ல வா. குதிரை இங்கேயே இருககட்டும்'' என்று சொல்லிக்கொண்டு மேலே நடந்தான் அபராஜிதன்.

அவனைத் தொடர்ந்த காரி, ''குதிரையை இப்படியே விட்டுப் போனால்...'' என்று ஆட்சேபிக்கப் போனான்.

''குதிரைக்கு எந்த நஷ்டமுமில்லை. நம்மைத் தேடும் வீரர்கள் குதிரையை அவிழ்த்துக்கொண்டு இலங்காபுரனிடம் போய்க் குதிரை மாத்திரம்தான் அகப்பட்டதாகவும் நாம் அகப்படவில்லையென்றும் சொல்வார்கள். இலங்காபுரன் நமக்குப் பதில் குதிரையை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வீரர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்துவிட்டார்கள் என்று ஆறுதலடைவான். அந்த ஆறுதல் நமது வீரர்களுக்குப் பெரிய பாதுகாப்பு'' என்று அபராஜிதன் காரிக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டே மரங்களிடையே புகுந்து வேகமாகச் சென்றான்.



தோப்பு வெகு அடர்த்தியாகக் காடு போலிருந்தது. எந்த இடத்தில் போய் முடிகிறதென்பதே தெரியாதபடி பரம சிக்கலாகவும் அமைந்திருந்தபடியால் திக்குத் திசை தெரியாமல் அபராஜிதனும் காரிவளவனும் போய்க்கொண்டே இருந்தார்கள். பல இடங்களில் முட்புதர்கள் மண்டிக் கிடந்தன. ஒவ்வோரிடங்களில் மரங்களிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கொடிகள் வழியை அடைத்தன. இத்தனை இடைஞ்சல்களிலும், மரங்களின் இடையே பாய்ந்து கீழே திட்டை திட்டையாகக் கல் இழைத்தது போல் விழுந்து கிடந்த சந்திர வெளிச்சம் மட்டும் தோப்பை ஊடுருவிச் செல்வதற்கு உதவியாக நின்றது. இப்படி சுமார் கால் ஜாமம் நடந்தபிறகு தோப்பின் எல்லையைக் கடந்த இரு வீரர்களும் சற்று நிதானித்து, தாங்கள் எந்த இடத்திலிருக்கிறோம் என்பதை ஆராயத் தொடங்கினார்கள்.

நிலப்பரப்பைச் சுற்றுமுற்றும் நோக்கிய காரி, ''பிரபு, நாம் கால் காதத்திற்கு மேல் நடந்து வந்திருக்கிறோம்'' என்றான்.

''எங்கு வந்திருக்கிறோம் என்பது தெரிகிறதா?'' என்று அபராஜிதன் கேட்டான்.

''திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் எதிரே இருக்கும் சிறு காட்டைத் தாண்டினால் ஊர் இருப்பது நிச்சயம்'' என்றான் காரி.

''இப்பொழுதுதானே தோப்பைத் தாண்டினோம், மீண்டும் காட்டுக்குள் புகுந்தால் எப்பொழுது ஊரைக் காண்பது, எப்பொழுது என் காயத்திலிருந்து ஊற்றெடுத்திருக்கும் ரத்தத்தை நிறுத்துவது?''

''பிரபு! இது சாதாரணக் காடல்ல. இதோ கவனித்துப் பாருங்கள்'' என்று கீழேயிருந்த பாதையைச் சுட்டிக் காட்டினான் காரி.

ஊன்றிக் கவனித்த அபராஜிதனும், ''ஆமாம், காரி இந்தப் பாதையில் அடிக்கடி மனித நடமாட்டம் இருக்கிறது. ஆகையால் காடு இயற்கையாக ஏற்பட்டதல்ல.

கோட்டைப் பாதுகாப்புக்காக வளர்க்கப்பட்ட காடாயிருக்க வேண்டும்'' என்றான்.

''இதைத் தாண்டினால் கோட்டையிருப்பது நிச்சயம் பிரபு! மெல்லக் காட்டைத் தாண்டி விட்டால் உங்கள் காயத்தைக் கவனிக்கச் சௌகரியமாயிருக்கும்'' என்று காரி யோசனை சொன்னான்.

காரியின் ஊகமும், யோசனையும் சரியென்பதைக் காட்டுக்குள் நுழைந்த சிறிது நேரத்தில் அபராஜிதன் புரிந்து கொண்டான். பழங்காலத்துத் தமிழர்களின் கோட்டை அமைப்பில் காடும் முக்கிய பாகம் வகித்து வந்தது. கோட்டையைச் சுற்றிப் பெரிய அகழி வெட்டுவதும் அகழிக்கு முன்பாக அடர்ந்த காட்டை வளர்ப்பதும் பழக்கமாயிருந்து வந்தது. யானை, குதிரைப் படைகளோ, ஆயுத வண்டிகளோ திடீரெனக் கோட்டையை அணுக முடியாமலிருப்பதற்காகக் காடு வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால் இதே காடுகள் பல சமயங்களில் எதிரிகளுக்கும் பேரனுகூலமாக முடிந்தது. தாக்கும் எதிரிகள் காடுகளை அழித்து, முறித்த மரங்களைப் போட்டு அகழிகளைத் தூர்த்து, கோட்டைச் சுவர்களை அடைந்து அவற்றின் மேல் ஏறிப்போரிட்டதும் உண்டு இப்படிப் போரிடும் இருதரப்புக்கும் அனுகூலமாகச் சிருஷ்டிக்கப்பட்ட காட்டின் அமைப்பைக் கண்டு அதைத் தாண்டியவுடன் கோட்டையிருக்கிறதென்ற தீர்மானத்துடன் உள்ளே நுழைந்து சென்ற அவ்விருவர் கண்களிலும் சற்று நேரத்திற்கெல்லாம் தூர இருந்த ஒரு பிரம்மாண்டமான கோட்டையின் சிகரமும் தெரிந்தது.

''பிரபு! நான் சொன்னது சரியாகி விட்டது பார்த்தீர்களா?'' என்றான் காரி! குதூகலத்துடன் கோட்டைச் சிகரத்தைச் சுட்டிக் காட்டி.

அபராஜிதன் பதில் ஏதும் சொல்லாமல் சிறிது தூரம் நடந்தவன் தீவிர யோசனைக்குப் பின் காரியை நோக்கிச் சொன்னான். ''காரி! நாம் மழவராயன் எல்லையிலிருக்கிறோம். நீலமலைக்கு இவ்வளவு அருகில் கோட்டை எது



யிருப்பதாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. மழவராய
னுக்கு இருப்பதே இரண்டு கோட்டைகள்தான். ஒன்று,
மேலை மங்கலத்திலும் மற்றொன்று, கீழை மங்கலத்திலு
மிருக்கின்றன. இந்த இரண்டு ஊர்களும் தொலை தூர
மிருக்கின்றன. ராணுவ பட்டியலில் வராத 'இந்தக்
கோட்டை எதுவென்று எனக்குப் பிடிபடவில்லை.

காரிக்கும் திட்டமாய் அந்தக் கோட்டையைப் பற்றிய
தகவலேதும் கிடைக்காததால் பதில் எதுவும் சொல்ல வகை
தெரியாமல் திகைத்தான். இருந்தாலும், ''பிரபு! ஆயிற்று.
கிட்டே வந்துவிட்டோம். போய்ப் பார்த்தால் கோட்டை
நிலவரம் புரிந்து விடுகிறது.'' என்று கூறிவிட்டு நடந்தான்.
இப்படி நடந்து கொண்டே காட்டின் எல்லைக்கு இரு
வரும் வந்ததும் காட்டு முனையிலிருந்த மரத்தடியிலே
நின்று கொண்டு அபராஜிதன் கோட்டை மதிற் புறங்
களையும் உள்ளே எழும்பி நின்ற இரண்டொரு கட்டடங்
களையும் நிதானித்துப் பார்த்தான்.

கோட்டை மிகச் சிறியதாகவே காட்சியளித்தது. உள்
ளேயும் இரண்டொரு கட்டிடங்கள்தான் தெரிந்தன.
வெளியே இருந்த அகழி சமீபத்தில் ஆழமாக்கப்பட்டதற்கு
அறிகுறியாக, வெட்டிப்போட்ட மண் ஆங்காங்கு மேடு
மேடாகக் கிடந்தது. கோட்டைச் சுவர்களும் பல இடங்
களில் புதுபிக்கப்பட்டதன் காரணமாகப் பல ஒட்டுகளு
டன் விளங்கியது. கோட்டையின் பெரிய கதவுகள் இரண்
டும் புதியனவாயிருந்தாலும் அவை பொருத்தப்பட்ட
நாதாங்கிகளும், நாதாங்கிகளைத் தாங்கி நின்ற சுவர்ப்
புறங்களும் பூச்சு உதிர்ந்து பழைமையை நிரூபித்தன.
இவற்றிலெல்லாம் கண்ணை ஓட்டிய அபராஜிதன், ''காரி!
நாட்டில் நாமறியாமலே காரியங்கள் பல நடந்து வருகின்
றன'' என்றான்.

''என்ன பிரபு! எதைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று
கேட்டான் காரி.

''இந்தக் கோட்டையைப் பார். உனக்கு என்ன புலப்
படுகிறது?''

"கோட்டையைப் பழுது பார்த்திருக்கிறார்கள்."

"பழுது பார்க்கவில்லை காரி, பழுது பார்க்கவில்லை. பழைய இடிந்த கோட்டையைப் பெரும் செலவில் புதிதாகக் கட்டியிருக்கிறார்கள். சென்ற ஆறு மாதங்களில் இந்த வேலை நடந்திருக்க வேண்டும். பாண்டிய எல்லைக்கு வெகு அருகே நீண்ட நாளாகப் பாழடைந்து யாரும் ஏறெடுத்துப் பார்க்காத இந்தக் கோட்டையை எந்தக் காரணம் கொண்டோ மழவராயன் புதுப்பித்திருக்கிறான். அகழியை எத்தனை ஆழமாகத் தோண்டியிருக்கிறான் பார்" என்று வாரிக்கொட்டியிருந்த மணல் திட்டுக்களைக் காட்டினான் அபராஜிதன்.

சேனாதிபதியின் அபிப்பிராயங்களை ஆமோதித்த காரியும், "எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்தப் பழைய கோட்டையைத் திரும்பக் கட்டியிருக்கிறார்கள்?" என்று வினவினான்.

"பாண்டிய நாட்டுடன் சிநேகம் தொடர்ந்திருந்தால் அந்த நாட்டு எல்லைக்கருகே மழவராயனுக்குக் கோட்டை அவசியமில்லை. ஆனால் சிநேகம் முறிவதானால் இது மிக அவசியம். மேலை மங்கலத்தை நாடுமுன் படைகள் இந்தக் கோட்டையைத் தாண்டித்தான் செல்லவேண்டும். இருக்கிற நிலையைப் பார்த்தால் மழவராயன் சீக்கிரமே பாண்டிய நாட்டுடன் யுத்தத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது!" என்று கூறிய அபராஜிதன் நீண்ட நேரம் ராஜ்ய சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். பிறகு காரியை நோக்கி, "காரி, ரத்தம் அதிகமாக விரயமாகி எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது. சற்று இந்த மரத்தடியில் படுக்கிறேன். நீ மட்டும் கோட்டைக்குள் சென்று யாராவது வைத்தியனிருந்தால் அழைத்து வா. நாம் யார் என்பதை மட்டும் சொல்லிவிடாதே" என்று கூறிவிட்டு அந்த மரத்தடியில் ஒருபுறமாகப் படுத்தான். மனத்தே தீர்க்கமாக ஓடிக்கொண்டிருந்த சிந்தனையின் காரணமாகவோ அல்லது அயர்ச்சியின் காரணமாகவோ படுத்ததும் [illegible] அபராஜிதன் கண்கள் மூடிக்கொண்டன.



சேனாதிபதியை ஒருமுறை உற்று நோக்கிய காரி ஆகாயத்தையும் அண்ணாந்து பார்த்தான். வெள்ளி முளைத்து வெகு நேரமாகி விட்டிருந்தது. கோட்டைக்குள் ஆள் நடமாட்டமும் கேட்டது. சேனாதிபதி அப்பொழுதிருந்த நிலைமை கவலைக்கிடமாயிருந்தபடியால் அப்படியே விட்டுச் செல்வது உசிதமா என்று ஒரு நிமிஷம் யோசித்த காரி, எதற்கும் போய் வருவோமென்று கிளம்ப யத்தனித்தான் அந்தச் சமயத்தில் மரங்களுக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி யாரோ வருவது தெரியவே சேனாதிபதி படுத்திருந்த மரத்துக்குப் பின் பக்கமாக காரி மறைந்து நின்று வருவது யாரென்று கவனித்தான். கர்ப்ப ஸ்திரீயின் முகம்போல வெளிறிப் போயிருந்த சந்திரனிடமிருந்து கிளம்பிய கதிர்கள் மிக மங்கலாயிருந்தபடியாலும் மரத்தின் நிழல்கள் குறுக்கும் நெடுக்குமாக விழுந்திருந்தபடியாலும் வருவது யாரென்று திட்டமாகக் கண்டு பிடிக்க முடியவில்லை.

வந்த மனிதனும் நேராக வராமல் யாருக்கோ பாய்ச்சல் காட்டி வருவது போல் மரங்களிடையே மறைந்தும் தாவியும் வந்து கொண்டிருந்தான். கடைசியாக அபராஜிதன் படுத்திருந்த மரத்தடிக்கு வந்ததும் கீழேயிருக்கும் மனிதனைப் பார்க்காமல் சேனாதிபதியின் காயத்தின்மீது காலை வைத்து விடவே வலி தாங்க மாட்டாமல் அபராஜிதன் 'ஹா' என்று சத்தமிட்டு எழுந்து வலது கையைத் தரையிலூன்றிச் சாய்ந்து உட்கார்ந்தான் அவன் அப்படி உட்காருவதற்கும் மரத்திற்குப் பின்னால் நின்றிருந்த காரியின் வாள் சரேலென வெளிப்பட்டு, வந்த மனிதனின் ஊட்டியைத் தடவுவதற்குச் சரியாயிருந்தது

'கத்தியா! நமசிவாயம் நமசிவாயம்!" என்று கதறினான் வந்திருந்த மனிதன்.

பிரும்மாண்டமான உருவத்துடனும் கழுத்தில் ருத்திராக்ஷத்துடனும் இடையில் காஷாயத்துடனும் விளங்கிட

சிவனடியார் எதிரில் நிற்பதைக் கண்ட அபராஜிதன், "காரி! யாரோ துறவி போலிருக்கிறது. கத்தியை உறையில் போடு" என்றான். வந்த துறவியும் அபராஜிதனைப் பார்த்து ஒரு விநாடி பிரமித்தார். பிறகு ஏதோ யோசனை செய்வது போல் தமது வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டார். கடைசியில், "புரிந்து விட்டது, புரிந்துவிட்டது" என்றார்.

"என்ன புரிந்து விட்டது?" என்று கேட்டான் அபராஜிதன்.

துறவியின் குரல் நடுங்கியது. "பிரபு! பாண்டிய சேனாதிபதியான தாங்கள் இந்த இடத்தில், இந்த இரவில்..." என்று மேலே பேசப் போனவர், தொண்டையில் வந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கிக் கொண்டார். இந்தச் சமயம் காரியின் உடைவாள் ருத்திராக்ஷமணிந்த அவர் மார்பைத் தடவிக்கொடுத்தது.

"அடிகளாரே, தங்கள் பெயர் என்னவோ?" என்று காரி கேட்டான்.

"சிவானந்த அடிகள்" என்றார் அடிகள்.

"அடிகளாரே! இங்கு பாண்டிய சேனாதிபதியைப் பார்த்த தகவல் இன்னொரு முறை தங்கள் திருநாக்கிலிருந்து உதிரும் பட்சத்தில் எந்தசிவானந்தத்தை அடையத் தாங்கள் துறவறம் பூண்டிருக்கிறீர்களோ அதை அடைய இப்போதே அனுப்ப விடுவேன்!" என்றான் காரி.

தமது மார்பில் தடவிக்கொண்டிருந்த கூரிய கத்தியையும் அதைவிடச் சுருக்கென்று தைக்கக்கூடிய காரியின் வார்த்தைகளையும் கேட்ட அடிகளார் பயத்தால் பதிலேதும் பேசாமல் நடுங்கினார். அரிசி உணவை அறவே வெறுத்து, பழங்களிலும் பாலிலும் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்ததால் நன்றாகச் சதைபிடித்து வளர்ந்திருந்த அடிகளாரின் வயிற்றிலிருந்து கிளம்பிய பயங்கலந்த பெரு



மூச்சு சிவபதத்தை அந்த வயதில் நாடுவதில் அவருக்குப் பிரியமில்லை என்பதை நன்றாக எடுத்துக் காட்டியது.

"காரி! உடைவாளை உறையில் போடு. வீணாக அடிகளாரை மிரட்டாதே" என்று காரிக்கு உத்தரவிட்ட அபராஜிதன், 'ஸ்வாமி! நான் யார் என்று இங்கு உள்ளவர்களுக்குத் தெரிந்தால் பல கஷ்டங்கள் ஏற்படக் கூடும் ஆகையால்தான் காரி அவசரப்பட்டான் ஆனால் தங்கள் திருவடி பலத்தைத் தாங்க அடியேனால் முடியவில்லை" என்றான், அடிகளாரை நோக்கி. அடிகளார் ஏதும் புரியாமல் விழித்தார். "ஸ்வாமி! ஈட்டி பாய்ந்து காயமடைந்துள்ள என் தோளில் தங்கள் திருவடியைச் சார்த்திவிட்டீர்கள் ஸ்வாமிகளின் உடல் எடையும் அதிகமாயிருப்பதால் வலி அதிகப்பட்டதோடு காயத்தின் கண்ணும் விரிந்துவிட்டது. ரத்தம் எப்படி ஓடுகிறது பாருங்கள்" என்று தோளைக் காட்டினான்.

அடிகளாருக்கு விஷயம் அப்போதுதான் புரிந்தது! "இதை முன்பே சொல்லியிருந்தால் வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்திருப்பேனே" என்று சொல்லியபடி அடிகளார் கீழே உட்கார்ந்து அபராஜிதனின் காயத்தைப் பரிசோதித்தார் பிறகு முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தமது வழுக்கைத் தலையை அசைத்தார்.

"என்ன தலையை ஆட்டுகிறீர்?" என்று காரி கேட்டான்.

"இந்த காயத்துக்குச் சிகிச்சை செய்ய என்னால் முடியாது. ஈட்டி மிக ஆழமாகப் பாய்ந்திருக்கிறது ரத்தக் குழாய்களை பரிசோதித்துப் பச்சிலையைத் திணித்துக் கட்டவேண்டும்" என்றார் அடிகளார்.

"அப்படிச் செய்யக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று அபராஜிதன் கேட்டான்.

"இருக்கிறார்கள். ஆனால் அவர்களை நீங்கள் பார்க்க முடியாது" என்றார் அடிகளார்.

அபராஜிதன் ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் அடிகளாரை நோக்கி, "ஏன்?" என்று வினவினான்.

''முதல் காரணம் நீங்கள் கிழவரல்ல''

''இரண்டாவது காரணம்?''

''குள்ளமில்லை. தவிர உங்களுக்குக் கூனுமில்லை'' என்று முடித்தார் அடிகளார்.

அடிகளாருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நினைத்த காரியின் கண்களில் மீண்டும் கோபம் கனைத்தது. அபராஜிதன். மட்டும் அடிகளார் எதைக் குறிப்பிடுகிறார் என்பதைப் புரிந்து கொண்டான் பழந் தமிழர்களின் கன்னி மாடங்களுக்குள் கிழவர்கள், சித்திரக்குள்ளர்கள், கூனர்கள் இவர்களே அனுமதிக்கப் பட்டார்கள். ஆகையால் அடிகளார் கன்னிமாடம் ஒன்றைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறார் என்பதை அறிந்தாலும் இங்கு ஏது கன்னிமாடம் என்று எண்ணியவனாய், ''ஸ்வாமி. இங்கே கன்னிமாடம் ஏதாவது இருக்கிறதா'' என்று வினவினான்.

''ஆமாம் ''

''எங்கிருக்கிறது?''

''எதிரே தெரிவது என்ன?''

''அது கோட்டையல்லவா?''

''கோட்டைதான் கன்னிமாடம். கன்னிமாடந்தான் கோட்டை.''

''கன்னி மாடத்தை எதற்காகக் கோட்டைக்குள் வைத்திருக்கிறார்கள்?''

''ஜாக்கிரதையை முன்னிட்டு.'

அடிகளார் பார்ப்பதற்கு மந்தியாயிருந்தாலும் அவர் பதில்களிலிருக்கும் ஜாக்கிரதையைக் கவனித்த அபராஜிதன் கோட்டையைப் பற்றி அதிகக் கேள்விகள் கேட்காமல் வைத்தியரைப்பற்றி வினவினான்.

''வைத்தியரை நான் பார்க்க முடியாதென்கிறீர்களே எதனால்?''

''அவர் கன்னி மாடத்திலிருப்பதனால்.''

'கொஞ்சம் அழைத்து வரமுடியாதா?''

அடிகளார் மெல்லச் சிரித்தார்.



''என்ன சிரிக்கிறீர்?'' என்றான் காரி

''கன்னி மாடத்திலிருக்கும் வைத்தியரை அழைத்து வர முடியாதா என்று கேட்டீர்களே, அந்தக் கேள்வியின் அழகை நினைத்துச் சிரித்தேன்!'' என்றார் அடிகளார்.

''நீர் மேற்கொண்டு சிரிக்க முடியாதபடி என்னால் செய்ய முடியும்'' என்று காரி மீண்டும் கையை உடை வாளுக்காகக் கொண்டு போனான். தன் சமிக்ஞையால் அதை நிறுத்திய அபராஜிதன் அடிகளாரை நோக்கி ''ஸ்வாமி! நானிருக்கும் நிலை உங்களுக்குப் புரிகிறதா, இல்லையா?'' என்று கேட்டான்.

''புரிகிறது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்? உங்களையும் கன்னி மாடத்திற்கு அழைத்துப் போக முடியாது. எங்கள் தலைவியையும் இங்கு அழைத்துவர முடியாது...'' என்று மேலும் ஏதோ பேசப்போன அடிகளாரைத் தடுத்த அபராஜிதன் ''என்ன? அடிகளாருக்குத் தலைவியா!'' என்று கூறிப் பலமாகச் சிரித்தான். சிரிப்பில் காரியும் கலந்து கொண்டான் அடிகளார் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. மரத்துக்குச் சிறிது தூரத்திலிருந்த இடைவெளியில் அடித்துக் கொண்டிருந்த நிலவொளியை வெறித்துப் பார்த்து அச்சத்தால் மூச்சை இழுத்துப் பிடித்தார். அவரைத் தொடர்ந்து கண்களை ஓட்டிய அபராஜிதனும் காரியும் கூட பிரமித்தார்கள். நிலவொளியில்தேவதையென நின்று கொண்டிருந்தாள் ஓர் இளமங்கை.

விடியற்கால ஸ்நானத்தின் காரணமாகப் பின்னப் படாமல் அள்ளிச் செருகியிருந்த அவள் கூந்தலில் வைக்கப் பட்டிருந்த செங்கழுநீர்ப் புஷ்பமும், முகம் சரியாகத் துடைக்கப்படாததால் நிலவொளியில் பளிச்சிட்ட ஓரிரு நீர்த்துளிகளும் தேகத்தைச் சுற்றி நன்றாகப் போர்த்தப் பட்டிருந்தாலும் உடலின் எழிலை ஆங்காங்கு புலப் படுத்திக் கொண்டிருந்த சேலையும் கன்னங்களைத் தடவிக் கொடுத்த காதணிகளும் ஒன்றாகச் சேர்ந்து அவளை ஒரு தேவபிம்பமாகச் செய்திருந்தன அந்தத் தெய்வீக தோற்

நத்தைக் கண்டு அதற்கு அஞ்சலி செய்யும் நோக்கத்துடன் எழுந்த அபராஜிதன் ஓடிவிட்ட ரத்தப் பெருக்கால் ஒரு வினாடி தள்ளாடினான். அடுத்த வினாடி அந்த தெய்வீகச் சிலையிருந்த திக்கில் தடாலென உணர்விழந்து விழுந்து விட்டான்.

அதுவரை சிலை போலிருந்த மங்கை அபராஜிதனை நோக்கி ஓடி வந்தாள். அவள் வருமுன்பாகவே அடிகளார் அவனை வாரியெடுத்து சிரசை தமது மடிமேல் வைத்துக் கொண்டார். அருகே விரைந்து அபராஜிதனை நோக்கிய அந்த அழகி அமுதமென வார்த்தைகளை உதிர்த்தாள். ''ஸ்வாமி! இவர் ஏன் விழுந்து விட்டார்?'' என்றாள்.

''ஆழமாகத் தோளில் ஈட்டி பாய்ந்து ரத்தம் ஓடியிருக்கிறது. இதோபார்'' என்றார் அடிகளார்.

காயத்தைப் பரிசோதித்த அந்தக் காரிகை ஒருவினாடி ஏதோ யோசித்தாள். பிறகு சொன்னாள்; ''ஸ்வாமி! தடாகத்தில் முத்துநகை குளித்துக் கொண்டிருக்கிறாள். அவளை அழைத்துப் போய் என் அறையிலிருந்து மருந்துப் பெட்டியை எடுத்து வாருங்கள். இவரை இந்த நிலையில் எடுத்துப் போவதும் ஆபத்து'' என்றாள்.

அவள் சொற்படி அடிகளார் செய்யவே, சற்று நேரத்திற்கெல்லாம் இன்னொரு பெண்ணுடன் மருந்துப் பெட்டியிலிருந்து பச்சிலைகளை எடுத்துக் கசக்கி, சாற்றைக் காயத்தில் பிழிந்து ரத்தத்தை நிறுத்தினாள். காயத்தில் வைத்துக் பெருகொன்றையும் தடவியபின் துணியை வைத்துக் கட்டுமாறு துறவியிடம் கூறினாள். இந்த சைத்தியோபசாரங்களால் கண்களை மெள்ளத் திறந்த அபராஜிதன் எதிரே தெரிந்த எழில் முகத்தை நோக்கினான். ''நான் காண்பது வனதேவதையோ?'' என்றான்.

''இல்லை, மாநிலத்துப் பெண்தான்''

''தங்கள் பெயர்?''

''கார்குழலி''



''எந்தக் கார்குழலி? மழவராயன் மகளா!'' என்று ஆச்சரியத்துடன் கூவிய அபராஜிதன் கண்களை உயரத் தூக்கினான் அந்தக் கண்களுடன் கருணை சொட்டும் இரு கருவிழிகளும் கலந்தன.

## 7. அடிகளாரும் அந்தரங்க வழியும்

காந்தம் போல் தம் கண்களோடு உள்ளத்தையும் கவர்ந்து நின்ற கார்குழலியின் கருவிழியிலிருந்து விடுபட இயலாதவனாய், அந்த ஒரு பார்வைக்கே தன் உணர்ச்சிகளையெல்லாம் பறிகொடுத்துவிட்ட அபராஜிதன், அடிகளாரின் மடியிலேயே அரை வினாடி அசைவற்றுக் கிடந்தான் விழிகளின் வீச்சோடு குனிந்து காயத்தை நோக்கியதால் முகத்துக்கு வெகு சமீபத்தில் கொண்டுவரப்பட்ட அவள் தேகத்தின் அசைவும் சற்று முன்பே நீராடியதின் பயனாக அப்பொழுதும் உடலில் கமழ்ந்து கொண்டிருந்த ஸ்நானப் பொடிகளின் சுகந்தமும், கழுத்திலிருந்து தொங்கி ஊஞ்சலாடிய நகைகள் உராய்ந்ததால் ஏற்பட்ட இன்ப அனுபவமும் எல்லாமாகச் சேர்ந்து அவனை எங்கோ சொர்க்கலோகத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தன. கார்குழலி மட்டும் சீக்கிரமாகக் காயப் பரீட்சையை முடித்துக்கொண்டு விலகி நின்றிருக்காவிட்டால் அபராஜிதன் அந்த இன்பக் கனவிலிருந்து இக உலகத்துக்கு வர இஷ்டப்பட்டேயிருக்க மாட்டான். அடிகளார் கட்டுப் போட்டதும் கார்குழலி கட்டைத் தன் கையால் லேசாக அசைத்துப் பார்த்துத் திருப்தியடைந்தவளாய் அபராஜிதனின் அருகாமையிலிருந்து சற்று விலகி நின்றாள் அபராஜிதனும் அவள் சமீபத்தால் ஏற்பட்ட சொப்பனத்திலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டதன்றி ரத்தம் நின்றதால் ஏற்பட்ட அல்ப சக்தியின் காரணமாக அடிகளாரின் மடியிலிருந்து எழுந்திருந்து நகர்ந்து பன்னாலிருந்த மரத்தில் சாய்ந்து கொண்டே எதிரேயிருந்த கார்குழலியின் எழில் பூராவையும் ஆராயத் தன் கண்களை ஓட்டினான்.

அபராஜிதன் தன் சுய உணர்வு பெற்றதுமே கார்குழலி அவன் உட்கார்ந்திருந்த மரத்தடியிலிருந்து நகர்ந்து பக்கத்திலிருந்த ஒரு கொடியின் கிளையைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து நின்றாள். இன்னொருவன் அபாயத்திலிருக்கிறான் என்ற அச்சத்தினால் தற்காலிகமாக உடைத்தெறியப் பட்ட அம்மடந்தையின் இயற்கையான உணர்ச்சிகள் மீண்டும் அவளைச் சூழ்ந்து கொள்ளவே, அபராஜிதனை ஏறிட்டுப் பார்க்கவும் அவள் கண்கள் சக்தியை இழந்தன. பக்கப் பார்வையாகப் பார்த்தபோதிலும் இதயத்தை ஆகர்ஷித்த அவளது மான் விழிகளிலிருந்த மிரட்சியே அவள் முகத்துக்கு இணையற்ற சோபையை அளித்ததை அபராஜிதன் கவனித்தான். விழிகளைப் பாதுகாத்து நின்ற கறுத்த இமைகளும், அந்த இமைகளின் கோடியில் மயிலை பாய்ந்திருந்த மெல்லிய மடிப்பும் அவள் கண்களுக்கு எப்பொழுதும் மை தீட்டியிருந்ததைப் போன்ற பிரமையை உண்டாக்கியிருந்தன. மஞ்சள் கலந்த ஸ்நானப் பொடியால் லேசான தங்க நிறத்தைப் பெற்ற அவள் மாம்பழக் கன்னங்களில் நாணத்தின் காரணமாகக் குபீரெனப் பாய்ந்த ரத்தச் சிவப்பும் கலந்து கொள்ளவே அவள் கபோலங்கள் பொன் தட்டில் உதிர்க்கப்பட்ட தாமரைத் தளங்களைப்போல் காட்சியளித்தன. கூந்தலில் பக்கவாட்டில் செருகப்பட்டிருந்த செங்கழுநீர்ப் பூ அவள் கன்னத்தில் மூலையில் சாய்ந்து புஷ்பத்தோடு புஷ்பம் உறவாடுவதுபோல உள்ளத்துக்கு உன்மத்தத்தை உண்டு பண்ணியது. வில்லைப்போல் வளைந்து இருளைப்போல் கருமை பாய்ந்து கிடந்த புருவங்களுக்கு இடையே கிளம்பி மேலே சென்ற குங்கும திலகம், விசாலமான நெற்றியில் படர்ந்த வெட்கச் சிரிப்புடன் போட்டி போட்டது. சற்றே விகசித்த ரோஜா புஷ்பம்போல் மிருதுவாக ஒன்றோடொன்று பொருந்தி சிவந்திருந்த உதடுகளின் வசீகர சக்தி அபாரமாயிருந்தாலும், அவை பொருத்தப்பட்டிருந்த



மாதிரியில் மிகுந்த உறுதியும், ஓரளவு எச்சரிக்கையும் கலந்திருந்தன. கைகளில் பிடிபடாத அளவுக்கு அடர்ந்து கருத்து நீண்டு வளர்ந்திருந்த அவள் குழல் அள்ளிச் செருகப்பட்டிருந்தாலும் மீறி நின்ற இழைகள் அக்கம் பக்கத்தில் விலகித் தொங்கி முகத்தாமரை பன்மடங்கு சோபிக்கும் படியான இருண்ட பின்னணியைச் சிருஷ்டித் திருந்தன கோதி விட்டிருந்த முன்னுச்சி மயிர்களில்கூட ஓரிரண்டு அகன்று முகத்தில் வளைந்து கிடந்தன.

மங்கைப் பருவமடைந்து ஓரிரண்டு ஆண்டுகளே ஆன போதிலும் சுமக்க முடியாத புஷ்பங்களைத் தாங்கி நிற்கும் இளங்கொடிபோல் பேரெழிலுடன் விளங்கினாள் கார் குழலி. நல்ல பழக்கத்தின் காரணமாக நன்றாக இழுத்துப் போர்த்தப்பட்டிருந்தாலும், சீலை மறைக்க முடியாமல் எடுப்பாக எழுந்து நின்ற கவர்ச்சிப் பிரதேசங்கள் அவ் விளமடந்தை வாழ்க்கையின் தென்றலை ஸ்பரிசிக்காத தூய்மையான மலரென்பதைச் சந்தேகமற எடுத்துக் காட்டின. மேலோர் வளர்ச்சியால் குன்றும் எளியவரைப் போல, இருக்கும் இடம் தெரியாமல் ஒடுங்கிக்கிடந்த இடை, அவள் அசைவுக்குத் தனி மெருகைக் கொடுத்தது. இயற்கைச் சிற்பியால் செதுக்கப்பட்ட அவள் உடல் பூரா வும் மறைந்தோடினாலும் இன்பமான ஊகங்களுக்கு இடங்கொடுத்த வளைவுகளும் கண்ணைப் பறித்த எழுச்சி களும் காண்பவர் மீது கணக்கற்ற மோகனாஸ்திரங்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தன. மாதவியைக் கண்டு, மலைத்து, மன்னன் அவளிடம் மையல் கொண்டதில் மர்மமில்லையென நினைத்த அபராஜிதன், மழவராயன் மகள்மீது கண்களை ஓட்டிய அந்தச் சில விநாடிகளுக்குள், 'இவளை வேண்டாமென்று விலக்கும் வீரபாண்டியனை விட அடிமுட்டாள் உலகத்தில் இருக்கமுடியாது' என்ற முடிவுக்கு வந்தான்.

அவன் சிந்தனை அலைகளை உடைக்கவோ என்னவோ கார்குழலி வாயைத் திறந்து இன்ப ஒலிகளான சில வார்த்தைகளை உதிர்த்தாள். "ஸ்வாமி, அவர் காயத்

திலிருந்து ரத்தம் மிகவும் சேதமாயிருக்கிறது. அதிகமாக நடந்தால் உயிருக்கு அபாயம். ஒரு நாளாவது படுக்கையிலிருக்க வேண்டும்'' என்றாள் கார்குழலி, சிவானந்த அடிகளாரை நோக்கி. அடிகளார் மெல்லச் சமாளித்துக்கொண்டு எழுந்து நின்று அபராஜிதனையும் காரியையும் பார்த்தார். பிறகு கார்குழலியை நோக்கிச் சொன்னார்: "இவர்களைத் தங்கவைக்க இடம் ஏதுமில்லையே? கன்னி மாடத்திற்குள் ஆண்களை அழைத்துப்போவது முடியாத காரியமாயிற்றே!''

இந்தச் சமயத்தில் சம்பாஷணையில் புகுந்த காரி ஒரு சந்தேகம் கேட்டான். ''அடிகளாரே! தாங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?''

காரியின் கேள்வியிலிருந்த விஷமத்தை ஒரு நொடியில் புரிந்துகொண்ட அடிகளாரும் சிறிதும் சளைக்காமல், ''உங்களைப் போன்ற ஆண்பிள்ளைகள்தான் கன்னி மாடத்திற்குள் போகமுடியாதே தவிர, என்னைப்போன்றவர்கள் போவதற்குத் தடையில்லை அங்கேயே வசிப்பதற்கும் விலக்கில்லை'' என்றார் அடிகளார்.

"உங்களுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம்?'' என்று காரி கேட்டான்.

''குணத்தில் வித்தியாசமிருக்கிறது'' என்று கூறிய அடிகளார் விஷமமாகச் சிரித்தார்.

வீண் சம்பாஷணையை அத்துடன் வெட்டிவிட இஷ்டப்பட்ட கார்குழலி, ''ஸ்வாமி! பொழுது புலருவதற்குள் நாம் கோட்டைக்குள் போகவேண்டும். இன்னும் சற்று தாமதித்தால் சிவிகை தாங்கும் ஆட்கள் நம்மைத் தேடி வந்து விடுவார்கள். இவரை இந்த நிலையில் விட்டுப் போவதும் பிசகு. இன்று மாலை ஒரு முறையும் மருந்து வைத்துக் கட்டினால்தான் காயமும் குணமாகும். இவர் பிரயாணப்பட்டுப் போவதும் சாத்தியமாகும்'' என்று பாதி நேரம் அடிகளாரைப் பார்த்தும் ஓரிருமுறை அபராஜிதன் மீது கண்களை ஓட்டியும் கூறினாள்.



இத்தனை நேரம் தன் காயத்திற்குச் சிகிச்சை செய்த கார்குழலி தனக்குச் சுரணை வந்ததும் அடிகளார் மூலமாகத் தன்னுடன் சம்பாஷிக்க முற்பட்டதைக் கண்ட அபராஜிதன் மனம் சொல்லொண்ணா வேதனையால் அல்லல் பட்டாலும், நேரிடையாகப் பேசுவது உசிதமில்லையென்ற காரணத்தால் அடிகளாரை நோக்கி, ''ஸ்வாமி, தங்கள் தலைவி இவ்வளவு தூரம் உதவியதே பெரியது. இனிமேல் மெல்லச் சமாளித்துக்கொண்டு போய் விட எங்களால் முடியும்'' என்றான்.

கார்குழலியின் கண்கள் மீண்டும் தைரியமாக அபராஜிதனை நோக்கின. ''எங்கு போக முடியும்? இங்கிருந்து ஒன்றரைக் காத தூரத்துக்கு எந்த இடமும் கிடையாதே!'' என்ற வார்த்தைகளும் அவள் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. அவள் வார்த்தைகளைக் கேட்ட அபராஜிதன் இதழ்களில் புன்முறுவலொன்று படர்ந்தது. காட்டைத் தாண்டி கால் காத தூரத்தில் இலங்காபுரன் கூடாரமடித்துத் தங்கியிருக்கிறானென்ற செய்தியை அவள் அறியாமலிருப்பது குறித்து லேசாகச் சிரிக்கவும் சிரித்தான். தமிழ்நாடே நடுங்கும் எதிரி இவ்வளவு அருகிலிருப்பதைக்கூட அறியாமல் கன்னி மாடத்துக் காவலர் காலங்கழிப்பதை எண்ணியதால் கார் குழலியின் நிலைமையைப் பற்றிய கவலையும் அடுத்த விநாடி அபராஜிதன் சருத்தில் புகுந்துகொள்ளவே சற்றுத் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். அவன் உள்ளத்தில் மாறி மாறி எழுந்த உணர்ச்சிகளை முகபாவத்திலிருந்து கண்டறிந்த காரியும், அடிகளாரும், அவன் எதைப்பற்றி யோசிக்கிறானென்பதை அறிய மாட்டாதவர்களாய்த் திகைத்த சமயத்தில் அபராஜிதன் கார்குழலியுடன் நேர்முகமாகவே சம்பாஷணையைத் தொடர்ந்தான்.

''ஒன்றரைக் காத தூரத்துக்கு ஊரில்லாமலிருந்தாலென்ன? அதற்கப்புறமாவது இருக்குமல்லவா?'' என்று அபராஜிதன் கேட்டான்.

"இருக்கும். ஆனால் பிறர் உதவியின்றி ஓர் அடிகூட நகர முடியாத நிலையிலிருக்கும் நீங்கள் ஒன்றரைக் காதம் எப்படிப் போகமுடியும்?" என்றாள் குழலி.

"முடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். முடியும் என்று எனக்குத் தோன்றுகிறதே!"

"நிற்க முடியும் என்று நினைத்துத்தான் சற்று முன்பு நின்றீர்கள். ஆனால் முடிந்ததா? தோன்றுவது வேறு, உண்மை நிலை வேறல்லவா?"

"அது உண்மை!" என்று சம்பாஷணையில் குறுக்கிட்டார் அடிகளார்.

கேள்வி கேட்கும் தோரணையில் கார்குழலி அடிகளாரை நோக்கி கண்களை உயர்த்தினாள். அபராஜிதனும் அடிகளார் எதைக் குறிக்கிறார் என்பதை அறிய அவருக்காகத் திரும்பி "எது உண்மை?" என்று வினவினான்.

"தோற்றம் வேறு, உண்மை வேறு என்று இளவரசி சொன்னாளே, அது!" என்றார் அடிகளார்.

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை" என்றாள் காரி.

"ஏன் விளங்கவில்லை? தோற்றத்தைப் பார்த்தால் இவர் சாதாரண வீரர். ஆனால் உண்மையில்...." என்று சாதுர்யத்தைக் காட்டப்போன அடிகளின் நாவை அபராஜிதன் பார்த்த ஒரு பார்வை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. அவர் அப்படிப் பாதியில் வார்த்தைகளை நிறுத்திவிட்டதைக் கண்ட கார்குழலி, "ஸ்வாமி! ஏன் அப்படிப் பாதியில் நிறுத்திவிட்டீர்கள்? உண்மையில் இவர் யார்?" என்று அபராஜிதனைச் சுட்டிக்காட்டிக்கேட்டாள்.

"இவர் பிரபு..." என்று திக்குமுக்காடிச் சொன்னார் அடிகளார்.

"இவரை முன்பே உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. ஆனால் மனிதரைப் பார்க்கும்போதே அந்தஸ்து தெரியாதா? ஆடையால் அந்தஸ்து உயருவதுமில்லை தாழ்வதுமில்லை. உண்மையைத்தான் முகம் புலப்படுத்தி விடுகிறதே" என்று மெள்ளச் சமாளித்துக் கொண்டார் அடிகளார்.



அபராஜிதனுடைய கம்பீரமான முகத்தை நோக்கிய கார்குழலியும் அடிகளாரின் அபிப்பிராயத்தைப் பூராவாக உள்ளூற ஆமோதித்துக் கொண்டாள். இருந்தாலும் தன் அபிப்பிராயத்தை வெளிக்குக் காட்டாமல், "எளியவராயிருந்தாலும் பிரபுவாயிருந்தாலும் கிடைத்திருக்கிற காயத்துக்குச் சிகிச்சை முறை ஒன்றுதான். இவர் எங்கும் பயணம் செய்யமுடியாது. நீங்கள் எதற்கும் இவருடன் பூராவாக உதயமாகும் வரையில் தங்கியிருந்து கோட்டைக் காவலனிடம் இவரை ஒப்படைத்து ஏதாவது ஓர் அறையில் தங்கச் செய்யுங்கள்" என்று அடிகளாரை நோக்கிக் கூறிவிட்டு, "முத்துநகை, வா போகலாம்" என்று அவ்விடத்தைவிட்டு நகர ஓர் அடி எடுத்து வைத்தவளை அபராஜிதன் அழைத்து நிறுத்தினான்.

"அம்மணி! நீங்கள் செய்த உதவிக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன்.. ஆனால் கோட்டைக் காவலரிடம் எங்களுக்கு அடைக்கலம் தேடித்தர வேண்டாம். நாங்கள் இங்கிருப்பது உங்கள் கோட்டைக் காவலருக்குத் தெரியக் கூடாது!" என்றான்.

கார்குழலி திரும்பி அவனைச் சந்தேகத்துடன் நோக்கினாள். "ஏன், தெரிந்தாலென்ன? எதற்காகப் பயப்படுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"பயத்துக்கும் எனக்கும் வெகுதூரம். காலப்போக்கில் அதை நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஆனால் தற்சமயம் நான் இந்த எல்லையிலிருப்பது யாருக்காவது தெரிந்தால் விளையக்கூடிய அனர்த்தங்கள் பல. இத்தனை உதவி செய்துள்ள உங்களுக்குக் கூட இன்னல் நேரலாம். இன்னும் விளக்கமாகச் சொல்ல முடியாத நிலைமையிலிருக்கிறேன். என்னை நம்புங்கள். உங்கள் காவலாளிக்குத் தெரியாமல் நான் கோட்டைக்குள் வரமுடியுமானால் ஒருநாள் தங்கிச் செல்கிறேன். இல்லையேல் எது எப்படியானாலும் ஆகட்டும், நீங்கள் சென்று வாருங்கள்" என்று கூறினான் அபராஜிதன்.

அவன் வார்த்தைகளில் தொனித்த தீர்மானத்தைக் கண்ட கார்குழலி என்ன செய்வதென்று தெரியாமல் தயங்கினாள். பிறகு முத்துநகையைப் பார்த்துக் கேட்டாள், ''இவர்களிருவரையும் கோட்டைக்குள் அழைத்து வரக் கோட்டையின் பெரிய வாசலைத் தவிர வேறு ஏதாவது வழி இருக்கிறதா?'' என்று.

''ஒரே ஒரு வழியிருக்கிறது அம்மணி! ஆனால், அது உங்கள் தகப்பனாருக்கும் அடிகளாருக்கும் மட்டுந்தான் தெரியும்'' என்று முத்துநகை பதில் சொன்னாள்.

அதுவரை சாந்த சொரூபியாகக் காட்சியளித்த சிவானந்த அடிகளார் குரோதத்திற்கு வசப்பட்டு அசல் ருத்திரனாக மாறித் தோழியை எரித்து விடுவது போல் பார்த்தார். தோழியின் பதிலினால் அடிகளாருக்கு ஏற்பட்ட கோபக்கனலைக் கண்ட கார்குழலி அதன் காரணத்தை அறிய மாட்டாதவளாய் நிமிஷநேரம்குழப்பமடைந்திருந்தாலும், இறுதியில் அடிகளாரை நோக்கி, ''ஸ்வாமி, அப்படி ஏதாவது வழி இருக்கும் பட்சத்தில் இவர்களை அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிடடு தகர ஆரம்பித்தாள்.

''என்னால் முடியாது!'' என்று திட்டமாக அறிவித்தார் அடிகளார்.

அடிகளார் அப்படிப் பட்டவர்த்தனமாக மறுத்ததன் காரணம் கார்குழலிக்குப் புரியாவிட்டாலும் அபராஜிதனும் காரியும் விநாடியில் புரிந்துகொண்டதுமன்றி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு, தங்கள் ஊகம் சரிதானென்பதைப் பரஸ்பரம் ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். கோட்டைக்குள் செல்லச் சுரங்கவழி இருக்கிறதென்பதும், அது மழவராயனைத்தவிர அடிகளாருக்கு மட்டுமே தெரியுமென்பதும் அபராஜிதனுக்கும் காரிக்கும் விளங்கி விட்டது. கோட்டையை முதன் முதல் பார்த்தபோது அதி பலப்படுத்தப்பட்டதன் காரணத்தைப் பற்றிச் சந்தேகித்த அபராஜிதன், அதற்கு ஒரு ரகசியச் சுரங்க வழியிருக்கிற



தென்பதையும் அறிந்தவுடன் மழவராயன் ஏதோ பெரிய மர்மமான ராஜாங்க அலுவல்களில் இறங்கியிருக்கிறானென்பதைத் தீர்மானித்துக் கொண்டான். இருந்தபோதிலும் தன் யோசனைகளை வெளியில் காட்டாமல், ''அடிகளாருக்கு இஷ்டமில்லாவிட்டால் அழைத்துப்போக வேண்டாம்'' என்றான்.

கார்குழலி அவ்வளவு சுலபமாக அடிகளாரை விடுவதாயில்லை. ''ஸ்வாமி! நான் சொல்கிறபடி செய்யுங்கள். வீணாக அந்த மனிதர் பிராணனை விடுவதற்குக் காரணமாயிருந்து பாவத்தைத் தலைமேல்போட்டுக்கொள்ளாதீர்கள். கோட்டையில் ஒரு நாளிருந்து செல்லட்டும்!'' என்றாள் அவள்.

அடிகளார் கார்குழலியின் முகத்தைச் சற்று நேரம் பார்த்தார். பிறகு ஏதோ யோசனை செய்தார். ''சரி, அப்படியே அழைத்து வந்தாலும் இவர்கள் தங்க இடம் ஏது?'' என்று கேட்டார்.

''கோட்டைக்குள் இடமாயில்லை!'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள் முத்துநகை.

''எங்கிருக்கிறது இடம்? இருப்பது இரண்டு கட்டடங்கள்.முன் பக்கத்திலிருக்கும் பெரியகட்டடத்தில் கோட்டையைக் காவல் புரியும் வீரர்கள் இருக்கிறார்கள். பின் பக்கத்திலிருக்கும் சிறு கட்டடத்தின் கீழ்ப்பாகத்தில் ஒரு பக்கத்தில் பணிப் பெண்களிருக்கிறார்கள். மறறொரு பக்கம் நானிருக்கிறேன். மேலே நீ வசிக்கும் இரு அறைகளும், முத்துநகையின் அறையும் இருக்கின்றன. இவர்களைக் கோட்டைக்குள் அழைத்துவந்தால் எங்கு தங்க வைப்பது? பணிப்பெண்களுக்குத் தெரிந்தாலும் விஷயம் அம்பலப்பட்டுவிடும். கன்னிமாடத்திற்குள் இரண்டு ஆண் பிள்ளைகளை அடிகளார் ரகசியமாக அழைத்து வந்தாரென்று தகவலை உன் தந்தையோ அல்லது இங்குள்ள வீரர்களோ அறிந்தால் என் உயிர் அரைக்காசு பெறுமா?'' என்று இருக்கும் கஷ்டத்தை சுட்டிக்காட்டினார் அடிகளார்.

அடிகளாரின் கேள்விகளுக்குப்பதில்சொல்லத்தெரியாமல் கார்குழலி கூடத் தயங்கினாள். அடிகளாரே தொடர்ந்து பேசினார். ''இளவரசி! இந்தப் பிரபுவை நாம் காப்பாற்ற வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் எப்படிக் காப்பாற்றுவது தங்க வைப்பது என்பதுதான் யோசனையாயிருக்கிறது. ஒரு வழியிருக்கிறது. ஆனால் மிக அபாயமான வழி''

''சொல்லுங்கள்'' என்றாள் கார்குழலி,

''பணிப்பெண்களுக்குக்கூடத் தெரியாத ரகசியப்படிகள் மூலமாக இவர்களை உன் அறைக்குள் இருக்குமிடத்திற்கு அழைத்து வரலாம். அங்கு உன் அறைகளிலொன்றில் இன்று மட்டும் தங்க வைத்து இரவில் மீண்டும் வெளியே அனுப்பிவிடலாம்' என்றார் அடிகளார்.

இதற்கு அபராஜிதன் ஒப்பவில்லை. தான் பாண்டிய சேனாதிபதியென்பதால் தன்னைஎல்லாவற்றிலும்காப்பாற்றவ அடிகளார் சிரமப்படுகிறார் என்பதை உணர்ந்தாலும் ஏதுமறியாத பேதையான கார்குழலியின் அந்தப்புரத்தில் திருட்டுத்தனமாகத் தங்கி, அவள் பேருக்கு மாசு நேரக்கூடிய எதையும் செய்ய இஷ்டப்படாத அபராஜிதன் ஸ்வாமி! தாங்கள் சொல்லும் யோசனை சரியல்ல'' என்றான்.

''உங்களைத் தவிர வேறு யாராவது இருந்தால் இந்த யோசனையைச் சொல்லிக்கூட இருக்க மாட்டேன்'' என்று பதில் சொன்னார் அடிகளார்

''அடிகளாரே! ஒருவருக்கிருவராகத்தானே தங்கப் போகிறார்கள்? துணைக்கு நீங்களும் முத்துநகையுமிருக்கிறீர்கள். பாதகமில்லை அழைத்துவாருங்கள்'' என்று சொல்லிவிட்டு முத்துநகையுடன் விடுவிடென நடந்து சென்று விட்டாள் கார்குழலி. சிறிது நேரத்திற்கெல்லாம் பெருத்த ஓசையுடன் கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டதையும் திரைச் சீலைகளால் நன்றாக மூடப்பட்ட சிவிகையொன்று கோட்டைக்குள் சென்றதையும் கவனித்த அடிக



ளார், ''இளவரசி கோட்டைக்குள் சென்று விட்டாள். சேனாதிபதியவர்களே! இனி நாம் புறப்படலாம்'' என்றார்

''அடிகளாரே! நீங்கள் செய்யும் கைமாறுக்கு என்ன பதில் செய்யப் போகிறேன்?'' என்று ஏதோஉபசாரமாகச் சொல்ல ஆரம்பித்த அபராஜிதனைத் தடுத்த அடிகளார், ''சேனாதிபதி அவர்களே! அத்துமீறிச் செய்யும் இந்த உதவியை நான் காரணமாகவே செய்கிறேன். காரணத்தை இப்பொழுது கேட்க வேண்டாம். பின்னால் உங்களுக்கே தெரியும்'' என்று கூறிவிட்டு அபராஜிதனையும், காரியையும் அழைத்துக் கொண்டு, மெல்லக் கோட்டையின் பின்புறமாகச் சென்றார். அங்கு தன் மேல் உத்திரீயத்தை இரண்டாகக் கிழித்து அவ்விருவர் கண்களையும் இறுகக் கட்டினார். பிறகு அபராஜிதனின் ஒரு கையைக் காரியைப் பிடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, மற்றொரு கையைத் தான் பற்றி அழைத்துச் சென்றார். சிறிது நேரம் நடந்த பிறகு ஏதோ ஒரு கதவு திறக்கப்பட்டுப் பாதாளப் படிகளில் தான் இறங்கிச் செல்லப்படுவதை அபராஜிதன் உணர்ந்தான் மீண்டும்-மீண்டும் வளைந்து சென்ற படிகள் வேறு ஓரிடத்தில் ஏறத் தொடங்கின. இப்படிச் சுற்றி வளைத்து இருமுறை ஏறி இறங்கிய பிறகு சில்லென்ற காற்று தன் முகத்திலடிப்பதை உணர்ந்த அபராஜிதன் குறிப்பிட்ட இடத்திற்குத்தான் வந்து சேர்ந்ததை உணர்ந்தான்.

அடிகளார், அவ்விருவர் கண் கட்டுக்களையும் அவிழ்த்தார் கூசிய கண்களை ஒரு முறை கசக்கிக்கொண்ட அபராஜிதன் மிக நன்றாக அலங்கரிக்கப்பட்ட பெரிய அறையில் தானிருப்பதை அறிந்தான். திறந்திருந்த சாளரத்தின் வழியாக எதிரே தெரிந்த காட்டிலிருந்தும் கீழே தெரிந்த கோட்டை மதிலிலிருந்தும் அடிகளார் கூறிய கார்குழலியின் அறைகளிலொன்றுக்குத் தான் வந்து விட்டதை உணர்ந்தான்.

அவர்கள் அந்த அறையை அடைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வறையின் மற்றொரு பக்கத்திலிருந்த கத

வைத் திறந்து கொண்டு முத்துநகை பின்தொடர கார்குழலி வந்து, அவ்விருவருக்கும் அடுத்திருந்த யு றொரு அறையில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி முத்துநகைக்கு உத்தரவிட்டாள். முத்துநகை சைகை செய்ய அவனைப் பின் தொடர்ந்து அபராஜித னும் காரியும் பக்கத்தறைக்குச் சென்றனர்.

''உன் இஷ்டப்படி அவர்களைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்'' என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து நகர முற்பட்ட அடிகளார் சட்டென்று நின்ற இடத்தி லேயே ஒருகணம் நின்று, ''அதென்ன சத்தம்'' என்று கேட் டுக் கொண்டே சாளரத்தின் வெளியே தலையை நீட்டிப் பார்த்தார். அடுத்த வினாடி கோட்டைக் கதவுகள் திறக் கப்பட்டன; குதிரைகள் பல கோட்டைக்குள் தடதட வெனப் பாய்ந்து வந்தன.

''என்ன அடிகளாரே?'' என்று வினவினாள் கார் குழலி.

''யாரோ வந்திருக்கிறார்கள். குதிரைகள் மிக வேக மாக உள்ளே நுழைந்திருக்கின்றன'' என்றார் அடிகளார்.

''யாராயிருக்கும்?'' என்று கார்குழலி வினவினாள்.

அடிகளார் தம்மை நிதானப்படுத்திக் கொண்டு பதில் சொல்வதற்குள் மாடிப்படிகளில் யாரோ மிக வேகமாக ஏறிவரும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து ''குழலி?'' என்ற குரலொன்றும் அதிகாரயமாக வெளிவந்தது. மிதமிஞ்சிய பயத்தால் கார்குழலி திக் பிரமையடைந்தாள். மறு நிமிடம கார்குழலியின் தந்தை யான கண்டதேவ மழவராயன் உள்ளே நுழைந்தான். கலவரத்தால் கலங்கி நின்ற தன் மகளின் வதனத்தைக் கண்டு அதில் படர்ந்திருந்த கிலிக்குக் காரணத்தை அறியா மல் திகைத்த மழவராயன், அடிகளாரை நோக்கினான். அடிகளார் ஆந்தை போல் விழித்தார் அதே சமயத்தில் அபராஜிதனும் காரியும் தங்கியிருந்த கோடி அறைக்கதவும் மெல்லத் திறக்கவே, விஷயம் வெளிப்பட்டுவிட்டால்



என்ன செய்வதென்ற திகைப்பால் அடிகளார் வெலவெலத் துப் போனார். மழவராயன் பார்வை திறந்த கதவின் திக் கிலும் பாய்ந்தது.

## 8. மழவராயன் மனம்

அறைக்கதவு திறந்ததும் மழவராயன் அந்தப் பக்க மாக பார்வையைச் செலுத்தியதைக் கண்ட அடிகளார் அபரிமிதமான அச்சத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டார். 'சரி, காரியம் மிஞ்சிவிட்டது' என்ற முடி வுக்கும் வந்து கலவரமடைந்த கண்களுடன் கார்குழலி யைப் பார்த்தார் கார்குழலியின் அழகிய வதனம் கூடக் கவலையால் கலங்கித்தான் நின்றது. அடிகளாரின் பார்வை யுடன் சட்டென்று வினாடி நேரம் கலந்த அவள் பார்வை யிலும் குழப்பமிருக்கத்தான் செய்தது. அந்தக் குழப்பத் தையும் அடிகளாரின் நடுக்கத்தையும் அதிகப்படுத்தும் முறையில் அமைந்தது மழவராயனின் முதற் கேள்வி

கதவு திறக்கப்பட்டுச் சிறிது நேரமாகியும் அறையி லிருந்து யாரும் வெளிவராததையும் திறந்த கதவும் பாதி யிலேயே நின்றுவிட்டதையும், அறையில் பேச்சு மூச்சு இல்லாதிருந்தாலும் யாரோ நடமாடும் சத்தம் மட்டும் கேட்பதையும் கவனித்த மழவராயன், ''அந்த அறையில் யாரிருக்கிறார்கள்?'' என்று அடிகளாரை நோக்கித் திரும் பிக் கேட்டான்

இந்தக் கிலியில் என்ன சொல்வதென்பதை அறியாத அடிகளார், ''பணிப் பெண்கள்...பணிப் பெண்களிருக் கிறார்கள்'' என்று தடுமாறி வார்த்தைகளை உதிர்த்தார். வார்த்தைகளைச் சொல்லியபோது அவருக்கு ஏற்பட்ட திணறலையும், குரலில் தொனித்த நடுக்கத்தையும் கவ னித்த மழவராயன் அவர் கைகளும் நடுங்குவதைக் கண்டு, ''ஏன் இப்படி நடுங்குகிறீர்?'' என்று வினவினான்.

''குளிர்'' என்று அடிகளார் புளுகினார்.

''குளிரா?''

''காலையில் பனி அதிகமாயிருந்தது. அத்துடன் தாமரைத் தடாகத்தில் முழுக்கு.''

''எந்தத் தாமரைத் தடாகத்தில்? கோட்டைக்கு வெளியிலிருக்கும் குளத்திலா?''

''ஆமாம்''

மழவராயன் முகத்தில் கோபக் கனல் வீசியது. ''கோட்டைக்கு வெளியே யாரும் செல்லக்கூடாதென்று நான் உத்தரவிட்டிருக்கிறது உமக்கு நினைவில்லையா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது. ஆனால்......'' என்று இழுத்தார் அடிகளார்.

''என்ன ஆனால்? எதற்காகக் கோட்டையை விட்டு வெளியே போனீர்?''

இந்தச் சமயத்தில் கார்குழலி குறுக்கிட்டு, ''அப்பா! அவரைக் கோபித்துப் பயனில்லை; உங்கள் உத்தரவை அவர் மாறியதற்கு நான்தான் காரணம்'' என்று சொன்னாள்.

''நீ சொல்வது எனக்குப் புரியவில்லை'' என்றான் மழவராயன்.

'அவராகக் கோட்டையைவிட்டுப் போகவில்லை, துணையாக வரும்படி நான்தான் கூப்பிட்டேன்'' என்றாள் கார்குழலி.

''என்ன! கன்னிமாடத்தை விட்டு வெளியே சென்றாயா?'' என்று கோபமும் பிரமிப்பும் கலந்த குரலில் கேட்டான் மழவராயன் அவன் கோபமும் பிரமிப்பும் அடிகளாருக்கும் ஓரளவு சாந்தியை அளித்தன. கன்னிமாடத்தைவிட்டுப் பெண் வெளியே சென்றாள் என்பதால் மழவராயன் மனோநிலை அடியோடு மாறிவிட்டதையும் பக்கத்தரையில் இருக்கும் விருந்தினர்களைப் பற்றிய சந்தேகமும் அந்த வினாடிக்கு அடிபட்டுப் போய்விட்டதையும் கண்ட அடிகளார் சிறிது ஆறுதலடைந்து, மழவராயன் மனப்போக்கை மாறுபட்ட சுவட்டிலே திருப்ப



முயன்று, ''இந்த அற்ப விஷயத்துக்காகத் தாங்கள் இளவரசிமீது கோபிக்கக்கூடாது'' என்று துணிந்து சொன்னார்.

''அற்ப விஷயமா! கன்னிமாடத்திலிருந்து ராஜ குடும்பப் பெண் வெளியே செல்வது அற்பவிஷயமென்றா நினைக்கிறீர்கள்? அப்படியானால் கன்னிமாடம் எதற்கு? கட்டுக்காவல் எதற்கு?'' என்று உஷ்ணமாகக் கேள்விகளை வீசினான் மழவராயன்.

''மணமாகாத அரச குடும்ப மகளிர் ஆடவர் கண்களில் படக்கூடாது என்பதற்காகத்தான் கன்னிமாடங்கள் கட்டப்படுகின்றன...''

''அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் அரச குடும்ப மகளிர் அவ்வப்பொழுது வெளியே சென்று உலாவி வர வேண்டுமாக்கும்?''

''உலாவி வரப்போகவில்லையே. தாமரைத்தடாகத்தில் ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்று குழந்தை ஆசைப்பட்டாள். விடிவதற்குள் போய் வந்து விடலாமென்று சம்மதித்தேன்.''

''உம்மை யார் சம்மதிக்கச் சொன்னது? நீர்தான் சம்மதித்தீர் என்றால் கோட்டைக்காவலன் எப்படிச் சம்மதித்தான்' என்று மழவராயன் மிகுந்த கோபத்துடன் கேள்விகளை அடுக்கினான்.

''கோட்டைக் காவலன் முதலில் சம்மதிக்கவில்லை. நான் கண்டிப்பாகப் போகத்தான் வேண்டுமென்று அடிகளார் மூலம் சொல்லியனுப்பினேன் பிறகுதான் சம்மதித்தான்'' என்று கார்குழலி சொன்னாள், தரையில் கண்களைச் சாய்த்துக்கொண்டே.

மழவராயன் அவளுக்கு ஏதும் பதில் சொல்லவில்லை. அடிகளாரை நோக்கியே பேசினார் ''அடிகளாரே! அறியாச் சிறுமியான இவள் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதை நான் அர்த்தம் செய்து கொள்ள முடியும். ஆனால், இப்பொழுதுள்ள ராஜீய நிலைமையையும் நாம்

இருக்கும் ஆபத்தான காலத்தையும் அறிந்த நீரும் என்
உத்தரவுகளை மீறி நடப்பதானால் நான் என்ன செய்ய
முடியும்? பேளைமங்களத்தில் தனிக் கன்னி மாடம் எது
இல்லையென்றா குழலியை இந்தக்கோட்டையில் கொண்டு
வந்துவைத்திருக்கிறேன்? காரணமில்லாமலா கன்னிமாடத்
தில் காவலர் படையையும்தங்கவைத்திருக்கிறேன்!'' என்று
வினவினான்

அடிகளார் பதிலேதும் சொல்லவில்லை. கார்குழலியை
வீரபாண்டியனுக்கு மணமுடிக்கப் பாண்டியநாட்டுப்
பிரபுக்கள் முயல்வதும், அதன் காரணமாக இலங்காபுரன்
கூட கார்குழலியின்மீது ஒரு கண்ணை வைத்திருப்பதும்
அடிகளாருக்குத் தெரியும் தன்னுடைய திட்டங்களுக்குத்
தடையாக நிற்கும் யாவரையும் எப்படியும் தீர்த்துக் கட்ட
இலங்காபுரன் சளைக்க மாட்டானென்பதையும்
அடிகளார் அறிவார். இலங்காபுரனிடமுள்ள பயத்தா
லேயே மழவராயன் இந்தப் பழைய கோட்டையைப் பலப்
படுத்தி, இதில் தன் மகளுக்கு ஒரு கன்னி மாடமும் கட்டிக்
கொடுத்துச் சரியான காவலையும் ஏற்படுத்தியிருக்கிறா
னென்பது அடிகளார் அறியாத விஷயமல்ல தேவை
யானால கார்குழலியைத் தூக்கிச் செல்லக்கூட முயற்சி
நடக்குமென்ற காரணத்தாலேயே கோட்டையை விட்டு
வெளியே காலடி எடுத்து வைக்கக் கூடாதென்று மழவ
ராயன் கண்டிப்பான உத்தரவிட்டிருந்தானென்பதையும்
அடிகளார் நன்றாக உணர்ந்தே இருந்தார். இருந்த
போதிலும் கார்குழலிக்குச் சிறுவயது முதல் படிப்புச்
சொல்லிக்கொடுத்து தகப்பனைவிட வாஞ்சையுடன்
வளர்த்த அடிகளார், அவள் ஆசைக்குக் குறுக்குச் செல்ல
இஷ்டமில்லாமலேயே கோட்டைக்கு வெளிப்புறமிருந்த
தடாகத்துக்குச் செல்ல ஒப்புக்கொண்டார். அப்படி
ஒப்புக்கொண்டது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை
அந்தச் சமயத்தில் அடிகளாரைவிட நன்றாக அறிந்து
கொண்டவர் யாருமில்லை. இருந்தாலும், நிலைமையை
மெல்லச் சமாளிக்கப் பிரயத்தனப்பட்டு, ''இந்தப் பக்கம்



அமைதியாகத்தானே இருக்கிறது என்ற
சில நாட்களாக அமைதியாகத்தானே இருக்கிறது என்ற
தைரியத்தில்தான் நான் இளவரசியின் இஷ்டத்துக்கு
உட்பட்டேன்'' என்று சமாதானம் சொன்னார்.

மழவராயன் கேட்ட அடுத்த கேள்வி அடிகளாரின்
உடலை மீண்டும் ஒரு குலுக்குக் குலுக்கியது. 'காட்டுப்
பக்கத்தில் திடீரெனப் பாண்டிய வீரர்கள் தோன்ற
மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?''

விஷயம ஏதாவது ஏற்கனவே வெளிப்பட்டு விட்டதோ
என்ற பீதியால் அடிகளார் நிரம்பச் சங்கடத்துக்கும்
சந்தேகத்துக்கும் வசமாகி''பாண்டிய வீரர்கள் திடீரென்று
காட்டுப் பக்கத்தில் தோன்றவேண்டிய அவசியம்?'' என்று
விசாரித்தார்.

அவ்விருவர் சம்பாஷணையும் அபாயமான மார்க்த்
தில் திரும்புவதைத் கண்ட கார்குழலி மேலும் நிற்கமாட்
டாதவளாய் சற்றுத்தள்ளியிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து
கொண்டாள். தகப்பனார் மேலும் என்னென்ன கேட்
பாரோ என்ற பயமும் அவளைச் சூழ்ந்துகொள்ளவே
செயலும், பேச்சுமற்று அவர்களையே நோககிக் கொண்டி
ருந்தாள்.

அடிகளாரைக் கோபத்துடன் உற்றுப் பார்த்த மழவ
ராயன் சொன்னான்: ''அலட்சியமிருக்கிறது அடிகளாரே!
பாண்டிய வீரர்கள் காட்டைத் தாண்டிக் கால் காத
தூரத்தில் தங்கியிருக்கிறார்கள்.''

''என்ன! காட்டைத் தாண்டிக் கால் காத தூரத்திலா?
பாண்டியப் படை வீரர்களா?''

''ஆமாம் ஸ்வாமி! அவர்களுடன் வந்திருப்பது யார்
தெரியுமா?''

அடிகளார் பதில் பேசமாட்டாமல் மென்று விழுங்கி
னார். பாண்டியப்படைகள் வந்திருந்தால்சேனாதிபதியும்
வந்திருக்க வேண்டும் அந்தச் சேனாதிபதியோ அடுத்த
அறையிலிருக்கிறான். 'சிவ சிவ! என்ன சங்கடம்' என்று
உள்ளுக்குள்ளேயே திணறிய அடிகளார் மேலுக்கு, ''யார்
வந்திருப்பது?'' என்று விசாரித்தார்.

"இலங்காபுரன்?" என்று எதிர்பாராத பதிலைக் கூறினான் மழவராயன்.

"பாண்டிய வீரர்களுடன் இலங்காபுரன்! எதற்காக வந்திருக்கிறான்?" என்று குளறினார் அடிகளார்.

"யாருக்குத் தெரியும்? பல காரணங்களுக்காக வந்திருக்கலாம். தன் மருமகன் பாண்டிய சிம்மாசனத்தில் உட்காருவதற்கு இடைஞ்சலாக இருக்கும் கார்குழலியைப் பாதையிலிருந்து அகற்றுவதற்காக வந்திருக்கலாம். அல்லது இந்தப் பிராந்தியத்தில் ஏதாவது ராணுவ நடமாட்டம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வந்திருக்கலாம். நம்மூடன் குலசேகர பாண்டியன் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்த இஷ்டப்படுகிறானா என்பதை நோட்டம் பார்க்கவும் வந்திருக்கலாம்" என்றான் மழவராயன்.

"மற்றதெல்லாம் சரி. கார்குழலி இங்கிருப்பது இலங்காபுரனுக்குத் தெரிய நியாயமில்லையே?"

"இலங்காபுரனுக்குத் தெரியாத விஷயங்கள் ஏதும் தமிழ் நாட்டிலிருப்பதாகத் தெரியவில்லை. அவன் ஒற்றர்கள் இல்லாத இடமில்லை. அவனைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிக்க ஆட்களிக்கிறார்கள். அடிகளாரே! நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அபாயமான காலத்தில் அஜாக்கிரதையாக இருப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள பல. இந்த இலங்காபுரன் இவ்வளவு அருகிலிருக்கிறான் என்பது நமது கோட்டைக் காவலருக்குககூடத் தெரியாது. எனக்கும் ஒற்றர்கள் மூலமாக நேற்றுத்தான் தெரியும். இவ்வளவு ரகசியமாகக் காரியம் நடக்கும்போது இலங்காபுரனுக்கு எது தெரியும் எது தெரியாது என்பதை நாமாக ஊகிப்பது மிக முட்டாள்தனம். அவன் இவ்வளவு அருகில் இருப்பதை நேற்றுவரை அறியாததால் தானே ஒரு மடத்தனமான காரியத்தைச் செய்கிறேன்" என்றான் மழவராயன்.



"என்ன அது?"

"குலசேகர பாண்டியனை இங்கு வரச் சொல்லியிருக்கிறேன்."

மழவராயனுக்குக் கேடுகாலம் கிட்டி விட்டதென்று அடிகளார் தீர்மானித்துக் கொண்டார். மழவராயனுக்கு மேலைமங்கலத்தை அளித்த இலங்காபுரன் அவனிடம் சமீப காலத்தில் சந்தேகம் கொண்டிருக்கிறானென்பதையும், அரசை அளித்த அவனால் அரசை நசுக்கவும் முடியுமென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தார். குலசேகரன் மழவராயனுடன் தொடர்பு கொண்டான் என்பதை இலங்காபுரன் அறிந்தால் மழவன் அரசு விநாடியில் பிடுங்கப்பட்டு விடும் என்பது அடிகளாருக்குத் தெரியும்.

ஆகவே, "இப்பொழுதுதான் என்ன முழுகிவிட்டது. குலசேகர பாண்டியனை வர வேண்டாமென்று சொல்லியனுப்பி விட்டால் போகிறது" என்று அவர் யோசனை சொன்னார்.

"அதற்கு அவகாசமில்லை. எந்த நிமிஷத்திலும் அவர் வந்து விடலாம். இந்தக் கோட்டையில் அவரைச் சந்திப்பதாக வாக்களித்து விட்டேன்" என்று மழவராயன் சொல்லி விட்டுத் தன் மகளிடம் சென்று அவளருகில் உட்கார்ந்து கொணடு "குழலி! எனக்குள்ள கவலையால் தான் உன்னிடம் கோபித்தேன். இனிமேல் எக்காரணத்தை முன்னிட்டும் கன்னி மாடத்தை விட்டு அகலாதே" என்று சொல்லி அவள் முதுகை ஆதுரமாகத் தடவிக்கொடுத்தான். அடிகளாரும் தானும் அத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்தும் கோடி அறையிலிருந்து யாரும் கிளம்பாததைப் பார்த்த மழவராயன் "குழலி! பணிப்பெண்கள் அந்த அறையில் அத்தனை நேரம் எந்தக் கோட்டையைப் பிடிக்கிறார்கள்? யாராவது ஒரு பெண்ணைக் கூப்பிட்டு என் ஸ்நானத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்" என்றான்.

கார்குழலி கூப்பிடும் முன்பாகவே அவள் அபிப்பிராயத்
தைப் புரிந்து கொண்டவள் போல் கோடி அறையிலிருந்து
முத்துநகை வெளியில் வந்தாள். "யார், முத்துநகையா?
இவ்வளவு நேரம் நீயா அந்த அறையிலிருந்தாய்?" என்று
மழவராயன் கேட்டான்.

"ஆமாம் மகாராஜா! நானும் இளவரசியுடன்
தடாகத்துக்குப் போயிருந்தேன். வேறு ஆடை அணிந்து
கொண்டிருந்த சமயத்தில் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள்.
வந்ததும் ஏதோ அடிகளாருடன் பேசிக் கொண்டிருக்கவே
அறையிலேயே தங்கினேன்" என்று மழவராயனைப்
பார்த்துக் கூறிய முத்துநகை, கார்குழலியையும்
சட்டென்று ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வை
யில் தனக்கு ஆறுதலளிக்கக் கூடிய குறி தோன்றியதைக்
கண்ட கார்குழலி ஆறுதலடைந்ததற்கு அறிகுறியாக ஒரு
பெருமூச்சையும் விட்டாள்.

அதற்குமேல் மழவராயனை அங்குத் தாமதிக்கவிடுவது
பிசகு என்று தீர்மானித்த அடிகளார் முத்துநகையை
நோக்கி, "சீக்கிரம் போய்ப் பணிப்பெண்களிடம் சொல்லி
மன்னர் ஸ்நானத்துக்கு வேண்டியவற்றைத் தயார் செய்"
என்று உத்தரவிட்டு, "மகாராஜா! தாங்கள் அடியேன்
ஆஸ்ரமத்துக்கு வந்தால் அங்கேயே ஆடைகளை மாற்றிக்
கொண்டு ஸ்நானத்துக்குச் செல்லலாம்" என்று
அழைத்தார்.

"தேவையில்லை. இங்கேயே சற்று நேரமிருக்கிறேன்.
ஸ்நான அறையில் ஏற்பாடானதும் சொல்லியனுப்புங்
கள்" என்றான் மழவராயன்.

அடிகளார் விடுவதாயில்லை. "வெந்நீர் தயார் செய்ய
வும் அதில் பன்னீரைக் கலக்கவும் எத்தனை நேரமாகப்
போகிறது? வாருங்கள், சீக்கிரம் ஸ்நானம் செய்துவிட்டுக்
குலசேகர பாண்டியன் வருவதற்குள் தாங்கள் காலைக்
கடன்களை முடித்துக் கொண்டாலல்லவோ நல்லது"
என்று வற்புறுத்தினார்.



சரிதான். நான்
"குழலி! அடிகளார் சொல்வதும் சரிதான். நான் போய்க் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வரு
கிறேன். ஸ்நானம் செய்த நீ இன்னும் உன் ஆபரணங்
களைக் கூட அணியவில்லையே. விடியற்காலையில்
ஸ்நானம் செய்துவிட்டு வந்தவள், இத்தனை நேரம்
என்ன செய்து கொண்டிருந்தாய்? குலசேகரபாண்டியன்
வந்தால் உன்னைப் பார்க்கப் பிரியப்பட்டாலும் படலாம்.
சீக்கிரம் அலங்காரத்தை முடித்துக்கொள்" என்று
சொல்லிவிட்டு அடிகளாருடன் கிளம்பிய மழவராயனைத்
தடுத்து, "ஏன் அப்பா! அவர் எதற்காக என்னைப் பார்க்க
வேண்டும். நான் அவரைப் பார்ப்பது உசிதமா
யிருக்குமா?" என்று கேட்டாள் கார்குழலி.

"குலசேகர பாண்டியனுக்கும் எனக்கும் ஒரே வயது
தான். அவர் பார்த்தாலென்ன? தவிர வேறு காரணமும்
இருக்கிறது. குலேசகர பாண்டியன், பாண்டிய நாட்டின்
மன்னனாகலாம் என்பதையும், அவனுக்கு ஒரு மகன் இருக்
கிறானென்பதையும் நினைவில் வைத்துக்கொள்" என்று
மழவராயன் கூறிவிட்டுச் சிரித்துக்கொண்டே அறையை
விட்டு நகர்ந்தான்.

அவன் யோசனைகள் எந்த மார்க்கத்தில் ஓடுகின்றன
என்பதை நன்றாக உணர்ந்திருந்த அடிகளார் பதிலேதும்
பேசாமல் நடந்தார். அடிகளாரின் அறைக்காகப் படி
களில் இறங்கிச் சென்று கொண்டிருக்கையில் மழவராயன்
அடிகளாரைக் கேட்டான். "அடிகளாரே! குலசேகர
பாண்டியன் மகன் விக்கிரம பாண்டியனுக்கும் என்
மகளுக்கும் ஈடு சரியாயிருக்குமா?"

"மகள் பாண்டிய நாட்டு ராணியாக வேண்டும் என்ற
ஆசையிருக்கும் போது ஈடு போதுமா போதாதா
என்பதைப் பற்றி என்ன கவலை?" என்று அடிகளார்
கேட்டார்

"அடிகளாரே! ஆசை வேறு, அவசியம் வேறு."

"நீங்கள் சொல்வது புரியவில்லை"

"நாட்டு நன்மைக்காக என் மகளைத் தியாகம் செய்ய
அவசியமிருக்கிறது."

"எப்படி அவசியம் ஏற்படுகிறது?"

"பாண்டிய நாட்டுத் தலைவிதியைச் சிற்றரசான வேளை மங்கலம் தீர்மானிக்கப் போகிறது. சோழர்களின் படையெடுப்பிலிருந்து வீரபாண்டியன் தப்ப வேண்டுமானால் என் மகளை மணந்து, என் படை பலத்தையும் இணைத்து, மக்கள் அன்புக்குப் பாத்திரமாகி இலங்காபுரனையும் உதற வேண்டும். அது நடக்காவிட்டால் சோழர் படையெடுப்பு நடக்கும். சோழமன்னன், குலசேகர பாண்டியன் பக்கத்தில் இருக்கிறான். குலசேகர பாண்டியன் என் உதவியை நாடுகிறான். அதற்குப் பூர்வாங்கமாக என் பெண்ணைத் தன் மகனுக்குக் கேட்கிறான்."

'மறுத்தால்."

"சோழப்படை பாண்டிய நாட்டோடு நமது சிற்றரசையும் சேர்த்து நசுக்கிவிடும்."

இருக்கிற அசந்தர்ப்பமான நிலைமை புரிந்ததால் அடிகளார் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மழவராயனுடன் மௌனமாகவே சென்றார். மன்னனை ஸ்நான அறைக்கு அனுப்பிவிட்டு மேலறைகளில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்கப் படிகளேறி இறைக்க இறைக்க ஓடிவந்தார். பெரிய அறையில் அரச குமாரியைக் காணாததால் அவளைத் தேடிக் கொண்டு கோடி அறைக்குச் சென்றார். வெளிப்புறமாயிருந்த மொட்டை மாடிக் கைப்பிடிக் கருங்கல் சுவர் மட்டும் தனித்து நின்று காட்டை நோக்கிக் கொண்டிருந்தது. அந்தப் பக்கத்தில் கார்குழலியைக் காணாததால் அறையின் வேறு திசையில் கண்களைச் செலுத்திய அடிகளார் தம் முன் எழுந்த காட்சியைக் கண்டு தமது கண்களைத் தாமே நம்ப முடியாதவராய்த் திக்பிரமை பிடித்து நின்றார்.

## 9. வெள்ளிச் சாவி

அடிகளார் அணிந்திருந்தது காஷாயமானாலும் உலக பந்தங்களை அறவே உதறிவிட்ட துறவியென்று அவரைக் கூற முடியாது. இகப் பிணைப்புகள் பலவற்றை



அகப்பட்டு இல்லாத தொல்லைகளையெல்லாம் தலைமேல் போட்டுக் கொண்டு தத்தளிக்கும் சாமியார்களின் சந்ததியில்தான் அவரையும் சேர்க்க வேண்டும். மழவராயனின் தனிப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த அடிகளார் அதன் காரணமாகவே பல அரசியல் சிக்கல்களில் சம்பந்தப்பட்டிருந்தார். அரசனுடைய அடிகளை அடைவதற்குத் தேவையான வேதாந்தத்திலிருந்த அறிவைவிட ஒன்றரைமடங்கு அதிக அறிவு அரசியல் வேதாந்தத்தில் அடிகளாருக்கு இருந்தபடியால் முக்கிய ராஜீயப் பிரச்னைகளிலெல்லாம் மழவராயன் அவரைக் கலக்காமல் எந்த முடிவுக்கும் வருவதில்லை. இப்படி மழவராயனுக்கு யோசனை சொல்லும் பொறுப்பு அடிக்கடி ஏற்படவே, அதறகுத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளையும் அடிகளார் கைப்பிடித்துச் சதா எந்த ராஜ்யத்தில் என்ன நடக்கிறது என்ற விவரங்களை ஆராய்வதிலும் அவை மழவராயன் சிற்றரசை எத்தனை தூரம் பாதிக்கும் என்பதைத் தீர்மானிப்பதிலும் காலங் கடத்தி வந்தார்.

இப்படி உலக விவகாரங்களில் சிக்கிக்கொண்ட அடிகளாருக்குக் காலக்கிரமத்தில் கார்குழலியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும், அவளுக்குத் தமிழ் சொல்லித்தரும் பணியும் ஏற்பட்டுவிடவே, அவளிடம் அளவற்ற பாசம் கொண்டார். அவள் வளரவளர அந்தப் பாசமும் வளரவே மானிடத்தில் மனதைப்பறி கொடுத்த ஜடபரதன் நிலைக்கு அடிகளார் வந்துவிட்டார். இப்படிக் கார்குழலியின் நலத்தைப்பற்றிய அக்கறை வேர் விட்டு அவர் உள்ளத்தில் வளர்ந்து விட்டதாலும் நாடு இருந்த நிலைமையாலும் அவள் பிற்கால ஸ்திதியைப் பற்றிய கவலை நாளுக்கு நாள் அவர் மனத்தில் பெருகிக் கொண்டே வந்தது. இந்தக் காரணத்தினாலும் பாண்டிய நாட்டு விவகாரங்களில் அவர் பெயர் இடைவிடாது சம்பந்தப்பட்டபடியாலும் தியானம் செய்யும்நேரங்களில் கூட அடிகளார் நிம்மதியிழந்து திண்டாடிக் கொண்

டிருந்தார். அவர் உதடுகள் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்த சமயத்திலும், கார்குழலியைப் பற்றிய எண்ணங்கள் சிந்தனையில் சுழன்றதால் வீரபாண்டியனும் விக்ரமபாண்டியனும், சோழ மன்னனும் இலங்காபுரனும் இன்னும் பலரும் பெருங் கூட்டமாக அவர் மனதில்நின்று உதட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்த சிவபிரான் உள்ளத்தில் நுழையக்கூட இடமில்லாமல் அடித்து விட்டார்கள்.

'இத்தனை பெயர்களிடமிருந்து கார்குழலி எப்படித் தப்புவாள்? யாருக்கு இவளை மணம் செய்வித்தால் இவள் பிற்காலம் சந்துஷ்டியாயிருக்கும்?' என்பதைப் பற்றியே சதா சர்வகாலம் கவலை கொண்டிருந்த அடிகளார் அவளைப் பற்றி ஏதேதோ கனவுகள் கண்டுகொண்டிருந்தார். அவள் பிற்காலத்தில் பெரிய ராணியாகப் போகிறாளென்பதும் அவளால் தமிழ்நாடு பெரிதும் சுபிட்சமடையப் போகிறதென்பதும் அக்கனவுகளில் ஒன்று. இந்தக் கனவுக்கு கார்குழலி வளர்ந்த முறையும் பெரிதும் ஊக்கம் கொடுத்தது. கார்குழலியின் அடக்கவொடுக்கத்தையும் நெறியினின்று சற்றும் பிறழாத மனப்போக்கையும், கம்பீரமான சுபாவத்தையும் கண்ட அடிகளார் அவளை—எந்த ஆண்மகனும் சுலபத்தில் அணுகிவிட முடியாதென்ற உறுதிக்கு வந்து, பெண்ணை அப்படி வளர்த்த தன் சாமார்த்தியத்தைப்பற்றி மிகுந்த பெருமையும் கொண்டிருந்தார். அத்தனை பெருமிதத்தையும் சுக்கு நூறாக்கவல்ல ஒரு காட்சியைக் கண்டதும் அடிகளார் திகைப்படையாமல் எப்படியிருக்க முடியும்?

மழவராயனை ஸ்நானத்துக்கு அனுப்பிவிட்ட அடிகளார் மீண்டும் மாடிக்கு வந்தபோது சூரியன் கிளம்பிச் சற்று நேரம் ஆகிவிட்டது. மொட்டை மாடியில் ஓரளவு இடங்களில் வெயில் பட்டையாக விழுந்து கிடந்தது. அடித்த வெயில் அறைக்குள் புக மார்க்கமில்லாவிட்டாலும் உள்ளே நடந்த நாடகம் பட்டவர்த்தனமாகக் கண்களுக்குத் தெரிந்தது. அறைக்கோடியில்



மஞ்சத்தை முத்துநகை வெகு சாமர்த்தியமாகத் தயாரித்திருந்தாள். எதிர்பாராத விதமாக மழவராயன் வந்து விட்டதைத் கண்டு தங்களைப் போலவே முத்துநகை கலங்கிப்போனாலும், மழவராயன் திடீரென அவ்வறைக்குள் நுழையும் பக்ஷத்தில் விருந்தாளிகளை மறைக்கத் தேவையான ஏற்பாடுகளை அவள் செய்து முடித்திருந்ததை அடிகளார் கவனித்தார். வேண்டுமென்றே அவள் மஞ்சத்தை அறைக்கோடியில் போட்டு வைத்திருந்ததையும், அந்த மஞ்சத்துக்கு முன்னால் சேலைகளாலேயே ஒரு திரையை அமைத்திருந்ததையும் கவனித்த அடிகளார், ஒருவேளை மழவராயன் உள்ளே புகுந்திருந்தாலும் விருந்தனர் இருவரும் திரைக்குப்பின்னால்ஒளிந்து கொள்ள முடியுமென்பதைச் சந்தேமறப் புரிந்துகொண்டார். கரைக்கு முன் நின்று ஆடைகளை அணிவதுபோல முத்துநகை பாசாங்கு செய்யும் பக்ஷத்தில் மழவராயனைத் திரைப் பக்கத்துக்கே போகவொட்டாமல் அடித்துவிடலாமென்பதும் அடிகளாருக்கு நன்றாக விளங்கித் தானிருந்தது. அவருக்குச் சற்றும் விளங்காதிருந்தது கார்குழலியை அவர் கண்ட நிலைதான்.

மஞ்சத்தை மறைத்து மிக சாமர்த்தியமாக முத்துநகையால் கட்டப்பட்டிருந்த திரை ஒருபுறமாகத் தள்ளப் பட்டுக்கிடந்தது. அதற்கருகே கார்குழலியை அவசியத்துக்கு அதிகமாக நெருங்கி நின்ற அபராஜிதன் அவள் கைகளையும் தன் கைகளில் சிறைப்படுத்திக் கொண்டு அவள் காதுக்கருகில் ஏதோ முணுமுணுத்ததை அடிகளார் கண்டு திடுக்கிட்டுப் போனார். அவன் சொன்ன வார்த்தைகளை அவள் ரசித்ததாக அவள் முகபாவம் காட்டியதோடு, அவள் சற்று நாணி அவனைப்பார்த்து ஒரு வெட்கச் சிரிப்புச் சிரித்ததையும் பார்த்த அடிகளாருக்கு அடியோடு தூக்கி வாரிப்போட்டது. கன்னிமாடத்தில் சரியான கட்டுக் காவலுக்கிடையே வளர்க்கப்பட்ட கார்குழலி, தன்னால் நெறி தளராத மார்க்கத்தில் பழக்கப் பட்ட மழவராயன் மகள் சில நாழிகை நேரமே அறிமுக

மானை ஒரு பரபுருஷனிடம் நெருங்கிப்பேச எப்படித் துணிவு கொண்டாள் என்று நினைத்து நினைத்து அடிகளார் பிரமித்துப்போனார். அத்துடன் அவன் பேச்சை எப்படி அவள் ரசிக்க முடிந்ததென்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் திண்டாடிய அடிகளார் அந்தச் சமயத்தில் திருத்துறவியாக மாறி, பெண்வர்க்கத்திடமே பெருங் கோபங்கொண்டார். அவர் மனம் பெண்களை இழிவுப் படுத்திப்பாடிய பழைய தமிழ்க் கவிதைகளை நினைவு படுத்திக் கொண்டதன்றி, அவற்றில் எத்தனை தூரம் உண்மையிருக்கிறதென்பதையும் சிந்தித்து "சிலசில பெண்களுக்கு எத்தனை தூரம் கட்டுப்பாடிருக் கையிலேயே விநாடியில் நிலை மாறுபடுகிறதே. சுதந்திரமாக விட்டால் கதி அதோகதிதான்" என்ற முடிவுக்கும் வந்தது. சிந்தனை அலைகள் அடிகளாரை இப்படிப் பலவிதமாகச் சித்திரவதை செய்த சமயத்தில் அவரை அறைக்கோடிக்கு கார்குழலியே கூப்பிட்டாள்.

அடிகளார் அவசர அவசரமாக உள்ளே நுழைந்ததையும் தங்களைக் கண்டதும் அசைவற்று மிரள மிரள விழித்து ஏதோ யோசித்ததையும் கண்ட கார்குழலி, "ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? இப்படி வாருங்களேன்" சிரித்துக் கொண்டே கூறினாள். அடிகளார் வந்ததை அவள் பேசிய பின்பே அறிந்த அபராஜிதன் மிகுந்த குழப்பமடைந்து அவள் கைகளை விட்டுச்சற்று விலகி நின்றான். தன்னை நோக்கிய அடிகளாரின் பார்வையில், 'இதுதானா உன் யோக்கியதை?' என்ற கேள்வி எழுந்து நிற்பதைக் கவனித்த பாண்டிய சேனாதிபதி அவனைப் பதிலுக்கு ஏறெடுத்துப் பார்க்கச் சக்தியில்லாதவனாய்க் கண்களைத் தரைப் பக்கமாகச் சாய்த்துக் கொண்டான்.

அவ்விருவரையும் நெருங்கி வந்த அடிகளாரும் கேள்வி எதையும் கேட்காமலேயே கார்குழலியை உற்று நோக்கினார். கார்குழலியின் வதனம் மட்டும் எந்தவிதக் குழப்பத்தையும் காட்டாமல் பிறைச் சந்திரனைப்போல் களங்கமின்றியே காட்சியளித்தது. அடிகளாரின் முகத்தில் தோன்றிய கோபத்தால் சற்று ஆச்சரியத்தையும் அடைந்த



கார்குழலி, "ஸ்வாமி! இவர் இப்பொழுது என்ன சொன்னார் தெரியுமா?" என்று ஒரு கேள்வியும் கேட்டு, அடிகளாரின் எரிந்த உள்ளத்தில் எண்ணெயையும் ஊற்றினாள்.

"என்ன சொன்னார்?" உக்கிரமாக எழுந்தது அடிகளாரின் கேள்வி.

"பகிரங்கமாக உங்களிடம் நான் சொல்லக்கூடாத விஷயம்" என்றாள் கார்குழலி, அடிகளாரைப் பக்கவாட்டில் பார்த்துக் கொண்டே.

"ஆனால் உன்னிடம் அவர் சொல்லக்கூடிய விஷயமாக்கும்?"

"அவர் ஆண்; சொன்னார். என்னை அப்படியே திருப்பிச் சொல் என்றால் எப்படி முடியும்? நீங்கள் என்னைப் போல் ஒரு பெண்ணாக இருந்தால்..."

"நல்ல வேளையாகக் கடவுள் அந்தப் பாக்கியத்தை எனக்கு அளிக்கவில்லை."

"அப்படியானால் நான் பாக்கியசாலிதானென்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"ஆகா! சந்தேகமென்ன?" என்று அரை இகழ்ச்சியுடன் கிளம்பியது அடிகளாரின் பதில்.

"அப்படியானால் நான் ராணியாகப் போவது நிச்சயந்தானா?" என்று கார்குழலி வினவினாள்.

"ராணியா! எந்த நாட்டு ராணி!" என்று பிரமித்தார் அடிகளார்.

"பாண்டிய நாட்டு ராணி!" என்று சொல்லிக் கார்குழலி சிரித்தாள்.

இந்தப் பதிலைக் கேட்டதும் அடிகளாரின் திகைப்பு அதிகமாகவே, "பாண்டிய நாட்டு ராணியாகப் போவதாக யார் சொன்னது?" என்று கேட்டார்.

"இவர்தான். நீங்கள் வரும்போது அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்," என்றாள் கார்குழலி.

இதைக் கேட்டதும் அபராஜிதனுக்காகத் திரும்பிய அடிகளாரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது

"பிரபு! கார்குழலி சிறுபெண்...." என்று ஆரம்பித்தார். "ஆமாம்" என்று ஒப்புக்கொண்டான் அபராஜிதன்.

"உலகமறியாதவள்."

"வாஸ்தவம்."

"அவள் உள்ளத்தில் வீண் கனவுகளை எதற்காகக் கிளறி விடுகிறீர்?"

இந்தக் கேள்விக்கு அபராஜிதன் உடனே பதில்சொல்லவில்லை. ஏதோ யோசித்துவிட்டுச் சொன்னான்; "வீண் கனவுகளல்ல, அடிகளாரே. விவாதத்திலிருக்கும் விஷயம் தான்."

"யார் விவாதத்தில்?" என்று அடிகளார் கேட்டார்.

"மக்கள் விவாதத்தில். ஏன் சற்று முன்பு உங்கள் விவாதத்தில் கூடத்தான்."

"உங்கள் என்றால்?"

"நீரும் இளவரசியின் தந்தையும் படிகளில் பேசிய ஓரிரு வார்த்தைகள் என் காதுகளிலும் விழுந்தன."

"எதற்காகத் தாங்கள் உற்றுக் கேட்டீர்கள்?" என்று வினவினார் அடிகளார்.

"உற்றுக் கேட்கவில்லை அடிகளாரே! நாங்கள் இந்தக் கன்னிமாடத்துக்கு வந்ததே தவறு. வந்த பிறகு உங்களை இக்கட்டான நிலைமையில் சிக்க வைத்தது அதைவிடத் தவறு. இளவரசியின் தந்தையை நாம் யாரும் இங்கு எதிர்பார்க்கவில்லை. அவர் வந்த பிறகு நாங்கள் இங்கிருப்பது சரியல்லவென என் புத்தியில் படவே, நீங்கள் மாடிப்படிகளில் இறங்கியவுடனே இளவரசியிடம் விடைபெற வந்தேன். விடைபெறும் முன்பாக நீங்கள் இறங்கிவிட்டீர்களா என்பதைக் கவனிக்க மாடிப்படியில்தலையை நீட்டினேன். அப்போது காதில் விழுந்த வார்த்தைகளைத்தான் இளவரசியிடம் சொன்னேன். எனக்குச் சிகிச்சை செய்து காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்கவே அவர் கைகளைப் பிடித்துக் கொண்டேன். மற்றபடி முறைதவறி இங்கு எதுவும் நடக்கவில்லை" என்று விளக்கினான் அபராஜிதன்.



இந்தச்சமாதானத்தால் ஓரளவு சாந்தியை அடைந்த அடிகளார் மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப் பற்றிச் சிந்திக்கலானார். அவர் சிந்தனைக்குச் சிறிதும் இடங்கொடாமல் அபராஜிதனே சொன்னான். "அடிகளாரே, மீண்டும் எங்களை சுரங்கப் பாதை வழியாக வெளியே அனுப்பிவிட வேண்டும்" என்று.

"சுரங்கப் பாதையின் ரகசியம் இக்கோட்டையின் பாதுகாப்புக்கு முக்கியமானது" என்றார் அடிகளார்.

"அதைவிட முக்கியமானது இளவரசியின் நற்பெயர்" என்றான் அபராஜிதன்.

"அதற்கு இப்பொழுது எந்த ஆபத்துமில்லை."

"நாங்கள் இங்கிருப்பது தெரிந்தால் ஆபத்து உண்டாகலாம்."

"தெரியாமல் பாதுகாக்கப் பிரயத்தனப்படுகிறேன்."

"பிரயத்தனம் பலிப்பது மிகவும் கஷ்டம். சுரங்கப் பாதையைக் காட்டுங்கள். கோட்டையிலிருந்து வெளியேறியதும் அதை முற்றும் மறந்து விடுகிறேன்" என்று மன்றாடினான் அபராஜிதன்.

அடிகளார் அடியோடு மறுத்துவிட்டார். "அது என் ரகசியம் மட்டுபல்ல, மழவராயனுக்குச் சொந்தமான ரகசியம். அதை நான் வெளியிடுவது பெரிய ராணுவ ரகசியத்தை வெளியிடுவதாகும்" என்று திட்டமாகச் சொல்லிவிட்டார்.

"அப்படியானால் முன்போலவே கண்களைக் கட்டி அழைத்துக்கொண்டு போங்களேன்."

"அதுவும் சாத்தியப்படாது. கோட்டைக்கு வெளியே சென்றதும் காவலர் கண்களில் பட்டுவிட்டால் உங்களுக்குப் பேராபத்து ஏற்படும்."

"போகும்படியான நிலைமையிலும் நீங்களில்லை" என்றாள் கார்குழலி.

என்ன செய்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் திண்டாடினான் அபராஜிதன். அடிகளார் கடைசியில் ஓர் உபாயம் சொன்னார்; "பிரபு! உங்கள் இருவரையும்

இந்த அறையில் போட்டுப் பூட்டிவிட்டால் யாருக்கும் சந்தேகம் ஏற்படாது. மெல்லப் பகலைத் தள்ளிவிட்டால் இரவில் உங்களை பழையபடி வெளியே அனுப்பிவிடுகிறேன்.''

ரொம்ப நல்ல உபாயமாகக் கார்குழலிக்குக்கூடப் பட்டதால் அவளும் அபராஜிதனைப் பார்த்து, ''ஏன், அப்படியே செய்யலாமே?'' என்றாள்.

அவள் பார்வையிலிருந்த கனிவும் ''ஏன் இருந்துதான் செல்லுங்களேன்' என்ற அர்த்தம் தொனிக்கும் வார்த்தைக் குழைவும் அபராஜிதன் மனத்தை ஒருவினாடி கலக்கினாலும் இறுதியில் நல்லெண்ணங்களே மேலெழுந்து நின்றதால் அவன் அடிகளாரை நோக்கி ''அடிகளாரே! நான் இங்கிருப்பது முறையல்ல'' என்றான்.

''ஏன்?' என்று கேட்டார் அடிகளார்

''அந்தப் பெரிய அறையில் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் இந்த அறையில் கேட்கிறது'' என்றான் அபராஜிதன்.

''கேட்டாலென்ன?'' என்று கார்குழலியும் வினவினாள்.

''கேட்கக் கூடியதைக் கேட்டால் சரிதான்; கேட்கக் கூடாதவை கேட்டால்?'' என்றான் அபராஜிதன்.

கார்குழலி மெல்ல நகைத்தாள். ''அப்படி உங்கள் காதில் விழக்கூடாத எதை நாங்கள் பேசிவிடப் போகிறோம்!'' என்றும் கேட்டாள்.

''குலசேகர பாண்டியன் இங்கு வரப்போவதாக உங்கள் தகப்பனார் சொல்லவில்லையா?''

''ஆமாம்! சொன்னார்.''

''அவருடன் உங்கள் தகப்பனார் தனித்துப் பேசவிரும்பினால்!''

''அதற்கு அடுத்த கட்டிடத்தில் அவர் அந்தரங்க அறை இருக்கிறது'' என்று சம்பாஷணையில் குறுக்கிட்டுச் சொன்னார் அடிகளார்.

''அப்படிப் பேசினாலும் என் மண விஷயத்தைப் பற்றித்தானே பேசப் போகிறார்கள் அதைக் கேட்பதில்



உங்களுக்கென்ன ஆட்சேபம்?'' என்று கார்குழலியும் வேடிக்கையாகக் கேட்டு ஒருபுன்முறுவலும் கொட்டினாள்.

அவள் புன்முறுவலையோ பேச்சையோ ரசிக்கக்கூடிய மனோ நிலையில் அபராஜிதன் அப்பொழுது இல்லை. குலசேகர பாண்டியன் பெண் கேட்க வருகிறான் என்ற செய்தியே அவனுக்கு வேம்பாக இருந்தது அதை ஒரு வேடிக்கையாக நினைத்துக் கார்குழலி பேசியதும் சிரித்ததும் சற்றுகூடப் பிடிக்கவில்லை இதே பெண்ணை வீரபாண்டியனுக்கு மணமுடிக்கும் விஷயமாக நீலமலைக் குடிஞ்சயில் விவாதித்தபோது ஏற்படாத மனக்கஷ்டம் இப்பொழுது ஏற்படுவானேன் என்று யோசிக்கக் கூடச் சக்தியற்றவனானான் அபராஜிதன். அந்தப் பெண்ணின் திருமண விஷயம் பாண்டிய நாட்டு நலத்தையும் இதர பிரச்சினைகளையும் நொறுக்கி எறிந்துவிடவே என்றுமில்லாத பிடிவாதத்துடனேயே அபராஜிதன் பதில் சொன்னான்: ''இளவரசி! உங்கள் திருமண விஷயம் உங்கள் குடும்பவிஷயம்....'' என்று ஆரம்பித்தவனை இடைமறித்த கார்குழலி, ''அதுதான் குடும்ப விஷயமல்லவென்று தீர்ந்துபோய் விட்டதே!'' என்று சொல்லி மீண்டும் புன்முறுவல் செய்தாள்.

'உண்மைதான், பிரபு! அது தமிழ்நாட்டின் நலத்தைப் பொறுத்த விஷயமாகிவிட்டது. அதில் உங்களுக்கு அக்கறை இருக்கத்தானே செய்யும் ஆகவே குலசேகரன் பேசுவதை நீங்கள் கேட்பதால் என்ன தீமை நேரிடப் போகிறது?'' என்று அடிகளாரும் சமாதானப்படுத்த முயன்றார்.

''அடிகளாரே, பிறர் பேசுவதை ஒட்டுக் கேட்பது யோக்கியன் செய்யும் காரியமல்ல தவிர, குலசேகர பாண்டியன் பேசவந்திருப்பது மண விஷயம் மட்டும்தான் என்று எப்படிச் சொல்ல முடியும்? வேறு அரசியல் விஷயங்கள் விவாதிக்கப்பட்டால்? என் காதில் விழுவதால் உங்கள் சிறாருக்கோ அல்லது குலசேகரனுக்கோ அபாயம் ஏற்

படக்கூடிய விஷயங்கள் பேசப்பட்டால் என்னசெய்வது''
என்று வினவினான் அபராஜிதன்.

அபராஜிதன் பேச்சைக் கேட்கக் கேட்கக் கார்குழலி யின் ஆச்சரியம் அதிகப்பட்டது. "உங்கள் காதில் விழுந் தால் அப்படி என்ன அபாயம் நேரிட்டுவிடப் போகிறது? நீங்கள் என்ன பாண்டியநாட்டு மந்திரியா, சேனாதி பதியா? இந்த சம்பாஷணையில் உங்களுக்குச் சம்பந்த மில்லையென்று இருந்துவிட்டால் போகிறது'' என்று கூறி னாள் அந்த இளமங்கை.

அபராஜிதன் பதில் சொல்லத்தெரியாமல் சங்கடப் பட்டான். தான் உண்மையில் யார் என்று அறிந்து கொண்டால் கார்குழலி தன்னைப்பற்றி என்ன நினைப்பாள் என்று அஞ்சினான். இருந்த போதிலும் நேர்மைக்கு மாறான எந்தக் காரியத்திலும் ஈடுபட இஷ்ட மில்லாதவனாய்த் தன்னை எப்படியாவது வெளியே அனுப்பிவிடும்படி அடிகளாரைக் கெஞ்சினான். அடிகளார் நிலைமையும் பெரிய சங்கடத்திலிருந்தது. அபராஜிதன் சொல்வதில் எவ்வளவோ உண்மையிருக்கிறது என்பதைப் பூரணமாக அறிந்திருந்தாலும் எக்காரணத்தை முன்னிட் டும் சுரங்க வழியை மட்டும் அவனிடம் காட்டிக் கொடுக்க இஷ்டமில்லாதவராய் அவனை அந்த அறையிலேயே தங்கச் செய்வதற்கான ஏற்பாட்டிலேயே முனைந்தார்.

"ராஜாங்க விஷங்களைப் பேசுவதானால் எங்கள் மன்னர் தமது அந்தரங்க அறையில்தான் பேசுவார். ஆகையால் நாங்கள் நினைப்பதுபோல் எந்தவிதச் சங்கட மும் ஏற்படாது. இங்கு ஏதாவது பேச்சு நடந்தால் அதி திருமணத்தைப் பற்றித்தான் இருக்கும். அந்த விஷயத் திலும் எங்கள் மன்னர் எந்த முடிவுக்கும் வரவில்லை. பாண்டியநாட்டு அரசியல் காற்று எந்தப் பக்கம் அடிக்கி றது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் நீங்கள் கேட்கக்கூடாத முக்கிய சமாசாரத்தை யாரும் பேச [illegible]ார்கள். தவிர எந்தப் பேச்சும் இங்கு நட[illegible]



காமல் எல்லோரையும் மன்னரின் அந்தரங்க அறைக்கே அனுப்பி விட முயற்சி செய்கிறேன்'' என்று முடிவாகச் சொல்லிவிட்டு அடிகளார், கார்குழலியை நோக்கி, 'குழலி! இப்படிப் பேசிக்கொண்டேயிருந்தால் உன் தகப்பனார் வந்துவிடுவார். சீக்கிரம் அலங்காரத்தை முடித்துக்கொள். நான் இந்த அறையைப் பூட்டிக் கொள்கிறேன்' என்று அவளை முதலில் வெளியே அனுப்பினார். அவள் சென்ற தும் மீண்டும் அபராஜிதனை நோக்கிய அடிகளார், 'சேனாதிபதியவர்களே, இந்த அறைக்குள் வந்தவுடன் உம்மீது கோபப்பட்டேன்! அதற்காக வருத்துகிறேன்'' என்றார்.

"கோபப்படுவதற்கான காரணமும் இருந்தது. இளவரசியின் கரங்களை நான் தொட்டது பிசகுதானே?'' என்று கூறிய அபராஜிதன், ஏதோ ஏக்கத்தால் பெருமூச் செறிந்தான்.

"நன்றியைத் தெரிவிக்க உணர்ச்சி வெள்ளத்தில் செய்தீர்கள். இதனால் பாதகமில்லை. அபராஜிதனுடைய நேர்மையைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் தமிழ் நாட்டில் யாரிருக்கிறார்கள்? அப்பேர்ப்பட்ட அபராஜிதன் நேர்மையற்ற காரியத்தைச் செய்வாரா என்று நானும் யோசித்திருக்கவேண்டாமா?'' என்று சமாதானம் சொல்லி விட்டு மேலும் கூறினார். "நம்மை மீறிய சந்தர்ப்பங்களில் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே பொறுத்திருங் கள். மழவராயன் அடுத்த அறையில் பேசாதபடி பார்த்துக் கொள்கிறேன். அப்படியே மீறிப் பேசினால் அரசியல் விஷயங்கள் கிளம்பாதபடி நான் தடுத்து விடுகிறேன்.''

இந்த உறுதியால் ஓரளவு நிம்மதியடைந்த அபராஜி தன் அறையை விட்டுச் செல்ல அடிகளாருக்கு அனுமதி யளித்தான் அதுவரை மொட்டை மாடியிலேயே எட்ட நின்று கொண்டிருந்த காரியையும் கூப்பிட்டு இருக்கும் நிலைமையையும் விவரித்துச் சொன்னான். குலசேகர பாண்டியன் வருகிறாரென்பதைக் கேட்டதும், பாண்டிய நாட்டுப் பிற்காலத் தலைவிதி எப்படியிருக்குமோ என்று

கலங்கிய காரி வெளிக்குத் தன் நினைவுகளைச் சிறிதும் காட்டாமல் எது எப்படி நடந்தாலும் நடக்கட்டும் என்று விரக்தியடைந்து விட்டான். அடிகளாரும் அறைக் கதவை நன்றாக இழுத்துப் பூட்டிச் சாவியை மடியில் செருகிக் கொண்டு மழவராயனை நாடிச் சென்றார்.

மழவராயன் ஸ்நானத்தில் அதிக காலத்தைச் செலவிடவில்லை. அடிகளார் தமது ஆசிரம அறைக்கு வருமுன்பாகவே காலைக் கடன்களை முடித்து மேலே செல்லத் தயாரானான். அவ்வளவு துரிதமாக அவன் தயாராகி விட்டதைக் கண்ட அடிகளார், "ஸ்நானம் வெகு சீக்கிரம் முடிந்துவிட்டதே" என்று ஏதோ சொல்லப்போனார்.

"ஆமாம்; காரியமிருக்கிறதல்லவா?" என்று அவர் பேச்சை இடையிலேயே வெட்டினான் மழவராயன்.

"உண்மை, உண்மை! என்னால் தான் தாமதம். தங்கள் அந்தரங்க அறையைத் தயார்படுத்தச் சொல்லவில்லை" என்றார் அடிகளார்.

"அந்தரங்க அறை தேவையில்லை. குலசேகர பாண்டியனைக் குழலியின் அறையிலே சந்திக்கப் போகிறேன்."

"அங்கு எதற்காக? அந்தரங்க அறையானால் ரகசிய விஷயங்களையும் பேசலாம்...."

"குழலியின் அறையில் பேசினாலென்ன? யார் கேட்கப் போகிறார்கள்? பணிப்பெண்களைக் கீழேயே தங்கச் சொல்லலாம். மீதி இருப்பது நீர், நான், கார்குழலி தானே!"

"ஆமாம். இருந்தாலும்...." என்று அடிகளார் ஏதோ இழுத்தார். மழவராயன் அவரை மேற்கொண்டு எதுவும் பேச அனுமதிக்கவில்லை. குலசேகர பாண்டியன் வந்ததும் நேராக மாடி அறைக்கு அழைத்து வரச் சொல்லிவிட்டுப் படிகளில் ஏறிக் கார்குழலியின் அறையை நோக்கிச் சென்றான்.

அன்று காலையில் அடிகளார் அடைந்த திண்டாட்டம் சொல்லி முடியாது. "எந்த வினாடியில் பாண்டிய சேனாதிபதியின் முகத்தில் விழித்தேனோ" என்று தம்மை



பலமுறை நொந்து கொண்டார். "கார்குழலிதான் சொன்னாளென்றால் நான் எதற்காக அவர்களை கன்னிமாடத்திற்கு அழைத்து வந்தேன்! சிவ சிவ" என்று தமது வழுக்கைத் தலையில் இருமுறை போட்டுக் கொண்டார். அவர் சங்கடங்கள் அத்துடன் நிற்கவில்லை. குலசேகர பாண்டியனைக் கார்குழலியின் அறைக்கு அழைத்துச் சென்றதும் வேறு பல அனர்த்தங்கள் காத்துக் கொண்டிருந்தன. சகல ஆபரணங்களையும் அணிந்து வந்த கார்குழலி குலசேகர பாண்டியனை வணங்கிய பிறகு அவளை, "குழலி! நீ அந்தக் கோடியறைக்குப் போயிரு. நாங்கள் சற்றுத் தனித்துப் பேச வேண்டியிருக்கிறது" என்றான் மழவராயன்.

கார்குழலி அடிகளாரைப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட அடிகளாரும், "பேச வேண்டியதை இங்கேயே பேசலாமே! இங்கு யாரிருக்கிறார்கள்? குழலியும் நானுந்தானே?" என்றார்.

"இல்லை, அடிகளாரே! பாண்டிய மன்னர் தனித்துப் பேச விரும்புகிறார்" என்று கூறிய மழவராயன் சிறிது யோசனைக்குப் பிறகு "சரி. நாங்கள் அந்த அறைக்குப் போய் விடுகிறோம். நீரும் குழலியும் இங்கு இருங்கள்" என்று கூறிக்கொண்டு எழுந்தவன் அறை பூட்டப் பட்டிருப்பதைக் கண்டு. "சீக்கிரம் சாவியை வரவழையுங்கள்" என்று அடிகளாருக்கு உத்தரவிட்டான்.

அடிகளார் அந்தச்சமயத்தில் உண்மையாகவே அரனை நினைத்தார். "வேண்டாம் வேண்டாம், இங்கேயே பேசுங்கள்" என்று மழவராயனையும் வேண்டாக் குறையாகச் சொன்னார். அவர் சொல்வதற்கு சற்றும் காது கொடுக்காத மழவராயன், "எங்கே சாவி? முத்து நகையைக் கூப்பிடுங்கள்" என்று ஆக்ஞாபித்து, "முத்துநகை! முத்துநகை!" என்று கூவினான். அடிகளாரும் என்ன செய்வதென்று அறியாமல் திண்டாடி முத்து நகையைக் கூப்பிடுவதுபோல் பாசாங்கு செய்து, "முத்துநகை! எங்கே போய்விட்டாய்?" என்று கூவிக்

கொண்டே சரீரம் தள்ளாட இரண்டடி வேகமாக எடுத்து வைக்கவே அவர் காஷாயம் சற்று அவிழ்ந்து, மடியிலிருந்த பெரிய வெள்ளிச் சாவி தரையில் விழுந்து 'கணீ' ரென்ற ஒலியை அறை முழுவதும் பயங்கரமாகப் பரப்பியது.

## 10. அடிகளார் தவிக்கிறார்.

அசந்தர்ப்பமாக அப்படிக் கீழே விழுந்தது அறைச் சாவியா அல்லது தமது ஆவியா என்பதை நிர்ணயிக்க முடியாத அளவுக்குத் திக்குமுக்காடிப் போன அடிகளார் நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று அறியாமல் அடியோடு சுவாதீனத்தை இழந்து வெறும் மரக்கட்டை போல் நின்று விட்டார். அறையில் மட்டுமின்றித் தன் இதயத்திலும் பயங்கரமான எதிரொலியைக் கிளப்பிய அந்தச் சாவியைக் கண்ட கார்குழலி அடுத்த நிமிஷம் எவ்விதமான விபரீதம் நேரிடப் போகிறதோ என்ற அச்சத்தால் அசைவற்று நின்றாள். மழவராயனாலும் பிறகு அடிகளாராலும் திரும்பத் திரும்ப அழைக்கப்பட்டதால் வேகமாய்ப் படிகளேறி வந்த முத்துநகையும் திகைத்து நின்றாள். சாவியையும்நோக்கி அடிகளாரையும் நோக்கிய மழவராயன் அவர் குழப்பத்துக்குக் காரணத்தை அறியா விட்டாலும், அவர் எதையோ ஒளிக்க முயலுகிறார் என்பதை மட்டும் தீர்மானித்துக் கொண்டான். இருந்தாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், ''இது என்ன சாவி?'' என்று வினவினான். அவன் குரலில் சற்றுக் கோபமும் கலந்திருந்தது.

அடிகளாரின் உதடுகள் அசைந்தனவே தவிர வார்த்தைகள் உடனடியாக வெளிவரவில்லை. தம்மை நிதானப்படுத்திக் கொணடு அவர் பதில் சொன்ன போதும் பேச்சு ஓரளவு உளறலாகவே இருந்தது. ''மடியிலிருந்தது...'' என்று தடுமாறிச் சொன்னார் அடிகளார்.

''அது தெரிகிறது அது எந்த அறையின் சாவி?'' என்று கேட்டான் மழவராயன்.



மேலும் பொய் சொல்வதில் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்டு அடிகளாரும், ''அந்தக் கோடி அறையின் சாவிதான்'' என்றார்.

''மடியிலேயே சாவியை வைத்துக்கொண்டு நீரும் எதற்காக என்னுடன் முத்துநகையைக் கூப்பிட்டீர்?''

''மறதி...''

''அடிகளாரே! யாரிடம் பேசுகிறீர் என்பதை யோசித்துப் பேசும். உமக்கு மறதி என்பது இந்த ஜன்மத்தில் கிடையாதென்பது எனக்குத் தெரியும். உண்மையைச் சொல்லும். அந்த அறையில் என்ன இருக்கிறது? எதை மறைக்கப் பார்க்கிறீர்?'' என்று கோபத்துடன் வினவினான் மழவராயன்.

அடிகளார் பதிலேதும் சொல்லாமல் மௌனம் சாதிக்கவே அதுவரை சும்மாயிருந்த குலசேகர பாண்டியன் நிலைமையை ஒரு நிதானத்துக்குக் கொணடுவர விரும்பி, ''அறை விஷயமாக இத்தனை விவாதம் எதற்கு? இந்த அறையிலேயே நாம் பேசலாமே'' என்றான்.

அந்த யோசனைக்கு மழவராயன் மசிந்து கொடுக்கவில்லை. அடிகளார் எதையோ மறைக்கிறார் என்பது திட்ட வட்டமாகத் தெரிந்துவிட்டதாலும் எதை மறைக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் ஆசையாலும் ''வேண்டாம், வேண்டாம்,அடுத்த அறையே சௌகரியம்'' என்று சொல்லிவிட்டு அடிகளாரை நோக்கி, ''அந்த அறையைத் திறவுங்கள்'' என்று உத்தரவிட்டான். அப்பொழுது அடிகளார் உத்தரவை நிறைவேற்றச் சிறிதும் அசையாமல் இடித்த புளிபோல் நின்ற இடத்திலேயே நின்றிருக்கவே, ''நீர் திறக்கா விட்டாலென்ன? நானே திறந்து கொள்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கோபத்துடன் கீழே இருந்த சாவியை எடுத்துக்கொண்டு கோடி அறையை நோக்கி மிக வேகமாகச் சென்றான். முத்துநகை அடிகளாரையும் பார்த்து குழலியையும் பார்த்தாள். அடிகளார் அவ்விருவரையும் பார்த்து விழித்தார். அந்த மூவர் கண்களும் சந்தித்ததைக் கவனித்த குலசேகர

பாண்டியன்கூட அடுத்த அறையில் அம்மூவரும் ஒளிய ஒளிக்கப் பாடுபடுகிறார்களென்று சந்தேகமறப் புரிந்து கொண்டான். சந்தேகத்தாலும் கோபத்தால் உந்தப்பட்ட மழவராயன் பூட்டில் சாவியைப் போட்டு முரட்டுத்தனமாகத் திறந்து, அறைக்குள் நுழைந்தான். காரியம் மிஞ்சிவிட்டதென்ற நினைப்பால் அடிகளார் கண்களை இறுக மூடிக்கொண்டு சிவநாம ஸ்மரணையில் இறங்கினார்.

அரசியல் துறவியான அடிகளார்கூட அந்தவிநாடியில் சிவபிரானை உள்ளும் புறமும் ஒன்றாகி உருகி நினைத்துத் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இறைஞ்சினார். சக்தியிழந்த நிலையில் தான் மனிதன் ஈசுவரனை நினைக்கிறான். சுயபலத்தில் நம்பிக்கையிருக்கும் வரையில் மனித எண்ணத் தில் மமதை ஓங்கி நிற்கிறது. நிர்ப்பலமாகித் திண்டாடும் சமயத்தில்தான் அகங்காரம் விலகி ஈசுவரானுபவத்துக்கு இடம் கொடுக்கிறது. வேண்டியவேளையில் மட்டும் கடவுளை நினைத்தால் போதுமா என்ற சர்ச்சையில்கூட மனித மனம் அந்தச் சமயத்தில் இயங்குவதில்லை. ஆபத்தான நிலைமையில் ஆதரவாகப் பிடித்துக் கொள்ளக்கூடிய இடத்தை மனம் நாடுகிறது திக்கற்ற நிலைமையில் மனித மனத்துக்குப் பிடிப்பை அளிப்பது 'திட விசும்பு எரிவெளி நீர் நிலம் இவை மிசை எங்கும் பரந்து உள' கடவுளின் நினைப்பு ஒன்றுதான். கடைசி விநாடியில் பாரத்தைப் போட்டாலும் கடவுள் மனிதனைக் கைவிடுவதில்லை என்ற வேதாந்தத்தைப் பல தடவைப் படித்திருந்த அடிகளார், 'இந்தச் சமயத்தில் ஆண்டவன் ஒருவன்தான் காப்பாற்ற முடியும்' என்ற முடிவுக்கு வந்ததோ, அவர்மேல் பாரத்தைப் போட்டுச் செயலற்று இருந்துவிட்டதோ ஆச்சரியமில்லையல்லவா?

அடிகளாருக்கு இந்தச் சித்தாந்தத்தில் ஆச்சரியமில்லைதான். ஆனால் கோடி அறைக்குள் நுழைந்த மழவராயன் அங்கிருந்து திரும்பி வந்தபோது சிரித்துக் கொண்டே



வந்ததும், தம்மிடம் வேடிக்கையாகப் பேச ஆரம்பித்ததுந் தான் அவரை சொல்லவொண்ணா ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''என்ன அடிகளாரே! விஷயம் இப்படியென்று என்னிடம் ஒரு வார்த்தைச் சொல்லியிருக்கக் கூடாது?'' என்று மழவராயன் கேட்டான்.

அடிகளாருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் நிதானப்படுத்திக் கொண்டு, ''எப்படி சொல்வதென்று புரியவில்லை....'' என்று இழுத்தார்.

''புரியாமலென்ன? உள்ளதை உள்ளபடி சொன்னால் உம்மிடமா நான் ஆட்சேபிப்பேன்?'' என்று கேட்டான் மழவராயன்.

''ஆட்சேபிக்க மாட்டீர்களென்று தெரிந்திருந்தால் சொல்லியிருப்பேன்''

''ஆட்சேபிக்க மாட்டேனென்று உமக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?''

''அவ்வளவு தூரம் என் சிந்தனை ஓடவில்லை.''

''குலசேகர பாண்டிய மன்னன் அங்கு போகக்கூடாது என்பதற்கு மட்டும் சிந்தனை ஓடியதோ.''

''தாங்கள் கூட அங்கு போயிருக்கக் கூடாதென்பது தான் என் உத்தேசம்'' என்றார் அடிகளார்.

''அங்குதான் தவறு செய்து விட்டீர்'' என்று சிரித்தான் மழவராயன்.

''இப்போதுதானே புரிகிறது...'' என்று கூறினார் அடிகளார்.

''அறையை நான் பார்த்தது நல்லதாகப் போய் விட்டது'' என்றான் மழவராயன்.

''நல்லதாகப் போய் விடும் என்று நினைத்திருந்தால் சாவியை ஒளித்தேயிருக்க மாட்டேன்'' என்று சமாதானம் சொன்னார் அடிகளார்.

''இத்தனை முன் யோசனையுடன் நீர் நடந்து கொண்டிருப்பீர் என்பதை நான் அறிந்திருந்தால் உம்மிடம்

சந்தேகித்தே இருக்க மாட்டேன். மன்னித்து விடும்'' என்றான் மழவராயன்.

இந்த சம்பாஷணையின் ஆரம்பத்திலேயே ஆச்சரியத்தை அடைந்த அடிகளார், கடைசியில் மழவராயன் சொன்னதைக் கேட்டதும் மழவராயனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்பதை நிர்ணயிக்க முடியாமல் பேச்சின் ஓட்டத்தைக் கவனித்த நின்றாடினார். கார்குழலி கூட ஆச்சரியத்தால் கண்களை அகல விழித்து அடிகளாரையும் தனது தந்தையையும் மாறி மாறிப் பார்த்தாள். முத்துநகை பெரிதும் பிரமிப்படைந்து மெத்தைப் படிக்கதவின் மேல் லேசாக சாய்ந்து கொண் டான். மழவராயனை ஒரு கணம் உற்று நோக்கிய அடிகளார் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக, "இதில் மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது'' என்றார். மழவராயன் சொன்ன அடுத்த வார்த்தைகள் அவரை மீண்டும் அயர வைத்தன. "அறையிலிருந்த வஸ்துக்கள் என் கண்களில் படவில்லையென்று நினைக்கிறீரா'' என்றான் மழவராயன்.

"பட்டுவிட்டதா!'' வாயைப் பிளந்தார் அடிகளார்.

"ஆகா! நன்றாகப் பட்டுவிட்டன. என் கண்கள் என்ன குருடா?'' என்றான் மழவராயன்.

"இல்லை. அதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் அறையிலிருப்பதைப் பார்த்தும்...''

"நீர் செய்தது சரியென்று தீர்மானித்தேன். அறையிலிருப்பதைப் பார்த்த பிறகு குழலியைக்கூட அங்குப் போகச் சொல்வது சரியல்லவென்று தோன்றுகிறது.''

'சரி, மழவராயன் விருந்தினர்களைப் பார்த்துவிட்டான்' என்று தமக்குள்ளேயே சொல்லிக்கொண்ட அடிகளார் 'பார்த்த பிறகும் மழவராயன் ஏன் இப்படிப் பேசுகிறான்? ஒருவேளை பெண் கேட்க வந்திருக்கும் குலசேகர பாண்டியனுக்கு எதிரில் விஷயத்தை மறைப்பதற்காக இந்த நாடகம் ஆடுகிறானா? இல்லா விட்டால்



அபராஜிதனும் காரியும் அறையிலிருந்து தப்பிப் போய் விட்டார்களா? எப்படித் தப்பியிருக்க முடியும்? அந்த அறைக்கதவு இருக்குமிடம் நமக்குத்தானே தெரியும்? அப்படி அவர்களைப் பார்த்திருந்தால் மழவராயன் கோபத்தை எப்படி அடக்கமுடியும்? தன் பெண்ணின் கன்னி மாடத்தில ஆண்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதை அறிந்ததுமே கொதித்தெழுந்திருக்க வேண்டாமா?' இப்படியாக ஏதேதோ யோசித்துப் பார்த்து மழவராயன் போக்குக்கு எந்தவித விடையும் புலப்படாதவராய்ப் பிரமை பிடித்து நின்றார். அவர் பிரமிப்பைக் கண்ட மழவராயன் அவர் ஏதோ யோசிப்பதாக நினைத்து, "என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று வினவினான்.

"ஒன்றும் யோசிக்கவில்லை. நீங்கள் சொல்வது நியாயந்தான்—'' என்று ஆரம்பித்தார்.

"நீர் தயங்குவதும் நியாயந்தான். அந்த அறைக்குக் கார்குழலியை அனுப்புவது சரியல்லதான். இருந்தாலும் இப்பொழுதிருக்கும் நிலைமையில் வேறெதுவும் செய்ய முடியாது. கார்குழலியையே அந்த அறைக்கு அனுப்பி விடுவோம்'' என்றான் மழவராயன்.

"வேண்டாம், வேண்டாம்!'' என்றார் அடிகளார்.

"பரவாயில்லை, போகட்டும்'' என்று மழவராயன் பிடிவாதமாகச் சொல்லிவிட்டுக் கார்குழலியையும் நோக்கி, "குழலி! நீ அந்த அறையில் சற்றுநேரம் போயிரு நானும் மன்னரும் முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது'' என்று ஆக்ஞாபித்தான். கார்குழலி அடிகளாரைப் பார்க்கவே அடிகளார் அவள் சகாயத்துக்கு வந்து, "அப்படியானால் முத்துநகை, நீயும் குழலியுடன் அந்த அறைக்குப் போ!'' என்றார் முத்துநகையை நோக்கி.

"வேண்டாம், முத்துநகை! நீ கீழே போ; குழலி மட்டும் அந்த அறைக்குப் போகட்டும்!'' என்று அடிகளார் கட்டளையை வெட்டிக் கூறினான் மழவராயன்.

"இல்லை..." என்று துவங்கினார் அடிகளார்.
"குறுக்கே பேசவேண்டாம். சொன்னபடி செய்யு
ங்கள்!" என்று மழவராயன் ஆக்ஞாபிக்கவே அதற்கு மே
எதுவும் செய்யச் சக்தியற்ற அடிகளார் முத்துநகை
யைப் போகச் சொல்லிவிட்டுக் கார்குழலியையும் கோ
அறைக்கு அனுப்பினார். அவள் அறைக்குள் போனது
'அந்த அறையை நன்றாக இழுத்துச் சார்த்தும்!" என்
மழவராயன் உத்தரவிட்டதைக் கேட்ட அடிகளாருக்
விந்தை நினைத்து அழுவதா? சிரிப்பதா என்பதே தெரிய
விட்டாலும் அவன் சொன்னபடியே செய்து முடித்தார்
இத்தனைக் குழப்பத்திலும் அவர் கோபத்தைக் கிள
விட்ட காரியமும் ஒன்று உண்டு. மழவராயன் உத்தரவு
படி குழலி கோடி அறைக்குச் செல்லும்போது தம்மை
பார்த்துக் குறும்பாகச் சிரித்துவிட்டுப் போனதை மட்டு
அடிகளாரால் பொறுக்க முடியவில்லை. பகிரங்கமாய்
தமது கோபத்தை வெளிக்குக் காட்ட முடியாததா
'சிரிக்கவா சிரிக்கிறாய்? இரு இரு. இவர்கள் போகட்டு
உன்னுடன் பேசிக் கொள்கிறேன்' என்று தமக்குள்ளே
கறுவிக் கொண்டார்.

கோடி அறைக் கதவு சாத்தப்பட்டதும் குலசே
பாண்டியனை மஞ்சமொன்றில் உட்காரச் சொல்
பக்கத்தில் தானும் உடகார்ந்த மழவராயன் அடிகளாரு
க்கும் ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான். அவ
காட்டிய ஆசனத்தில் உட்கார இஷ்டமில்லாத அடிகளா
"இருக்கட்டும்! பாதகமில்லை!" என்று மதிப்பாக
சொல்லிவிட்டு அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்
கோடி அறைக்கும் இடையே நின்று ஒரு காதை அ
அறைக்கும் இன்னொரு காதை இரு மன்னர்களுக்குமாக
பகிர்ந்தளித்து நடக்கும் விவகாரங்களை மிகு
எச்சரிக்கையுடன் கவனிக்கலானார்.

குலசேகர பாண்டியன் முதன் முதலாகத் தமி
நாட்டு ராஜீயப் பிரச்சினைகளைப் பேசத் துவங்கி, "மழ
மன்னரே! தமிழ்நாடு இருக்கும் நிலைமையைப்பற்



உங்களுக்கு நான் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. ஒற்றுமை குலைந்த தமிழ் மக்கள் சிங்களவர் கால்களில் மிதிபட்டுக்கிடக்கிறார்கள்" என்று கூறிப் பெருமூச்செறிந்தான்.

குலசேகரன் பேச்சு அடிகளாருக்குப் பெருத்த விந்தையாயிருந்தது. 'பாண்டிய பிரஜைகள் இலங்காபுரன் அடிகளில் மிதிபட்டுக் கிடப்பதற்கு நீங்கள்தானே பொறுப்பாளி' என்று கேட்டுவிட வேண்டும் போலிருந்தது அவருக்கு. நெல்லையில் அரசாண்டு கொண்டிருந்த குலசேகர பாண்டியன் நாடாசையால் மதுரைமீது படையெடுத்திருக்காவிட்டால், மதுரை மன்னனான பராக்கிரம பாண்டியன் சிங்களவரின் உதவியை நாடியிருக்கமாட்டான். சிங்களவர் உதவியை அவன் நாடாதிருந்தால் நாடும் அடிமைப்படக் காரணமிருக்காது. குலசேகர பாண்டியன் நாடாசையோடு நிறுத்தினானா? பராக்கிரம பாண்டியனை வெற்றிகொண்டதோடு அவனையும் அவன் மனைவியையும் கொன்றுவிட்டானே! அந்தப் பாவமெல்லாம் எங்கே போகும்? பராக்கிரம பாண்டியன் மகனான வீரபாண்டியன் தப்பியிருக்காவிட்டால் அந்த வம்சமே நிர்மூலமாகியிருக்கும்' என்று குலசேகரன் அவனுடைய தாயாதிக்குப் புரிந்த அட்டூழியங்களை நினைத்துப் பார்த்த அடிகளார் 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற பழமொழியையும் நினைவு படுத்திக் கொண்டார். 'இலங்காபுரன் சிங்கள சைன்யத்தோடு வந்து இந்தக் குலசேகரனை மதுரையிலிருந்து விரட்டி வீரபாண்டியனுக்கு முடிசூட்டியிருக்காவிட்டால் இவன் இவ்வளவு அடக்கமாக உட்கார்ந்திருப்பானா?' என்றும் யோசித்துப் பார்த்தார். இத்தகைய சிந்தனையின் விளைவாகஅவர் குலசேகரனைப் பெரிதும் வெறுத்தாலும் மேற்கொண்டுஎன்ன பேசுகிறானென்பதைக் கவனத்துடன் கேட்கலானார்

குலசேகரன் பேச்சுக்கு மழவராயனும் ஒத்துப் பாடினான் "ஆமாம் தமிழ் மக்கள் கதி அதோகதியாகத்

தானிருக்கிறது. ஆனால் நாம் என்ன செய்ய முடியும்?' என்றான்.

''என்ன செய்ய முடியுமா? இலங்காபுரனின் அட்டூழியங்களை உம்மையும் எம்மையும் போன்ற வீரர்கள் சகித்துக் கொண்டு சும்மாயிருக்க முடியுமா?'' என்று குலசேகர பாண்டியன் கேட்டான்.

''சகிக்காமல் என்ன செய்வது? தாங்களோ நாடில்லாத மன்னர். நானோ இரண்டொரு ஊர்களை வைத்துக் கொண்டிருக்கும் சிற்றரசன். மதுரைக்கு கப்பம் செலுத்துபவன்'' என்றான் மழவராயன், அரைக் குத்தலாகவும் அரைவருத்தமாகவும்.

''எனக்கு நாடில்லாவிட்டாலும் தமிழ் நாட்டில் அக்கறையுள்ள மற்றவர்களுக்கு இருக்கிறதல்லவா?''

''யாருக்கு?''

''ஏன்? சோழமன்னர் ராஜாதி ராஜனில்லையா?''

''ராஜாதிராஜன் இதில் என்ன செய்யமுடியும்?''

''எனக்கு எவ்வளவு படைபலம் தேவையானாலும் தருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருடைய இரு மந்திரிகளான திருச்சிற்றம்பலமுடையான் பல்லவராயனையும் அண்ணன் பல்லவராயனையும் படைகளை நடத்தச் சொல்லி, வெற்றி வாங்கித் தருவதாகவும் உறுதி கூறியிருக்கிறார்.''

பாண்டியனின் இந்தப் பிரதாபத்தைக் கேட்ட அடிகளார் பேச்சில் புகுந்து, ''புளியங்கிளையையே பிடித்துவிட்டீர்கள்! இனி யார் உதவியும் தங்களுக்குத் தேவையில்லை'' என்றார்.

''யார் சொன்னது? மழவராயன் உதவியின்றி இக் காரியம்எப்படி நடக்கும்?''என்றுபாண்டியன் கேட்டான்.

''என் உதவியா? நான் என்ன செய்யமுடியும்?''என்று ஆச்சரியப்படுவதுபோல் நடித்தான் மழவராயன்.

''குறுநில மன்னரே! மேலைமங்கலச் சிற்றரசு இந்தப் போரில் மிக முக்கியமான பாகத்தை வகிக்கப்போவது



ராஜதந்திரிகள் அனைவருக்கும் தெரியும். உமது உதவியை நாடியே வந்திருக்கிறேன். நீர் யார் பக்கமிருக்கப்போகிறீர் என்பதை அறியவே இங்கு வந்தேன்'' என்றான் பாண்டியன்.

''கேட்பானேன்? தங்கள் பக்கம்தான்!''

''வெறும் பேச்சில் அது இருந்தால் போதாது.''

''வேறு எப்படியிருக்க வேண்டும்?''

''சரியான ருசு காட்டவேண்டும்.''

''எப்படிக் காட்ட முடியும்?''

''உமது பெண்ணை விக்கிரமனுக்கு மணமுடிப்பதன் மூலம்.''

இப்படித் திடும் பிரவேசமாகப் பாண்டியன் மண விஷயத்தைப் பிரஸ்தாபிப்பானென்பதை மழவராயனோ, அடிகளாரோ எதிர்பார்க்கவில்லை. மழவராயன் பதில் சொல்லு முன்பாகவே அடிகளார், ''இது யோசிக்க வேண்டிய விஷயம்'' என்றார்.

குலசேகர பாண்டியன் முகத்தில் கோபம் தாண்டவமாடத் தொடங்கியது. ''உம்மை நான் கேட்கவில்லை உமது மன்னரைக் கேட்கிறேன்'' என்றார் உக்கிரமாக

''மன்னருக்கும் எனது அபிப்ராயம்தான்'' என்றார் அடிகளார் சற்றும் அச்சப்படாமல்

''ஏன், அப்படித்தானா?'' என்று குலசேகரன் மழவராயனைப் பார்த்துக் கேட்டான்.

''மன்னர் கோபிக்கக் கூடாது. தாங்கள் பெண் கேட்கிறீர்கள். இந்தச் சம்பந்தம் கிடைப்பது சுலபமல்ல. இதில் எவ்வளவு கௌரவம் இருக்கிறதென்பதும் நாம் அறியாத விஷயமல்ல. இருந்தாலும் திருமண விஷயம் பாருங்கள். பெண்ணையும் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?'' என்றான் மழவராயன்.

''இது ராஜீய விவாகம்.''

''இருந்தாலும் விவாகம் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் தானே?''

மழவராயனின் இந்தப் பதிலைக் கேட்டு அடுத்த அறையில் யாரோ கணைக்கென்று சிரித்தார்கள், அந்தச் சிரிப்பு குலசேகரன் காதிலும் விழுந்தது, "குழலி சிரிக்கிறாள்!" என்றான் கோபத்துடன்.

"குழந்தைதானே?"

கார்குழலியின் திருமண விஷயத்தைப் பற்றி நாடிழந்த மன்னனும், நடுநிலைமை வகித்த மேலைமங்கலச் சிற்றரசின் தலைவனும் காலத்தை லட்சியம் செய்யாமல் நீண்ட நேரம் பேசியும் முடிவு மட்டும் எதுவும் ஏற்படவில்லை. மழவராயன் பாண்டியனிடம், மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்ட போதிலும் பிடிகொடுத்துப் பதில் மட்டும் சொல்லவில்லை. "உங்கள் சம்பந்தம் மிக உயர்ந்தது. என்னைக் கௌரவப்படுத்துகிறீர்கள்" என்று சொல்லிக் கொண்டே, "எதையும் ஒருமாத காலத்திற்குப் பிறகுதான் திட்டமாகச் சொல்லலாம்" என சாமர்த்தியமாகத் தெரிவித்துவிட்டான். பேச்சினால் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் மனம் தளராத குலசேகர பாண்டியன் கடைசியாக விடைபெற்றுக்கொண்டு புறப்படுகையில், "சீக்கிரம் யோசித்து நாட்டின் நன்மைக்கு அவசியமான முடிவுக்கு வாருங்கள்" என்று கேட்டுக் கொண்டான். "ஆகட்டும்" என்று கூறிய மழவராயன், "அடிகளாரே! மன்னரை நான் ஜாக்கிரதையாக வெளியே அனுப்பிவிட்டுவருகிறேன். அடுத்த அறையைக்கவனியும்". என்று சொல்லிவிட்டு குலசேகர பாண்டியனுடன் படிகளில் இறங்கிச் சென்றான்.

அவர்கள் போனதும் அடிகளார் மிக விரைவாகக் கோடி அறைக்கு ஓடினார். கதவைத் திறந்து பார்த்ததும் அறையிலிருந்த நிலையைக் கண்டு, "அடடா! மர்மம் இது தானா? நான் எத்தனை முட்டாள்" என்று சொல்லிக் கொண்டதோடு நில்லாமல் சிரிப்பை அடக்க முடியாதவராய்த் தமது சரீரம் குலுங்க இடி இடியென்று கட்டிடமே அதிரும்படியாகப் பெரிதாகச் சிரித்தார்.

## 11. கோட்டை வாசல் கழுகுகள்

அறை இருந்த நிலையைக் கண்டதும் அப்படி அத்து மீறி அடிகளார் சிரித்ததில் ஆச்சரியமேதுமில்லை. அடிகளாரென்ன, வேறு யாராயிருந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் சிரிப்பை அடக்கியே இருக்க முடியாது. தமது மடியிலிருந்து தவறி விழுந்த சாவியை எடுத்துக் கொண்டு கோபத்துடன் அறையைத் திறந்து நுழைந்த மழவராயன் அடியோடு மனோநிலை மாறித்திரும்பியதின் உள்வயணம் அறையைக் கண்ட பிறகுதான் அடிகளாருக்குப் புரியலாயிற்று. திருப்பப் பெரிய அறைக்குள் வந்த மழவராயன் தம்முடன் பேசிய பேச்சுக்களின் அர்த்தமும் அவன் சிரித்ததின் காரணமும் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் சிறுகச் சிறுக விளங்கவும் தொடங்கியது. எப்பேர்ப்பட்ட ஆபத்தை எத்தனை சிறிய தந்திரத்தால் அபராஜிதன் உடைத்தெறிந்துவிட்டான் என்பதை நினைக்க நினைக்க அவருக்குச் சொல்லவொண்ணா வியப்பும் பாண்டிய சேனாதிபதியின் புத்திக் கூர்மையைப் பற்றி மிதமிஞ்சிய மதிப்பும் ஏற்பட்டு, "அப்பா சேனாதிபதி யமப்பேர்வழி!" என்று தமக்குள்ளேயே சிலாகித்துக் கொண்டார்

அறை ஒரே அலங்கோலமாகக் கிடந்தது. கோடியில் ஒரு மூலையில் படுப்பதற்காகப் போடப்பட்டிருந்த பெரிய மஞ்சத்தைத் தவிர சின்னஞ்சிறு உட்காரும் மஞ்சங்கள் குப்புறக் கவிழ்த்துக் கிடந்தன. திரைச் சீலைகள் கிழிக்கப்பட்டு ஆங்காங்கு எறியப்பட்டுக் கிடந்தன.

கிழிக்கப்பட்டக் கந்தலில் ஓரிரண்டு குப்புறக் கிடந்த மஞ்சத்தினொன்றின் மூலையில் செருகப்பட்டு, யாரோ மஞ்சத்தைத் துடைத்துக் கொண்டிருந்தவர்கள் பாதியில் நிறுத்தியதைப் போன்ற தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. வெளியில் மொட்டை மாடியில் ஒரு புறத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அறையை சுத்தம் செய்யும் துடைப்பம் முதலிய சாமான்கள் அங்கிருந்து கொண்டுவரப்பட்டு அறையில் அங்குமிங்கும் எறியப்பட்டிருந்ததோடு அறையை அலம்ப நீர் கொண்டு வரும் தவலைகள் இரண்டும் உருட்டி விடப்பட்டுக் கிடந்தன

அறையிருந்த நிலையை யார் கவனித்திருந்தாலும் அதை ஏதோ அன்று காலையில் தான் யாரோ சுத்தம் செய்யத் [illegible]பாதியில் விட்டிருக்கிறார்கள் என்ற பிரமையை அளித்திருக்குமேயன்றி, வேண்டுமென்றே அந்த நிலை சிருஷ்டிக்கப்பட்டதென்ற ஊகத்துக்குச் சிறிதும் இடம் கொடுத்திருக்காது. அபராஜிதனும் காரியும் அத்தனை திறமையுடன் அறையை அலங்கோலப் படுத்தியிருந்தார்கள்.

அறை இவ்வளவு கேவல ஸ்திதியில் இருந்ததால்தான் மழவராயன், பாண்டிய மன்னனை அந்த அறைக்குள் அழைக்க இஷ்டப்படவில்லை என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்ட அடிகளார் மழவராயன் பேசிய ஒவ்வொரு பேச்சையும் மனதில் நினைத்துப் பார்த்து அவற்றுக்கெல்லாம் தாம் செய்து கொண்ட விபரீத அர்த்தத்தையும் எண்ணித் திரும்பத் திரும்ப நகைத்தார். குலசேகர பாண்டியனை அந்த அறைக்கு அழைத்து வரக் கூடாதென்பது நியாயம்தானென்று மழவராயன் ஒப்புக் கொண்டதற்கும், குழலியைக்கூட அங்கு அனுப்புவது சரியல்லவென்று அவன் சொன்னதற்கும் சரியான அர்த்தம் அவருக்கு அப்பொழுது தான் புரிந்தது. 'அங்கிருந்த வஸ்துக்களைக் கண்டேன்' என மழவராயன் கூறியது கிழிந்து கிடந்த திரைச் சீலைகளையும், குடம் துடைப்பம் வகையறாக்களையுமே தவிர, தாம் நினைத்தது போல் அபராஜிதனையும், காரியையும் அவன் மறைமுகமாகச் சுட்டிக் காட்டவில்லை என்பதையும் அடிகளார் தெரிந்து கொண்டார். சந்தர்ப்பங்கள் லேசாக மாறுபட்டாலும் மனிதர்களின் வார்த்தைகளில் எத்தனை மாறுபட்ட அர்த்தங்கள் தொனிக்கின்றன என்பதை எண்ணிய அடிகளார் சிருஷ்டியின் விசித்திரத்தை நினைத்துப் பெரிதும் வியந்தார்.

இப்படிப் பழைய சம்பாஷணைகளை நினைத்துமெள்ள மெள்ளச் சுயநிலைக்கு வந்த அடிகளார் அறைக்கோடியில் கார்குழலி மட்டும் சிலையென உட்கார்ந்திருந்ததையும்



வேறு யாரும் இல்லை என்பதையும் கண்டு வெளி மாடிக்கு ஓடி சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கு யாரையும் காணாது போகவே கார்குழலியிடம் திரும்பி வந்து, “எங்கே அவர்கள்?” என்று விசாரித்தார்.

“எனக்குத் தெரியாது” என்றாள் கார்குழலி.

“நீ வந்தபோதே அறையில் இல்லையா?” என்று அச்சத்துடன் வினவினார் அடிகளார்.

“இல்லை”.

“எங்கு போயிருப்பார்கள்? எங்கு போக முடியும்?” என்று அடிகளார் திணறினார்.

“அதுதான் எனக்கும் புரியவில்லை. மனிதர்கள் காற்றில் பறக்கமுடியாது. இங்கிருந்து வெளியேற மாடிப்படி வழியொன்றுதான் எனக்குத் தெரியும். ரகசிய வழி உங்களுக்குத்தான் தெரியும்” என்று கார்குழலி அடிகளாரைப் பார்த்துச் சொன்னாள்.

அடிகளார் மேற்கொண்டு அவளிடம் பதிலேதும் சொல்லாமல் தீவிர யோசனையில் இறங்கினார். அறை முழுவதையும் மீண்டும் ஒரு முறை சுற்றிப் பார்த்ததன்றி வெளி மாடிக்கும் இரண்டு தடவைப் போய்வந்தார். பிறகு அறையில் கிடந்த சாமானகளையெல்லாம் உற்றுப் பார்த்தார். பிறகு ஏதோ கணக்குப் போட்டார். கடைசியில் “புரிந்துவிட்டது, புரிந்துவிட்டது” என்று அவர் கூறிய போது வார்த்தையில் மிதமிஞ்சிய அச்சமும் தொனித்தது. விஷயத்தை அடிகளார் ஓரளவு ஊகித்துவிட்டார்என்பதை அவர் பேச்சிலிருந்தும் முகப்பாவத்திலிருந்தும் தெரிந்து கொண்ட கார்குழலி கட்டிலிலிருந்து எழுந்து அவர் நின்றிருந்த இடத்துக்கு வந்து, “என்ன புரிந்து விட்டது?” என வினவினாள்.

“இதோ, அறையைச் சுத்தம் செய்யும் சாமான்கள் இருக்கின்றன. கவனித்தாயா?” என்று அடிகளார் துடைப்பம் முதலியவற்றைச் சுட்டிக் காட்டினார்.

"ஆம்" என்று கார்குழலி தலையை அசைத்தாள்.

"இதில் ஒரு சாமான் காணவில்லை."

"என்ன?"

"என்னவா? சரியாகப் பார்"

என்ன பார்த்தாலும் கார்குழலிக்குப் புரியவில்லை' அடிகளாரைப் போன்ற சன்னியாசிகளுக்கும், மடாதிபதிகளுக்கும் இந்த சில்லரைப் பொருள்களில் மிகுந்த பிடிப்பு உண்டென்பதும், பூண்டது துறவறமாயிருந்தாலும் மடாதிபதிகள் மடத்துச் சாமான்களை ஒன்று விடாமல் கணக்குப் போட்டு வைத்திருப்பதைப்போல், கன்னி மாடத்திலிருந்த தட்டுமுட்டுச் சாமான்களிலிருந்து சகலத்தையும் அடிகளார் கணக்குப் போட்டு வைத்திருந்தாரென்பது கார்குழலிக்குத் தெரியுமானாலும், இந்தச் சில்லரை விஷயங்களில் அவள் மட்டும் என்றும் அக்கறை கொண்டதே கிடையாது.ஆகையால் சொன்னாள், "பார்த்தேன், தெரியவில்லையே ஸ்வாமி" என்று.

"இதிலெல்லாம் நான் அக்கறை காட்டியபோதெல்லாம் சன்னியாசிக்கு இது சரியா என்று பரிகசித்தாயே பார்த்தாயா?"

"இதையெல்லாம் கவனிக்கப் பணிப்பெண்கள் இருக்கிறார்களே என்று சொன்னேன்."

"இப்பொழுது இந்த இரண்டுபேரும் ஓடிப்போனதற்குக் காரணம் உன் பணிப்பெண்களால் சொல்ல முடியுமா?"

"அதற்கும் இந்த சாமான்களுக்கும் என்ன ஸ்வாமி சம்பந்தம்?"

"என்ன சம்பந்தமா? இங்கிருந்து தப்ப வேண்டுமானால் வசதி வேண்டாமா?"

"ஆமாம்."

"இங்கிருந்த பெரிய தாம்புக் கயிறு இரண்டையும் காணோம்."



அடிகளாரின் இந்தப் பேச்சினால் பேரதிர்ச்சி அடைந்த கார்குழலி விடுவிடென்று வெளிமாடிக்கு ஓடினாள். கைப்பிடிச் சுவர்ப் பகுதிகளைப் பார்த்துத் திரும்பவும் அறைக்கு வந்து, "அடிகளாரே! எங்கும் கயிறு கட்டித் தொங்கக் காணோமே!" என்றாள்.

"உன் கண்ணுக்குப் புலப்படாது. நான் காட்டுகிறேன் வா" என்று அழைத்துப்போன அடிகளார் வெளிமாடியின் கைப்பிடிச் சுவரில் வெளிப்பக்கமாக இருந்த பெரிய இரும்பு ஆணியில் கயிறு கட்டப்பட்டிருந்ததைக் காட்டி "குழலி! இப்பொழுதுதான் உண்மை ஆபத்து ஆரம்பமாகிறது. இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு இறங்கினால் நேராகப் பணிப்பெண்கள் அறைக்குப் பக்கத்தில்தான் இறங்க முடியும். பணிப் பெண்கள் கண்டால் பயந்து கூச்சலிடுவார்கள். வேறு பக்கம் ஓடத்தொட.ங்கினால் வீரர்கள் மடக்கிக் கொள்வார்கள். எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் இருவரும் நமது வீரர்கள் கையில் சிக்குவது என்னவோ திண்ணம்" என்று விளக்கிச் சொன்னார்.

கார் குழலியின் கள்ளமற்ற உள்ளத்தில் அபராஜிதனைப் பற்றி கவலை அலைபாயத் தொடங்கவே அவள் பெருமூச்செறிந்து, "இத்தனையும் அவர் எனக்காகத்தானே செய்தார்" என்று வார்த்தைகளைச் சற்று இழுத்து ஏக்கத்துடன் சொன்னாள்.

"உனக்காகச் செய்தாரா? ஏன், எனக்காகச் செய்திருக்கக் கூடாதோ!" என்று அடிகளார் வினவினார் வீஷமத்துடன் அவளைப் பார்த்து.

இத்தனைத் துக்கத்திலும் கார்குழலி வெட்கம் கலந்த ஒரு புன்முறுவலையும் காட்டினாள். "உங்களுக்காக எப்படிச் செய்யமுடியும் அடிகளாரே! நீங்கள் ஆண்பிள்ளை...." என்றும் மெல்லச் சொன்னாள்.

"ஆண்பிள்ளையாக இருந்தாலென்ன?" அடிகளார் இடக்காகக் கேட்டார்.

'இங்கிதம் தெரியாமல் இப்படிக் கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்வது?' என்று கார்குழலி மனத்துக்குள் நினைத்துக் கொண்டாளேயன்றி வாய்விட்டு எதுவும் சொல்லவில்லை. கைபிடியின் அந்தப் பக்கத்திலிருந்து மீண்டும் வெளிமாடிக்குள் தாவிய அடிகளார்கூட மேற்கொண்டு எதுவும் பேசாமல் தீவிர யோசனையில் இறங்கினார். எங்கிருந்தோ திடீரென்று முளைத்த பாண்டிய சேனாதிபதி, தான் வளர்த்த பைங்கொடியின் உள்ளத்தை கண்மூடிக் கண்திறக்கும் நேரத்தில் நைந்து போகும்படி செய்துவிட்டானே என்று நினைத்துப் பார்த்ததோடு அதனால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளையும், ராஜீய சிக்கல்களையும் ஆராயத் தொடங்கி 'இதுஎங்குப் போய் முடியப்போகிறதோ, ஆண்டவன் விட்டவழி' என்ற முடிவுக்கு வந்தவராய், 'குழலி! வா, போவோம்; நான் போய் இவர்கள் அகப்பட்டுக் கொண்டார்களா என்பதைத் கவனித்து அகப்பட்டிருந்தால் அவர்ளைத் தப்புவிக்க ஏதாவது முயற்சியெடுக்கிறேன்'' என்றார்

''ஆமாம், அடிகளாரே! அதை முதலில் கவனியுங்கள். தந்தை கண்ணில் அவர்கள் பட்டால் என்ன ஆகுமோ?'' என்று அச்சத்துடன் கூறிக்கொண்டே அடிகளாரைப் பின் தொடர்ந்தான்.

எதுவும் ஆகவில்லை. அராஜிதனோ காரியோ யார் கண்ணிலும் பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் எப்படித் தப்பினார்கள் என்பது தந்திரத்தில் கைதேர்ந்த அடிகளாருக்கே விளங்கவில்லை என்றால் வேறு யாருக்கு விளங்கப்போகிறது? அபராஜிதனை மீண்டும் சந்திக்கும் போது அவன் தப்பிய வித்தையை மட்டும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அடிகள் தீர்மானித்தார்.

அடுத்த சில தினங்களில் அவர் கார்குழலியுடன்பேசிய சமயங்களிலும் இந்த விஷயத்தைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபித்தார். கார்குழலியும் அபராஜிதனை பற்றியே பேசிக் கொண்டிருந்ததோடு அவன் பெயரையும் அறியவிரும்பி,



''அவர் யார் அடிகளாரே? சொல்ல மாட்டீரா?'' என்று அடிக்கடி கேட்டும் வந்தாள். அடிகளார் அதற்கு மாத்திரம் பதில் சொல்லாமல் தட்டிக்கழித்தாலும் அவள் செய்த தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் ஒரு நாள் சொன்னார், ''குழலி! இப்பொழுது என்னைக் கேட்காதே. ஒரு நாள் நீயே தெரிந்துகொள்வாய். தெரிந்தபோது நான் அவனைப்பற்றி உன்னிடம் எதுவும் சொல்லாதிருந்தது சரியென நீயே தெரிந்துகொள்வாய்'' என்று.

அர்த்தம் புரியாமல் அடிகளாரை ஏறெடுத்து நோக்கினாள் கார்குழலி ''குழலி! அரசகுமாரிகள் அரசியல் சதுரங்கப் பலகையின் காய்கள் அவர்களை யார் எதற்காக எந்தப் பக்கம் நகர்த்துவார்களோ சொல்ல முடியாது. சுய உணர்ச்சிகளை அவர்கள் துடைத்துவிட வேண்டும்'' என்று கூறிவிட்டு தன் பேச்சின் முழு அர்த்தத்தையும் விளக்காமல் போய்விட்டார். அவர் அப்படிப் போய்விட்டாலும் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட கார்குழலி, ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றை விட்டாள்.

அடிகளாரின் இந்த உபதேசம் நடந்த நான்கு நாட்கள் கழித்து அபராஜிதனும் காரிவளவனும் மதுரை மாநகரின் எல்லையை அடைந்து கொண்டிருந்தார்கள். காரியின் யோசனைப்படி பொன்னமராவதியில் இரண்டு நாட்கள் தங்கிக் காயத்துக்குச் சரியான சிகிச்சை செய்துகொண்டதோடு இளைப்பாறவும் செய்ததால் பழைய வலுவை மீண்டும் பெற்றிருந்தாலும் அபராஜிதன் முகத்தில் சோகமும் ஆழ்ந்த யோசனையும் கலந்து பிரதிபலித்தன. புத்தி எங்கெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்ததால் காரியுடன் ஏதும் பேசாமலே குதிரையை நடத்தினான் அபராஜிதன். சேனாதிபதியின் மனோ நிலையைப் புரிந்துகொண்ட காரியும் சம்பாஷணையைத் துவக்காமல் அபராஜிதனுக்குச் சற்றுப் பின்தங்கிக் குதிரையை மெள்ளச் செலுத்தினான். மதுரை மாநகரை அவர்கள் அணுகியபோது பொழுது சாயும் சமயமாய் இருந்தது. மதுரையின் பெரிய

கோட்டைவாசலும் அவர்கள் கண்முன்பு பிருமாண்டமாக எழுந்தது. அபராஜிதன் சட்டென்று குதிரையை நிறுத்திக் கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்திலிருந்தே அம் மாநகர் மீது தன் கண்களை ஓட்டினான்.

மனோகரமான அந்த மாலைவேளையில்,மெல்லமெல்ல மங்கிக்கொண்டிருந்த மஞ்சள் வெயிலின் மயக்கும் திரும் பிரகாசத்தில், மதுரை மாநகர், மிக ரம்மியமாகக் காட்சி அளித்தது. பைந்தமிழும் பாவலரும் இரண்டறக் கலந்து உறவாடியதால் எழுந்த பல இன்பக் கவிதைகளின் இருப்பிடமான மதுரை மாநகர், ஆழ்கடலிலிருந்து மூதன் முத லாக எழுந்த ஒரே நிலப்பரப்பான ஜம்பூத்வீபத்தின் ஆரம்ப காலத்திலேயே ஏற்பட்டதால் மூதூர் (பழையவூர்) எனப் பிரசித்தமாகி, பின்பு காலத்தின் வாக்கினிலே மதுரை என மருவிவிட்டதுமான ஆதி மதுரை ஒன்று இருந்ததற்கு அத் தாட்சியாக இன்றும் விளங்கும் மதுரை மாநகர் மூதூரை மும்முறை கடல்கொண்டும் அதன் தமிழ் மக்கள் மானாது பின்னடைந்து வாழ இடம் கொடுத்ததால் சரித்திரத்திலும், இறவா இடம் பெற்றுள்ள மதுரை மாநகர், கண்ணன் அடிவைத்த வடமதுரைக்கு ஒரு சவாலாகவும் ஆண்டவன் திருவிளையாடல்களாலும் அவற்றால் மலர்ந்த அடியார்களின் உள்ளத்திலிருந்து தெள்ளமுதென எழுந்த தீந்தமிழ்ப் பாக்களாலும் தெய்வீகம் பெற்றுத் துலங்கும் தென்மதுரை மாநகர், 'நாவலம் பெரும் தீவினில் வாழ்பவர்'' என அப்பர் பெருமானும் மற்றோரும் போற்றிப் புகழ்ந்த பெருமக்கள் வாழ்ந்த தமிழன்னையின் மடியெனத் திகழும் மதுரை மாநகர், எட்டுரெண்டும் தெரியாத கெட்ட மானிடருய்யப் பிட்டுக்கு மண்சுமந்த பிரம்படியும் பட்டதால் ஆண்டவனும் அடியாரும் ஒன்றே என்பதையும் சிற்றுயிர்களெல்லாம் பேருயிர் பரவிக் கிடக்கிறதென்ற பிரபஞ்ச தத்துவத்தையும் உலகுக்கு விளக்கிக்காட்டிய எம்பெருமான் கோயில் கொண்ட



மதுரை மாநகர் அர்த்தநாரீசுவரியான அம்பாளும் அடியார்களை ஆட்கொள்ள அரசன் உடலிலிருந்து பிரிந்து இறங்கினாளோ என ஐயுறும்படி அவதரித்து, தன் அருள் விழிகளால் அஷ்ட ஐசுவரியத்தையும் அளித்ததோடு அரியணையிலிருந்து அரசும் ஆண்ட தேவி மீனாட்சியின் தலைமைத் தலமாம் மதுரைமாநகர், காவியத்துக்கும், ஓவியத்துக்கும், வாணிபத்துக்கும், விவசாயத்துக்கும், ஆய கலை அறுபத்து நான்குக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்த மதுரை மாநகர், வைர வைடூரியங்களும், முத்துக்களும் குவியல் குவியலாகக் கடைத் தெருக்களில் கிடந்ததால் செல்வத்துக்குப் பேர்போன மதுரை மாநகர், கற்பரசி கண்ணகி சிலம்பெறிந்து தீப் பொறி கிளப்பி, அக்கினிப் பிழம்பிலேகுளிக்க வைத்ததால் தூய்மை பெற்றுத் தீயிட்ட தங்கம்போல் புது மெருகுடன் ஜொலிக்கும் மதுரை மாநகர் இத்தகைய புராதன நகரம் பெரிய கோபுரங்களுடனும் வானத்தைத் தொடும் கட்டிடங்களுடனும் மிக அழகாகக் கண்முன்னால் எழுந்து நின்றதைப் பார்த்தான் அபராஜிதன்.

இப்பேர்ப்பட்ட மாநகர், தாயாதிச் சண்டையால் சீரழியப் போகிறதே என்ற நினைப்பால் மூச்சை ஒரு முறை இழுத்துவிட்டு மிகுந்த ஏக்கத்துடன் காரியைப் பார்த்து "வா, நகரத்துக்குள் போகலாம்'' என்று கூறி விட்டுக் குதிரையை நடத்தினான். கோட்டை வாசலைக் கிட்டக் கிட்ட ஊர் ஜனங்கள் பேசும் சத்தமும், வீரர்கள் ஆணையிடும் கூச்சலும், வாகனங்கள் புரண்டோடுவதால் ஏற்படும் ஒலியும் எல்லாமாகச் சேர்ந்து பேரிரைச்சலாகக் கேட்ட மதுரை மாநகர் முழு உயிருடன் சஞ்சரிப்பதைப் புலப்படுத்தியது. அபராஜிதனும் காரியும் கோட்டை வாசலை அணுகுவதைத் தூரத்திலிருந்தே பார்த்த ஓரிரு வீரர்கள் சேனாதிபதியின் வருகையை அறிவித்தார்கள். அடுத்த வினாடி தாரை வாத்தியங்கள் பலமாக முழங்கின. குதிரைப் படையினர் அணிவகுத்துச் சேனாதிபதியை எதிர்கொள்ள வந்தார்கள். குதிரைப் படையினரில்

இருபது பேர் புடைசூழக் காரியுடன் கோட்டை வாசலை அணுகிய அபராஜிதன் கோட்டைக் கதவுகள் பொருத்தப்பட்டு சிற்ப வேலைப்பாட்டால் சிறப்பான தோற்றமளித்த இரண்டு பெரிய கருங்கல் கம்பங்களையும் ஏறெடுத்துப் பார்த்தான். பார்த்ததும் சட்டென்று குதிரையை நிறுத்திக் காரியை அருகில் அழைத்து, ''காரி! அதோ பார்த்தாயா!'' என்று கம்பங்களின் உச்சியைக் காட்டினான்.

கம்பத்தின் உச்சி ஒவ்வொன்றிலும் நாலைந்து கழுகுகள் உட்கார்ந்து கொண்டிருந்தன. 'இதில் என்ன விந்தையிருக்கிறது?' என்று நினைத்த காரி அபராஜிதனைப் பார்த்து, ''கழுகுகள் பிரபு'' என்றான். தன் குதிரையை அபராஜிதன் குதிரையோடு நெருக்கி, ''கழுகுகளுக்கு அடியில் கவனி!'' என்று கூறினான் அபராஜிதன், காரிக்கு மட்டும் கேட்கும்படியாக.

அபராஜிதன் உத்தரவுப்படி கம்பத்தின் உச்சிகளைக் கூர்ந்து கவனித்த காரி அசந்துபோய் ஒரு கணம் குதிரையில் விறைத்து உட்கார்ந்தான். அச்சமே இன்னதென்பதை அறியாத அவன் முகத்தில் கூடப் பயத்தின் சாயை வெகு வேகமாகப் படர்ந்தது.

## 12. அதிர்ச்சியும் ஆத்திரமும்

கம்பங்களின் உச்சிகளில் உட்கார்ந்திருந்த கழுகுகளுக்குச் சற்றுக் கீழே கண்ணைச் செலுத்திய காரியின் முகத்தில் பயச்சாயையைக் கண்ட அபராஜிதன் உடலிலும் நடுக்கம் ஒன்று ஒருகணம் ஊடுருவிப் பாய்ந்தது. சொல்லவொண்ணா அருவருப்பாலும் துக்கத்தாலும் ஏற்பட்ட அந்த நடுக்கத்தைக் கண்மூடிக் கண்திறக்கும் நேரத்தில் உதறி விட்ட அபராஜிதன் தன் கண்களைக் காரியினிடமிருந்து அகற்றி, கம்பங்களின் மேல் சஞ்சரிக்கவிட்டான். கழுகுகள் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்துகொண்டு கம்பங்களின் உச்சிகளில் ஈட்டிகளின் முனைகளில் செருகப் பட்டிருந்த இரண்டு தலைகளைக் கொத்திக் கொண்டிருந்



தன. இன்னும் சில கழுகுகள் கம்பங்களுக்கு மேல் வட்டமிட்டுத் திடீரெனத் தலைகளுக்காகக் கீழ்நோக்கிப் பாய்ந்து ஒரு கொத்துக் கொத்திவிட்டு மீண்டும் உயரப் பறந்தன. அப்படித் திடீர்ப் பாய்ச்சலில் தலைகளைக் கொத்த வந்த கழுகுகளை ஏற்கனவே கம்ப உச்சிகளிலிருந்த கழுகுகள் எதிர்த்துச் சிறகாலடித்துக் கொத்திக் கூவின. இத்துடனில்லாது கழுகுகளை எதிர்க்கத் திறனில்லாத காக்கைக் கூட்டங்களும் ஏராளமாகச் சுற்றிப் பறந்தும் கம்பங்களுக்குக் கீழே சிந்தும் மாமிசத்தை உண்ணக் குறுநடை போட்டும், சாய்வாகப் பார்த்தும் தத்தித்தத்தி ஓடியும் கூச்சலிட்டுக் கொண்டுமிருந்தன. கம்ப உச்சிகளில் கூட்டமாக உட்கார்ந்திருந்த கழுகுகளால் மறைக்கப் பட்டிருந்த தலைகளிரண்டும், இடையிடையே கழுகுகள் விலகி உயரப் பறந்தபோது ரத்த மொழுக, சாயந்திரத்து வெயிலில் மிகப் பயங்கரமாகக் காட்சியளித்ததோடு, கீழேயிருந்தவர்களை உக்கிரமாக உற்றும் பார்த்தன.

யுத்தங்களில் ஆயிரமாயிரம் தலைகள் உருண்டதைக் கண்களால் பார்த்துப் பழக்கப்பட்ட பாண்டிய சேனாதிபதியின் உள்ளத்தில்கூட அந்த இரு தலைகள் பேரச்சத்தை விளைவித்தன. 'இன்னுமா பாண்டிய நாட்டைக் காப்பாற்ற முன் வரமாட்டீர்கள்' என்று அத்தலைகள் தன்னை நோக்கிக் குற்றம் சாட்டி வெறுப்புடன் விழிப்பது போலிருந்தது அபராஜிதனுக்கு. நீலமலைச் சரிவில் தன்னுடன் போரிட்ட நிஷதராசன் தலையும், வங்கார முத்தரையன் தலையும் கம்பங்களின் உச்சிகளில் காட்சியளித்ததைப் பற்றி ஒரு விநாடி யோசித்த அபராஜிதனுக்கு இத்தனை பெரிய படைத் தலைவர்களின் தலையைச் சீவிவிட்ட வீரபாண்டியனுக்குத் தனது தலையையோ, காரியின் தலையையோ சீவுவது ஒரு பிரமாதமான காரியமல்ல என்று சந்தேகமறத் தெரிந்தது. இந்த நிலையில் மதுரைக்குள் போவது உசிதமா என்று கூட ஒரு வினாடி எண்ணினான். ஆனால் அந்த எண்ணத்தை மறுகணமே உதறிவிட்டுக் கோட்டைக்குள்

குதிரையைச் செலுத்தினான். நண்பர் இருவர் தலைகளையும் பார்த்ததிலிருந்து மனத்தில் அமைதியை இழந்துவிட்ட காரி ஏதும் பேசாமல் சேனாதிபதியின் அருகிலேயே தன் குதிரையைச் செலுத்தினான். அத்தனை அமைதியிலும் மதுரையின் பேரிரைச்சல் அவர்களைத் தாக்கிக் குற்றம் சாட்டுவதுபோல் மிகப் பலமாக எழுந்து கொண்டிருந்தது.

மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட மாவீரனாதலால், ஒவ்வொரு கோட்டை வாசலிலும் சேனாதிபதிக்கு வரவேற்பு பிரமாதமாயிருந்தது. காவலுக்காக நிறுத்தப்பட்டிருந்த யானைகள் துதிக்கைகளைத் தூக்கி வணங்கியதோடு சந்தோஷமாகக் கூச்சலும் போட்டன. குதிரைகள் மீது காத்து நின்ற வீரர்கள் வாட்களைத் தாழ்த்தி வணங்கினார்கள். சேனாதிபதியும் அவனைத் தொடர்ந்து வந்த சிறு குதிரைப்படையும் உட்புகுவதற்காகக் கோட்டைக் கதவுகளை அகலத் திறந்த காவலாளிகள் தலைகளை வணங்கி, சேனாதிபதி அப்புறம்செல்லும்வரை நின்ற இடத்திலேயே மரியாதையாக நின்றார்கள். வீதிகளில் அபராஜிதனைக் கண்ட சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் கூச்சல் போட்டார்கள். வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து நின்றார்கள். அபராஜிதன் வருவதற்கான தாரை முழங்கப்பட்டதால் மாடிக் கைப்பிடிச் சுவர்களில் வந்து கூடிய மங்கையர் அபராஜிதனைச் சுட்டிக் காட்டி ஏதேதோ பேசிக்கொண்டார்கள். சிலர் வெட்கத்துடன் சிரித்தார்கள். புஷ்பக் கடைவீதிகளில் அபராஜிதன்மீது மலர்கள் வாரி வீசப்பட்டன. சுற்றிலும் வீரர்கள் அணிவகுத்து வந்ததால் கிட்டே அவனை அணுக முடியாமல் தவித்த பூ விற்கும் சிறுமிகள் தங்கள் கைகளிலிருந்த செண்டுகளை அவன்மீது விட்டெறிந்தார்கள் எதற்கும் அஞ்சாத உயர்ந்து சிவந்த மலைகள் கூட மிக வேகமாக வந்துகொண்டிருந்த தங்கள் வாகனங்களை ஓரமாக நிறுத்தி இறங்கி நின்ற



தலை தாழ்த்திச் சேனாதிபதிக்கு வழிவிட்டார்கள். மக்களின் வாழ்த்துக்கள் நாலாபுறத்திலும் ஒலிக்க, மன்னனைவிட மிகச் சிறப்பாக மதுரை மாநகரத்தின் வீதிகளில் சென்ற அபராஜிதன் எதற்கும் காது கொடாமலும், கண்ணைத் தூக்கி யாரையும் கவனிக்காமலும், விடுவிடென்று குதிரையை நடத்தித் தன் மாளிகைக்கு வந்து சேர்ந்தான். குதிரையிலிருந்து இறங்கியதும் சேணத்தைக் குதிரை முதுகிலெறிந்துவிட்டு யாரிடமும் பேசாமல் காரி பின் தொடர மாளிகைக்குள் நுழைந்தவன், நேராகத் தனது அந்தரங்க அறைக்குள் சென்று உடையைக்கூடக் கழற்றாமல் மஞ்சத்தில் தடாலென்று உட்கார்ந்து நீண்ட நேரம் ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான்.

ஆழ்ந்த சிந்தனைக்கு ஆளாகிவிட்ட அபராஜிதனும் உட்காராமல் அவனுக்கு எதிரே உலாவிக்கொண்டிருந்த காரிவளவனும் வெகுநேரம்வரை எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தார்கள். கடைசியில் மௌனத்தைக் கலைத்த காரிவளவன் வார்த்தைகளில் விவரிக்க இயலாத வருத்தம் தோய்ந்து கிடந்தது.

"இரண்டு மாபெரும் வீரர்களைப் பாண்டியநாடு இழந்துவிட்டது, பிரபு" என்று சொல்லிக் காரி பெருமூச்செறிந்தான்.

அதுவரை பேசாமலிருந்த அபராஜிதன் மெள்ள அவனை நோக்கித் தன் கண்களை உயர்த்தி, "அதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில்..." என்றான்.

"எந்தச் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுகிறீர்கள் பிரபு?" என்று காரி மெல்லக் கேட்டான்.

"பாண்டிய நாட்டைக் காப்பாற்ற ஒவ்வொரு வீரனும் தேவையான இந்தச் சந்தர்ப்பத்தில்! சிங்கள வீரர்களின் அடிகளில் சிக்கித் தத்தளிப்பதால் பாண்டிய நாட்டைச் சுற்றி யுத்த மேகங்கள் சூழும் இந்தச் சந்தர்ப்பத்தில்!" என்று சொல்லிய அபராஜிதன் மஞ்சத்தை

விட்டெழுந்து அறையில் அங்குமிங்கும் சற்று நேரம் உலாவினான்.

"பிரபு! எனக்கு ஒரு சந்தேகம்...." என்று ஆரம்பித்தான் காரி.

"என்ன காரி?"

"நிஷதராசனும் முத்தரையனும் கொல்லப்பட்டிருப்பதால் சதியைப் பற்றிய விஷயம் மன்னனுக்குத் தெரிந்து தானே இருக்கவேண்டும்!"

"ஆம்."

"அப்படியிருந்தும் நம்மை ஏன் ஊருக்குள் நுழைந்தவுடனே கைது செய்யவில்லை?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. அதுமாத்திரமல்ல, காரி! நாம் இரண்டு நாட்கள் பொன்னமராவதியில் இருந்திருக்கிறோம். அங்கு இதைப்பற்றிப் பிரஸ்தாபமே இல்லையே!"

"ஆமாம் பிரபு! விஷயத்தை ரகசியமாக வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது" என்று காரியும் கூடப் பாடினான்.

"கொலை செய்யப்பட்ட விஷயம் தெரியநியாயமில்லை. சிரச்சேதம் இன்று காலையில்தான் நடந்திருக்கிறது. நாம் வருவதற்குச் சற்று நேரத்துக்கு முன்புதான் கோட்டை வாசலில் தலைகள் குத்தி நிறுத்தப்பட்டிருக்கின்றன."

"அது எப்படித் தெரிந்தது உங்களுக்கு?"

"தலைகளை வெட்டி ஒரு நாழிகைக்குமேல் ஆகியிருந்தால் துர்நாற்றம் கிளம்பியிருக்கும். தவிர, தலைகள் அடையாளம் தெரியும்படியான நிலையில் கழுகுகளும் விட்டு வைத்திருக்காது"

சேனாதிபதியின் ஊகம் சரிதானென்பதைக் காரிவளனும் ஒப்புக்கொண்டாலும், சதி வெளியாகியிருக்கும் பட்சத்தில் தங்களிருவரையும் ஏன் கைது செய்யவில்லை என்பது மாத்திரம் அவனுக்குச் சற்றும் புரியாமலிருக்கவே



அபராஜிதனைப் பார்த்துக் கேட்கும் தோரணையில்
திரும்பினான். அவன் மனத்தில் ஓடிய எண்ணங்களை
முன்னமேயே புரிந்துகொண்ட அபராஜிதன், "காரி, இதில்
ஏதோ பெரிய மர்மமிருக்கிறது" என்றான்.
"என்ன மர்மம் பிரபு?" என்று காரி வினவினான்.
"நீலமலைக் குடிசையில் நான் கூறியபடி சதியின்
விஷயம் மன்னனுக்குத் தெரிந்தேயிருக்கிறது. அப்பொழுது
ஊகத்திலிருந்த சதி ரகசியம், நிஷதராசனும் முத்தரை
யனும் சிங்கள வீரர்களால் பிடிக்கப்பட்டபின் வெட்ட
வெளிச்சமாகியிருக்க வேண்டும்" என்ற அபராஜிதனை
இடைமறித்த காரி, "ஏன் விசாரணையின்போது
நிஷதராசனும் முத்தரையனும் வாயைத் திறந்திருப்பார்க
ளென்று நினைக்கிறீர்களா?" என்று வினவினான்.
"இல்லை காரி! அவர்களிடமிருந்து ஒரு வார்த்தைகூட
வெளி வந்திருக்காது. ஆனால், சந்தர்ப்பங்களைத்
தொகுத்துப் பார். நீலமலைச்சரிவில் சிங்கள வீரர்கள்
நம்மை மடக்கியிருக்கிறார்கள். போரிட்ட நால்வர்
யாரென்பது அவர்களுக்குத் தெரியும். அடுத்தபடி
இலங்காபுரனிடம் நாம் சிக்கிக்கொண்டோம். அவனுக்கும்
சதியில் நமது பங்கு என்னவென்பது நன்றாகத் தெரியும்
நம்மை கைது செய்யப் பாண்டிய வீரர்களையே ஏவியிருக்
கிறான். நமக்கு எதிராக அவர்கள் சாட்சியமும் இருக்
கிறது. இத்தனையிருந்தும் நம்மை ஏன் சுதந்திரமாக
விட்டிருக்கிறார்கள்? சுதந்திரமாக விட்டதோடு மாத்திர
மில்லாமல் வழக்கப்படி என்ன ஆடம்பரமான
வரவேற்பளித்திருக்கிறார்கள் பார்த்தாயா?" என்று
அபராஜிதன் கேட்டான்.

அபராஜிதனுடைய காரணங்கள் மிகச் சரியானவையா
யிருந்தபடியால் பதிலேதும் சொல்லத் தெரியாமல் திகைத்
தான் காரி. கேள்விக்குச் சரியான பதில் சிந்தனையில்
எழாது போகவே அடுத்துச் செய்யவேண்டியதைப் பற்றிக்
கேட்கத் தொடங்கி, "நாம் மேற்கொண்டு செய்யவேண்டி
யது என்ன?" என்றான்.

"முதலில் நீ தப்பிவிட வேண்டும், காரி."

காரியின் முகத்தில் அதுவரையிலிருந்த அச்சம் நீங்கி ஆச்சரியம் படரத் தொடங்கியது. "ஏன்? என் உயிர் மட்டும் என்ன வெல்லமா?" என்று கேட்டான்.

"உயிர் வெல்லமில்லைதான், காரி. ஆனால் உயிரைத் தப்புவிக்க, மார்க்கமிருக்கும்போது அதை விட்டுவிடப் பிரயத்தனப்படுவது முட்டாள்தனம்" என்று அபராஜிதன் சொன்னான்.

"நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று காரி அடுத்தபடி வினவினான்.

"இங்கேயே இருப்பதாக உத்தேசம்."

"ஏன், தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வது மட்டும் புத்திசாலித்தனம் போலிருக்கிறது" என்று தன் நகைச் சுவையைக் காட்டத் தொடங்கியதும்; அதுவரை வருத்தத் துடனிருந்த அபராஜிதன் இதழ்களிலும் மெல்லப் புன்சிரிப்பு தவழலாயிற்று. "அதற்காகச் சொல்லவில்லை காரி. பெரிய மனிதர்கள் செய்தால் மட்டும் அறிவீனச் செய்கை அறிவுச் செய்கையாக மாறிவிட முடியுமா? நீ இங்கிருப்பதால் ஆபத்திருக்கிறது. எனக்கு அத்தனை ஆபத் தில்லை" என்று விளக்கினான். காரிக்கு அபராஜிதன் செய்த விளக்கத்தின் அர்த்தம் புரியவில்லை. ஆகவே, "ஏன்? என்ன காரணம்?" என்ற கேள்வியொன்றை வீசினான்.

"என் அந்தஸ்துதான் காரணம். நான் மன்னர் குலத்தில் பிறந்தவன். மன்னனுக்கு அடுத்தபடியாக முடி சூடக்கூடியவன். தவிர...?"

"தவிர?"

"மன்னனைவிடப் பன்மடங்கு அதிகமாக மக்களால் நேசிக்கப்பட்டவன்."

"அதனால் தங்களை மன்னன் சும்மா விடுவானென்று நினைக்கிறீர்களா?"



"மன்னன் என்னைச் சும்மாவிடாவிட்டாலும் என்னைத் தொட மன்னனை இலங்காபுரன் அனுமதிக்க மாட்டான். என்னைத் தொட்டால் என் படை வீரர்கள் சீறி எழுவார்களென்பது இலங்காபுரனுக்குத் தெரியும்" என்றான் அபராஜிதன்.

"பிரபு! தங்கள் வீரர்களைப்போல் இரட்டை மடங்கு சிங்கள வீரர்களை மதுரையிலேயே இலங்காபுரன் தங்க வைத்திருக்கிறான். ஆகையால் நங்களைக் கொன்று படை எழுச்சியையும் சமாளிக்கத் தயங்கமாட்டான்" என்று காரி தீர்மானமாகச் சொன்னான்.

காரி சொன்ன வார்த்தைகளில் எத்தனையோ உண்மையிருந்ததைக் கவனித்தாலும், அபராஜிதன் தன் தீர்மானத்திலிருந்து எள்ளளவும் மாற மறுத்துவிட்டான். "காரி! நமது இரு நண்பர்களும் கொல்லப்பட்ட தகவல்களை நான் பூர்ணமாக அறியும் வரையில் தலை நகரிலிருந்து அகலமாட்டேன். பாண்டி நாட்டின் இரு சிறந்த படைத் தலைவர்களின் தலைகளைப் பலி கொண்ட தேவி மீனாக்ஷிக்கு என் தலையையும் பலி கொள்ள வேண்டுமென்ற ஆசையிருந்தால் அப்படியே நடக்கட்டும்" என்றான்.

"பிரபு! மரணத்தில்கூடத் தாரதம்மியம் பார்க்கிறீர்களே!" என்றான் காரி.

"மரணத்தில் தாரதம்மியமா?"

"ஆமாம் பிரபு! கோட்டை வாசல் கம்பத்திலொன்றில் தங்கள் தலை உட்கார்ந்திருக்கும்போது சரிசமமாக அடுத்த கம்பத்தில் என் தலையிருப்பது தங்களுக்குப் பொறுக்க வில்லையே!"

"அதல்ல காரி, விஷயம். உன் தியாக புத்தியைக் குறைத்துக் கூறவில்லை. இப்பொழுது நீ தலை மறைவா யிருக்க வேண்டிய அவசியமிருக்கிறது."

"என்ன அவசியம்?"

"நாட்டின் அவசியம். மன்னன் என்னைக் கொல்லத் துணிவானென்று நான் நினைக்கவில்லை. அப்படி நான்

தம்பி நீ மட்டும் இறந்துபோனால் நாடிருக்கும் இந்த நிலையில் எனக்கு உற்ற துணையாய் நிற்கக்கூடிய ஓர் உபதலைவனை இழப்பேன். அத்தகைய நஷ்டத்துக்கு நான் தயாராயில்லை'' என்று அபராஜிதன் கூறினான். அபராஜிதன் பேச்சு மனதுக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தாலும் அபராஜிதனை ஆபத்தில் தனித்து விட்டுச் செல்லக் காரி சம்மதிக்கவில்லை. ஏதோ சாக்குகள் சொல்லிப் பார்த்தும், அபராஜிதன் கேட்க மறுத்ததுமன்றி நீண்டநேரம் சாவதானமாகத் தர்க்கித்துக் கொண்டிருந்தவன் திடீரெனக் கோபத்துடன் தன் குரலையும் உயர்த்தினான். இடையிலிருந்து வாளைச் சரேலென உருவி எதிரே இருந்த தேவி மீனாக்ஷியின் படத்துக்கு எதிராக நீட்டி, ''காரி! என் அன்னை மீது ஆணையாகச் சொல்கிறேன். நிஷதராசனையும் முத்தரையனையும் கொன்றவன் யாராயிருந்தாலும் சரி அவனைப் பழி வாங்காமல் விடமாட்டேன். எந்தக் கோட்டை வாசலில் அந்த மாபெரும் வீரர்கள் தலைகள் இருக்கின்றனவோ அதே இடத்தில் அவர்களைக் கொன்றவர்களின் தலைகளையும் வெட்டி மாட்டுவேன். நமது நண்பர்களின் தலைகளைக் காகத்துக்கும் கழுகுக்கும் எவர்கள் இரையாக்கினார்களோ அவர்கள் தலைகளையும் காகமும் கழுகும் கொத்துவதை என் கண்களைக் கொண்டு பார்க்கும் வரை என் மனம் ஒரு நிலைக்கு வராது. இது சத்தியம் காரி, சத்தியம்!'' என்று உணர்ச்சி மேலிட்டுப் பெரிதாகக் கூவினான்! அதைத் தொடர்ந்து பெரிதாக உயர்ந்து நின்ற அந்த மாளிகைச் சுவர்களும், ''இது சத்தியம் காரி, இது சத்தியம்'' என்று நாலா பக்கத்திலிருந்தும் பயங்கரமாக எதிரொலி செய்தன.

திடீரென உணர்ச்சி வசப்பட்ட சேனாதிபதியைப் பயபக்தியுடன் பார்த்துக்கொண்டு நின்றான் காரி. அபராஜிதன் மேலும் சொன்னான்: ''நிஷதராசன் முத்தரையன் விசாரணையில் என்ன நடந்தது என்ற தகவல்கள் பூராவும் நான் அறியும் வரையில் இந்த



மதுரையை விட்டு அகல மாட்டேன். இதோ, பக்கத்தறையில் நான் நகர சோதனைக்குச் செல்லும்போது அணியும் மாறுவேட உடைகள் இருக்கின்றன. அவற்றிலொன்றை அணிந்து மதுரையை விட்டுப்போய், பொன்னமராவதியில் காத்திரு. நான் சீக்கிரம் உனக்குத் தகவல் அனுப்புகிறேன். ஒருவேளை மன்னன் என்னை வெட்டிப் போட்டால், உடனே நீ நிஷதராசன் முத்தரையன் படைகளைச் சேர்த்துக்கொண்டு சோழநாட்டுப் படையுடன் இணைந்து இலங்காபுரனைப் பழி வாங்கப்பார்....'' என்று மேலும் ஏதோ சொல்லப் போகையில் படைவீரனொருவன் அறைக்குள் புகுந்து, ''பிரபு! மன்னனிடமிருந்து தூதுவன் வந்திருக்கிறான்'' என்று அறிவித்தான்.

''இதோ வருவதாகச் சொல்'' என்று அவனை அனுப்பிய அபராஜிதன், ''காரி! அழைப்பு வந்துவிட்டது. என் உத்தரவுப்படி நட. எதிர்த்து எதுவும் பேசாதே'' என்று அவசரமாகக் கூறிவிட்டு, கையிலிருந்த வாளை மீண்டும் உறையில் போட்டுக்கொண்டு அறையிலிருந்து வெகு வேகமாக வெளியே சென்றான்.

அபராஜிதன் அரண்மனை வாயிலைக் கடந்தபோது இருட்டிச் சற்றுநேரம்தான் ஆகியிருக்கும். அதற்குள்ளாக மன்னனின் அரண்மனை ஏராளமான விளக்குகளுடன் ஜாஜ்வல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஏராளமான காலாட்படையினர் வாசலில் உலாவிக் கொண்டிருந்தார்கள். குதிரைப்படை வீரர்களும் குதிரைகளை அங்குமிங்கும் செலுத்திக் காவல் புரிந்தார்கள். கையில் பந்தங்களை ஏந்திய யவனர்கள் மாளிகையைச் சுற்றிப் பல இடங்களில் நின்று, போகிறவர்கள் வருகிறவர்களுக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டிருந்தார்கள். பிரம்மாண்டமான தூண்களுடன் எழுந்துநின்ற முன் அரங்கில் பிறநாட்டுத் தூதர்களும், இதரரும் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். வித விதமான ஆடைகளை அணிந்து பாண்டியநாட்டுப் பணி மக்களும் யவனப்

பணிப்பெண்களும் தீபங்களை ஆங்காங்கு ஏற்றிக் கொண்டு. இந்திர சபையில் உலாவும் அப்ஸரஸ்களைப் போல் காட்சியளித்தார்கள். அப்பொழுது வெற்றி கொண்ட யுத்தங்களில் எதிரிகளிடமிருந்து பழைய பாண்டிய மன்னர்கள் கைப்பற்றிய கேடயங்களும், வாட்களும், கவசங்களும் தூண்களில் பொருத்தப்பட்டு, விளக்குகளின் ஒளியில் மின்னிக்கொண்டிருந்தன. சுவர் களில் ஆங்காங்கு தீட்டப்பட்ட வர்ணச் சித்திரங்களும் அமைக்கப்பட்டிருந்த வெள்ளி, பொன், முத்து இவற்றால் செய்யப்பட்ட பதுமைகளும் கண்ணைப் பறித்தன.

இத்தகைய முன் மண்டபத்தையும், இதுபோன்ற இன்னும் பல மண்டபங்களையும் கடந்து, 'பழையகால முறைப்படி வெள்ளை வைக்கப்பட்டிருந்ததால் வழவழ வென்றிருந்த மாடிப் படிகளில் ஏறி மன்னனைப் பேட்டிகாணும் அறையை அடைந்தான் அபராஜிதன். அவன் வந்திருப்பதை அரசனுக்கு அறிவிக்கச் சென்ற காவலன் வெகு சீக்கிரம் திரும்பிவந்து, ''மன்னர் தங்களுக் காகக் காத்திருக்கிறார்'' என்றுகூறி அவனை உள்ளே அனுப்பினான். எவ்வளவோ உணர்ச்சிகள் இதயத்தைத் தாக்க உள்ளே நுழைந்தஅபராஜிதனுக்குஅறைக்குள்ளேயே அதிர்ச்சியொன்று காத்திருந்தது.

அங்கு மன்னன் இல்லை. மன்னன் இல்லாததே சேனாதிபதிக்குப் பேராச்சரியமாயிருந்ததென்றால் மன்னன் உட்கார வேண்டிய மஞ்சத்தில் இன்னொருவர் உட்கார்ந்திருந்தது அவனுக்குப் பேரதிர்ச்சியை விளை வித்தது. தவிர, பெரும் பாண்டியர்கள் உட்கார்ந்து பிற நாட்டுத் தூதுவருக்கெல்லாம் பேட்டி கொடுத்த அந்த ஸ்தானத்தில் உட்காரத்துணிந்த பேர்வழியைக் கண்டதும் அபராஜிதன் உள்ளத்தில் அதிர்ச்சியுடன் ஆத்திரமும் கலந்துகொண்டது. அவன் வலக் கையும் கச்சையில் கட்டியிருந்த வாளை நோக்கி எழுந்தது.

## 13. மாதவியின் கனவு

மக்களுக்காக மகத்தான தியாகங்களைச் செய்து சரித்திரத்தில் சாசுவதமான இடம் பெற்றுவிட்ட பெரும் பாண்டிய மன்னர்கள் அமர்ந்த அரியணையில், மல்லிகைக் கொடி விழுந்து கிடந்ததுபோல் மிக ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டிருந்தாள் மாதவி. வெயில் காலம் ஆரம் பித்து விட்டபடியால் பகலின் வெப்பத்தைப் போக்கிக் கொள்ளச் சாயந்தரம் ஸ்நானம் செய்து புதுப் பட்டாடை கட்டிக்கொண்டிருந்த அந்தச் சிங்களத்துப் பைங்கிளி தெய்வ ரம்பைபோல் கண்ணைப் பறிக்கும் அழகுடன் விளங்கினாள். சற்று அகலமாக இருந்த அரியணையில் நேராக உட்காராமல் பாதி ஒருக்களித்தும், பாதி சாய்ந்தும் படுத்திருந்ததால் சாதாரணமாகவே எழிலை எடுத்துக் காட்டும் அவள் உடல் ஆங்காங்கு எழுந்தும் தாழ்ந்தும் தனது கவர்ச்சியை ஆயிரம் ஆயிரம் மடங்கு அதிகமாகப் புலப்படுத்திக் கொண்டிருந்தது. அரியணை யின் கோடியில் அமைக்கப்பட்டிருந்த சிங்கத்தலைகளில் ஒன்றை அவள் இடக்கை பிடித்துக்கொண்டிருந்ததால், வளைந்த இடுப்புக்கும் கைக்கும் இடைவெளி அதிகமாக ஏற்பட்டதோடு சேலை சற்று நகர்ந்தும் கிடந்தது.

அன்று மாதவி பிரமாதமாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். வைரமும் கெம்பும் மாறிமாறி வைத் துக் கட்டப்பட்டிருந்த வங்கியொன்று வலக்கையை அலங் கரித்தது. நவரத்தின முகப்புடன் கூடிய கல்லிழைத்த ஒட்டியாணம் ஏற்கனவே குறுகலாயிருந்த அவள் இடையை இன்னும் அதிகமாக இறுக்கிப் பிடித்திருந்தது. முன்னுச்சியில் சின்னஞ்சிறு பின்னலில் தொங்கிக் கொண்டிருந்த வைரச் சுட்டி அறைவிளக்குகளின் ஒளியில் பச்சை, சிவப்பு நீலம் எனப் பலவித வர்ணங்களைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தது. அவள் நீண்ட குழல் ஐந்தாறு கால்களாக எடுத்துப் பின்னிக் கட்டப்பட்டு அவற்றின் இடையே விலைமதிக்க முடியாத திருகுப்பூவும் அழுத்தப் பட்டிருந்ததால், கரிய அந்தப் பின்னணியில் பிரமாதமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. அந்தப்

வைக்கப்பட்டிருந்த முல்லைச்
பின்னல் கூட்டத்திலே
சரங்களின் வெளுப்பு திருகுப்பூவின் ஜொலிப்போடு
போட்டி போட்டது. தமிழர்களின் நெசவுத்திறனுக்கு
அடையாளமாக விளங்கிய பட்டுச்சேலை இத்தனை
ஆபரணங்களையும் தோற்கடித்துக்கொண்டு நானாவித
வர்ணங்களுடன் வழவழப்பான அவள் அங்கங்களையெல
லாம் தடவிச் சென்று மறைத்து, இயற்கையான எழிலை
எண்மடங்கு அதிகரிக்கச் செய்தது. பார்ப்பவர் மனத்தை
அப்படியே பறித்துக் கொள்ளும்படியான நிலையில்
சாய்ந்து கிடந்த மாதவி, அபராஜிதன் மனத்தை மட்டும்
அந்தச் சமயம் கவரச் சக்தியற்றவளானாள்.
மன்னனைக் காண அவசரமாக உள்ளே நுழைந்து
மாதவியைக் கண்ட அபராஜிதன் அவள் அழகைக்
கண்டு கண நேரம் தான் மலைத்தான். அவள் சாய்ந்து
கொண்டிருந்தது பாண்டிய மன்னர்களின் அரியணை
என்பதைக் கண்டதும் அவன் மலைப்பு அரை வினாடியில்
விலகிக் கோபத்துக்கு இடங்கொடுத்தது. அந்த அறை
பாண்டிய மன்னர்கள் தொன்று தொட்டுத் தூதுவர்
களைச் சந்தித்து வந்த அறை. பாண்டியர்கள்
அரண்மனையில் பரம்பரையாக இருந்துவந்த அரியணை
கள் இரண்டுதான். ஒன்று கொலுமண்டபத்தில் இருந்தது.
மற்றொன்று தூதுவரைக் காணும் வரவேற்பு அறையில்
இருந்தது. இந்த இரண்டு அரியணைகளில் யார்
உட்கார்ந்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை
அளிப்பது வழக்கம். பாண்டிய மரபில்கூட முடிசூடிய
மன்னர்களைத் தவிர வேறு யாரும் உட்காரக்கூடாத
அந்த அரியணையில் இலங்காபுரன் மருமகள் உட்கார்ந்
திருப்பதைப் பார்த்ததும் அபராஜிதனுக்கு அவள்
தைரியத்தைக் கண்டு முதன் முதலில் ஆச்சரியம்
ஏற்பட்டாலும், அடுத்த கணம் அந்த ஆச்சரியம் மறைந்து
ஆத்திரம் தலைதூக்கியது. அவன் வலக்கை வாளை
நோக்கியும் எழுந்தது.
அபராஜிதன் உள்ளே வந்ததும் அவன் முகத்தில் ஏற்
பட்ட குறிகளையோ, வாளை நாடிச் சென்ற கை மறுபடி



தொங்கியதையோ மாதவி கவனிக்கத்
யும் பக்கவாட்டில் தொங்கியதையோ மாதவி கவனிக்கத்
யும் பக்கவாட்டில் ஆத்திரம் வந்த
தவறவில்லை. பாண்டிய சேனாதிபதிக்கு தெரிந்துதானிருந்தது
காரணமும் அவளுக்கு நன்றாகத் விட்டுச் சிறிதும்
இருந்த போதிலும் இருந்த இடத்தை பார்வையை மாதவி
நகராமலே, மயக்கம் தரும் தனது அந்தப் பார்வையைச்
சேனாதிபதியின் மீது திருப்பினாள். அதரங்களுக்
சேர்ந்தாற்போல சற்று அகன்ற அவள் பழிக்கும்
கிடையே பாண்டிய நாட்டு முத்துக்களைப் சேனாதி
பற்கள் மின்னின. அந்த மந்தகாசம் பாண்டிய அவனை ஒரு
பதியின் ஆத்திரத்தை ஓரளவு அடக்கி, நோக்கி
நிதானத்துக்குக் கொண்டுவரவே, மாதவியை அப்படி
அவன் இரண்டொரு அடிகள் எடுத்து வைத்தான். செய்தபடியே
அணுகி வந்தவனை நோக்கிப் புன்முறுவல் சேனாதிபதியவர்களுக்
மாதவி கூறினாள், ''வரவேண்டும்! சேனாதிபதியவர்களுக்
காகத்தான் வெகு நேரமாகக் காத்திருக்கிறேன்'' என்று.
''நான் தங்களைக் காண வரவில்லை....'' என்று
கோபத்துடனேயே ஆரம்பித்தான் அபராஜிதன்.
''மன்னரைக் காண வந்திருப்பீர்கள்'' என்றாள்
மாதவி.
''ஆம்''
''மன்னரைக் காண வந்தால் என்ன, மாதவியைக்
காண வந்தால் என்ன?''
''இரண்டும் ஒன்றுதான் என நான் நினைக்க
வில்லை.''
''உலகம் நினைக்கிறதே.''
''உலகத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை.''
''தவறு சேனாதிபதியவர்களே! உலகத்தைப் பற்றிக்
கவலைப்படாதிருக்க முடியுமா? உலகத்தில்தானே நாம்
இருக்க வேண்டியிருக்கிறது.''
''இருக்கவேண்டும் என்ற ஆசை இருப்பவர்களுக்குத்
தான் அந்த அவசியம்.''
இதைக் கேட்டதும் சிங்களத்துப் பைங்கிளி 'களுக்'
கென நகைத்தான். அந்தச் சிரிப்பினால் சற்றுக்கோபத்தை

அடைந்த அபராஜிதன், "எதற்காக நகைக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"ரொம்ப விரக்தியடைந்து விட்டதுபோல் பேசுகிறீர்களே என்பதற்காகச் சிரித்தேன்" என்றாள்.

"விரக்தியடையவில்லையென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அபராஜிதன் மீண்டும் வினவினான்.

"விரக்தியடைந்து இந்த உலகத்தில் இருக்கப் பிடிக்கவில்லையென்றால், அன்று நான் சொல்லியபடி பக்கத்துக் கூடாரத்துக்குப் போகாமல் ஏன் காட்டுக்குள் தப்பி ஓடினீர்கள்?" என்று கேட்ட மாதவி தன் கூரிய பார்வையை ஒருமுறை அவன்மீது செலுத்தினாள்.

இந்தக் கேள்வியால், கண்ணிமைக்கும் நேரம் சங்கடத்திற்குள்ளான அபராஜிதன் தன்னைச் சமாளித்துக் கொண்டு "என் உயிருக்காக நான் அஞ்சவில்லை" என்று பதில் சொன்னான்.

மாதவி மீண்டும் சிரித்துக்கொண்டே கேட்டாள். "சகோதர சதிகாரர்களின் பெயர்கள் வெளியாகிவிடப் போகிறதென்ற பயம் போலிருக்கிறது."

இந்தக் கேள்வி அபராஜிதனுக்கு எந்தவித அதிர்ச்சியையும் அளிக்கவில்லை. இலங்காபுரனுக்குச் சதியைப் பற்றிய சகல தகவலும் தெரியுமென்பதை அவன் உணர்ந்தேயிருந்தான். ஆனால் அது சம்பந்தமாக ஏன் தன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விஷயம் மட்டும் அவனுக்குச் சற்றும் புரியாமலிருந்தது. ஆகையால் அதைப் பற்றிய தகவலை மாதவியிடமிருந்தே கிரகிக்கவேண்டும் என்று சம்பாஷணையைத் தொடர்ந்து அவளுக்குப் பதில் சொன்னான். "அந்த மாதிரிப் பயம் எதுவும் இல்லை. சதியைப் பற்றி உங்கள் மாமாவுக்கு எல்லாத் தகவல்களும் தெரியும் என்பதை நான் அறிவேன்."

"நீங்கள் அறியாதது?"

"தெரிந்தும் என்னை ஏன் சும்மா விட்டிருக்கிறீர்கள் என்பது."



இந்தப் பதிலைக் கேட்ட பைங்கிளி மஞ்சத்தில் சற்றுப் புரண்டு படுத்தாள். பிறகு அபராஜிதன்மீது சிறிது நேரம் மயக்கமான தன் பார்வையை ஓட விட்டுக்கொண்டே கேட்டாள், "காரணம் தெரிய வேண்டுமா?" என்று.

"ஆமாம்' என்றான் அபராஜிதன்.

"காரணம் மாதவிதான்" என்றாள் சிங்களத்துப் பைங்கிளி.

இந்தப் பதிலால் பிரமித்துப்போன அபராஜிதன் அவள் முகத்தை நன்றாக ஏறெடுத்துப் பார்த்து, "நீங்களா காரணம்?.... நீங்களா! என்னிடத்தில் அப்படியென்ன அக்கறை உங்களுக்கு!" என்று கேட்டான்.

"இப்படி உட்காருங்கள்" என்று அரியணையின ஒரு மூலையில் நகர்ந்து தன் பக்கத்தில் அவனுக்கு இடம் காட்டினாள் மாதவி.

"இந்த அரியணை பாண்டிய மன்னர்கள் உட்காரும் இடம். அதில் உட்காருபவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று வினவினான் அபராஜிதன்.

"தெரியும்? மரண தண்டனை!" என்று நிர்ப்பயமாகப் பதில் சொன்னாள் மாதவி.

அவள் தைரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட அபராஜிதன், "நீங்கள் அந்த அரியணையில் உட்கார்ந்து கொண்டிருந்ததை இத்தனை நேரம் நான் பார்த்துக் கொண்டு சும்மா நிற்பதே பிசகு" என்று கோபத்துடன் ஆரம்பித்தான். அவன் வார்த்தைகளை இடையே வெட்டிய சிங்களத்துப் பைங்கிளி, "பார்த்துக்கொண்டு சும்மா நிற்கச் சொல்லவில்லையே, உங்களையும் உட்காரத் தானே சொல்கிறேன்" என்று வேடிக்கையாகச் சொன்னாள்.

"நீங்கள் புரிவதே குற்றம்."

"நாமிருவரும் குற்றவாளிகள்தான். நான் மன்னனுக்கு எதிராகவே இந்த அரியணையில் உட்காருகிறேன். பகிரங்கக் குற்றவாளி. நீங்கள் மன்னனுக்குத் தெரியாமல் சதி செய்கிறீர்கள். இரகசியக் குற்றவாளி. இரண்டு குற்ற

வாளிகளுக்கும் மரணதண்டனை உண்டு. ஆனால், இரண்டு பேரும் உயிருடனேயே இருக்கிறோம்.''

பைங்கிளியின் இந்தப் பேச்சுக்குள் தொக்கியிருந்த மர்மத்தை அபராஜிதன் உணராமல் இல்லை. இஷ்டப்பட்டால் அவளால் தன்னை அழித்துவிட முடியும் என்பதையும், மன்னனின் ஆசைக் கிளியான தன்னை அழிக்க யாராலும் முடியாதென்பதையும் பைங்கிளி சுட்டிக் காட்டுகிறாளென்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்ட அபராஜிதன் ஏதும் பேசாமல் எதிரேயிருந்த வேறோர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான். மாதவி அவனை நோக்கி மேலும் கேட்டாள்: ''சேனாதிபதியவர்களே! உங்களைக் காப்பாற்ற நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா!''

''கஷ்டமென்ன இருக்கிறது? நீங்கள் எது நினைத்தாலும் இந்த ராஜ்யத்தில் நடக்குமே? மன்னர்....''

''ஹூம். ஹூம். மன்னரல்ல மன்னருக்குச் சதியில் தங்கள் பங்கைப்பற்றி எதுவுமே தெரியாது. மாமாவுக்குச் சகலமும் தெரியும். தெரிந்ததும் முதலில் ருசு இல்லாமல் கஷ்டப்பட்டார். அதையும் நீங்களே அளித்துவிட்டீர்கள்.'

''நான் ருசு அளித்தேனோ?''

''ஆமாம், பக்கத்து கூடாரத்துக்கு நான் போகச் சொன்னபோது நீங்கள் காட்டுக்குள் ஓடவில்லையா?''

''ஓடினேன்.''

''அதுவே குற்றத்திற்கு ருசு அல்லவா? நிரபராதியாய் இருந்தால் ஏன் ஓடவேண்டும்? இதைச் சற்று யோசித்திருந்தால் ஓடியிருக்க வேண்டாமே!''

அபராஜிதன் அவளைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே சொன்னான்: ''அதைப்பற்றி நான் சிந்திக்காமல் இல்லை. நீங்கள் கூறியபடி அன்று பக்கத்துக் கூடாரத்தில் நான் தங்கியிருந்தால் நிரபராதி வேஷம் போட்டிருக்கலாம். ஆனால் எத்தனை நாழிகைக்கு? நானும் என் சகாக்களும் சிங்கள வீரர்களால் மலைச் சரிவில் தாக்கப்பட்டோம். எனக்குக் காயம் ஏற்பட்ட காரணத்தை உங்கள் மாமன் ஊகித்துவிட்டார். மலைச் சரிவுக்குச் சென்ற



சிங்களத்து வீரர்கள் திரும்பிவந்தால் எங்கள் மேல் ருசு பூர்த்தியாகி விடும்...''

''நீங்கள் ஓடிவிட்டால் மட்டும்?''

''ருசு பூர்த்தியாகாது. நான் அந்தப் பக்கமே வரவில்லையென்று சாதிக்கலாம். என் வார்த்தைக்கு முன்பு உங்கள் மாமன் வார்த்தையை மக்கள் எடை போடுவார்கள். தட்டு எந்தப் பக்கம் சாயும் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்.''

அவன் கூரிய புத்தியை நினைத்துச் சிங்களப் பைங்கிளி, பெரிதும் வியப்படைந்தாள். தான் அவனுக்குத் தப்ப அவகாசம் கொடுத்து ருசுவைத் தயாரிக்க நினைத்தால், அந்த அவகாசத்தையே ருசுவை முறிக்கும் சாதனமாக அபராஜிதன் உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டானே என்று நினைத்துப் பார்த்த பைங்கிளி அவனுடன் மிக எச்சரிக்கையாகப் பேசவேண்டுமென்று நினைத்து அரியணையிலிருந்து எழுந்து அவனுக்கு அருகில் வந்தாள்.

''நீங்கள் என்ன செய்தாலும் சிங்கள வீரர்களின் சாட்சியம் இருக்கிறது. போதாக்குறைக்கு உங்கள் வீரர்களே உங்களைத் துரத்திபிருக்கிறார்கள். இதெல்லாம் மன்னருக்குத் தெரியாமல் மறைத்துவிட்டேன். என் மாமனிடம் சொல்லி எல்லா வீரர்களின் வாயையும் கட்டிவிட்டேன். உங்களைப்பற்றி யாரும் ஒரு வார்த்தைகூட மூச்சு விடமாட்டார்கள்'' என்று மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த அவனுக்கருகில் குனிந்து மிக மெதுவாகச் சொன்னாள்.

தலைநகருக்குள் நுழைந்ததும் தன்னை ஏன் யாரும் கைது செய்யவில்லை என்ற மர்மம் அப்பொழுதுதான் அபராஜிதனுக்குப் புரிந்தது. என்ன காரணத்துக்காக மாதவி தன்னை அப்படிக் காப்பாற்றினாள் என்ற தகவல் மட்டும் அவனுக்குப் புரியாது போகவே, ''எதற்காக இத்தனை கஷ்டப்பட்டு என்னைக் காப்பாற்றினீர்கள்?'' என்று கேட்டான்.

அபராஜிதன் அழையாமலே அவன் உட்கார்ந்திருந்த மஞ்சத்தில் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள் மாதவி. 'அறிவாளிகளைக் கொல்லுதென்றால் எனக்குப் பிடிப்பது இல்லை'' என்று அவன் காதுக்கருகில் தன் முகத்தைச் சாய்த்துக் கூறினாள். அவள் சமீபத்தில் உட்கார்ந்தபோது அவள் சரீரம் சற்றுமேலே பட்டமாத்திரத்தில் சுய நிலையை ஓரளவு இழந்துவிட்ட அபராஜிதன் அவள் காதுக்கருகில் வந்து பேசியபோது கமழ்ந்த முல்லைச் சரங்களின் நறுமணத்தாலும், பட்டால் தடவுவதுபோல் மிக மிருதுவாகத் தன் கன்னத்தில் தடவிய அவள் கபோலத்தின் வழவழப்பாலும் விவரிக்க இயலாத எத்தனையோ உணர்ச்சிகள் உடலெங்கும் பரவி, அவள் அழகில் அடியோடு லயித்து நின்றான்

இத்தனை அஸ்திரங்களுடன் அர்த்தபுஷ்டி நிரம்பிய கடைக்கண் பார்வை யொன்றையும், புன்முறுவலொன்றையும் அவன் மீது வீசிய அந்த அழகி மிருதுவான தன் குரலில் சொன்னாள்: ''அபராஜிதா! உன்னை அன்றுதான் கூடாரத்தில் முதன் முதலாகப் பார்த்தேன் நான் சிங்களத்திலிருந்து வந்து எத்தனையோ நாளாகியும் உன்னை நான் பார்த்ததே கிடையாது. ஆனால், மக்கள் உன்னைப்பற்றிப் பேசக் கேட்டிருக்கிறேன். என் தோழிகள் உன் அழகைப்பற்றிப் புகழக் கேட்டிருக்கிறேன். வீரர்கள் உன் வீரத்தைப்பற்றிக் கூறக் கேட்டிருக்கிறேன். கேள்விப்படும் விஷயத்திற்கும் உண்மைக்கும் மாறுபாடுகள் இருப்பது வழக்கம். உன் விஷயத்தில் அது இல்லை அபராஜிதா! நான் கேள்விப்பட்டதைவிட பன்மடங்கு அதிக அறிவுடனும், அழகுடனும், வீரத்துடனுமே இருக்கிறாய். உங்கள் மன்னன் சர்வ முட்டாள். நீதான் இங்கு அரசாளத் தகுந்தவன். நான் சதி செய்கிறேனென்று நினைக்காதே. உண்மையைச் சொல்லுகிறேன். நான் முட்டாளல்ல என்பது உனக்கே தெரியும். நீயோ பெரிய அறிவாளி. என் புத்தியும் அற்ப சொற்பமானதல்ல. நாம் இருவரும் சேர்ந்தால் இந்தத் தமிழ்நாட்டில் பெரிய



சாம்ராஜ்யத்தை அமைக்கலாம். இன்னும் எதை எதையோ சாதிக்கலாம்'' என்று கண்களைப் பாதி மூடியவண்ணம் கனவுலகத்தில் சஞ்சரிப்பதுபோல் பேசினாள்.

நன்றாக விரியாமல் அரைப்பாகம் மட்டும் விரிந்த தாமரை மலருக்குள் சிக்கிய வண்டு வெளிவர முடியாமல் தவித்து அங்கேயே சுற்றிச்சுற்றி எழுந்து மீண்டும் மலரின் பக்கத்து இதழ்களில் தாக்கித் தாக்கி மகரந்தத்தின்மேல் விழுவதுபோல், மாதவியின் சமீபத்தினால் ஏற்பட்ட மயக்கத்திலிருந்து மீள முடியாமல் தவித்த அபராஜிதன் காதுகளில் அவள் வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருந்தனவே யொழிய, அவன் மனமும் கண்களும் அவள் உடல் வளைவுகளில் சிக்கி எந்தப் பக்கமும் அகல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தன. அத்துடன் அதுவரை அவனுக்குப் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்த மாதவி திரும்பி அவனுக்குப் பூர்ணமாக முதுகைக் காட்டியும் உட்கார்ந்ததால் அவள் முதுகும் இடையும் அபராஜிதன் மேல் ஓரளவு உராயவும் தொடங்கின. இதனால் கொஞ்ச நஞ்சமிருந்த சுரணையையும் இழந்து சொர்க்கலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அபராஜிதன்மேல் அதிகமாகச் சாய்ந்த பைங்கிளி, ''உன்னை மரியாதையாகப் பேசவில்லையென்று நினைக்கிறாயா அபராஜிதா?'' என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

அபராஜிதன் ஸ்மரணை அடியோடு போய்விடும் நிலைக்கு வந்துவிட்டது. அதற்கு அவள் மோகனாஸ்திரங்கள் மட்டுமல்ல காரணம்; இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டு கனல் கக்கும் கண்களுடன் வாயிற்படியில் நின்றிருந்தான் வீரபாண்டியன்.

## 14 முத்திரை ஓலை

கடவுளின் மாயை அற்புதமானது. அநித்தியத்தை நித்தியமாகக் காட்டக்கூடியது. உண்மையைப் பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் தோற்றமளிக்கச் செய்ய வல்லது. தினசரி கணக்கற்ற மக்கள் கண்ணுக்கெதிரே மடிந்து மயானம் செல்வதைக் கண்டாலும் தன்

வாழ்வு மட்டும் சதமென்று நினைத்து மனிதன் பொய்யாக மண்ணையும் பொன்னையும் கட்டிக்கொண்டு திண்டாடக் கூடிய மனோநிலையைச் சிருஷ்டிக்கக்கூடிய மாயையின் வல்லமையை வர்ணிக்க முடியாது. மனிதனுடைய கண்ணுக்கும் உண்மைக்கும் இடையே சட்டென்று திரை போடக்கூடிய இப்பேர்ப்பட்ட மாயையைப் பெரியவர்கள் பெண் இனத்தில் சேர்த்திருக்கிறார்கள். எந்த உண்மையையும் நிமிஷ நேரத்தில் மறைத்து ஆண்கள் கண்ணில் மண்ணைப் போடும் திறமை பெண்களுக்கு உண்டு என்பது பெரியோர்கள் சித்தாந்தம். எப்பேர்ப்பட்ட அசந்தர்ப்பமான நிலையிலிருந்தும் பெண்கள் சுலபமாகத் தங்களை விடுவித்துக்கொண்டு ஆண்களைத் தங்களுக்கு நிரந்தர அடிமைகளாக வைத்துக் கொள்கிறார்கள். இந்தச் சக்தியை மட்டும் ஆண்டவன் பெண்ணினத்துக்கு அளிக்காமலிருந்தால் அரண்மனையில் அன்று அபராஜிதன் கதி அதோகதியாகத்தான் போயிருக்கும்!

திடீரென்று வீரபாண்டியன் வாசற்படியில் தோன்றியதைக் கண்ட அபராஜிதன் அடியோடு நிலைகுலைந்து போய் ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினான். பிறகு மெள்ளச் சமாளித்துக்கொண்டு ஆசனத்திலிருந்து எழுந்து சற்று விலகி நின்றான். மிக அசந்தர்ப்பமான நிலையில் மன்னனிடம் அகப்பட்டுக் கொண்ட காரணத்தால் சாதாரணமாக மன்னனைக் கண்டதும் தலைவணங்க வேண்டிய முறையைக்கூட அனுசரிக்காமல் வெறும் மரம்போல் நின்றான். கோபாக்கினியைக் கக்கிக் கொண்டு நின்ற வீரபாண்டியன் கண்களை ஒரு விநாடி சந்தித்த அவன் கண்கள் வெட்கத்தாலும் அச்சத்தாலும் தரையை நோக்கிச் சாய்ந்தன. ஆனால் இத்தனைக்கும் மாதவி மட்டும் சற்றும் அசையாமல் ஏதும் நடக்காதது போல் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அவள் அப்படி உள்ளத்திலோ உடலிலோ சலனமின்றி உட்கார்ந்திருந்ததைப் பார்த்த



அபராஜிதன் ஆச்சரியமும், வீரபாண்டியன் ஆத்திரமும் ஒரே சமயத்தில் உச்சநிலையை அடையலாயின. இருவருடைய மனோநிலையும் மாதவிக்கு நன்றாகப் புரிந்தே இருந்தது. இருந்த போதிலும் எதையும் லட்சியம் செய்யாமலும் சற்றும் பதட்டத்தைக் காட்டாமலும் உட்கார்ந்து கொண்டே மன்னனுக்காகச் சற்றுக் கண்களை உயர்த்தி, ''ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? உள்ளே வாருங்களேன்'' என்று சாவதானமாக அழைத்தாள்.

அவள் துணிச்சலைக் கண்டு மன்னன் ஒரு விநாடி பிரமித்துப்போனாலும் மறுகணம் ஏதும் பேசாமல் உள்ளே இரண்டடி எடுத்து வைத்துத் தன் அரியணையை நோக்கிச் சென்றான். ''அங்கே எதற்காகப் போகிறீர்கள்? இப்படி வாருங்கள்'' என்று மன்னனை அழைத்த சிங்களத்துப் பைங்கிளி தனக்குப் பின்னால் ஏற்கனவே அபராஜிதன் உட்கார்ந்திருந்த இடத்தில் உட்காரும்படி சமிக்ஞை செய்தாள்.

அரியணையை நோக்கி அடியெடுத்து வைத்த மன்னன் சட்டென்று நின்று அவளை ஒரு விநாடி நோக்கிவிட்டு, ''அங்கு எதற்காக உட்காரவேண்டும்?'' என்று வினவினான்.

பொறாமையால் ஏற்பட்ட கோபம் அவன் பேச்சில் தொனித்ததைக் கவனித்த சிங்களத்துப் பைங்கிளி அவனை நோக்கி முறுவல் செய்துகொண்டே எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளுவது போன்ற வார்த்தைகளை உதிர்த்தாள். ''உங்கள் சேனாதிபதியால் முடியாத காரியம் உங்களால் முடிகிறதா என்று பார்க்கிறேன்'' என்றாள்.

அவள் என்ன சொல்கிறாள் என்று புரிந்துகொள்ள இயலாத வீரபாண்டியன் சேனாதிபதியை ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும் அவளை நோக்கி, ''சேனாதிபதியால் என்ன முடியவில்லை?'' என்று வினவினான்.

''அவரைத்தான் கேளுங்களேன்'' என்று சொல்லி மாதவி 'களுக்' கென்று சிரித்தாள்.

இந்தப் பதிலால் மேலும் அதிகக் குழப்பமடைந்த அபராஜிதன் மாதவியை நோக்கி ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவனைப் பேசவொட்டாமல், மாதவியே பேசலானாள். 'ஏன் அப்படி விழிக்கிறீர்கள்? உங்களுக்குச் சொல்ல இஷ்டமில்லாவிட்டால் நானே சொல்லி விடுகிறனே'' என்று சேனாதிபதியை நோக்கிச் சொல்லிவிட்டு மன்னனுக்காகத் திரும்பிய மாதவி, ''உங்கள் சேனாதிபதி ரொம்பவும் சங்கோசப் பிராணியாயிருக்கிறார். என் பக்கத்தில் அவரை உட்காரச் சொல்வதே பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. பிறகு செய்ய வேண்டிய காரியத்தைச் சொன்னதும் மனிதன் நடுங்கிவிட்டார். சேனாதிபதி நல்ல சூரப்புலிதான்!'' என்றாள்.

''நீயா அவனை உன் பக்கத்தில் உட்காரச் சொன்னாய்!'' மன்னன் குரல் மிக உக்கிரமாக எழுந்தது.

''ஆமாம், என் கட்டளையில்லாமல் அவர் உட்காருவாரா?'' என்றாள் மாதவி, மிக நிதானமாக.

''ஓர் ஆண் மகனை உனக்கருகில் உட்காரச் சொல்வது உனக்கு வெட்கமாயில்லை?''

''மகாராஜா! கோபம் உங்கள் கண்களை மறைக்கிறது. சம அந்தஸ்துள்ளவர்களிடம்தான் வெட்கம் ஏற்பட வேண்டும். வேலைக்காரர்களிடம் வெட்கம் எதற்கு? சேனாதிபதி நம்மிடம் பணி செய்பவர்தானே?''

''உன் அருகில் அவ்வளவு நெருங்கி உட்கார்ந்து என்ன பணியைச் செய்துகொண்டிருந்தார்?'' மனனன் கேள்வியில் கோபத்தோடு சற்று இகழ்ச்சி கலந்திருந்தது.

அபராஜிதன் பேசக்கூடிய நிலையில் இல்லை. மன்னனையும் தன்னையும் மாதவி எங்கு இழுத்துச் செல்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தால் பதிலேதும் சொல்லாமல் புது நாட்டுப் பெண்ணைப் போலத் தரையை நோக்கிக் கொண்டிருந்தான். அவன் சங்கடம் மாதவிக்கு உள்ளூறப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கவே ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு மன்னனை நோக்கி, ''விஷயம் ஒன்றும் பிரமாதமில்லை. என் கழுத்திலிருக்கும் முத்துச் சரங்களின் பட்டுக் கயிறுகள் மற்ற நகைகளுடன் பின்னிக் கொண்டு சிக்கிக்கிடந்தன. என்னால் எடுக்க முடியாமற் போகவே சேனாதிபதியைச் சற்று எடுத்து விடும்படிக் கேட்டேன். அவர் உட்காருவதற்கு ஒரு மண்டலமாயிற்று. பிறகு என் கழுத்திலுள்ள நகைகளைத் தொடுவதற்கு இன்னொரு மண்டலமாயிற்று. அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள். வந்தவர் கூப்பிட்டவுடன் நேராக வந்து உட்கார்ந்து சொன்னதையாவது செய்கிறீர்களா? அதையும் காணோம். இப்படி உட்காரத்தான் உட்காருங்களேன்; இதைக் கொஞ்சம் பிரித்து எடுங்கள் பார்க்கலாம்'' என்று சொல்லிக்கொண்டே கழுத்தை மன்னனுக்காகச் சற்றுத் திருப்பினாள்.



விநாடி நேரத்தில் உண்மையை அப்படியே தலைகீழாகக் கவிழ்த்துவிட்ட அவள் சாகசத்தைக் கண்டு அபராஜிதன் பிரமித்தான். அந்தச் சாகசத்தில் சிக்கிக் கொண்ட மன்னன், காரியம் ஏதும் மிஞ்சிவிடவில்லையென்று ஓரளவு மனசாந்தி அடைந்தான். இருந்தாலும் கோபம் பூராவும் குறையாது போகவே, ''இந்த அற்பக் காரியத்துக்காக உன் பெயரை நீ கெடுத்துக் கொள்ளலாமா? நீயும் சேனாதிபதியும் நெருங்கி உட்கார்ந்திருப்பதை வேலைக்காரர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டான்.

''நம்முடைய காரியங்களைப் பற்றி எடைபோட வேலைக்காரர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது?''

''உரிமையில்லாதிருக்கலாம். வம்பை அடக்க முடியுமா?''

''வம்பு நம்மைப் பாதிக்காது.''

''ஏன்?''

''ஏழைகளைத்தான் அது தொல்லை செய்யும்; அந்தஸ்து உள்ளவர்களிடம் அணுகாது.''

''அதற்காக?''

''அனாவசியமான விவகாரங்களைப்பற்றி நாம் கவலைப படுவதில் பயனில்லை; நீங்கள் இன்னொன்று கவனிக்கத் தவறிவிட்டீர்கள்.'

''என்ன அது?''

''நான் பிறந்த இடம்.''

''அதைப்பற்றி என்ன இப்பொழுது?''

''நான் பாண்டிய நாட்டுப் பெண்ணல்ல, மகாராஜா! சிங்களத்துப் பெண். எங்கள் நாட்டில் நாங்கள் ஆண்களுடன் சகஜமாகப் பழகுகிறோம். ஒரு பெண்ணின் பக்கத்தில் ஆண் உட்கார்ந்தால் யாரும் தவறாக நினைப்பதில்லை. ஓர் ஆணிடம் பெண் பேசினாலும் மாசு கற்பிப்பதில்லை. உங்கள் நாட்டில் எல்லாம் விசித்திரம். பெண்களுக்கு மணமாகும் வரை பெற்றவனிடம் சிறை. மணமானபின் கணவனிடம் சிறை. பிறகு பெற்ற மகனிடம் சிறை! இந்தக் காராக்கிருகத்தைக் கொண்டு எங்கள் நாட்டுப் பெண்களை எடை போடுவதால் பயனில்லை, மகாராஜா. சேனாதிபதி என் பக்கத்தில் உட்கார்ந்த உடனே உங்களுக்குச் சகல விபரீத அர்த்தங்களும் தோன்றிவிட்டது. பாருங்கள்!''

அவளுடைய அந்த வாதத்தைக்கேட்ட வீரபாண்டியன் ''அப்படியானால்...'' என்று ஏதோ ஆரம்பித்தான். அவன் பேச்சை இடையிலேயே வெட்டிய பைங்கிளி, ''என்ன அப்படியானால்?'' என்று கேட்டான். 'அப்படியானால், வேறொன்றும் நடக்கவில்லையா' என்று கேட்க முற்பட்ட வீரபாண்டியன் தன் வார்த்தைகளைப் பாதியிலேயே விழுங்கிக்கொண்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவன் உத்தரவுப்படி அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். சாதாரணமாகவே குழப்பம் மிகுந்த அவன் புத்தி அந்த அறையில் நடந்த விநோதங்களால் பெரிதும் சுவாதீனத்தை இழந்திருக்கவே அவன் அவளுக்குப் பதிலேதும் சொல்லாமலும் எதிரே மரம்போல் நின்று கொண்டிருந்த சேனாதிபதியை ஏறெடுத்துப்



திரும்பிய அவள் கழுத்தில் பார்க்காமலும், பட்டுக் கயிறுகளைப் நகைகளோடு சிக்கிக்கொண்டிருந்த எடுப்பதில் பிரித்து எடுக்க ஆரம்பித்தான் அந்தச்சிக்கலை கண்ட மிகத் தீவிரமாக முனைந்து விட்ட மன்னனைக் அபராஜிதன், 'இவனா பாண்டிய நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலை எடுக்கப்போகிறான்?' என்று நினைத்துப் பெரிதும் ஏக்கம் கொண்டு அதற்கடையாளமாக நீண்ட தொரு மூச்சையும் விட்டான்.

பெயருக்கும் குணத்திற்கும் பொருத்தமில்லாத பல பேர்வழிகளில் வீரபாண்டியனும் ஒருவன், ஸ்ரீ வல்லபன் போன்ற மாபெரும் வீரர்கள் பிறந்த வம்சத்திலே தோன்றிய வீரபாண்டியன் துளிகூட வீரமற்றவனாகவே விளங்கினான். ஆஜானுபாகுவான பராக்கிரமபாண்டியன் வயிற்றில் உதித்த வீரபாண்டியன் பார்வைக்குச் சாதாரண உயரத்துடனேயே தோற்றமளித்தான். அளவுக்கு மீறிய குடியினாலும் அளவு மீறிய உணவினாலும் ஊதிக்கிடந்த அவன் உடற்பருமன் இருந்த உயரத்தையும் சற்றுக்குறைத்துக் காட்டியது. பாண்டிய பரம்பரையில் தொன்று தொட்டு இருந்து வந்த பிரகாசம் வீரபாண்டியன் கண்களிலும் இருந்து வந்தாலும் அதில் ஒரு வெறியும் அறிவீனமும் கலந்திருந்தன. நிலையற்ற புத்தியுள்ளவனாதலால் கண்களில் ஒரு கலக்கமும் இருந்து வந்தது.

எத்தனை நேரம் நின்றும் மன்னன் தன்னை ஏறெடுத்துப் பார்க்காமல் மாதவி இட்ட முக்கிய பணியில் முனைந்திருப்பதைக் கண்டு, அபராஜிதன் வெறுப்பின் காரணமாகப் பயத்தை உதறிவிட்டு, உள்ளே எழுந்த ஆத்திரம் குரலில் தொனிக்காமலே மன்னனை நோக்கி, ''தாங்கள் என்னை ஏதோ அவசர காரியமாக அழைத்ததாகக்கேள்விப் பட்டேன்'' என்று சம்பாஷணையைத் தொடங்கினான்.

''ஆமாம்; அழைத்தேன். மிகவும் முக்கியமான காரியம்?'' என்று அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் நகைச் சிக்கலைப் பிரித்துக் கொண்டே பதில் சொன்னான் வீரபாண்டியன்.

"தாங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கிறேன்" என்று அபராஜிதன் சொன்னான்.

"கட்டளை மூன்று நாளாகக் காத்திருக்கிறது. சேனாதிபதி தலைநகரில் இல்லை"

"ஆமாம்."

"எங்கே போயிருந்தாய்"

"நீலமலைக்கருகே"

இந்தப் பதிலைக் கேட்ட வீரபாண்டியன் சட்டென்று தன் பணியை நிறுத்திவிட்டுத் திரும்பி அபராஜிதனை நோக்கி, "என்ன நீலமலைக்கருகிலா? எதற்கு?" என்று வினவினான். அவன் குரலில் சந்தேகம் பலமாகத் தொனித்தது.

"அங்கு தங்களுக்கெதிராக சதி ஏதோ நடக்கிறதென்று காரி சொன்னான்" என்றான் அபராஜிதன் மீண்டும்.

இந்தப் பதில் மாதவியைக் கூட அயரவைத்தது. அபராஜிதன் மிக அபாயமான பாதையில் இறங்குவதைக் கவனித்த அவள் எச்சரிக்கை கலந்த பார்வையொன்றை அவன் மீது வீசினாள். அதற்குள் மன்னன் மிகுந்த ஆவேசத்துடன் அபராஜிதனை நோக்கி, "எந்தக் காரி நிஷதராசன் படைத்தலைவனா?" என்று வினவினான்.

"அவன் நிஷதராசன் படைத்தலைவனா?"

"இல்லையா?"

"இல்லை."

"பின் யார் படைத்தலைவன்?"

"தங்கள் ஊழியனல்லவா?"

மன்னன் பிரமித்தான். "என்ன! காரிவளவன் என் ஊழியனா? எத்தனை நாட்களாக?" என்று வினவினான்.

"அவன் நம் படையில் சேர்ந்து ஒரு மாதத்திற்கு மேலாகிறதே."

"யார் அவனை அமர்த்தியது?"

"நான்தான்."



"எதற்காக?"

"பாண்டிய நாட்டைச் சுற்றிலும் யுத்த மேகங்கள் சூழ்ந்து வருகின்றன. அவற்றைச் சமாளிக்கச் சரியான ஒரு படைத்தலைவன் வேண்டுமென்பதற்காக என்னுடன் சேர்த்துக் கொண்டேன்"

என்ன பதில் சொல்வதென்று வீரபாண்டியனுக்குப் புரியாததால் மாதவியைப் பார்த்தான். மாதவி சொன்னாள் "அவன் சொல்வது உண்மைதான் மகாராஜா"

"உனக்கெப்படித் தெரியும்?"

"நீலமலைக்கருகில் மாமாவின் கூடாரத்தில்தான் இவர்களைப் பார்த்தேன். இல்லாவிட்டால் உங்கள் சேனாதிபதியை எனக்கு எப்படித் தெரியும்?"

"இவர் நீலமலைக்கு வந்தது உங்கள் மாமாவுக்கும் தெரியுமா?"

"நன்றாகத் தெரியும், இருவருமாகச் சேர்ந்துதான் சதிகாரர்களைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டார்கள்."

இதைக்கேட்ட மன்னன் மனம் சற்று நிம்மதியடைந்தாலும் பூரண நம்பிக்கை பிறக்காது போகவே அபராஜிதனைப் பார்த்துக் கேட்டான். "அப்படியானால் நிஷதராசனையும் முத்தரையனையும் இவர்கள் பிடித்துக் கொண்டு வந்தபோது நீ ஏன் கூட வரவில்லை?"

அபராஜிதன் பதில் சொல்லுமுன் மாதவியே குறுக்கிட்டு, "அவர்களைப் பிடிக்கும்போதுதான் சேனாதிபதி அங்கில்லையே. மாமா அந்த அலுவலில் ஈடுபட்டிருக்கிறார் என்று தெரிந்தவுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டார்" என்று பதில் சொன்னவள், மன்னன் முகத்தில் அதற்கு மேலும் அவநம்பிக்கை தாண்டவமாடுவதைக் கண்டு கோபிப்பதுபோல் பாசாங்கு செய்து, "ஏன், நான் சொல்வதில்கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?" என்று வெகுண்டு எழுந்திருந்தாள்.

"இருக்கிறது, இருக்கிறது. உட்கார் மாதவி!" என்று அவள் கையைப் பிடித்து உட்காரவைத்த பாண்டியன்

சேனாதிபதியைப் பார்த்து, "உண்மை தெரியாமல் உம் மீது கூடச் சந்தேகப்பட்டேன். ஆனால் என்ன செய்வது! இவனோ இவன் மாமாவோ சதியைப்பற்றி ஏதாவது சரியான தகவலைச் சொன்னால்தானே?'' என்றான்.

"சதியைப்பற்றிய தொல்லை உங்களுக்கு எதற்கு! அதைக் கவனிக்கத்தான் மாமா இருக்கிறாரே!''

"ஆமாம், ஆமாம், மாமா இருக்கிறார். அதற்குமேல் நீயும் இருக்கிறாயே, மாதவி!'' என்றான் மன்னன்.

"நாங்களிருக்கையில் உங்களுக்கென்ன குறைச்சல்?'' என்றாள் மாதவி.

"ஒரு குறைச்சலுமில்லை'' என்று சேனாதிபதியும் கலந்து கொண்டான். அவன் குரலில் சற்று ஏளனமும் கலந்திருந்தது.

அதைக் கவனிக்காமலேயே வீரபாண்டியன் சம்பாஷணையின் மிக முக்கியமான கட்டத்தில் இறங்கி அபராஜிதனை நோக்கிச் சொன்னான்: "அபராஜிதா! இவன் மாமா நீலமலைக்குச் செல்லுமுன் மொத்தம் நான்கு பேர்கள் அங்கு சதிசெய்யப் போவதாகச் சொன்னார் வந்த போது இரண்டு பேரைக் கொண்டு வந்தார்...'' என்று மேலும் ஏதோ சொல்லப் போனான்.

அவன் பேச்சை இடையிலேயே வெட்டிய அபராஜிதன் "தமிழ்நாட்டின் இரு மாபெரும் படைத்தலைவர்கள்'' என்றான்.

"ஆனால் இப்போது தலையை இழந்தவர்கள்'' என்று சொல்லிவிட்டுத் தான் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லி விட்டதுபோல் இடி இடி என்று நகைத்தான் மன்னன்.

மன்னனிடம் அபராஜிதனுக்கு ஏற்கனவே இருந்த வெறுப்பு இன்னும் அதிகமாகவே சற்று உஷ்ணமாகவே கேட்டான்: "மகாராஜா! அவர்கள்தான் சதி செய்தவர்கள் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?''

"நிச்சயமாகத் தெரியும்?''

"எப்படித் தெரியும்?''



"மாமாதான் சொல்லிவிட்டாரே.''

"விசாரணையில் அவர்கள் நிரபராதி என்று வாதிக்கவில்லையா?''

"விசாரணை நடந்தாலல்லவா விவாதிப்பார்கள்?''

"என்ன! விசாரணை இல்லாமலே தமிழ்நாட்டின் இருபெரும் படைத்தலைவர்களின் தலைகளை வாங்கி விட்டீர்களா? மகாராஜா! உங்களுக்கு நிச்சயமாய்ப் பைத்தியம் பிடித்திருக்கிறது. ஆமாம் மகாராஜா! பாண்டிய நாட்டைச் சுற்றி யுத்த மேகங்கள் சூழ்ந்துவருகின்றன. எந்த நிமிஷத்திலும் பாண்டிய நாட்டின் மீது பாய ராஜாதிராஜ சோழன் தயாராக இருக்கிறான். இந்த சமயத்தில் மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட இரு படைத்தலைவர்களைக் கொன்று விட்டீர்கள் அவர்கள் சைன்னியங்கள் கொதித்தெழுந்து சோழ மன்னனுடன் சேர்ந்துகொண்டால் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று ஆவேசத்துடன் கேட்டான் அபராஜிதன்

'அதைப்பற்றி எனக்கேன் கவலை? மாமா இருக்கிறார்.''

"மாமாவா? மாமா இதற்கு என்ன செய்யமுடியும்?'' என்று வெறுப்புடன் வினவினான் அபராஜிதன்

"இலங்கையிலிருந்து படைகளை வரவழைக்க முடியும், வரவழைப்பதற்கு மாமா கடிதம் எழுதி விட்டார். வேண்டுமானால் மாதவியைக் கேள்.''

"மாமா இருக்கிறார், மாதவியைக் கேள்! என்ன பேச்சு மகாராஜா இது? வெளிநாட்டு வாட்களைக் கொண்டா உமது நாட்டைக் காக்கப் போகிறீர்கள்! அதில் என்ன சுயமரியாதை இருக்கிறது? அதைவிட உங்கள் மக்களின் அன்பைக் கவரப் பாருங்கள். ஆயிரமாயிரம் அண்டை நாட்டுப் படையைவிட மக்கள் அன்பு எத்தனையோ சக்தி வாய்ந்தது. அதைக் கவருங்கள். உங்கள் சொந்தப் படைத்தலைவர்கள் சொல்லும் யோசனைக்குச் செவிகொடுங்கள். அக்கம்பக்கத்திலிருக்கும் தமிழ்மன்னர்களின் நட்பைச் சம்பாதியுங்கள்.''

நிதானத்தை இழந்து அபராஜிதன் சீறி உதிர்த்த அந்த வார்த்தைகளைக் கேட்ட மன்னன் மாதவியின் பக்கத்திலிருந்து எழுந்தான். 'அபராஜிதா! மக்கள் குழந்தைகளுக்குச் சமானம். துஷ்டக் குழந்தைகளை அடக்கி ஆள்வது அவர்களுக்கே நல்லது. அதற்குப் படை பலம் வேண்டும். அதை இலங்காபுரத் தண்டநாயகர் அளிக்கிறார்; அக்கம் பக்கத்து அரசர்களைப்பற்றி ஏன் பயப்படுகிறாய்? சோழன் படையெடுக்கட்டும். அவற்றைச் சமாளிக்க இலங்கைப் படைகள் இருக்கின்றன. அதுவும் போதாதென்றால்....''

''போதாதென்றால்?''

''மழவராயன் சைன்யம் இருக்கிறது.''

''மழவராயன் சைன்யமா? உங்களுக்கும் அவனுக்குந் தான் பகையாயிற்றே!''

''பகையைத் தீர்க்க முடிவு செய்துவிட்டோம். என்ன மாதவி.''

ஆமென்பதற்கு அறிகுறியாக மாதவி தலையசைத்தாள். ''பகையை முடிக்க என்ன செய்திருக்கிறீர்கள்!'' என்று அபராஜிதன் கேட்டான்.

''திருமணத் திட்டம். மழவராயன் மகளை மணக்கச் சம்மதித்துவிட்டேன்'' என்றான் மன்னன்.

அபராஜிதனுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. சகல உணர்ச்சிகளையும் இழந்து மெய்மறந்து வெகுநேரம் நின்றான். அவன் உள்ளத்தில் சொல்லவொண்ணா வேதனை ஊடுருவிச் சென்றது. இத்தனை நாளாகக் குழலியை மணக்க இஷ்டப்படாத வீரபாண்டியன் இப்பொழுது எப்படி இசைந்தான் என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் முறையில் அமைந்தன வீரபாண்டியனின் அடுத்த சொற்கள். ''ஆச்சரியப்படாதே அபராஜிதா! இந்தத் திருமணம் நடந்துதான் தீரவேண்டுமென்று மாதவி தான் வற்புறுத்தினாள்'' என்றான்.

''மாதவியா!''



''ஆமாம், நீலமலைக்குப் போய் வந்ததிலிருந்தே மாதவியின் போக்கு விசித்திரமாயிருக்கிறது. அவள் சொல்லாவிட்டால் இந்த விவாகத்திற்கு நான் உடன் படுவேனோ! அபராஜிதா! அவள் தியாகத்தின் சிகரம். பாண்டிய நன்மைக்காக இந்தத் திருமணம் அவசியம் என்று அவள்தான் வற்புறுத்தினாள்.''

மன்னனை அவள் வற்புறுத்திய காரணம் தியாக புத்தியல்ல என்பது அபராஜிதனுக்கு நன்றாகப் புரிந்தேயிருந்தது. இருந்தாலும் அவன் மனோநிலை எதையும் பேச இடங்கொடுக்காததால் அந்த அறையிலிருந்து சீக்கிரம் போய் விட வேண்டுமென்ற உத்தேசத்துடன் கேட்டான். ''மகாராஜா? என்னை அழைத்த காரணத்தை சொல்லவில்லையே?'' என்று.

வீரபாண்டியன் மாதவியை நோக்கி, ''மாதவி! எங்கே அது?'' என்று வினவினான்.

மாதவி மஞ்சத்திலிருந்து எழுந்து அறைக் கோடிக்குச் சென்று அங்கிருந்த ஒரு வெள்ளிக் குழலை எடுத்து வந்து மன்னனிடம் கொடுத்தாள் மன்னன் அந்தக் குழலை அபராஜிதனிடம் நீட்டி, ''அபராஜிதா! மழவராயனைப் பெண் கேட்டு இதில் ஓலை எழுதி வைத்திருக்கிறேன். இந்த முத்திரை ஓலையை எடுத்துச் சென்று மழவராயனிடம் பெண்ம்பசி ந்பே முகூர்த்தத்தை நிச்சயம் செய்துவா!' என்று உத்தரவிட்டான்.

அன்றைய நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்தது போல் இருந்தது அந்த உத்தரவு. மனத்தில் வேதனை மண்டிக் கிடந்ததால் மறு பேச்சு ஏதும் பேசாமல் முத்திரை ஓலையைப் பெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குப் புறப்பட்டான் அபராஜிதன். அரண்மனையை விட்டு வெளியே வரும்போது துக்கம் நெஞ்சை அழுத்தியதால் குனிந்த தலையுடன் யாருடனும் பேசாமல் விடுவிடென்று நடந்து குதிரையில் ஏறி வேகமாகச் சென்றான். இருள் நன்றாகப் படிந்தாலும் மதுரை ஏராளமான விளக்குகளுடனும் சதா

போய் வந்து கொண்டிருந்த ஜன சஞ்சாரத்தின் இரைச்சலுடனும் பகல் போலவே கண்களையும் காதையும் ஒருங்கே கவர்ந்து அற்புதமாகக் காட்சி தந்தது.

எதையும் காதில் போட்டுக் கொள்ளாமலும், யாரையும் நோக்காமலும் மாளிகைக்கு வந்த அபராஜிதன் நேராகத் தன அறைக்குச் சென்றான். அறையில் விளக்குகள் ஏதுமில்லை, கும்மிருட்டாயிருந்தது. ஏன் விளக்குகள் எதையும் ஏற்றக் காணோம் என்று யோசித்துக் கொண்டே நடு அறைக்கு வந்த அபராஜிதன் அந்த அறையில் தன்னைத் தவிர வேறு யாரோ இருப்பதை உணர்ந்ததும் சட்டென்று நின்ற இடத்திலேயே நின்றான். அறையில் இருந்த பேர்வழி கோடியில் மெல்ல நகர்வதும் லேசாகத் தெரிந்தது.

அடுத்த வினாடி திறந்திருந்த அறைக் கதவும் வெகு லாகவமாகச் சாத்தப்பட்டது.

## 15. விளக்கின் ஒளியில்

ஏற்கனவே பலகணிகள் நன்றாக இழுத்து மூடப்பட்டிருந்ததன் காரணமாக வீதி விளக்குகளின் வெளிச்சம் கூட அடிக்காமல் நல்ல இருட்டாக இருந்த அந்த அறையில், கதவும் சாத்தப்படவே இருள் பரிபூரணமாகக் குடிகொண்டது. அந்த மை இருட்டில் தனக்குப் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தவன் யாராயிருந்தாலும் அவன் மிகுந்த முன்னேற்பாட்டுடனேயே காரியங்களைச் செய்திருக்கிறானென்பதை அபராஜிதன் சந்தேகமறப் புரிந்து கொண்டாலும் அப்படி அத்தனை கட்டுக் காவல்களையும் தாண்டி ரகசியமாகத் தன் அறையில் புகக்கூடியவன் யாராயிருக்கும் என்பதை மட்டும் ஊகிக்க அவனால் முடியவில்லை. காவலாளிகளைக் கடந்து தனது அறைக்கு வரக்கூடியவர்கள் அரசாங்கத்திலேயே இலங்காபுரனையும் காரியையும் தவிர வேறு யாருமில்லை என்பதை அறிந்த அபராஜிதனுக்கு அவ்விருவரும் அச்சமயம் தன்னைத்தேடி



வரவேண்டிய அலுவல் ஏதும் இல்லை என்பதும் தெரிந்தே இருந்தது. ''காரியும் இல்லை, இலங்காபுரனும் இல்லை, வேறு யாராயிருக்கும்'' என்பதையோசித்தவண்ணம் அறை நடுவில் அப்புறம் இப்புறம் சிறிதும் அசையாமல் நின்ற சேனாதிபதி, வந்திருந்தவனின் காலடிச் சத்தத்தின்மூலம் அவன் சஞ்சரிக்கும் மார்க்கத்தைக் கவனித்த வண்ணமிருந்தான் வந்திருந்தவனும் அபராஜிதன் சந்தேகத்தைத்துடைக்க அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. கதவை மெல்லச் சாத்தியதும் அபராஜிதனை நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்து, ''பிரபு! இருளில் நாம் பேசமுடியாது. நான் கதவு ஓரமாக மறைந்து நிற்கிறேன். காவலாளிகள் யாராவது ஒருவனைக் கூப்பிட்டு வெளியிலிருந்து சிறுவிளக்கு ஏதாவது ஒன்றைக் கொண்டுவரச் சொல்லுங்கள்'' என்றான்.

அந்தக் குரலைக் கேட்டதும் வியப்பும் அதிர்ச்சியும் ஒருங்கே அடைந்த அபராஜிதன் சட்டென்று பின்புறம் திரும்பி, ''யார்! நீங்களா!....'' என்று ஏதோ பேசப் போனவனை வந்தவன் தடுத்து ''உஸ்! பேசாதீர்கள். விளக்கு வரட்டும் பேசுவோம்'' என்று எச்சரிக்கை செய்யவே அபராஜிதனும் மேலே எதுவும் பேசாமல் அவர் சொற்படியே கதவைத் திறந்து காவலாளி ஒருவனைக் கூப்பிட்டு விளக்கு கொண்டுவரச் சொன்னான். காவலாளி கொண்டுவந்த விளக்கை வாயிற்படிக்கருகில் சேனாதிபதியே நின்று வாங்கிவந்து மூலையிலிருந்த பீடத்தின் மேல்வைக்க அதே சமயத்தில் வந்திருந்த மனிதனும் கதவை மூடி இறுகத் தாளிட்டுவிட்டு அறை நடுவே வந்து அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்துகொண்டான். சேனாதிபதி மட்டும் தன் மேலங்கியைக் கழற்றாமலும், மஞ்சத்தில் உட்காராமலும் வந்த மனிதனைப் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் மௌனமாக நின்றுவிட்டு, ''உங்களை நான் எதிர்பார்க்கவேயில்லை. திடீரென்று எங்கிருந்து வந்து முளைத்தீர்கள்? அதுவும் இந்த அறையில் எத்தனை முன்னேற்பாட்டுடன் காத்திருந்தீர்கள். இது

சொப்பனமா நிஜந்தானா என்று எனக்கு இன்னும் சந்தேகமாகவே இருக்கிறது.''

''பிரபு! நான் இருக்கும் நிலையில் இத்தனை முன்னேற்பாடு அவசியமாகிறது. நான் இங்கிருப்பது மட்டும் இலங்காபுரனுக்குத் தெரிந்தால்....''

''பௌத்த மதத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் தேவி மீனாட்சிக்குத் தேங்காய் உடைக்கத் தவறமாட்டான்.''

''தேங்காய் எதற்கு? என் தலையையே தேங்காய் என்று நினைத்து உடைத்துவிட மாட்டானா?'' என்று கருணாகரத் தேவன் அத்தனை ஆபத்திலும் இரைந்து சிரித்தான்.

உள்ள அபாயத்தை உணர்த்தி அவன் சிரிப்பை அடக்கமுயன்ற அபராஜிதன், ''தேவரே! இத்தனை எச்சரிக்கையுடன் நடந்துகொண்டு கடைசியில் இரைந்து சிரிக்கிறீரே, காவலாளிகள் காதில் பட்டால் உமக்கும் ஆபத்து உம்மை இந்த அறைக்குள் அனுமதித்த எனக்கும் ஆபத்து'' என்று சொல்லிவிட்டு, ''அது கிடக்கட்டும்; நீலமலைக் குடிசையிலிருந்து எப்படித் தப்பினீர்கள்?'' என்று வினவினான்.

''தப்பியதில் கஷ்டம் ஏதும் இல்லை. ஒருநாள் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது.''

''பட்டினியா! எதற்காக!''

''உணவுக்கு ஆசைப்பட்டால் தலை உருண்டிருக்கும். அன்று எல்லாம் நான் எதிர்பார்த்தபடிதான் நடந்தது. சிங்கள வீரர்கள் அனைவரும் உங்கள் நால்வருடன் போரிடுவதிலும் உங்களைத் துரத்துவதிலுமே முனைந்திருந்தார்கள். குடிசைப்பக்கம் யாரும் வரவில்லை. போதாக்குறைக்குப் பந்தங்களை அவர்கள் மூங்கிற்புதர்களில் எறிந்ததால், காட்டுத்தீ வேறு பரவிவிட்டது. அந்தத் தீயை அணைத்து எப்படியாவது தப்பினால் போதுமென்றாகி விடவே குடிசையிலிருக்கும் கிழவனைப் பற்றி யாருக்கும் யோசனை வரவில்லை. தீ அணைந்து, அவர்கள் பாதையில் செல்ல ஒரு நாள் பிடித்தது. அந்த ஒருநாள் அடியேனுக்கு உபவாசம்.''



''தப்பிய பிறகு இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''முக்கிய அலுவலாகச் சோழநாடு சென்றிருந்தேன். நேற்றிரவுதான் இங்கு வந்து சேர்ந்தேன். தாங்கள் வரும் வரையில் தலைமறைவாக இருப்பதற்காக ஒரு நண்பர் வீட்டில் தங்கினேன்.''

''நான் வந்ததை எப்படி அறிந்தீர்கள்?''

''உங்கள் வரவை அறிவதில் கஷ்டமென்ன இருக்கிறது? சேனாதிபதியின் பட்டணப் பிரவேசமென்றால் ஊர் அமளிப்படுகிறதே''.

இதைக் கேட்டதும் அபராஜிதன் முகத்தில் சற்றுப் புன்முறுவல் தவழ்ந்தது. ''ஆமாம், தேவரே! மக்கள் என்னைப் பெரிதும் நேசிக்கிறார்கள்...'' என்று ஆரம்பித்த அபராஜிதனை இடைமறித்துக் கருணாகரத்தேவன், ''அப்படி நேசிக்கும் மக்களுக்குத் தாங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான்.

அபராஜிதன் உடனே பதில் ஏதும் சொல்லாமல் தேவனைக் கூர்ந்து கவனித்தான். பிறகு சொன்னான்: ''எதை வேண்டுமானாலும் செய்யத் தயார் தேவரே! உயிரை வேண்டுமானாலும் கொடுக்கிறேன்.''

தேவன் பதிலுக்குச் சொன்னான்; ''உயிரைக்கொடுக்க வேண்டாம் பிரபு! தேசபக்தர்களின் உயிர்கள் ஏற்கனவே நஷ்டமடைந்து வருகின்றன. இப்பொழுதுதான் நமது நண்பர்களிருவரின் தலைகளைக் கோட்டை வாசல் கழுகுகள் கொத்திக் கொண்டிருக்கின்றன.''

இந்தப் பதிலைச் சொன்னபோது தேவன் முகத்தில் இருந்த துக்கக் குறியைக் கவனித்த அபராஜிதனும் ஆயாசம் கலந்த பெருமூச்சொன்றை வெளியிட்டு, ''தேவரே! நமது நண்பர்களின் தலைகளைக் கோட்டை

வாசலில் நாட்டிய இலங்காபுரனின் தலையை அதே கோட்டை வாசலில் ஈட்டி மேல் நாட்ட நானும் தேவி மீனாட்சிமீது ஆணையிட்டிருக்கிறேன்!'' என்றான்.

அத்தனை நேரம் அதிக உணர்ச்சியைக் காட்டாதிருந்த தேவனும் தனது ஆசனத்திலிருந்து எழுந்து, ''பிரபு! வெறும் ஆணையிடுவதால் என்ன பயன்? இலங்காபுரனை ஒழித்துக் கட்டினாலொழிய இந்த அக்கிரமங்கள் நீங்க வழியில்லை'' என்றான்.

''ஒழித்துக்கட்டுவது அவ்வளவு சுலபமான வேலையில்லை, தேவரே! மன்னன் இலங்காபுரனிடம் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறான். சிங்களத்துப் பைங்கிளியின் பிடியில் பூராவாகச் சிக்கிக்கொண்டிருக்கும் மன்னன் எதற்கெடுத்தாலும், 'மாமா இப்படிச் சொன்னார், மாமா அப்படிச் சொன்னார், மாமாவின் அபிப்பிராயம் இது, மாமாவின் அபிப்ராயம் அது!' என்று பிதற்றுகிறான்'' என்றான் அபராஜிதன்.

''மாமாவா!'' தேவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ஆமாம், மன்னர் இலங்காபுரனை இப்பொழுது மாமா என்றுதான் அழைக்கிறார்.''

''இந்த உறவுமுறை எப்படி ஏற்பட்டதாம்?''

''பைங்கிளிக்கு மாமா அல்லவா?''

''ஆகவே தனக்கும் மாமாவாக்கிக் கொண்டுவிட்டாரோ? நல்ல லட்சணம்!'' என்ற கருணாகரத்தேவன் ''பிரபு! இப்பேர்ப்பட்ட மன்னனைக் காப்பாற்றத்தானே அன்று நாங்கள் அளித்த மணிமகுடத்தைப் புறக்கணித்தீர்கள்?'' என்று கேட்டான்.

''காரணத்தைத்தான் அன்றே கூறிவிட்டேனே, தேவரே! நான் சுதந்திரமாக வாழ விரும்புகிறேன். மணிமகுடம் மனிதனுக்கு அளிக்கப்படும் பொன்விலங்கு. அதில் சிக்க நான் இஷ்டப்படவில்லை'' என்றான் அபராஜிதன் பதிலுக்கு.

''அப்படியானால் பாண்டியநாட்டு மக்கள் கதி?'' என்று வினவினான் தேவன்.

''மக்களை இலங்காபுரன் கொடுமையினின்று விடுவிக்க வேறு மார்க்கம் தேடுவோம்.''

''வேறு மார்க்கத்திற்குத்தான் அரசன் ஒப்பவில்லையே!''

''எந்த மார்க்கத்தைக் குறிப்பிடுகிறீர்கள்?''

''ஏற்கனவே குறிப்பிட்ட மார்க்கந்தான். மழவராயன் மகளை மன்னன் மணம் புரிந்து சோழநாட்டு நட்பையும் பெற்றால் இலங்காபுரனை ஓரளவு அடக்கலாம்.''

''தங்கள் கோரிக்கையில் ஒரு பாதி பூர்த்தியாகி விட்டது'' என்று மெல்லச் சொன்னான் அபராஜிதன்.

கருணாகரத்தேவன் ஏதும் புரியாமல்சேனாதிபதியைப் பார்த்து, ''என்ன! ஒரு பாதி பூர்த்தியாகிவிட்டதா! எப்படி எப்படி?'' என்று வினவினான்.

அபராஜிதன் தொண்டையில் எழுந்த வார்த்தைகள் ஒரு வினாடி தேங்கி நின்றன. பிறகு சமாளித்துக் கொண்டு சொன்னான்: ''தேவரே! மன்னன் மழவராயன் மகளை மணக்கச் சம்மதித்து விட்டார்.''

வயோதிகனான கருணகரத் தேவரின் முகம் ஆச்சரியத்தாலும் மிதமிஞ்சிய சந்துஷ்டியாலும் நன்றாக மலர்ந்தது. ''இது உண்மையா பிரபு! அத்தனை புத்தி மன்னனுக்கு வந்து விட்டதா?'' என்று பதற்றத்துடன் வினவினான்.

அபராஜிதன் உடனே பதிலேதும் சொல்லவில்லை. தன் கையிலிருந்த வெள்ளிக்குழலைத் தேவன் கையில் கொடுத்து, ''பெண் கேட்கும் முத்திரை ஓலை இதில் இருக்கிறது'' என்றான். கருணாகரத்தேவன் அவசர அவசரமாக வெள்ளிக் குழலைத் திறந்து ஓலையை எடுத்துக்கொண்டு அறைக் கோடிக்குப் போய் வெளிச்சத்தில் ஓலையைப் படித்தான். ஓலையின் கடைசியில் பொறிக்கப்பட்டிருந்த பாண்டிய நாட்டு ராஜாங்க முத்திரையையும் ஆராய்ந்

தான். பிறகு அபராஜிதனை நெருங்கி வந்து, ''பிரபு! உங்களைப் பாண்டிய மக்கள் என்றும் வாழ்த்துவார்கள். மன்னன் மனத்தை எப்படியோ மாற்றிவிட்டீர்களே'' என்று குதூகலத்துடன் கூறினான்.

''மக்கள் வாழ்த்தவேண்டியது என்னையல்ல'' என்றான் அபராஜிதன். அவன் குரலில் துக்கமும், வெறுப்பும் கலந்து நின்றன.

''பின் யாரை?'' என்று தேவன் வினவினான்.

''மாதவியை.''

''சிங்களத்துப் பைங்கிளியையா?''

''ஆம், அவள்தான் மன்னன் மனத்தை மாற்றினாள்.''

''அவள் ஆணைப்படி தான் மன்னர் மழவராயன் மகளை மணக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.''

கருணாகரத்தேவன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றான். ''ஒன்றும் புரியவில்லையே, பிரபு! மன்னனைத் தன் மடியில் வைத்துக் கொண்டிருக்கும் மாதவி, இன்னொரு பெண்ணை அவனுக்கு மணமுடித்து வைக்கிறாளென்றால் ஆச்சரியமாயிருக்கிறதே!''

''ஆச்சரியம்தான்; ஆனால் உண்மை.''

''இதற்குக் காரணம்?''

அபராஜிதன் மனத்தில் என்னென்னவோ எண்ணங்கள் எழுந்து ஊசலாடின. இலங்காபுரனிடமிருந்து தான் தப்பியது முதல் அன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்து, சில நாட்களுக்குள் தன் வாழ்க்கையில் எத்தனை விசித்திரமான, விபரீதமான அலைகள் மோதியிருக்கின்றன என்பதை எண்ணி ஏங்கினான். 'மாதவியின் மனம் மாறியதற்குத் தேவர் காரணம் கேட்கிறாரே எப்படிச் சொல்வது?' என்று தயங்கினான். 'மாதவி என்னிடம் மையல் கொண்டிருக்கிறாள். ஆகையால் வேறு பெண்ணை மன்னன் கழுத்தில் கட்டப் பார்க்கிறாள்' என்று சொல்லுவதா என்று பலவாறாக யோசித்துப் பார்த்துக் கடைசியில் காரணத்தை மறைத்தே பேசினான்.



''பைங்கிளியின் மனத்தை அவள் மாமனாலேயே அறிய முடியவில்லையே நாம் எப்படி அறிய முடியும் தேவரே?'' என்றான்.

சேனாதிபதியின் போக்கையும், தயக்கத்தையும் யோசனையையும் கவனித்த கருணாகரத்தேவனுக்குச் சேனாதிபதி எதையோ மறைக்கிறாரென்பது திட்டமாகத் தெரிந்தாலும் அது என்ன என்பதை ஊகிக்க இயலாதவனாய்த் திண்டாடினான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல், ''காரணம் எதுவாயிருந்தால் என்ன? நாட்டுக்கு நல்ல காரியம். சீக்கிரம் திருமணத்தை முடித்து வையுங்கள்'' என்றான். சேனாதிபதி சொன்ன அடுத்த வார்த்தைகள் கருணாகரத்தேவனை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டன.

''இந்தத் திருமணத்தில் எனக்கிஷ்டமில்லை தேவரே'' என்றான் அபராஜிதன்.

''இஷ்டமில்லையா! ஏன்?''

''நீர் கார்குழலியைப் பார்த்திருக்கிறீரா?''

''சிறுவயதில் பார்த்திருக்கிறேன்.''

''இப்பொழுது சமீபத்தில் பார்த்திருக்கிறீரா?''

''இல்லை.''

''பாரும், புரியும். கள்ளம் கபடமற்ற கார்குழலியை இந்தக் குடிகார அரசனுக்கு மணம் புரிவிப்பது எத்தனை பாபமென்பது புரியும்.''

சேனாதிபதியின் விசித்திரமான இந்த மாறுதலுக்குக் காரணத்தை அறியாத கருணாகரத்தேவன் ஒரு விநாடி ஏதோ யோசித்துவிட்டு, ''பிரபு! அரசியல் பெரிய சதுரங்கம் போன்றது. அதில் எந்தக் காயைப் பலி கொடுப்பதும் தவறாகாது. தமிழ்நாட்டின் நன்மைக்காக கார்குழலியைத் தியாகம் செய்யவேண்டிய அவசியம் இருந்தால் செய்ய வேண்டியதுதான்'' என்று திட்டமாகச் சொன்னான்.

"தமிழ்நாட்டைப்போல் மூன்று தமிழ்நாடுகளைப் பலி கொடுப்பதானாலும் கொடுக்கலாம். அதற்காக ஒரு பேதையின் வாழ்வை அடியோடு அழிப்பது நியாயமல்ல."

"இந்த நியாயத்தை எத்தனை நாளாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்குக் கார்குழலியைப் பற்றி என்ன தெரியும்?"

"எல்லாம் தெரியும். அவள் அழகு தெரியும், குணம் தெரியும். அவள் வார்த்தையில் இசை இருக்கிறது தேவரே! நடையில் நடனக்கலை இருக்கிறது"

"ஏதோ நேரில் பார்த்ததுபோல் பேசுகிறீர்களே."

"பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன். பார்த்தது மட்டுமா? பேசினேன், பழகினேன், இருந்தேன்..."

தேவன், அபராஜிதனை ஏற இறங்கப் பார்த்தான். இதைக் கவனித்த அபராஜிதனும் சொன்னான்.

"எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைக்கிறீரா? சந்தேகமில்லாமல் பிடித்திருக்கிறது. கார்குழலியைக் கன்னிமாடத்தில் கண்ட நாளாய் புத்தி ஒரு நிலையில் இல்லை."

"கன்னி மாடமா?"

நீலமலையில் எதிரிகளிடமிருந்து தப்பியது முதல் அன்று கருணாகரத்தேவனைச் சந்தித்தது வரையில் சகல தகவல்களையும் எடுத்துச் சொன்னான். இந்த வரலாற்றைக் கேட்ட பிறகு வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்த கருணாகரத்தேவன் கடைசியாகச் சேனாதிபதியை நோக்கி, "பிரபு! விதி உங்கள் வாழ்க்கையில் பலவிதமாக விளையாடி இருக்கிறது. ஆனால், நாட்டின் விதியை நாம் கவனிக்க வேண்டும். ஆகவே வீரபாண்டியனுக்கும் கார்குழலிக்கும் திருமணம் நடந்துதான் தீரவேண்டும். முத்திரை ஓலையை நானே எடுத்துச் சென்று திருமணத்தை முடித்துவைக்கிறேன்" என்று வெள்ளிக் குழலை எடுத்துக் கொண்டான்.

"அதை வையுங்கள் கீழே!" அதட்டலாக எழுந்தது அபராஜிதன் குரல்.



"ஓலையை என்ன செய்வதாக உத்தேசம்?"

"எரிப்பதாக உத்தேசம்"

கருணாகரத்தேவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் குழலை மஞ்சத்தில் வைத்துவிட்டு, "பிரபு! கடைசி முறையாகக் கேட்கிறேன். இந்தத் திருமணத்தை நடத்தப்போகிறீர்களா, இல்லையா?" என்று வினவினான்.

"இல்லை" கண்டிப்பாகக் கூறினான் அபராஜிதன்.

"இதைக்கண்ட பிறகுமா?" என்று சொல்லிக்கொண்டே தன் மடியிலிருந்து ஒரு பளபளப்பான வஸ்துவை எடுத்து அபராஜிதனிடம் நீட்டினான் கருணாகரத்தேவன். அதை விளக்கொளியில் இருமுறை திரும்பிப் பார்த்த அபராஜிதன் முகத்தில் எல்லையற்ற ஆச்சரியமும் கோபமும் தோன்றின.

## 16. காகப் பணம்

தன் கையிலிருந்த பளபளப்பான வஸ்துவை மீண்டும் இருமுறை திருப்பித் திருப்பி ஊன்றிக் கவனித்த அபராஜிதன் தன் பக்கத்திலிருந்த மரப்பலகை மீது அதை ஒரு முறை ஓங்கித் தட்டினான்.

"தேவரே, இது உமக்கு எப்படிக் கிடைத்தது?" என்றான்.

மங்கலான விளக்கின் ஒளியிலேயே பிரமாதமாகப் பிரகாசித்த அந்தத் தங்க நாணயம் மரப் பலகைமீது பலமாக தாக்கப்பட்டதும் ஒளிக்குச் சமமான ஒலியொன்றையும் கணீரென எழுப்பி, நிசப்தமாயிருந்த அந்த அறை பூராவும் திடீரெனச் சுண்டிவிடப்பட்ட யாழின் ஒற்றைத் தந்தி போல் இன்பமான நாதத்தைப் பரப்பியது. சாதாரண சமயமாயிருந்தால் இதயத்துக்கு மிக இன்பத்தைக் கொடுக்கக் கூடிய அந்தச் சப்தம் சந்தர்ப்ப விசேஷத்தால் அபராஜிதன் உள்ளத்துக்குப் பெருத்த வேதனையையே அளித்தது. இந்த நாணயத்தால் பாண்டிய நாட்டின் கதி

அதோ கதியாகக் கூடுமென்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டிருந்த சேனாதிபதி, கருணாகரத்தேவன் வாயாலேயே அதன் பூரா விவரத்தையும் அறிய விரும்பி மீண்டும் ''தேவரே, நாணயம் சுத்தமான பத்தரை மாற்றுத்தங்கத்தில் செய்யப்பட்டிருக்கிறது'' என்றான்.

தேவன் முகத்தில் கோபக்களை சொட்டியது. உக்கிரம் நிரம்பிய தன் கண்களைச் சேனாதிபதியின்மீது திருப்பிச் சொன்னான். ''பிறநாட்டுத் தங்கம் கிடைத்தால் பத்தரை மாற்று என்ன, பன்னிரண்டு மாற்றுக்குக்கூட நாணயம் அடிக்கலாம்.''

சேனாதிபதியின் முகத்தில் ஆச்சரியரேகை சற்றே படர்ந்தது. ''என்ன, பிற நாட்டுத் தங்கமா?'' என்று வினவினான்.

''ஆமாம் பிரபு! பாண்டிய நாட்டுத் தங்கத்தில்தான் இந்தப் பொற்காசு அடிக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இலங்காபுரன் தங்கத்தைக் கட்டிகட்டியாகச் சிங்களத்திலிருந்து மூட்டை கட்டிக்கொண்டு வந்தானென்று நினைக்கிறீர்களா?'' என்று பதிலுக்குக் கேட்டான் கருணாகரத்தேவன்.

அபராஜிதன் பதிலேதும் சொல்லாமல் மரப்பலகை மீது கிடந்த தங்க நாணயத்தை எடுத்து இரு புறத்தையும் மீண்டும் கவனித்துவிட்டு, ''தேவரே! இதன் ஒரு பக்கத்தில் நாணயத்தின் மதிப்பு செதுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில்....'' என்று ஏதோ சொல்லப்போனவனைக் கருணாகரத்தேவன் இடைமறித்து, ''காகத்தின் சின்னம் செதுக்கப்பட்டிருக்கிறது'' என்று வாசகத்தை முடித்தான்.

''காகத்தின் சின்னம் சிங்கள மன்னனான பராக்கிரமபாகுவினுடைய முத்திரையல்லவா?''

''ஆமாம் பிரபு! அந்த முத்திரையைத்தான் பாண்டிய நாணயத்தில் ஏற்றியிருக்கிறார்கள். இலங்கையில் பிரதான செலாவணி இந்த நாணயத்தின் மூலம்தான் நடக்கிறது.''



''அப்படியானால் இதை இங்கு அச்சிடுவானேன்?''

''காரணம்தான் உள்ளங்கை நெல்லிக்கனி போலிருக்கிறதே பிரபு! ஒரு நாட்டார் மற்ற நாட்டாரைச் சுரண்டும்போது கையாளப்படும் முறைகளில் இதுவும் ஒன்றுதான். வீரபாண்டியனுக்கு உதவும் சாக்கை வைத்துக்கொண்டு தமிழகத்தின்மீது இலங்கையின் படையெடுப்பு நடந்திருக்கிறது. மன்னனைப் பொம்மையாக அரியணையில் உட்கார வைத்தவுடன் இலங்காபுரன் படைகளே பெரும்பாலும் பாண்டியநாட்டை ஆக்கிரமித்துக்கொண்டன. பொம்மை அரசன் கிடைத்தான். படை ஆதிக்கமும் முடிந்தது. அடுத்தபடி செலாவணியைத் தங்கள் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டியதுதானே. இலங்கைக்கும் பாண்டியன் நாட்டுக்கும் நாணயம் ஒன்றானால் இலங்கைக்கு வேண்டிய பொற்காசுகளையெல்லாம் பாண்டியநாட்டிலேயே அடிக்கலாம். பாண்டிய நாட்டுப் பொன்னைக்கொண்டே அடிக்கலாம். பாண்டிய நாட்டுப் பொற்கொல்லர்களே அடித்துத் தருவார்கள். இப்படியாகப் பாண்டியநாடு சுரண்டப்படும். பொன் கொழிக்கும் பாண்டியநாடு பொன்னிழந்து நிற்கும். படை ஆதிக்கத்திற்குப் பின் பண ஆதிக்கமும், பண ஆதிக்கத்திற்குப் பின் நாகரீக ஆதிக்கமும், ஏற்படும். அதன் முதற்படி இந்த நாணயத்தில் துவங்கியிருக்கிறது. இலங்கையின் முத்திரையான காகம் இப்பொழுதுதான் பாண்டிய நாணயத்தில் ஏறியிருக்கிறது'' என்று விளக்கினான் தேவன்.

''இந்த நாணயத்தை நான் கடை வீதிகளிலோ செலாவணித் துறைகளிலோ பார்க்கவில்லையே. உமக்கு எங்கிருந்து கிடைத்தது?'' என்று அபராஜிதன் வினவினான்.

''இன்னும் நாணயச் சந்தைக்கு வரவில்லை பிரபு! இப்பொழுதுதான் நாணயச் சாலையில் பொற்கொல்லர்கள் காசு அடித்துக்கொண்டிருக்கிறார்கள்'' என்றான் தேவன்.

''எத்தனை பொற்காசுகளை அடிக்க உத்தரவாகியிருக்
கிறது?''

''ஒரு கோடி பொற்காசுகள்.''

''ஒரு கோடிதானா? செலாவணிச் சுழற்சிக்குப்
போதுமா?''

''போதாது பிரபு! இலங்காபுரன் மிகத் தந்திரமாக
வேலையை முடிக்கப் பார்க்கிறான். முதலில் காகப்
பணத்தை அடித்துப் பாண்டிய நாட்டு நாணயத்தோடு
கலந்து சுழலவிட உத்தேசிக்கிறான். அப்படிச் சுழன்றால்
காலக்கிரமத்தில் மக்களுக்குக் காகப்பணம் சகஜமாகி
விடும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் காகப்பணத்தை
அதிகமாகத் தயாரித்து, காலக்கிரமத்தில் பாண்டிய
நாட்டுக்குச் சொந்த நாணயமே இல்லாமல் அடித்துவிடு
வதே இலங்காபுரன் திட்டம். திடீரெனக் காகப் பணத்தை
அமுலுக்குக் கொண்டு வந்தால் மக்கள் எதிர்ப்பார்க
ளென்பதை நன்றாக உணர்ந்திருக்கிறான் இலங்காபுரன்''

கருணாகரத்தேவன் பதிலைக்கேட்ட அபராஜிதன்
சற்று நேரம் தீவிர யோசனையில் ஆழ்ந்து, அறையில்
சற்று நேரம் உலாவினான். பிறகு தேவனை நோக்கிக்
கேட்டான். ''நாணயத் தயாரிப்பை இலங்காபுரன்
இவ்வளவு ரகசியமாக வைத்திருக்கும்போது உமக்கு
எங்கிருந்து இந்தப் பொற்காசு கிடைத்தது?''

''நேற்று நான் யார் வீட்டில் தங்கியிருந்தேனோ அந்த
நண்பன் ஒரு பொற்கொல்லன். நாணயச் சாலையில்
வேலை செய்கிறான்'' என்று பதில் சொன்னான் கருணா
கரத்தேவன்.

அபராஜிதன் மீண்டும் மௌனம் சாதித்தான். பாண்
டிய நாட்டை எப்பேர்ப்பட்ட அபாயம் சூழ்ந்து இருக்கிற
தென்பது அவன் மனககண் முன்னால் எழுந்து நின்றது.
எண்ணற்ற காட்சிகள் அவன் புத்தியில் ஓடத் தொடங்
கின. பாண்டியநாட்டு மக்கள் சிங்களருக்கு அடிமைப்
பட்டு அலுவல் புரியும் காட்சி. இலங்கையின்
நாணயம் பாண்டிய நாணயத்தை அறவே ஒழித்த



மாற்றரசர் பாண்டியர்களைப் பார்த்து
விட்டதால் சிங்கள படைகள் சதா நடமாடுவதால்
நகைக்கும் காட்சி, முடியாதபடி பாண்டியப்
வெளியில் தலைகாட்ட கிடக்கும் காட்சி, பதுங்க
பெண்கள் வீடுகளில் பதுங்கிக் மாற்றாரால் பலவந்த
முடியாமல் வெளிவந்த பெண்கள் காட்சி என இப்படியாகப்
மாகத் தூக்கிச் செல்லப்படும் ஒன்றாக மனத்தில் எழுந்து
பல காட்சிகள் ஒன்றன்பின் அறை நடுவிலிருந்த
அலைமோதவே, அபராஜிதன் இரு கைகளாலும்
மஞ்சத்தின் மேல் தலையைத் தன் இதயத்தில் ஓடிய
பிடித்துக் கொண்டான். சேனாதிபதியின் அறிந்துதானிருக்க
எண்ணங்களைக் கருணாகரத்தேவனும் மௌனத்தை வெட்டும்
வேண்டும். ஆகவே, அபராஜிதன் ''பிரபு! இலங்கா
நோக்கத்துடன் இடையே புகுந்து, வந்தால் பாண்டிய
புரனின் திட்டங்கள் அமுலுக்கு எப்படியிருக்குமென்று
நாட்டின் பிற்கால நிலை
உங்களுக்குநான் சொல்லத் தேவையில்லை. அவனை அடக்
கும் வழிகள் இரண்டுதான். ஒன்று சோழ நாட்டுடன்
ஒப்பந்தம். இல்லையேல் மழவராயனுடன் மணத்
தொடர்பு, இவ்விரண்டில்'' என்று தொடர்ந்து பேசப்
போன தேவனுடைய பேச்சை, ''சோழ நாட்டுடன்
தொடர்பு கொண்டால் என்ன?'' என்று அபராஜிதன்
சொற்கள் வெட்டின.

கருணாகரத்தேவன் உதடுகளில் புன்சிரிப்பு தவழ்ந்தது.
கார்குழலியிடமுள்ள மையலால் சேனாதிபதியின் மனம்
பெரிதும் மாறுதல் அடைந்திருப்பதை அறிந்ததால் ஏற்
பட்ட பரிகாசரேகை முகத்தில் படரத் தேவன்
சொன்னான்:

''எனக்கு ஆட்சேபணையில்லை, பிரபு! ஆனால் அது
இரண்டாம் பட்சமாகச் செய்யவேண்டிய முயற்சி. சோழ
நாட்டுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்வதானால்
சோழர்கள் ஆதிக்கப் பாண்டிய நாட்டின்மீது படர நாம்
தயாராகவேண்டும், ராஜாதிராஜன் தமிழ் மண்டலத்தை
ஒரே குடைக்கீழ் ஆளத் திட்டமிட்டு வருகிறான். ராஜ

ராஜன் காலத்தியப் பேரரசை மீண்டும் தமிழகத்தில் அமைப்பது அவன் நோக்கம். தங்களுக்கு அது இஷ்டமானால் எனக்கும் இஷ்டம்தான். சிங்கள ஆதிக்கத்தைவிட இன்னொரு தமிழ் மன்னன் அதிக்கம் சிறந்ததுதான். ஆனால் சுதந்திரத்தைவிட ஆதிக்கம் சிறந்ததா என்பதைத் தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.''

அந்த வயோதிக வீரன் சொற்களில் உண்மை ததும்புவதைக் கண்ட பாண்டியச் சேனாதிபதி என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து, ''அப்படியானால்...'' என்று இழுத்தான்.

''மழவராயனுடன் மணத்தொடர்புதான் பாண்டிய நாட்டைக் காக்கச் சிறந்த வழி. மழவராயனிடமிருக்கும் படைகளுடன் பாண்டியப் படைகளும் இணைந்தால் இலங்காபுரனைச் சமாளிக்கலாம்.''

''அதெப்படி முடியும்? மழவராயன் குறுநில மன்னன் தானே? அவனிடம் பெரிய படைபலமிருக்க முடியாதே.''

''பிரபு, மழவராயனை லேசுபட்டவனென்று நினைக்க வேண்டாம். தமிழ்நாட்டு அரசியல் நிலைமையை நன்றாகப் புரிந்துகொண்டு ரகசியமாகப் பெரும்படை திரட்டியிருக்கிறான். மேலைமங்கலமும் கீழைமங்கலமும் போர்க்கலசம் பூண்டு நிற்கின்றன. பல இடங்களைக் கோட்டையாக்கி அரண் அமைத்திருக்கிறான். அத்தனை பலமில்லாவிட்டால் குலசேகரப் பாண்டியனும் குலசேகரப் பாண்டியன் மூலமாகச் சோழ மன்னனும் அவனுடன் உறவாடப் பார்ப்பார்களா?''

கருணாகரத்தேவன் வாதத்தில் தவறு சிறிதுமில்லையென்றும், ராஜீய நிலையை அவன் உள்ளபடி எடைபோட்டு வைத்திருப்பவனென்பதும் சேனாதிபதிக்குத் தெள்ளெனத் தெரிந்தே இருந்தது. இருந்தபோதிலும் இந்த ராஜீயச் சிக்கலுக்காகக் கார்குழலியை வீரபாண்டியனைப் போன்ற ஒரு குடிகாரனுக்குப் பலியிடுவதா என்று நினைத்தான். அவன் நினைப்பை அறிந்துகொண்ட கருணாகரத்தேவன் சொன்னான்



''வேறு வழியில்லை பிரபு! வீரபாண்டியன் திருமணம் நடந்துதான் தீரவேண்டும். நீங்கள் சொல்வது போல் கார்குழலி அழகும் குணமும் நிரம்பியவளானால் பாண்டியநாடு புண்ணியம் செய்ததாகும். அவள் வரவால் ஒருவேளை வீரபாண்டியனே திருந்தினாலும் திருந்தலாம். அவன் திருந்தாவிட்டாலும் நாம் நமது படைபலத்தால் அரசனைப் பொம்மையாக்கி, ராணி ஆட்சியின் கீழ் பாண்டியர்கள் சிறப்பு மீண்டும் சிறந்தோங்கும்படி செய்யலாம். இந்த விஷயத்தில் உங்கள் சொந்த உணர்ச்சிகளைப் புகவிடாதீர்கள். காம இச்சைக்காக அபராஜிதன நாட்டைக் காற்றில் பறக்க விட்டான் என்ற சாசுவதமான அபக்கியாதியைச் சரித்திரத்தில் சம்பாதித்துக் கொள்ளாதீர்கள்'' என்று கூறிவிட்டுத் திருமண ஓலை இருந்த குழலைக் கையில் எடுத்துக்கொண்டான்.

அபராஜிதன் பேசாமலேயே உட்கார்ந்திருந்தான். அவன் மனத்தை அரித்துக்கொண்டிருந்த வேதனையை முகபாவத்திலிருந்து அறிந்துகொண்ட தேவன் மஞ்சத்தை அணுகி அவன் தோள்மேல் கையை வைத்து, ''பிரபு! உங்கள் வேதனையை நன்றாக அறிவேன். ஆனால் நாம் மக்களின் நன்மைக்காக ஜீவிப்பவர்கள், ஆகையால் உத்தரவிடுங்கள்'' என்றான்.

அபராஜிதன் தலை நிமிர்ந்து தேவனை நோக்கி, ''எதற்கு உத்தரவு'' என்று வினவினான்.

''இந்தத் திருமணத்தை முடித்துவைக்க, இந்த நிமிஷமே நான் மேலை மங்கலத்துக்குப் பயணமாக வேண்டும்'' என்றான் தேவன்.

''இலங்காபுரன் கண்ணில் பட்டால் உமது கதி என்ன ஆகும்?''

''பாண்டிய நாட்டின் கதி சரியாகும் வரையில் என் கதியைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இருந்தாலும் நான் உங்கள் தூதன் என்பதை உணர்த்த ஓர் ஓலை

எழுதிக் கொடுங்கள். சேனாதிபதி ஓலை இருக்கும்போது யாரும் என் நடமாட்டத்தைத் தடை செய்யமுடியாது."

அந்த அறையில் சம்பாஷணை இத்துடன் முடிந்தது. அபராஜிதன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அறையின் மூலைக்குச் சென்று எழுது கருவிகளைக் கொண்டுவந்து தேவன் கேட்டபடி ஓலை எழுதிக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்ட தேவனும் ஒருமுறை அபராஜிதனை நோக்கினான். அபராஜிதன் கண்களும் தேவன் விழிகளைச் சந்தித்தன. அந்தப் பார்வையிலேயே நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்யத் தீர்மானித்துவிட்ட அந்த தேசபக்தர் இருவரும் ஒருவர் உள்ளத்தில் ஓடிய உணர்ச்சி வெள்ளத்தை இன்னொருவர் சந்தேகமறப் புரிந்துகொண்டு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் பிரிந்தனர்.

அந்தச் சம்பவம் நடந்த அடுத்த இரண்டு நாட்களும் அபராஜிதன் தன் மாளிகையைவிட்டு வெளியிலேயே வரவில்லை. மாதவி அவனை இரண்டு முறை கூப்பிட்டனுப்பினாள். உடல்நிலை சரியாயில்லை என்று அந்த அழைப்பையும் மறுத்துவிட்டான். கருணாகரத்தேவன் யோசனைக்குத் தான் ஒப்புக்கொண்டது தேச நன்மையை உத்தேசித்துத்தானென்றாலும் கார்குழலியின் எழில் வதனம் அவன் உள்ளத்தைவிட்டு அசையாமல் அவன் மனோநிலையை ஆயிரத்தெட்டுக் கோணங்களில் திருப்பித் திருப்பித் தாக்கி, இடைவிடாத வேதனையை அளித்துக் கொண்டிருந்தது. மூன்றாவது நாள் அந்த வேதனை உச்சநிலை அடையும்படியான நிகழ்ச்சியொன்று ஏற்பட்டது. திருமணத்திற்கு இசையும்படி மழவராயனைச் சரிப்படுத்திவிட்டதாகவும் மன்னர் உடனே புறப்பட்டு மேலைமங்கலத்துக்கு வர வேண்டுமென்றும் கருணாகரத் தேவன் ஓலை அனுப்பியிருந்தான். வெடிக்கும் நிலையிலிருந்த மனத்துடன் அந்த ஓலையை அபராஜிதனே வீரபாண்டியனிடம் எடுத்துச் சென்றான்.



ஓலையைப் படித்த வீரபாண்டியன் அபராஜிதனை நோக்கி, "அபராஜிதா, நான் மீண்டும் ஓர் உற்ற நண்பனுக்குத் தவறு இழைத்துவிட்டேன்" என்றான்.

"யாருக்குப் பிரபு?"

"கருணாகரத் தேவனுக்குத்தான்!"

"தேவருக்கா?"

"ஆமாம், அபராஜிதா. என்னைக் கவிழ்க்கச் சதி நடந்த நாளிலிருந்து தேவனை இப்பக்கத்தில் காணாதிருக்கவே, அவனும் சதிகாரனென்று நினைத்தேன். ஆனால் உன்னை நான் செய்யச் சொன்ன வேலையைக் கருணாகரத் தேவன் என்ன திறமையாகச் செய்து முடித்திருக்கிறான் பார்! நீ நேராகப் போகாவிட்டாலும் தேர்ந்தெடுத்த தூதன் கெட்டிக்காரன்!" என்று வீரபாண்டியன் சிலாகித்தான். அத்துடன் தொடர்ந்தும் சொன்னான்: "அபராஜிதா! இந்தத் திருமணத்தில் எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமே இல்லை. இருந்தாலும் மாதவி சொல்வதற்காகவும், மக்கள் நன்மைக்காகவும் என்னைத் தியாகம் செய்கிறேன். ஆனால் மாதவியிடமிருந்து ஒரு வாக்கு வாங்கிக் கொண்டிருக்கிறேன்."

"என்ன வாக்கு மகாராஜா?"

"திருமணமான பின்பும் என்னைக் கைவிடுவதில்லையென மாதவி உறுதி கூறியிருக்கிறாள். அதுவும் யார் முன்பு...? அவள் மாமாவின் முன்பு! எந்த மருமகளாவது இப்படிச் சொல்லி மாமா கேட்டுக் கொண்டிருக்கிறதைக் கண்டிருக்கிறாயா?" என்று இடி இடியென்று சிரித்தான் அவன்.

"இல்லை, இல்லை! இது புதுமைதான்!" என்று அபராஜிதன் சொன்னாலும் ஏதோ ஆழ்ந்த திட்டம் வகுத்தே இலங்காபுரனும் மாதவியின் போக்குக்கெல்லாம் உட்பட்டிருக்கிறான் என்பதை மட்டும் தீர்மானித்துக் கொண்டான்.

வீரபாண்டியன் தீராத உற்சாகத்துடன் மேலும் சொன்னான்: "திருமணமே மழவராயன் அளிக்கக்கூடிய

உதவிக்காகத்தான், அபராஜிதா. எனது பைங்கிளியின் அழகுக்கு இணையான அழகு இந்த உலகத்தில் கிடைக்காது. வீரபாண்டியன் எத்தனையோ அழகிகளைப் பார்த்திருக்கிறான். ஆனால் எங்களத்துப் பைங்கிளி வானில் ஜொலிக்கும் தனி நட்சத்திரம்'' என்றான்.

ஆனால் அதே வானத்தில் எல்லா நட்சத்திரங்களையும் மறையச் செய்யக்கூடிய சந்திர பிம்பமும் உண்டு என்பதை வீரபாண்டியன் உணர்ந்து கொள்ள அந்த நாளாகவில்லை.

மேலைமங்கலத்தை அடைந்த வீரபாண்டியன், மழலராயன் மாளிகையிலிருந்த ஓர் அறையிலிருந்து கீழே பரந்து கிடந்த மலர்ச்சோலை மீது கண்களை ஓட்டிக் கொண்டிருந்தான். நிர்மலமான அந்த இரவில் சந்திரன் ஒளியில் பூமியில் ஒரு சந்திரன் நடமாடுவது போல் ஒரு மங்கை தோட்டத்தில் உலாவியதைக் கண்டான். அவளுடைய அழகைக் கண்டு அப்படியே ஒரு கணம் ஸ்தம்பித்த மன்னன் தன் அறையைக் காத்து நின்ற மழல நாட்டு வீரனை அருகில் அழைத்து, நந்தவனத்தில் உலவிய மங்கையைக் காட்டி ''அது யார்?'' என்று விசாரித்தான்.

''அதுதான் எங்கள் அரசகுமாரி,''

''யார், கார்குழலி இவள்தானா?''

''ஆமாம் பிரபு.''

வீரபாண்டியன் ஒருமுறை மென்று விழுங்கினான். பிறகு அறைக் கோடிக்குச் சென்று அங்கு மஞ்சமொன்றில் பொற்கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்த மதுவை எடுத்துக் 'களுக் களுக்' என்று இரண்டு வாய் குடித்தான். அந்தக் குடி வெறியில் இணைப்பட்ட மோக வெறியுடன் மாடிப் படிகளில் அதிவேகமாக இறங்கித் தோட்டத்தை நோக்கி அசுர வேகத்தில் சென்றான்.

## 17. வீரபாண்டியன் இலக்கியம்

பாண்டிய மன்னன் பகைவன் வழியாகத் தன்னைப் பார்த்ததையோ, பாத்திரத்திலிருந்த மதுவைப் பதற்றத்துடன் பருகிவிட்டுக் காமவெறியுடன் தன்னைத் தேடி கன வேகமாக வந்து கொண்டிருந்ததையோ, சிறிதும் அறியாத கார்குழலி தன் எண்ணங்களை எங்கெங்கோ சுற்றவிட்டவளாய் மலர்ச்சோலையின் நடுவே மெல்ல நடந்து சென்றாள். எங்கும் பால் நிலவு படர்ந்து கிடந்தாலும், காற்று ஸ்தம்பித்துவிடவே செடிகள் சிறிதுகூட ஆடாமல் விரும்பத்தகாத ஓர் அமைதியே நந்தவனத்தில் குடிகொண்டிருந்தது. சின்னஞ்சிறு வெண்ணிற மேகங்கள் குறுக்கே ஓடினாலும், வானவெளியில் மிதந்து ஓடக்கூடிய சந்திரன்கூட அன்று ஆகாயம் நிர்மலமாயிருந்ததன் காரணமாக நின்ற இடத்திலேயே நின்று கார்குழலியை உற்றுக்கவனித்துக் கொண்டிருந்தான். இளவரசி பாங்கிகளுடன் பூப்பந்தாடுவதற்காக இடையே இடம்விட்டுச் சுற்றிலுமே செடிகள் வைக்கப்பட்டிருந்த அந்த மலர்ச் சோலையின் மத்தியிலிருந்த சமவெளியில் பசும் புல் செழித்து வளர்ந்திருந்தது. அந்த மரகதப் பாயின்மேல் மௌனமாக நடந்து சென்ற கார்குழலி அதன் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு சுற்றும்முற்றும் நோக்கினாள். நாலு பக்கத்திலும் வளர்ந்திருந்த மலர்ச்செடிகள் அந்த மங்கையின் மனத்தைச் சூழ்ந்திருந்த சோகத்தை உணர்ந்தன போல துக்கத்துடன் உற்றுப் பார்த்தன. சாதாரணமாகக் காற்றில் அலைந்து அலைந்து தன்னைப் பார்த்ததும் வெள்ளை மலர்ப் பற்களைக் காட்டிக் குதூகலித்துக் கூத்தாடும் மல்லிகை முல்லைக் கொடிகள் கூடச் சோகத்தால் தாழ்ந்து தொங்கிக்கொண்டிருந்ததைக் கார்குழலி கவனித்தாள். தன்னுடைய கார்குழலுக்கு இணையற்ற மணம் தரும் மகிழ மரம் தூரத்தே பெரிதாக எழுந்து நின்று தன்னைநோக்கிக் கண்ணீர் உகுப்பது போல் ஓரிரு சின்னஞ்சிறு பழுப்பு மலர்களை உதிர்த்ததையும் பார்த்தாள். உள்ளே ஓடிய எண்ணங்களின் காரணமாகச் சுற்றிலும் சோகக் குறிகளையே கண்ட கார்குழலி வருத்தம் கலந்த பெருமூச்சொன்றையும் விட்டாள்.

இரவின் நேரம் ஏறியதால் ஊரடங்கிவிட்டாலும் அவள் உள்ளத்தே பலப்பல எண்ணங்கள் எழுந்து எழுந்து

அலைமோதிப் பேரிரைச்சலிட்டு அவள் அமைதியைப் பெரிதும் குலைத்துக்கொண்டிருந்தன. சில நாட்களுக்கு முன்பு கன்னிமாடத்தில் நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் அவள் உள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றித் தோன்றி மறைந்தன. காட்டில் அபராஜிதன் காயத்துக்குக் கட்டுப்போட்டது முதல் அவன் தப்பியோடியது வரையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றைக்கூட அவள் மறக்கவில்லை. எல்லாவற்றையும் விட அபராஜிதனின் கம்பீர உருவம் அவள் கருத்தில் ஸ்திரமாக வேரூன்றி நின்றது. அவன் யார் என்பதை அறிய பலமுறை முயன்றும் அடிகளார் அதைச் சொல்ல மறுத்துவிட்டதால், அவனைப் பற்றி மேலும் தகவலறிய வேண்டுமென்ற எண்ணம் கார்குழலிக்கு இருந்துகொண்டே இருந்தது. ஒரு மனிதன் பெயரை அடிகளார் எதற்காக மறைக்கவேண்டும் என்று பலமுறை யோசித்துப் பார்த்தும் விடை காணாத காரணத்தால், அந்தப் புருஷனை ஏதோ மர்மம் சூழ்ந்திருக்க வேண்டும் என்று தானாகவே தீர்மானித்துக்கொண்டாள். மர்மம் எதுவாயிருப்பினும் அவன் வாழ்க்கை மாசு படர்ந்ததாக இருக்கமுடியாது என்ற தீர்மானம் மட்டும் கார்குழலியின் மனத்தில் திடமாக வேரூன்றியிருந்தது.

கன்னிமாடத்துக்குள் அவன் வர அடியோடு மறுத்துவிட்டதையும் பிறகு தன் வற்புறுத்தலின் பேரிலேயே ஒப்புக்கொண்டதையும் சிந்தித்துப் பார்த்தாள். வந்த பிறகு தன் தந்தையின் கண்ணில் படாது தப்பி ஓடிவிட்டதையும் நினைத்துப் பார்த்தாள். இப்படியெல்லாம் அவன் நடந்து கொண்டதற்குக் காரணம் தன்னைப் போன்ற ஒரு பெண்ணின் பெயருக்கு இழுக்கு வரக்கூடாது என்பதுதான் என முடிவு செய்துகொண்டாள். இப்படி அவனைப்பற்றி ஏற்பட்ட நினைவுகளாலும் முடிவுகளாலும் அவள் மனத்தில் பிரதி தினமும் வேளை கெட்ட வேளைகளிலெல்லாம் அபராஜிதன் உருவம் எழுந்து நின்று என்னென்னவோ வேதனைகளை விளைத்துக் கொண்



டிருந்தது. அத்தகைய இன்ப வேதனைகள் எல்லாம் திடீரென உடைக்கப்பட்டுத் தான் கன்னிமாடத்தை விட்டுத் தொலை தூரத்திலிருந்த மேலைமங்கலத்துக்கு வரவேண்டிய அவசியம் நேரிட்டதையும் இன்னும் சில நாளில் தனக்கு வீரபாண்டியனுடன் திருமணம் நிச்சயம் நடைபெறப் போவதையும் நினைத்து நினைத்து ஏங்கிய வண்ணம் கார்குழலி அன்று நந்தவனப் புல் தரையில் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள்.

நினைப்பு நிலைகுலைந்து எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்ததால் வீரபாண்டியன் தோட்டத்திற்குள் நுழைந்ததையோ, வந்து தன்னை நோக்கி விடுவிடுவென வேகமாக வந்ததையோ, தனக்கு வெகு அருகில் நின்று தன் எழிலைப் பார்த்துப் பிரமித்துக் கொண்டிருந்ததையோ கார்குழலி கவனிக்கவேயில்லை. அவள் பேரெழிலைப் பார்த்த வீரபாண்டியன்கூட அத்தனை வெறியிலும் ஓரளவு நிதானத்துக்கு வந்து எதுவும் பேசச் சக்தியற்று வெகுநேரம் நின்றான். மாதவியின் அழகையே பேரழகாக நினைத்து, மழவராயன் மகளுடன் மணத்தொடர்பு கொள்ள மறுத்த பாண்டிய மன்னனுக்கு, நந்தவனத்தின் பதுமைபோல் உட்கார்ந்திருந்த அந்தப் பாவை தந்த பரவசக் காட்சி பெரியதொரு வியப்பை அளித்தது. இந்த அழகுக்கு முன் மாதவியின் அழகு உறைபோடக் காணாது என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட வீரபாண்டியன் அவளுடன் பேசவேண்டுமென்ற ஆசையால் சம்பாஷணையைத் துவக்க இச்சை கொண்டான். இச்சை கொண்டானே தவிர அந்த இச்சையைப் பூர்த்தி செய்வது அவ்வளவு எளிதான காரியமாகப் புலப்படவில்லை. சாதாரணமாகவே கலக்கமான அவன் புத்தி மதுவினால் மேலும் கலங்கி இருந்தபடியால் பேச்சை எப்படி ஆரம்பிப்பதென்று புரியாமல், ''என்ன அரசகுமாரி!'' என்று சம்பிரதாயமாகவே சம்பாஷணையைத் துவக்கினான்.

சிந்தனை அலைகளில் திடீரெனப் புகுந்த இந்த இரு சொற்கள் இந்த உலகத்துக்குச் சரேலென இழுக்கவே கார் குழலி மிரண்ட விழிகளோடு திரும்பிப் பார்த்தாள். தனக்கு வெகு அருகில் ஒரு ஆண் நிற்பதைப் பார்த்ததும் எழுந்து சற்று விலகி நின்று அவனை ஏற இறங்க நோக்கி, "யார் நீ?" என்று கோபத்துடன் வினவினாள்.

பதிலுக்கு நகைத்தான் பாண்டிய மன்னன். "என்னை நீ அறிந்துகொள்ளும் சமயம் அதிக தூரத்திலில்லை" என்ற சொற்களையும் வெறிகலந்த அந்த நகைப்புடன் உதிர்த்தான்.

அவன் சிரிப்பும் பேச்சும் அவளுக்குப் பெரும் வெறுப்பை அளித்தன. ஆகவே அதிகம் பேச இஷ்டப் படாமல் அவன் அந்த இடத்தில் தங்கக்கூடாது என்பதை உணர்த்த, "இது அந்தப்புரத்து நந்தவனம்" என்றாள்.

"எனக்குத் தெரியும்" என்றான் வீரபாண்டியன்.

"தெரிந்தா வந்தாய்?" கோபத்துடன் ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டாள் கார்குழலி.

"ஆம், தெரிந்துதான் வந்தேன். அதுவும் நீ இங்கிருப் பதை அறிந்துதான் வந்தேன்."

"அந்தப்புரத்துச் சோலைக்குள் அனுமதியின்றி வரும் ஆண்பிள்ளைக்கு என்ன தண்டனை தெரியுமா உமக்கு?"

"தெரியும். மரண தண்டனை. எங்கள் ஊரிலும் அதே பழக்கம்தான்."

"உன் ஊரா? எது உன் ஊர்?"

"பாண்டியநாடு."

"பாண்டிய நாட்டில்..."

"மதுரை"

"மதுரையில் நீ..."

"மன்னன்."

மூச்சே நின்றுவிடும் போலிருந்தது கார்குழலிக்கு. எதிரே நின்றவன் பாண்டியனென்பதை அவள் ஊகிக்கக் கூட இல்லை. பாண்டியன் உடையின் படாடோபத்தால் அவன் பெரிய பிரபுவாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்



திருந்தாளேயொழிய, அவனே பாண்டிய நாட்டு மன்னன் என்பதை மனத்தால் நினைக்கக்கூட முடியவில்லை அவளுக்கு.மன்னனுக்கு அவசியமானகம்பீரம்வீரபாண்டிய யனின் தோரணையில் அடியோடு இல்லாதிருந்ததோடு குடியால் சற்றுத் தள்ளாடியும் நின்று கொண்டிருந்தான். மன்னன் என அவனே அறிவித்துக் கொண்டதும் அவனை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்த கார்குழலியின் உள்ளத் தில் வெறுப்பு மிக அதிகமாக எழுந்துநின்றது. 'இவனா பாண்டிய மன்னன்? இவனையா தந்தை என் மணாளனாகத் தேர்ந்தெடுத்தார்?' என்று எண்ணிப் பார்த்துப் பிரமித்தாள். இந்த மன்னன் உருவத்துடன் கன்னிமாடத்தில் கண்ட அபராஜிதன் உருவத்தையும் நடையையும் தோரணையையும் இணைத்துப் பார்த்து, 'சே! அந்த கம்பீர புருஷன் எங்கே? இந்தக் குடிகாரன் எங்கே? என்று ஏதும் சொல்ல வகையறியாதவளாய்த் தலைகுனிந்து மௌனமாக நின்றாள்.

தான் யாரென்பதைக் கேட்டதும் வெட்கம் கவிழ்ந்து கார்குழலி நிற்பதாகக் கற்பனை செய்துகொண்ட வீர பாண்டியன் மீண்டும் பேச்சைத் துவக்கி, "கார்குழலி! உன்னை நான் பார்த்ததில்லை, பார்த்த பிறகு...." என்று வார்த்தையை விழுங்கினான்.

கார்குழலி தரையில் பாய்ந்திருந்த கண்களை சப்பீர மாக உயர்த்தி, "பார்த்த பிறகு?" என்று வினவினாள்.

"அழகில் உனக்கிணை இந்தத் தமிழ்நாட்டில் யாரும் கிடையாது என்ற முடிவுக்கு வந்தேன்."

"மகிழ்ச்சி மகாராஜா! இருந்தாலும் இத்தனை புகழ்ச் சிக்கு நான் தகுந்தவள் அல்ல."

"உன் தகுதி உனக்கு எப்படித் தெரியும்? புஷ்பத்தின் மணம் புஷ்பத்துக்கா தெரியும்?" என்று சொல்லிப் புன் முறுவல் செய்தவண்ணம் கார்குழலியை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான் வீரபாண்டியன்.

கார்குழலியும் ஓர் அடி எடுத்து வைத்துப் பின்னடைந்தாள். ''பாண்டிய மன்னனே, இது உங்களுக்குத் தகுதியல்ல'' என்று எச்சரிக்கை தொனிக்கும் குரலில் கூறினாள்.

''எது தகுதியல்ல?''

''இப்படித் தனிமையில் என்னுடன் தங்கியிருப்பது.

''தகுதியல்லவென்று யார் சொல்வது?''

''யார் சொல்லவேண்டும்? பரம்பரைப் பழக்கமில்லையா?''

''தமிழர் முறைக்கு இது மாறுபாடல்ல, அரசகுமாரி.''

கார்குழலியின் கண்களில் ஆச்சரியம் மீண்டும் உதயமாயிற்று. தன் நாட்டின் சுதந்திரத்தையே இலங்காபுரனிடம் அடமானம் வைத்திருக்கும் பாண்டிய மன்னன் தமிழர் முறையைப்பற்றிப் பேசுவது பெரும் விசித்திரமாயிருந்தது அவளுக்கு. இகழ்ச்சி கலந்த புன்முறுவலொன்றும் அவள் இதழ்களில் படர்ந்தது. ''தமிழர் முறையா! அது என்ன முறை மகாராஜா? கன்னிப் பெண்ணின் தனிமையில் குறுக்கிடுவது தமிழர் முறையா? அல்லது அந்தப்புரத் தோட்டத்தில் காவலற்று இருக்கும் அணங்கை அணுகிப் பேச்சுக்கிழுப்பது தமிழர் முறையா?'' என்று வினவினாள்.

மன்னனென்று அறிந்த பிறகும், இன்னும் சில நாட்களில் மணாளனாகப் போகிறவன் என்பதை உணர்ந்த பிறகும் கார்குழலி தன்னைச் சிறிதும் மதியாமலும் பெண்களுக்குரிய நாணத்தைக் காட்டாமலும் எதிருக்கு எதிர் நின்று சம்பாஷிப்பதை அறிந்த வீரபாண்டியன் அவள் தைரியத்தை எண்ணிப் பெரிதும் வியந்தான்; அதற்காகப் பேச்சை நிறுத்தாமல் மேலும் பேச்சுக் கொடுத்து, அவள் கேள்விகளுக்குப் பதில் சொன்னான். ''நீ சொன்னதெல்லாம் தமிழர் முறைதான் கார்குழலி! தமிழ் இலக்கியங்களைப் பார்த்தால் தெரியும்.''

''தமிழர் இலக்கியமா மகாராஜா?''



''ஆமாம் இளவரசி! தலைவனும் தலைவியும் களவியலில் ஈடுபடுவது தமிழ் இலக்கியம் ஒப்புக் கொண்ட விஷயமாயிற்றே!''

கார்குழலிக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. இத்தனை விபரீதமான ஒரு காரியத்துக்கு இலக்கியம் உபயோகப்படக்கூடும் என்று கனவிலும் அவள் நினைத்தவளல்ல. இப்பேர்ப்பட்டவனுக்கு மணமாலை சூடுவதை விட மரணப்பாதையை நாடுவது எத்தனை நல்லது என்ற நினைப்புடன் வீரபாண்டியனை மீண்டும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முகத்தில் வெறி முன்னைவிட அதிகமாகத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அதிகக் குடியின் காரணமாக உதடுகளில் சற்று நடுக்கமும் தெரிந்தது. அவள் தன்னை அப்படி உற்றுப் பார்ப்பதைக் கண்ட வீரபாண்டியன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது லேசாகச் சற்று சிரிக்கவும் சிரித்தான். அத்துடன் ''நான் இலக்கியத்தை விளக்கிய பின்தான் இளவரசிக்கு உண்மை புலப்பட்டது போலிருக்கிறது'' என்று கேட்கவும் செய்தான்.

வீரபாண்டினின் விபரீதமான இலக்கிய ரசனையும், வெறியை அள்ளித் தெளிக்கும் சிரிப்பும், விரசம் சொட்டும் பார்வையும் கார்குழலிக்குச் சொல்லவொண்ணா வெறுப்பும் அளிக்கவே, விழிகளில் கோபம் எழுந்து தாண்டவமாட அவள் பாண்டிய மன்னனை நோக்கிக் கூறினாள்: ''இலக்கியத்தில் கண்ட உண்மைகளைத் தாங்கள் வேண்டுமானால் கடைப்பிடியுங்கள், மகாராஜா. எனக்கு அதில் இஷ்டமில்லை. தவிர இலக்கியத்தைத் தாங்கள் சரியாகவும் படித்ததாகத் தெரியவில்லை. தலைவன் தலைவி விளையாட்டு காதலால் கட்டுண்ட உங்களுக்குத் தானே தவிர, ராஜீய காரணங்களுக்காகப் பலவந்தமாகக் கட்டப்படும் பலி ஆடுகளுக்காக ஏற்பட்டதல்ல. அதுவும் தவிர தாங்கள் கோரும் இன்பத்தை இலக்கியத்தால் பெற முடியாது மகாராஜா. காதலைக் கதை சொல்லியும் பெற முடியாது. காதலின் இலக்கியம் தனி

இலக்கியம். அதன் கதை தனிக்கதை. அதைப் புத்தகங்களில் படிக்க முடியாது. காதல் என்பது எண்ணத்தின் ஏட்டிலே உணர்ச்சியின் மையைக் கொண்டு உள்ளத்தினால் எழுதப்படும் அழியா இலக்கியம் மகாராஜா. அதை உங்களால் அர்த்தம் செய்து கொள்ள முடியாது.''

கன வேகத்தில் உதிர்ந்த உணர்ச்சி சொட்டும் அந்த வார்த்தைகளைக் கேட்ட வீரபாண்டியன் மதிமயங்கி நின்றான். எழிலோடு சொல்வேகமும் பெற்ற அந்தப் பெண்ணை எப்படியும் கைப்பற்றாமல் விடுவதில்லை என்ற தீர்மானத்துடன் எதிர்பாராத விதமாக அவளை நோக்கித் தாவி அவள் கையைப் பிடித்துக் கொண்டு, ''குழலி! உன் வார்த்தைகளில் இலக்கியமிருக்கிறது. அத்துடன் இன்பமயமான கீதம் கூட இருக்கிறது. உன்னை மனைவியாகப் பெற நான் எத்தனையோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்'' என்றான்.

கார்குழலியின் கோபம் எல்லை மீறியது. கையை உதறி விடுவித்துக் கொண்டு முகம் அக்னிபோல் ஜொலிக்க மிக உஷ்ணமான வார்த்தைகளை உதிர்த்தாள்; ''நீ ஒரு மன்னனா! தனிமையில் இருக்கும் ஒரு பெண்ணுடன் சரியாக நடந்து கொள்ளத் தெரியாத நீ மக்களை எப்படிச் சரியாக ஆளப்போகிறாய்? நான் உன்னை மணந்தால் உனக்குப் பாக்கியமென்கிறாயே; எனக்கும் அது பாக்கியம் தானா என்பதை யோசித்தாயா? மழவராயன் மகளின் கரத்தை அவள் இஷ்ட விரோதமாகப் பிடிக்க உனக்கு என்ன தைரியம்? என்ன உரிமையுடன் என்னைத்தொட முன்வந்தாய்?''

''மணம் செய்து கொள்ளப் போகும் உரிமை.''

''மணம் செய்துகொண்ட பின்புதான் அந்த உரிமை உண்டு. நினைவில் வைத்துக்கொள்.''

''மரியாதையில்லாமல் பேசுகிறாய் அரசகுமாரி''

''நீ என்ன மரியாதையை எனக்குக் காட்டினாய்?''

''வீரபாண்டியனை நோக்கி முதன் முதலாக இப்படிப் பேசிய பெண் நீ ஒருத்திதான்.''



''இப்பொழுதாவது தெரிந்துகொள், தமிழகப் பெண்களின் தன்மையை! மரியாதை கெட்டவன் மன்னனாயிருந்தாலும் மதிக்கமாட்டார்கள். இங்கிதம் தெரியாதவன் இந்திரனாயிருந்தால்கூட இணங்கமாட்டார்கள்.''

சாதாரணமாகவே முன்கோபமுடைய வீரபாண்டியன் இந்தத் தர்க்கத்தில் கொஞ்சநஞ்சமிருந்த நிதானத்தையும் அடியோடு இழந்தான்.

''அடிப் பெண்ணே! நீ வீரபாண்டியனை யாரென்று சரியாக அறிந்து கொள்ளவில்லை. யாரென்று இதோ காட்டுகிறேன், பார்'' என்று அவளை நோக்கிப் பாய்ந்து இரண்டு கைகளோடு இடையையும் சுற்றி வளைத்து இறுகப்படித்தான்.

கேவலம், மிருகத்துக்கும் கீழாக நடக்க முயன்ற வீரபாண்டியன் செய்கையால் கார்குழலியும் நிதானத்தை இழந்து தனது வலக்கரத்தைத் திமிறி விடுவித்துக் கொண்டு, அவன் மண்டலத்தை ஆளும் மன்னனென்பதையும் மதியாது அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள். இரு கைகளாலும் அவன் மார்பைப் பிடித்தும் தள்ளவே திடீரெனப் புல்தரையில் மல்லாந்து விழுந்தான் மன்னன். அவனைத் தள்ளிவிட்டுச் சரேலென மான்போல் துள்ளி அந்தப்புரத்தை நோக்கிப் புல் தரையில் கால் பாவுகிறதோ இல்லையோ எனச் சந்தேகப்படும்படி வெகு வேகமாக ஓடினாள் மழவராயன் மகள். அவளைப் பிடிக்க உறுதிகொண்டு மன்னனும் எழுந்திருந்து ஓடமுயன்றான். எழுந்து நின்ற மன்னனால் ஓர் அடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியவில்லை. பின்னாலிருந்து இரும்பினும் வலிய இரு கரங்கள் அவனை இறுகப்பிடித்து நிறுத்தின.

## 18. திருக்குறளும் அடிகளாரும்

எதிர்பாராத விதமாகப் பின்னாலிருந்து திடீரெனப் பலமாகக் கட்டிப் பிடிக்கப்பட்டதால் காமவெறி கலைந்து கோபவெறிக்கு இலக்கான வீரபாண்டியன், அந்தப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள யத்தனித்து

எத்தனை முறை இரும்பத் திரும்பத் திணறிப் பார்த்தும் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை. பின்னாலிருந்தவன் பிடி, குரங்குப் பிடியாயிருந்ததோடு அவன் எண்ணமும் கைகளும் திண்மையாயிருந்தமையால் வீரபாண்டியனைச் சுற்றியிருந்த புஜங்களின் அழுத்தம் வரவர அதிகமாயிற்றே தவிர, சற்றும் குறைவதாயில்லை. தோட்டத்தை விட்டு ஓட்டமாக ஓடிய கார்குழலியின் உருவம் கண்ணுக்கு மறைந்த பின்பே பின்னாலிருந்தவன் தன் பிடியைத் தளர்த்தி வீரபாண்டியனுக்கு விடுதலையை அளித்தான். என்னதான் நன்றாக வண்டியில் பூட்டப் பட்டு நாள் பூராவும் நொறுக்கப்பட்டிருந்தாலும், பூட்டவிழ்க்கும் சமயத்தில் காளை எப்படி ஒரு முறை திமிறியே நுகத்தடியிலிருந்து விலகிக் கம்பீரமாக நிற்குமோ அம்மாதிரியே பின்னாலிருந்தவன் பிடியைத் தளர்த்தியதும் அதிலிருந்து தானே திமிறி வெளிவந்தவன் போல் ஒரு முறை தலையை உதறிக்கொண்டு தன்னைப் பிடித்தவன் யாரென்பதை அறியத் திரும்பினான். திரும்பியவன் கண்களில் கோபவெறி மறைந்து ஆச்சரியக் குறி மிக துரிதமாகப் பரவலாயிற்று. இடையில் காவி உடுத்தி, கழுத்திலும் தலையிலும் ருத்திராக்ஷமணிந்து தங்கநிற மேனியுடன் நல்ல பரங்கிப் பழத்துக்குத் திருநீறு பூசியதுபோல் உடல் பூராவும் விபூதி பூசிக்கொண்டு தளதளவென்று சந்திர வெளிச்சத்தில் ஜொலித்துக் கொண்டு சிவானந்த அடிகளார் நின்று கொண்டிருந்தார். கேவலம் இந்த மாதிரி ஒரு மாமிசப்பிண்டத்திடமா நாம் அகப்பட்டுத் தத்தளித்தோம் என்பதை நினைக்க நினைக்க வீரபாண்டியனுக்கு ஆத்திரத்தைவிட வெட்கமே மேலோங்கி நின்றது. வீரபாண்டியனைக்கண்ட சிலவிநாடிகள் அடிகளார் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தோன்றாதிருந்தாலும் கடைசியாக மெள்ள மெள்ள வியப்பின் அடையாளம் அகரது விசாலமான வதனத்தில் படரத் தொடங்கியது. மென்று விழுங்கிப் பேசத் தொடங்கிய அவர் குரலிலும் சற்றுப் பயத்தின் சாயை



தெரிந்தது. "யார்? பாண்டிய மன்னனா! மதுரையம் பதியின் அதிபதியா?" என்று அப்பொழுதுதான் புதிதாக அவனை அறிந்ததுபோல் விசாரிக்கலானார் அடிகளார்.

வீரபாண்டியன் பதிலேதும் சொல்லாமலே அவரை உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் ஆராய்ந்தான். பிறகு கேட்டான்: "டேய் பண்டாரம்! நீ யார்? இங்கு வர யார் அனுமதி கொடுத்தது?" என்று

இந்த வார்த்தைகளைக் கேட்ட அடிகளார் முகத்தில் கோபத்துக்குப் பதில் ஆச்சரியமே உதயமாகியது. அவரும் வீரபாண்டியனைச் சூர்ந்து நோக்கிவிட்டு அவன் காதுக்குப் படும்படியாகத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார். "குடி அதிகமில்லையே? அப்படியிருந்தும் இப்படி எதற்காகப் பேச வேண்டும்?" என்று.

இந்தச் சொற்கள் காதில் விழுந்ததால் மீண்டும் நிதானத்தை இழந்த பாண்டியன், "என்ன முணுமுணுக்கிறாய்; சொல்ல வேண்டியதை வெளிப்படையாகச் சொல்" என்றான்.

"அப்படி ஒன்றும் தங்களுக்குத் தெரியக்கூடாத விஷயமல்ல. தாங்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து தாங்கள் ஒரு வேளை"

"என்ன ஒருவேளை?" அதட்டினான் வீரபாண்டியன்.

"ஒன்றுமில்லை. எங்கள் ஊர் மது மிகமிக விசேஷமானது. மேலைமங்கலத்து மதுவென்றால் அதை நினைத்துப் பார்த்தே மயங்குபவர்கள் உண்டு."

"அதனால்....?"

"நினைத்தாலே நிதானம் தவறுமென்றால் பருகினால் கேட்க வேண்டுமா?"

"வேண்டியதில்லை. உங்கள் ஊர் மது சிறந்தது தான். அதற்கும் நீர் பேசியதற்கும் என்ன சம்பந்தம்?"

"என் பேச்சுக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை ஆனால்..."

“ஆனால் என்ன ஆனால்?”

“தங்கள் பேச்சுக்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ என்று அடியேனுக்கு ஒரு சிறு சந்தேகம்.”

அடிகளாரின் பேச்சுக்களில் புதைந்து கிடந்த அர்த்தம் அப்பொழுதுதான் வீரபாண்டியனுக்கு மெள்ள மெள்ள உதயமாகத் தொடங்கியது. ஆகவே “டேய் பண்டாரம்! குடி வெறியில் நான் உளறுகிறேனென்பது உன் அபிப்ராயமா?” என்று கர்ஜித்தான்.

அடிகளார் பயப்படுவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு, “அப்படிச் சொல்ல இந்த அடிகள் மடையனா! அப்படிச் சொல்லவில்லை; மன்னவா! சொல்ல இஷ்டமுமில்லை. ஆனால் திரும்பத் திரும்பத் தாங்களே ருசு அளிக்கிறீர்களே!” என்றான்.

“ருசுவா? என்ன ருசு?”

“இந்த ஊரில் யாரும் என்னை மரியாதைக் குறைவாகக் கூப்பிடுவது கிடையாது. எங்கள் மன்னர் கூட ‘அடிகளாரே’ என்று மிகப் பணிவுடன்தான் அழைப்பார். ஆனால் நீங்கள் பேசுவதைப் பார்த்தால் நிதானத்திலிருக்கிற மனிதன்பேசும் பேச்சாகக் காணோம். அதனால்தான் சந்தேகித்தேன்”

“என்ன சந்தேகிக்கிறீர்?”

“கொஞ்சம் அதிகமாகப் போய்விட்டதோ என்று.”

வீரபாண்டியன் அடிகளாரை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான். அவன் கையும் இடைக் கச்சையிலிருந்த உடைவாளை நோக்கிச் சென்றது. அவன் உத்தேசத்தைக் கண்ட அடிகளாரும் பின்னால் சிறிது நகர்ந்து, “மதுரை மன்னனே! தமிழ் மறையோதும் அடியார்களைத் தாக்குவது பெருந்தீது. இது உனக்குத் தெரியாதா?” என்றார்.

“தாக்கப் போவதில்லை. கொல்லப் போகிறேன்!” என்று சொல்லிக்கொண்டே, அவரை நோக்கி உருவிய உடைவாளுடன் வந்தான் பாண்டியன்.



அடிகளார் பக்கவாட்டில் நகர்ந்து கொண்டே “மன்னவா! தமிழ் மறையாம் திருக்குறளை நீ படிக்க வில்லையா?” என்றார்.

“படிக்க வேண்டிய அவசியமில்லை.”

“அவசியமிருக்கிறது. அப்பொழுதுதான் கொலையின் தன்மை எத்தன்மையென்று உனக்குத் தெரியும். வள்ளுவர் கூறுகின்றார்.”

“கூறுகின்றாரா? கூறட்டும். வள்ளுவரைக் கூறும் உன் நாக்கை முதலில் துண்டிக்கிறேன்.”

“துண்டித்தால் உனக்குத் தேவையானதுகிடைக்காது மன்னவா!”

இதைக் கேட்டதும் வீரபாண்டியன் சட்டென்று நின்றான். அடிகளார் தன்னிடம் ஏதோ கூற முயல்கிறாரென்றும் அவரிடம் ஏதோ ரகசியம் சிக்கியிருக்கிறதென்றும் ஊகித்துக் கொண்டான். ஆகவே கேட்டான் “என்ன அது?” என்று.

“கேள் மன்னவா! வள்ளுவர்கூறுகின்றார்; ‘அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல் பிறவினையெல்லாம் தரும்’ என்று” எனத் தனது சாதுர்யத்தைக் காட்ட முயன்ற அடிகளார்மேலும் தன்பாண்டித்தியத்தைவிளக்கி அப்பாட்டுக்கு அர்த்தமும் சொன்னார்: “அறவினை யாதெனில்—தர்மமான மார்க்கம் எதுவென்றால், கொல்லாமை—கொல்லா திருத்தல், கோறல்—கொல்லுதல், பிறவினை எல்லாம் தரும்—மற்றப் பல கெடுதல்களை விளைவிக்கும்.”

அடிகளாரின் குறளையோ அர்த்தத்தையோ விரும்பாத பாண்டிய மன்னன் ‘அவர் முடிக்கும் வரை சும்மா இருந்துவிட்டு, “இதை எதற்காகச் சொல்லுகிறீர்?” என்று கேட்டான்

பாண்டியன் பேச்சில் மரியாதை உதயமாவதைக் கண்ட அடிகளாரும் மரியாதையாகப்பேசத் தொடங்கி,

''இபபொழுது நீங்கள் என்னைக் கொலை செய்ய முயன்
றீர்கள் அல்லவா?'' என்று வினவினார்.

''ஆம்; அந்த உத்தேசம் இருந்தது ''

''உத்தேசம் நிறைவேறியிருந்தால் என்ன ஆகி
யிருக்கும்?''

''என்ன ஆகியிருக்கும்?''

''என்னைக் கொன்ற பழி உங்களைச் சாரும்!''

''அதைப்பற்றிக் கவலையில்லை.''

''தவிர என்னைக் கொன்றதாக மன்னர் உங்களைக்
கோபிப்பார்.''

''இங்கு நீர் என்னைக் கட்டிப் பிடித்த விவரத்தைக்
கூறினால் மழவராயன் கோபம் ஆறிவிடும்.''

''ஆனால் கார்குழலியின் கோபத்தை ஆற்ற முடியாது.'

''ஏன்:''

''நான் அவன் குரு''

வீரபாண்டியன் அடிகளாரை ஏற இறங்கப் பார்த்
தான். கார்குழலியைத் தன்னிடமிருந்து காப்பாற்ற அடி
களார் முயன்றதன் காரணமும் அவனுக்கு ஓரளவு தெரிந்
தது. ஆகவே, மென்ன ஏதோ யோசித்துவிட்டு. ''அப்ப
டியா?'' என்றார்.

''ஆமாம் மகாராஜா!'' என்றார் அடிகளார், சற்றுப்
பெருமிதத்துடன். அத்துடன் சம்பாஷணை நின்றிருந்
தால் பின்னால் கதையில் நிகழவிருந்த பல விபரீதங்கள்
நிகழாமல் இருந்திருக்கும். ஆனால் அடிகளார் வீரபாண்டி
யனை அத்துடன் விடாமல் மேலும் துன்பப்படுத்த
இச்சைகொண்டு இலக்கியத்தைத் தொடர்ந்தார் : ''மகா
ராஜா! தங்களிடம் எனக்கு இலக்கியம் பேசுவதென்றால்
மிகவும் பிரியமாயிருக்கிறது. ஏன் தெரியுமா?'' என்றார்.

''ஏன்?''

''தாங்கள் சற்று முன் இளவரசியிடம் இலக்கியம்பேசி
யதைக் கேட்டேன, 'கற்றோரைக் கற்றாரே காமுறுவர்'
என்பது தமிழ்ப் பெருமாட்டியின் திருவாசகம்.



அடிகளார் தன்னைப் பார்த்து நகைக்கிறாரா,
நிஜமாகத் தான் பேசுகிறாராவென்பதை வீரபாண்டியன்
புரிந்து கொள்ளாததால் அவன் பதிலேதும் பேசாமல்
அவரையே பேசவிட்டான். அடிகளார் உற்சாகத்துடன்
பேச முற்பட்டு, ''மகாராஜா! கற்றவர்களைக் கற்றவர்
தான் ரசிப்பார்கள். இலக்கிய ரசிகரான உங்கள்
கோபத்தை இலக்கியத்தின் மூலம் ஆற்ற முடியுமென்று
தான் குறளைப் பற்றிக் கூறினேன். என்னை நீங்கள்
கொன்றிருந்தால் கார்குழலிக்கு உம்மீது அடங்காத
வெறுப்பு உண்டாகும். இப்பொழுது அவளுக்கு அபார
மான பிரியமிருப்பதாகக் கூறமுடியாது. ஆனால் இப்
பொழுதுள்ள கொஞ்ச வெறுப்பு என் கொலையால் மலை
போலப் பெருகி அவள் உள்ளத்தில் நிலைத்து நின்று
விடும். பிறகு உங்கள் திருமணம் கனவுதான். மழவராயன்
மணத் தொடர்பு ஏற்படாவிட்டால் பாண்டிநாட்டின்
கதியைப் பற்றி நான் எதுவும் தங்களுக்குச் சொல்லத்
தேவையில்லை. ஒரு சின்னக் கொலையால் எத்தனை
தொல்லைகள் பார்த்தீர்களா?'' என்றார்.

அடிகளாருக்கு இலக்கிய அறிவோடு அரசியல் அறிவும்
அபாரமாக இருப்பதைக் கண்ட வீரபாண்டியன் அவரை
நோக்கி ''உலகத்தைத் துறந்த உங்களுக்கு அரசியலைப்
பற்றி என்ன கவலை?'' என்று வினவினான்.

''இவனுக்குக் கவலையில்லாத விஷயம் உலகத்தில்
என்ன இருக்கிறது? அரசியல் கவலை இல்லாவிட்டால்
மழவராயன் தங்களைத் தேட என்னை அனுப்பப்போவ
தில்லை. மன்னர் அனுப்பாவிட்டால் நானும் இங்கு வந்
திருக்கப் போவதில்லை. இங்கு நடைபெற்ற காதல் களி
யாட்டத்தையும் கவனிக்கப் போவதில்லை'' என்று
சொல்லி அடிகளார் சற்று விஷமமாக புன்முறுவல்
செய்தார்,

''என்ன! என்னைத் தேடும்படி கார்குழலியின்
தந்தையா உங்களை இங்கு அனுப்பினார்?'' என்று
ஆச்சரியத்துடன் வினவினான் வீரபாண்டியன்.

''ஆம்'' என்றார் அடிகளார்.

''எதற்காக? அதுவும் இத்தனை நேரத்துக்குப் பின்.''

''அவசர ராஜாங்க காரியம்''

பதிலுக்கு ஒரு பெரிய வெடியை எடுத்து வீசினார் அடிகளார். ''பாண்டிய நாட்டிலிருந்து தூதன் வந்திருக்கிறான்'' என்றார்.

''தூதனா?''

''ஆமாம்!''

''ஓலை கொண்டு வந்திருக்கிறானா?''

''இல்லை. தங்களிடம் நேரில் பேசவேண்டுமாம்''

''தூதனை அனுப்பியது யார்?''

''இலங்காபுரன்!''

அடிகளாரின் வார்த்தையைக் கேட்டு ஒரு கணம் ஸ்தம்பித்த வீரபாண்டியன், ''இதை ஏன் முன்னமேயே என்னிடம் சொல்லவில்லை?'' என்று கேட்டான்.

''தாங்கள் சந்தர்ப்பமளிக்கவில்லை'' என்று தாழ்மையுடன் விண்ணப்பம் செய்துகொண்டாலும், அடிகளாரின் இதழ்களில் இகழ்ச்சியாகப் புன்முறுவலும் தோன்றியது.

''நாம் மீண்டும் பேசுவோம்'' என்று கூறிவிட்டு அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான் வீரபாண்டியன். அவன் நாலடி தூரம் சென்றதும் அவனை அழைத்து நிறுத்திய அடிகளார், ''பாண்டிய மன்னனே! நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன்—கேட்பீரா?''

''சொல்லும்!'' என்றான் வீரபாண்டியன்,

''கார்குழலியை மறந்துவிடுங்கள்.''

''ஏன்?''

''பெண்களின் குணம் அப்படி!!''

''என்ன குணம்?''

''ஒருவனைக் காதலித்துவிட்டால் அவனைப் பற்றிப் பெரிதாக நினைக்கிறார்கள். அடுத்தபடி வருபவன் அரசனாயிருந்தாலும் அசட்டை செய்கிறார்கள்.''



வீரபாண்டியன் கண்களில் வெறி நிறைந்த ஒரு ஒளி பிறந்தது. ''அடிகளாரே? மதுரைத் தமிழ் சங்கத்துத் தலைவராக உமக்கு இஷ்டமா?'' என்று வினவினான்.

''பெரும் பாக்கியமல்லவா அது?'' என்றார் அடிகளார்.

''சரி, அதற்கு உம்மைத் தலைவராக்கிவிடுகிறேன்.''

''அப்படித் தலைவனாக நான் என்ன செய்யவேண்டும்''

''ஒரு ரகசியத்தை மட்டும் சொல்லவேண்டும்,''

''என்ன ரகசியம்?''

வீரபாண்டியன் அடிகளாருக்கு வெகு அருகில் வந்து ''அடிகளாரே! கார்குழலி யாரைக் காதலிக்கிறாள்?'' என்று மிகக் குழைந்த குரலில் வினவினான்.

வீரபாண்டியனுக்குத் தன்னிடம் திடீரென அன்பு ஏற்பட்டதன் காரணத்தை அறிந்துகொண்ட அடிகளார் பின்னால் நகர்ந்து கொண்டே, ''தெரிந்தால் தங்களிடம் இத்தனை நேரம் மறைத்தா வைப்பேன்?'' என்றார்.

''அடிகளாரே! வீரபாண்டியனிடம் விளையாட வேண்டாம். விஷயத்தைச் சொல்லிவிட்டு நகரும்'' என்றான் மன்னன்.

அடிகளார் 'தெரியாததைப்பற்றிக் கேட்டால்எப்படிச் சொல்லுவேன். மகாராஜா! தூதன் தங்களுக்காகக் காத்திருக்கிறான். கார்குழலியும் எனக்காகக் காத்திருப்பாள்!'' என்று நடக்கலானார் அடிகளார்

அவரைத்தொடர எண்ணி ஓர் அடி எடுத்துவைத்த வீரபாண்டியன் சற்று நிதானித்துத் தனக்குள் ஏதோ யோசித்த பிறகு விடுவிடு என்று மாளிகையை நோக்கி நடந்தான். மாளிகையை அடைந்ததும் மாடிப்படிகளில் ஏறித் தன் அறைக்குச் செல்ல முயன்றவன் வழியிலிருந்த மழவராயன் அறையின் சாளரங்கள் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு உள்ளே நோக்கினான். உள்ளே இருந்த காட்சியைக் கண்டதும் அவன் உள்ளத்தே ஓரளவு அச்சம் உண்டானாலும் என்னதான் நடக்கிறது என்பதை அறிய விரும்பி, சாளரத்தின் மூலமாக உள்ளே பார்த்துக்

கொண்டே நின்றான். உள்ளே மழவராயன் எதிரே கண்களிலே கோபம் பொங்கக் கார்குழலி நின்று கொண்டிருந்தாள். அவனுக்கும் அவன் தகப்பனுக்கும் நடந்த சம்பாஷணையில் தன்னைப் பற்றித் தகவல் வந்தபோதெல்லாம் பேருவகையடைந்த பாண்டிய மன்னன், மழவராயன் கடைசியாக மகளிடம் உரைத்த ஒரு செய்தியைக் கேட்டதும் விவரிக்க இயலாத பெரும் திகைப்படைந்து கனவேகமாகத் தன் அறைக்குச் சென்றான். அங்கு தனக்காகக் காத்திருந்த தூதனைக் கண்டதும் சற்றுமுன் கேட்ட செய்தியால் ஏற்பட்ட திகைப்பு மாறாமலும், அதனால் உண்டான கோபத்தால் நிதானத்தைப் பெரிதும் இழந்தும் "இது உண்மைதானா?" என்று இறைந்தான்.

அவன் அபிப்பிராயத்தை உணர்ந்த தூதனும், 'ஆமாம் பிரபு!" என்றான் மிகப் பணிவுடன்.

"அவன் வந்து எத்தனை நாளாகிறது?" என்று சீறினான் வீரபாண்டியன்,

"மூன்று நாட்கள்!" என்றான் தூதன்.

"மூன்று நாட்களா!" என்ற வீரபாண்டியன் மிதமிஞ்சிய கிலிலால் பின்னாலிருந்த ஆசனத்தில் தொப்பென்று விழுந்தான்.

## 19. தந்தையும் மகளும்

**வீ**ரபாணடியனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு புல்தரையில் புள்ளிமான் போல் துள்ளியோடிய கார்குழலி அந்தப்புர வாயிலை அடைந்ததும் சற்று நேரம் நின்று ஏதோ சிந்தித்துவிட்டு, உள்ளே நுழையாமல் பக்கவாட்டில் திரும்பி மழவராயன் மாளிகையை நோக்கி வேகமாக நடந்தாள். மழவராயன் மாளிகையும் அந்தப்புரத்தை ஒட்டியேதான் கட்டப்பட்டிருந்தது. அக்கம் பக்கத்திலிருந்த மாளிகையும் அந்தப்புரமும் விலகி நிற்பது போல் பார்வைக்குத் தெரிந்தாலும் பெருங்கொடிகளால் மறைக்கப்பட்ட மாடிகளின் குறுக்குத் தாழ்வாரமொன்ற



கட்டிடங்களையும் இணைத்துப் பால
இரண்டு கட்டிடங்களையும் இணைத்துப் பால
மிட்டிருந்தது. அந்தப் பாலத்தின் இரு கோடிகளிலும் இரு
மாடிப்படி வரிசைகள் நந்தவனத்துக்குள் இறங்கியிருந்தன.
இரண்டு கட்டிடங்களிலுள்ளவர்களும் மாடிப்படிகளில்
பரஸ்பரம் சம்பாஷிக்கும்படியாக அத்தனை அருகில்
கட்டிடங்கள் இருந்தாலும், மழவராயன் சில
ஆண்டுகளாகத் தன் படுக்குமிடத்தை மாளிகையின் ஒரு
கோடியிலிருந்து மற்றொருகோடியில், அந்தப்புரத்துக்கு
அருகாமையிலிருந்த அறைக்கு மாற்றிக்கொண்டிருந்தான்.
மனைவி காலமான பிறகு மகள் தன் பார்வையிலேயே
இருக்கவேண்டுமென்று மழவராயன் செய்துகொண்ட
ஏற்பாடு அது

படிகளில் ஏறிச்சென்று மாளிகையில் திரும்பியதும் முதன்முதலாகத் தென்படக்கூடியது மழவராயன் பள்ளியறைதான். பாண்டியநாட்டுச் சிற்பத் திறமைக்குச் சான்றாக விளங்கிய பெரும் தூண்களின்மீது எழுந்து நின்ற அந்த அறையின் அடித்தளத்தில்கூட ஆயிரமாயிரம் சின்னஞ்சிறு வண்ணச்சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. நாலு பக்கத்துச் சுவர்களிலும் கண்ணகியும் மணிமேகலையும் வாழ்ந்ததால் விளைந்த தமிழ்க் காவியங்கள், ஓவியங்களாக அமைந்திருந்தன. தோட்டத்தையும் அந்தப்புரத்தையும் நோக்கி இரு பக்கங்களில் அமைக்கப் பட்டிருந்த பெரிய சாளரங்களை வெயிலடிக்கும்போது மறைப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த சுருள் தட்டிகளில் கூடத் தமிழர்களின் கலைத்திறமை நன்றாகக் காட்டப் பட்டிருந்தது. நீர்த்துளிகள் பட்டதும் இன்பமணம் கமழும் இயற்கை வாய்ந்த அந்த வெட்டிவேர் தட்டிகளில்கூட ஓரிரண்டு சுருட்டப்படாமல் அவிழ்ந்து கிடந்ததால் மழவராயன் அறைமுழுவதும் கம்மென்று வாசனை அடித்துக்கொண்டிருந்தது. அந்தத் தட்டிகளில்தா எத்தனை எத்தனை சித்திர ஜாலங்கள்! அதோ ஒன்றி கண்ணன் குழலூதும் எழிலுருவம்! இன்னொன்றி

ராதை நடனமாடும் இன்பத்தோற்றம்! அந்த ராதையின் புடவையில் வானவில் காட்டும் அத்தனை வர்ணங்களுமா இருக்கும்! அவள் கன்னங்களிலென்ன கமலத்தின் சாயையா! உதடுகள் என்ன அத்தனை சிவப்பு! இப்படிப் பிரமிக்கும்படியாகத் தீட்டப்பட்டிருந்த உருவங்களுக்கு ஒளி வீசி இன்னும் அதிக உயிரிருக்கும்படியாகச் செய்து கொண்டிருந்தது அறை மூலையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு விளக்கு. அறை மூலையிலிருந்தவை மொத்தம் இரு பெரிய வெண்கலப் பெண்ணுருவங்கள். அசப்பில் பார்த்தால் கையில் பிக்ஷைப் பாத்திரங்களை ஏந்தி நிற்கும் எழில் பொழியும் எந்திழைகளைப்போன்றதோற்றமளித்த அந்த இரண்டு விளக்குகளில் கார்குழலி உள்ளே நுழைந்த போது ஒன்றுதான் எரிந்து கொண்டிருந்தது.

அந்த விளக்குக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அறை நடுவேயிருந்த மஞ்சத்தில் ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தான் மழவராயன். எத்தனை எத்தனையோ கவலைகளால் பீடிக்கப்பட்டிருந்த அவன் மனத்துக்குள் அறையைச் சுற்றிலுமிருந்த கலைக் காட்சிகளோ காற்றில்லாமல் அசையாது எரிந்த விளக்கின் சுடரொளியோ எந்தவித ஆறுதலையும் அளிக்கவில்லை. அவன் மனத்தைக் கவரவேண்டுமென்பதற்காகத் திறந்திருந்த ஜன்னல் வழியாக அறைக்குள்ளே பட்டையாக விழுந்திருந்த சந்திர வெளிச்சம்கூடத் தன் உத்தேசத்தில் பெருந் தோல்வியே அடைந்தது. மழவராயன் மனம் பூராவும் தமிழ்நாட்டின் பிற்கால ஸ்திதியிலும் தனது மகளின் திருமண நிச்சய ஏற்பாடுகளிலுமே முற்றும் லயித்துக் கிடந்தது. ஆகவே கார்குழலி வேகமாக உள்ளே வந்ததையோ அவள் தனக்கு எதிரே நின்றதையோ மழவராயன் கவனிக்கவேயில்லை. அவள் குரல் கொடுத்த பிறகுதான் இந்த உலகத்துக்கு வந்தான். வேகமாகப் பாய்ந்துவரும் காவிரி நீர் கரையால் தடுக்கப்பட்டதும், எப்படி ஒருமுறை அலைமோதித்



திரும்புமோ அந்தமாதிரியே கடுவேகத்துடன் வந்த கார்குழலியும் மழவராயன் மௌனத்தால் ஒரு நிமிஷம் தேக்கி நிறுத்தப் பட்டிருந்தாலும் உள்ளேயிருந்த ஆக்ரோஷத்தால் திரும்பி நோக்கி, 'அப்பா!'' என்று அழைத்தாள்.

குரலில் ததும்பிய உஷ்ணத்தால் கணீரெனத் தெறித்த அந்த அழைப்புக்கூட மழவராயனை உலுக்கிவிடவில்லை. எதற்கும் அசைந்து கொடுக்கும் சுபாவமில்லாத மழவராயன் மிக மெதுவாகவே தலையை உயர்த்தி, "குழலியா?'' என்றான் ஆச்சரியத்துடன்.

துடிப்பிலிருந்த கார்குழலிக்கு அவன் சாந்தம் அதிகக் கோபத்தை அளித்தது. ''குழலிதான். ஏன், தெரியவில்லையா?' என்றாள்.

மழவராயன் கண்கள் அவள் முகத்தை ஒரு விநாடி ஆராய்ந்தன. பிறகு உதடுகள் மெல்லவே உச்சரித்தன: "தெரிகிறது'' என்று

"எதற்காக வந்தேனென்று ஏன் கேட்கவில்லை?'' என்று கார்குழலி வினவினாள்.

''இவ்வளவு அவசரமாக வந்திருப்பவள் சொல்லாமலா போய்விடப்போகிறாள்?'' என்ற மழவராயன் பேச்சோடு அவன் இதழ்களில் புன்முறுவலும் படர்ந்தது

"சொல்லாமல் போகப் போவதில்லை, சொல்லி நியாயம் கேட்கவே நான் வந்திருக்கிறேன்'' என்றாள்.

'சொல்' என்பதற்கு அடையாளமாகப் பார்வையொன்றை அவள் மீது வீசினான் மழவராயன். அவன் மௌனத்தாலும் பார்வையாலும் உதறி எழுந்த உணர்ச்சிகளுடன், "அந்தப்புர நந்தவனத்தை எத்தனை நாட்களாக அன்னியர்களுக்குத் திறந்து விட்டிருக்கிறீர்கள்?'' என்று வினவினாள் அவள்.

மழவராயன் உணர்ச்சியற்ற முகத்திலும் சற்று உணர்ச்சி தோன்றி மறைந்தது. ''அப்படி எந்தவித உத்தரவும் போட்டிருப்பதாக எனக்கு நினைவில்லை'' என்றான்.

"பழைய உத்தரவை மாற்றாவிட்டால் அந்தப்புர நந்தவனத்துக்குள் நுழையும் ஆடவருக்கு என்ன தண்டனை அளிக்க வேண்டும்?"

"சந்தேகமென்ன. மரண தண்டனைதான்."

"அப்படியானால் மரண தண்டனைக்கு ஓர் உத்தரவு எழுதுங்கள்."

"யாருக்குத் தண்டனை விதிக்கவேண்டும் என்று சொல்லவில்லையே?"

"வீரபாண்டியனுக்குத்தான்."

இந்தப் பதிலால் மழவராயன் ஏதாவது அசந்துபோய் விடுவானென்றோ, பிரமித்து அலறிப்புடைத்துக்கொண்டு எழுந்து நின்றுவிடுவானென்றோ கார்குழலி நினைத்திருந்தால் அவள் ஏமாந்தே போனாள். கேள்விக்கும் ஆச்சரியத்துக்கும் அறிகுறியாக மழவராயன் புருவங்கள் ஒருமுறை ஏறி இறங்கின. அவ்வளவுதான் சாந்தம் நிரம்பிய குரலிலேயே மழவராயன் மீண்டும் மகளை வினவினான்: "யார் மதுரை மன்னனா?"

"மதுரை மன்னனல்ல" என்றாள் பதிலுக்குக் கார்குழலி.

"வேறு வீரபாண்டியன் ஏது?"

"இலங்காபுரனுக்கு அடிமையாக ஒரு வீரபாண்டியன் இருக்கிறான்."

மழவராயன் இதழ்களில் புன்முறுவல் லேசாகப் படர்ந்தது. "அவனை அடிமைத் தளையிலிருந்து மீட்கவும், மதுரையின் உண்மையான மன்னனாக அவனை ஆக்கவுமே, இப்பொழுது முயற்சி செய்கிறேன் குழலி" என்றான் மழவராயன்.

"முயற்சியா! எப்படி முயற்சி செய்கிறீர்கள்?"

"உன்னை அவனுக்கு எதற்காகத் திருமணம் செய்து கொடுக்கிறேனென்று நினைக்கிறாய்?"

"அவனைக் காப்பாற்றவா?"



"அவனைக் காப்பாற்ற அல்ல. நாம் பிறந்த இந்த நாட்டைக் காப்பாற்ற. தமிழ் மக்களைக் காப்பாற்ற."

இந்தப் பதிலைக் கேட்ட கார்குழலியின் கோபம் சற்று உச்ச நிலையை அடைந்தது. "உங்களால் காப்பாற்ற முடியாது" என்றாள்.

"ஏன்?" என்று வினவினான் மழவராயன்

"இந்த வீரபாண்டியனை நான் திருமணம் செய்து கொள்ள முடியாது"

"ஏன், அவனுக்கென்ன குறைச்சல்?"

"குறைச்சல் எதுவுமில்லை, எனக்கு இஷ்டமில்லை."

"உன் இஷ்டத்தை யார் கேட்டது?"

இந்தக் கேள்வியால் கோபம் உச்சநிலையை அடையவே கார்குழலி ஜொலிக்கும் கண்களுடன் தகப்பனைப் பார்த்தாள். மழவராயன் பார்வையில் மட்டும் கோபமோ, பதற்றமோ இல்லை. ஏதோ சாதாரண விஷயத்தைப் பற்றித் தர்க்கிப்பவன் போலவே, மகளின் திருமண விஷயத்தைப்பற்றியும் தர்க்கிக்கலானான் மழவராயன். "என் இஷ்டத்தை யார் கேட்டதா? என் இஷ்டத்துக்கு விரோதமாக நான் வெறுக்கும் ஒருவன் காலிலா என்னைக் கட்டப் போகிறீர்கள்?" என்று கார்குழலி மீண்டும் சீறியபோதுகூட மன்னன் சிறிதும் அசைந்து கொடுக்காமலே பதில் சொன்னான்; "குழலி! நீ அரசகுமாரி. அரச வம்சத்தில் பிறந்தவர்கள் விருப்பு வெறுப்பு வைத்துக் கொள்வதால் விபரீதங்களே விளையும்?" என்றான்.

"அரச குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு விருப்பு வெறுப்பு கூடாதா? ஏன் அவர்கள் மனிதர்களில்லையா? மனித உணர்ச்சிகள் அவர்களுக்குக் கிடையாதா? மற்ற மனிதர்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? மற்றவர்களைப்போல அவர்கள் சாப்பிடுவதில்லையா? உறங்குவதில்லையா, பிறப்பதில்லையா, சாவதில்லையா?" என்று வினவினாள் மழவராயனின் மகள்.

''நீ சொன்ன அத்தனையிலும் வித்தியாசமிருக்கிறது.
கார்குழலி! மற்றவர்களைப்போல் அரசர்கள் சாப்பிடு
தில்லை! மற்றவர்கள் சாதாரண உண்டியுண்டால் அரசர்
கள் சதா அறுசுவையுண்டியே உண்ணுகிறார்கள். மற்ற
வர்கள் சிறுவீடுகளில் வாழ்ந்தால் அரசர்கள் மாளிகை
யில் வாழ்கிறார்கள். மற்றவர்கள் பாயில் படுத்தால்
மன்னர்கள் பஞ்சணையில் படுக்கிறார்கள். மற்றவர்கள்
பாயில் படுத்தாலும் உறங்குகிறார்கள். மன்னர்கள்
பஞ்சணையில் படுத்தாலும் உறங்குவதில்லை. மற்றவர்கள்
பிறக்கும்போது தங்கள் குடும்பத்தை மட்டும் ரட்சிக்கும்
கடனுடன் பிறக்கிறார்கள்; மன்னர்கள் பிறக்கும்போது
ஆயிரக் கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும்
பொறுப்புடன் பிறக்கிறார்கள். மற்றவர்கள் சாகும்போது
சாவுடன் அவர்கள் படலம் முடிந்துவிடுகிறது. மன்னர்கள
சாவு சரித்திரத்தில் எழுதப்படுகிறது. அவர்கள் ஆட்சியின்
பாதகமும் சாதகமும் ஏடுகளில் தீட்டப்படுகின்றன.
அவர்கள் மாண்ட ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குப்
பின்பும் அவர்களை மக்கள் போற்றவோ தூற்றவோ
செய்வார்கள். இத்தனை வித்தியாசங்களிருக்கின்றன.
பிறப்பு இறப்பு மட்டுமல்ல கார்குழலி, வாழ்க்கையிலும்
பெருத்த வித்தியாசமிருக்கிறது. சாதாரணப் பிரஜைகள்
இஷ்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம். மன்னர்
மரபில் பிறந்தவர்கள் அப்படிச் செய்துகொள்ள
முடியாது.''

''ஏன்?''

''சாதாரணப் பிரஜையின் திருமணம் அவனை மாத்
திரம் பாதிக்கிறது. மன்னர் மரபினர் திருமணம்
ஆயிரக்கணக்கான குடிமக்களைப் பாதிக்கிறது. ஆகவே
மன்னர் மரபினர் சம்பந்தப்பட்டவரையில் மக்களுக்காகத்
தான் மணமே தவிர, மணத்துக்காக மணம் என்பதில்லை
யாது. எந்த இடத்தில் திருமணம் செய்து கொண்டால்
ஜனங்களுக்கு லாபமாயிருக்குமோ அந்த இடத்தில்தான்



அரச வம்சத்துப் பெண்கள் மணம் செய்து கொள்ளவேண்
டும்'' என்று விளக்கிச் சிறிதுநேரம் பேச்சை நிறுத்தி
னான் மழவராயன்

''இந்தக் குடிகாரனின் காலில் என்னைக் கட்டத் தீர்
மானித்துவிட்டீர்களா? என்ன லாபத்தை உத்தேசித்து
அப்படித் தீர்மானித்தீர்கள்?'' என்று வினவினாள்
கார்குழலி.

''முன்பு சொன்னதுபோல் நாட்டின் லாபத்தை உத்
தேசித்துத்தான். இந்தத் திருமணத்தால் பாண்டியநாடு
பலப்படும். என் படைகளுடன் பாண்டியப் படைகள்
சேர்ந்தால் இலங்காபுரன் சிங்களத்திலிருந்து அழைத்து
வந்திருக்கும் படைகளின் பலம் பெரிதும் குறையும்.
அதனால் இலங்காபுரன் பிடியும் பாண்டிய நாட்டான்
மீதிருந்து சிறிது தளரும். பிறகு அவனைத் திருப்ப
ஊருக்கு அனுப்புவது ஒரு பிரமாதமான காரியமல்ல.
இப்படி இலங்காபுரன் அனுப்பப்பட்டுவிட்டால் போருக்
குத் தயார் செய்யும் சோழமன்னன்கூடப் போரைக் கை
விட்டுவிடுவான்''

''ஏன் சோழ மன்னனுக்கு உங்களைக் கண்டால்
பயமோ?'' என்றாள் கார்குழலி.

அவள் குரலில் தொனித்த ஏளனத்தை லட்சியம் செய்
யாமலே, ''பயமல்ல குழலி! சிங்களத்து ஆதிக்கம் தமிழ்
நாட்டில் வேரூன்றக் கூடாது என்பதற்காகத்தான் சோழ
மன்னன் படையெடுக்க முற்படுகிறான். அந்த ஆபத்து
தீர்ந்தால் படையெடுக்க மாட்டான்'' என்று விளக்கி
னான் மழவராயன்.

''இதற்கெல்லாம் ராஜீய ஒப்பந்தங்களைச் செய்து
கொள்ளலாமே'' என்றாள் கார்குழலி.

''செய்துகொள்ளலாம். ஆனால் ஏட்டிலெழுதும்
ஒப்பந்தங்களைவிட ரத்தத்தில் எழுதப்படும் ஒப்பந்தங்க
நீண்டகாலமிருக்கும். தவிர, வீரபாண்டியனுக்கும் உன
க்கும் திருமணமாகி மகன் பிறந்தால் மழவரும் பாண்டி